ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:।

6654

# திருப்புல்லாணி மான்மியம்.

இது

வடமொழியிலிருந்து தமிழில்

எழுதப்பட்டது.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

மதுரை

தமிழ்ச்சங்க முத்திராசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

Copyright] [Registered.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ।

ஸ்ரீமதே வாத்ஸ்ய வரததேசிகாய நம: ॥

# திருப்புல்லாணி மான்மியம்.

## முகவுரை.

உலகத்திலுள்ள ஜீவராசிகள் யாவற்றுள்ளும், மானிடப்பிறவியே சிறந்தது. அதனையடைதலே அனேககோடிகள் கிடைத்தற்கரிய பெரும்பேறும். இப்பிறவியைப் பெற்றதின் பயன் யாதெனின், வேதங்கள் கூறும் அன்பு, அருள், வாய்மை, அடக்கம் முதலிய நற்குணங்கள் பொருந்தப்பெற்று, பெரியோர்களிடத்தில் வணக்கம் பாராட்டி, பகவானிடத்தில் இடையறாத அன்பு செலுத்தி, வேதசாஸ்திரங்களோதிப் பரஞானம் பெற்றுக் கருமபாசத்தினின்றும் ஜன்மபந்தத்தினின்றும் விடுபட்டு, எம்பெருமான திருவடி நீழலையடைவதையே நோக்கி மனத்தூய்மையுடன் முத்திமார்க்கத்தில் நடப்பதேயாம். இவ்வொழுக்கங்களைக் கைக்கொண்டு ஒருவன் சரியாய் நடப்பதற்கும், எவ்வித இடையூறு நேரிடினும் சற்றேனும் நழுவவிடாமல் அவற்றைக் கடைப்பிடிப்பதற்கும், தூண்டுகோலாயிருப்பதும் முடிவில் என்றுமழியாப் பேரின்பவீட்டைக் கொடுப்பதும் சர்வேசுவரனுடைய தியானமும் வழிபாடுமே.

ஜகதீசனுக்குப் பரம் வியூகம் விபவம் அந்தரியாமித்வம் அர்ச்சையென்னும் ஐந்து சுவரூபங்களுண்டென்று நூல்கள் கூறுகின்றன. அவற்றுள் எல்லாவுலகங்களினுஞ் சிறந்த ஸ்ரீவைகுண்டத்தில் விரஜாநதிக்கரையில் செம்பொன்செய் கோயிலில், திருமாமணி மண்டபத்தில், ஸ்ரீ பூமி நீளாசமேதராய்த் திருவனந்தாழ்வான் மீது இனிது வீற்றிருக்கும் பரஸ்வரூபத்தைத் தரிசித்துத் துதிக்கும் அந்தமிலின்பத்தை யடைபவர் திவ்விய சரீரம்பெற்ற நித்தியரும் முக்தருமே யாவர். வாசுதேவன், சங்கருஷணன், பிரத்தியும்நன், அநிருத்தன் என்ற நான்கு வியூகரூபங்களையுங் காணப்பெறும் பேரின்பந்தேவர்க

ளுக்கேயுரியது. இராம கிருஷ்ணாதி யவதாரங்களாகிய விபவரூபங் களைச் சேவித்தல், அக்காலத்தில் மானிடப்பிறவி எடுத்து அப்பரம புருஷர்களைக் கண்ணாரக் காணும் பெருமபாக்கியத்தையுங் கொடுக்க வல்ல பூர்வஜன்ம புண்ணியபலத்தாலன்றி வேறெதனாலும்முடியாது. எல்லாம் வல்ல முழுமுதற்கடவுள் பிரபஞ்சத்தையே தனதுடைய சரீரமாகக்கொண்டு அந்தரியாமியாய் எங்கும் நீக்கமற வியாபித்து நிற்கின்றார். இவ்வுண்மை வேதாந்தங் கற்றுத தெளிவடைந்த ஞானிகளுக்குத் தெரியுமேயல்லாது, சாமானியர்களுக்குத் தெரிதல் மிகவுங்கஷ்டம். இவையாவற்றையுந் திருவுள்ளத்திற் கொண்டே யாவரும் தமமையெளிதில் வழிபட்டுய்யுமாறு சுயம் வியக்தமான தும், தேவருஷி முதலானவர்கள் தவம்புரிந்து சித்தியடைந்தது மான அநேக தலங்களில ஜீவர்களிடத்துண்டாகும நிர்ஹேதுக கிரு பையால் திவ்விய மங்களவிக்கிரஹ விசிஷ்டனாய், சர்வேசுவரன் எழு ந்தருளியிருக்கின்றார்.

இவ்வுண்மைகளை நாடியே பரத்தைச சக்கரவாளகிரியைச்சூழ்ந் திருக்கும் நன்னீர் நிறைந்த பெரும்புறககடலுக்கும; வியூகத்தைத திருப்பாற்கடலுக்கும்; விபவத்தை மழைபொழியுங் காலத்தில் நீர் புரண்டோடும நதிகளுக்கும்; அந்தரியாமியைப் பொழிந்த ஜலம் நிலத்துடன் சார்ந்து ஆங்காங்கு சுரந்திருப்பதற்கும்; அர்ச்சையை மழைபெய்தகாலத்திற் பலவழிகளாலும் எக்காலததிலும பயன்படும் படி தேக்கிவைத்த நீர்நிலைகளுக்கும் பெரியோர்கள் உவமித்திருக் கிறார்கள்.

மேற்கூறியவாறு உலகரக்ஷணத்தின் பொருட்டு எம்பெருமான் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய பலதலங்களினும், ஆழ்வார் கள் மங்களா சாஸநம்பெற்ற நூற்றெட்டுத் திருப்பதிகள சிறந்தன. அவற்றுள்ளும் மேன்மையுற்றது, பாண்டி நன்னாட்டில், தெற்குச் சமுத்திரக் கரையிலிருப்பதும், ஆதிசேது, தர்ப்பசயனம், திருப் புல்லாணி என்ற பல திருநாமஙகளால் விளங்குவதும்,

"வள்ளல்மாயன் மணிவண்ண னெம்மான் மருவுமிடம்
கள்ளவிழும் மலர்க்காவியும் தூமடற் கைதையும்
புள்ளுமள்ளற் பழனங்களுஞ் சூழ்ந்த புல்லாணியே."

என்று திருமங்கையாழ்வாரால் துதிக்கப் பெற்றதுமான புல்லாரண்ணிய க்ஷேத்திரம் இவ்விடத்தில் புல்லர், கண்ணுவர், காலவர் என்னும் முனிபுங்கவர்கள் தவம்புரிந்து முத்திபெற்றார்கள் இழிவான யக்ஷஸ்திரீகளாகும்படி சாபமடைந்த தேவகன்னியரெழுவர் சாபவிமோசனம் பெற்று இயற்கை வடிவுற்றார்கள். இத்தலத்தில் சக்கரவர்த்தித் திருமகனும், தர்ப்பாசனத்தில் பள்ளிகொண்டருளினார்; ஜனார்த்தனனையே எப்போதும் வணங்கிக்கொண்டும், அவனது திவ்விய நாமங்களையே நாவாரத்துதித்துக் கொண்டுமிருந்த புல்லர் முதலான ருஷிகள் ஜகந்நாதனைச் சரணமடைந்து பரமபதம் பெற்றார்கள்; இராவணன் தம்பி விபீஷணன் இராகவனைச் சரணம் புகுந்து இலங்கை யரசுக்குரியவனாகி, நெடுங்காலமாகத் தனது இஷ்டங்களையெல்லா மனுபவித்துக்கொண்டு செங்கோற் செல்வனாய் விளங்கி வருகிறான்; இராமரும் வருணனுதவியால் சேதுபந்தனஞ்செய்தார்; கடற் கடவுளும் கருணைக்கடலான தாசரதியைச் சரணமடைந்து, அவருடைய கிருபைக்குப் பாத்திரனாகி, தான்செய்த குற்றத்தை மன்னிக்கப் பெற்றுத்தனது சுபாவநிலை யடைந்தான். ஆகையால் இங்கே சரணாகதி தருமத்தை யனுஷ்டிக்கிறவர்கள் நான்கு புருஷார்த்தங்களையும் அடைவார்கள்.

பார்த்த மாத்திரத்தில் பாவங்களனைத்தையும் போக்கவல்ல சேதுவும், தம்மிடம் நீராடுவோரது மேலழுக்கைப்போ லுள்மாசையும் நீக்க வல்ல தூய்மையுடைய தர்மதீர்த்தம், பிரம்ம தீர்த்தம், ஹேம தீர்த்தம், சக்கரதீர்த்தம், வருணதீர்த்தம், அகஸ்திய தீர்த்தம், இராம தீர்த்தம், கண்வநதி, க்ஷீரநதி, ஹிரண்ய நதி என்ற தீர்த்தங்களும் இங்கிருக்கின்றன. நாராயணனது சொரூபமே யென்று சாஸ்திரங்களால் கூறப்படுவதும், தம்மைக்குறித்துத் தவம் புரிந்த புல்லர் முதலிய இருஷிகளுக்கும், பிரம்மனுக்கும் தன்னுடைய மூலத்தில் பரமாத்துமா பிரசன்னராகும் பாக்கியம் பெற்றதும், உலகெலாம் தன்னைத் தெரிசித்துக் கடைத்தேறும் பொருட்டுப் பரம கருணையால் பகவான் தனதடியில் அர்ச்சாரூபியாய் எழுந்தருளியிருக்கப் பெற்றதும், தன்னீழலில் நாகப்பிரதிஷ்டை செய்வோர்க்கு மக்கட்பேறுண்டாக்கும் சக்தியையுடையதும், மிக்கபரிசுத்தமீ பொருந்தியதுமான அசுவத்த விருக்ஷம் இந்த க்ஷேத்திரத்தி லிருக்கிறது.

இவையாவற்றையுங் கருதியே இத்தலத்தை முக்திப்பிரதம், திரிவர்க்கப்பிரதம் என்று ஆன்றோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இத்தகைய சிறப்பும் தூய்மையும் வாய்ந்த இத்தலத்தின் மான்மியம், சகல கல்யாணகுண கணபரிபூர்ணனான எம்பெருமான், இவ்வுலகத்திலுள்ள உயிர்கள் யாவும் பிறந்தும், இறந்தும், பல்வேறு ஜன்மங்களை யெடுத்தும், துக்கத்தாழ்ந்து உழலுவதை நோக்கி அவர்கள் அழிவில்லாத வீட்டின்பத்தை யனுபவிக்கவேண்டும் என்றவியல்பாயெழும் பெருங்கருணையால், உயிர்கள் நல்வழி தீவழிகளைப் பகுத்தறிந்து சுசீலர்களாய் நடந்துகொள்ளும் பொருட்டுப் பிரமனுக்குபதேசித்தருளிய அநாதியான வேதத்தின் வழிநூல்களாகவும், யாவரும் எளிதிலுணர்தற்கேற்றதாகவும், ஸ்ரீ வேதவியாச முனிவரால் செய்யப்பட்ட பதினெண் புராணங்களிலொன்றாகிய ஆக்கினேய புராணத்தில் புவனகோசவர்ணனையில், ௯ அத்தியாயங்களில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

வடமொழியிலமைந்த இத்தலபுராணத்தை, திருப்புல்லாணியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ உ. வே. நல்லான் சக்ரவர்த்தி அனந்தாசாரிய ஸ்வாமி மொழிபெயர்த்துச் சொல்ல, அதைக் கிரகித்து, விஷயத்தில் வேற்றுமையில்லாமல் சிறிது சுருக்கியும் தொகுத்தும் யாவர்க்கும் விளங்குமாறு தமிழ் நடையில் இஃது எழுதப்பட்டது. இவ்வசன கிரந்தத்தை செந்தமிழ்ப் பத்திராதிபராயிருந்தவரும், தமிழ் லெக்ஸிகன் கமிட்டி வித்வானாயிருப்பவருமான என் நண்பர் மு. இராகவையங்காரவர்கள் ஒப்புநோக்கி அச்சிட்டுதவியதற்கு நன்றி பாராட்டுகிறேன்.

இங்ஙனம்.

நடாதூர்

டி. வி. ஸ்ரீநிவாஸன்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

[திருப்புல்லாணிப்பதிகங்கள்]

திருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய

பெரியதிருமொழி

# ஒன்பதாம் பத்து - ௩-வது திருமொழி.

(கலிவிருத்தம்).

சங்கராபரணம—ரூபகதாளம.

க. தன்னை நைவிக்கலேன் வல்வினையேன் தொழுதுமெழு
பொன்னை நைவிக்குமப் பூஞ்செருந்திமணி நீழல்வாய்
என்னை நைவித்தெழில் கொண்டகன்ற பெருமானிடம
புன்னைமுத்தம பொழில் சூழ்ந்தழகாய புல்லாணியே.

உ. உருகிநெஞ்சே நினைந்திங் கிருந்தென் தொழுதுமெழு
முருகு வண்டுண் மலர்க்கைதையின் நீழலில் முன்னொருநாள்
பெருகு காதன்மையென னுள்ளமெய்தப் பிரிந்தானிடம்
பொருது முந்நீர்க்கரைக்கே மணியுந்து புல்லாணியே.

௩. ஏதுசெய்தால் மறக்கேன் மனமே தொழுதுமெழு
தாதுமல்கு தடஞ்சூழ்பொழில் தாழ்வர் தொடர்ந்துபின்
பேதைநின்னைப் பிரியேனினி யென்றகன் றானிடம
போது நாளுங்கமழும் பொழில்சூழ்ந் தழகாயபுல்லாணியே.

௪. கொங்குண்வண்டே கரியாக வந்தான் கொடியேற்குமுன்
நங்களீசன் நமக்கே பணித்தமொழி செய்திலன்
மங்கை நல்லாய் தொழுதுமெழு போயவன் மன்னுமூர்
பொங்குமுந் நீர்க்கரைக்கே மணியுந்து புல்லாணியே.

ரு. உணரிலுள்ளஞ் சுடுமால் வினையேன் தொழுதுமெழு
துணரிநாழல் நறும்போது நம்சூழ்குழற் பெய்துபின்
தணரிலாவி தளருமென அன்பு தந்தானிடம்
புணரியோதம் பணிலம் மணியுந்து புல்லாணியே.

சா. எள்கி நெஞ்சே நினைந்திங் கிருந்தென் தொழுதுமெழு
வள்ளல்மாயன் மணிவண்ண னெம்மான் மருவுமிடம்
கள்ளவிழும் மலர்க்காவியுந் தூமடற் கைதையும்
புள்ளுமள்ளற் பழனங்களுஞ் சூழ்ந்த புல்லாணியே.

எ. பரவி நெஞ்சே தொழுதுமெழு போயவன் பாலமாய்
இரவு நாளுமினிக் கண்துயிலா திருந்தென் பயன்
விரவிமுத்தம் நெடுவெண் மணல்மேற்கொண்டு வெண்டிரை
புரவியன்னப் புதஞ்செய்து வந்துந்து புல்லாணியே.

அ. அலமுமாழிப் படையுமுடையார் நமக்கன்பராய்
சலமதாகித் தகவொன் றிலர் நாந் தொழுதுமெழு
உலவுகானற் கழியோங்கு தண்பைம் பொழிலூடிசை
புலவுகானற் களிவண்டி னம்பாடு புல்லாணியே.

கூ. ஓதிநாமங் குளித்துச்சி தன்னா லொளிமாமலர்
பாதநாளும் பணிவோம் நமக்கே நலமாதலி
லாதுதாரா னெனிலுந்தரு மன்றியு மன்பராய்ப
போதுமாதே தொழுது மவன்மன்னு புல்லாணியே.

க0 இலங்குமுத்தும் பவளக்கொழுந்து மெழில்தாமரைப்
புலங்கள்முற்றும் பொழில்சூழ்ந் தழகாய புல்லாணிமேல்
கலங்கலில்லாப் புகழான் கலியனொலி மாலை
வலங்கொள்தொண்டர்க் கிடமாவது பாடில் வைகுந்தமே.

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.**

ஸ்ரீ:

# ௯-நான்காந்திருமொழி

## கலிவிருத்தம்.

காமபோதி ராகம்—அடதாளம்.

க. காவார்மடற் பெண்ணையன்றி லரிகுரலும்
ஏவாயி னூடியங்கு மெஃகிற் கொடிதாலோ
பூவார் மணங்கமழும் புல்லாணி கைதொழுதேன்
பாவா யிதுநமக்கோர் பான்மையே யாகாதே.

உ. முன்னங் குறளுருவாய் மூவடிமண் கொண்டளந்த
மன்னன் சரிதைக்கே மாலாகிப் பொன்பயந்தேன்
பொன்னங் கழிக்கானற் புள்ளினங்காள் புல்லாணி
அன்னமாய் நூல்பயந்தார்க் காங்கிதனைச் செப்புமினே.

௩. வவ்வித் துழாயதன்மேற் சென்ற தனிநெஞ்சம்
செவ்வி யறியாது நிற்குங்கொ னித்திலங்கள்
பவ்வத் திரையுலவு புல்லாணி கைதொழுதேன்
தெய்வச் சிலையார்க்கென் சிந்தைநோய் செப்புமினே.

௪. பரிய விரணியன தாக மணியுகிரால்
அரியுருவாய்க் கீண்டா னருள்தந்த வாநமக்கு
பொருதிரைகள் போந்துலவு புல்லாணி கைதொழுதேன்
அரிமலர்க்கண் ணீர்ததும்ப வந்துகிலும் நில்லாவே.

௫. வில்லா லிலங்கை மலங்கச் சரந்துரந்த
வல்லாளன் பின்போன நெஞ்சம் வருமளவும்
எல்லாரு மென்றன்னை யேசினும் பேசிடினும்
புல்லாணி யெம்பெருமான் பொய்கேட் டிருந்தேனே.

௬. சுழன்றிலங்கு வெங்கதிரோன் தேரோடும் போய்மறைந்தான்
அழன்று கொடிதாகி யஞ்சுடரிற் றானடுமால்
செழுந்தடம்பூஞ் சோலைசூழ் புல்லாணி கைதொழுதேன்
இழந்திருந்தே னென்ற னெழில்நிறமுஞ் சங்குமே.

௭. கனையா ரிடிகுரலின் கார்மணியி னாவாடல்
தினையேனு நில்லாது தீயிற் கொடிதாலோ
புனையார் மணிமாடப் புல்லாணி கைதொழுதேன்
வினையேன்மேல் வேலையும் வெந்தழலே வீசுமே.

௮. தூம்புடைக்கை வேழம் வெருவ மருப்பொசித்த
பாம்பி னணையா னருள்தந்த வாநமக்கு
பூஞ்செருந்தி பொன்சொரியும் புல்லாணி கைதொழுதேன்
தேம்ப விளம்பிறையு மென்றனக்கோர் வெந்தழலே.

௯. வேதமும் வேள்வியும் விண்ணு மிருசுடரும்
ஆதியு மானா னருள்தந்த வாநமக்கு
போதலரும் புன்னைசூழ் புல்லாணி கைதொழுதேன்
ஓதமு நானு முறங்கா திருந்தேனே.

௧௦. பொன்னலரும் புன்னைசூழ் புல்லாணி யம்மானை
மின்னிடையார் வேட்கைநோய் கூர விருந்ததனைக்
கன்னவிலுந் திண்டோட் கலிய னொலிவல்லார்
மன்னவராய் மண்ணாண்டு வானாளு முன்னுவரே.

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.**

ஸ்ரீ

# திருப்புல்வஸத்தலத்தின்மீது

## கீர்த்தனை.

இராகம் சுருட்டி-தாளம் அட சாப்பு.

---

### பல்லவி.

தொல்லுல கினிற்சிறந்த புல்லைத் தலமகிமை
சொல்லுதற் கெளிதாகுமோ.

### அனுபல்லவி.

அல்லிருட் பகல்வர வழைத்தமெதர்ப் பராத்தனா
ஆதிஜெகன் னாதபெரு மாளுவந்தருள் தலம் (தொ)

### சரணங்கள்.

க. ஆதியுமானா ரனாதியாய் வளர்தலம்
அன்னமாய் நூல்பயின் றுவந்துவந் தருடலம்
மாதெய்வச் சிலைப்பெருமாள் மாலாய்வந் தருடலம்
மருவுபுல்லாணி யெம்பெருமான வந்தருடலம் (தொ)

உ. புல்லர் கண்வர் காலவர் பூஜை புரிந்த தலம்
பூமேலிருந்த நாய்ச்சியார் தாமேவி வளர்தலம்
குல்லை மலர்கள் சூடிக் கொடுத்தா ளடுத்ததலம்
கோசலேசர் தர்ப்பையிற் சயனஞ்செய் தருடலம் (தொ)

ந. தர்மதீர்த்த மமச தீர்த்தம் ராமதீர்த்தம்
சக்கரதீர்த்தம் வருணதீர்த்தமகத்திய தீர்த்தம்
இரணியநதி கண்வநதிக்ஷீரநதி சேதுவென்
றேற்றமா யீரைந்து புண்ணியதீர்த்தஞ் சிறந்ததலம்(தொ)

௪. ஆதி சேதுமூலத்திற காதியாய் வளர்தலம்
அரியுரு வாய்த்திரு வரசு செழித்ததலம்
விபீடணர்க்கிலங்கை யாதீன மருடலம
நிருபன் வருணன்வந்து சரண்புகுந் திடுந்தலம் (தொ)

௫. வானோர்பணி சுவள திக விமானஞ் சிறந்ததலம்
மணிமண்டப கோபுர மாமதிட் சிறந்ததலம்
நானங்கமழ் பாண்டி நாட்டில் நாலாந்திருப்பதித்தலம்
ஞானந் தருமால்சன்னி தானந்தந் தருடலம் (தொ)

௬. அருள்சேருந் திருமங்கை யாழ்வார் துதித்ததலம்
*அன்பாய் வீரராகவன்றன் பாடற கருடலம்
திருவளர் முத்துராம லிங்க சேதுபதிக்குச்
செங்கோல கொடுத்தரு ளிலங்கி விளங்குந்தலம் (தொ)

---

*இந்தக்கீர்த்தனையையும, இன்னும இத்தலத்தின்பேரில மிகவும் சுவை பொருந்திய பாடல்களையும செய்தவர், திருப்புல்லாணியில் வெகுநாளைக்கு முன்னிருந்த விஷ்ணுபக்தரான ஸ்ரீவீரராகவய்யங்கார் என்பவர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:-

# புல்லாரணிய மான்மியம்.

## அவதாரிகை.

வியாசமஹாரிஷி, தம்மால் செய்யப்படுகிற புல்லாரணிய மான்மியமானது, யாதோர் இடையூறுமின்றி இனிது முடிதற்பொருட்டும், தம்முடைய சிஷ்யர்களும் இவ்விதம் செய்யவேண்டுமென்ற கிருபா நோக்கத்துடனும், புல்லாரணியத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கிற தம் இஷ்டதேவதையான ஸ்ரீஜகந்நாதன்வணக்கமான மங்களத்தைச் செய்கிறார்.

## கடவுள் வணக்கம்.

ஸ்வரூபங்களில் என்றும் பிரிவற்றவராயிருக்கிற பெரியபிராட்டியாருடன் கூடியவராயும், எவற்றிற்கும் காரணபூதராயும், உலகங்களுக்கெல்லாம் பிரபுவாயும், வேதாந்தங்களால் தேடத்தகுந்த நித்தியவிபூதிஎன்றுசொல்லப்படுகிற பரமபதத்தின் வைபவத்தையுடையவராயும், அநேகவித புஷ்பங்கள் விஹஸித்து எங்கும் நறுமணங் கமழப்பெற்ற புல்லாரணியத்தை யடைந்து நெடுங்காலமாகத் தம்மைக் குறித்து அரும்பெருந்தவமியற்றும் புல்லமஹரிஷிக்குத் தம்முடைய தரிசனாதிகளால் பேரானந்தத்தை விளைவித்தவராயும், அடியார்கள் துயரை அரிக்குந் தன்மையால் ஹரி என்கிற திருநாமத்தையுடையவராயுமிருக்கிற சர்வேஸ்வரனாகிய ஸ்ரீமந்நாராயணன் நம்மை ரக்ஷிக்க கடவன்.

கருணைக்கடலாயும், அப்பிராகிருதமான சுபாஸ்பதத்திருமேனி யுடன் கூடினவராயுமிருக்கிற தெய்வச்சிலையார் என்ற பகவான் பெரிய பிராட்டியாருடன் நம்முடைய ஹிருதய கமலத்தில் ஆவிர்ப்ப விக்கக்கடவர்.

புல்லாரணிய வாசிகளாயும், ஸ்ரீயப்பதியான தெய்வசசிலையார் திருவடிகளில் இடையறாத அன்பைச் செலுத்தி, அவரைத்தரிசித்துத் தொழும் பாக்கியம் பெற்றவர்களாயும் இருக்கிற பிராமணோத்தமர் கள் சர்வோத்கிருஷ்டர்களாயிருக்கக் கடவர்கள்.

தர்ப்பாசனத்தில் வீற்றிருக்கிற ஸ்ரீ ஜகந்நாதன், என்னால் சொல் லப்படுகிற புல்லாரணிய மான்மியம நன்குமுடியும்படி இரக்ஷிக்கக் கடவர்.

---

## பிரஸ்தாவனை.

திருமாலின் திருநாபித் தாமரைமலரில் உதித்து வீற்றிருக்கின்ற பிரமதேவரால், தம்மை வேண்டிய முனிவர்கள் தவம்புரிவதற்குத் தக்கதோரிடத்தை நிலவுலகத்தில் விளக்கிக்காட்டும் பொருட்டுச் செலுத்தப்பட்ட சக்கரம்போன்ற தருப்பைவளையம வந்து தங்கப் பெற்றதால் நைமிசம என்ற பெயரையடைந்த ஆரணியத்தில், ஒரு காலத்தே முற்றத்துறந்த சௌனகாதிருஷிகள் பன்னிரண்டுவருஷ ங்களில் முடியும்படியான சத்திரயாகத்தைத் தொடங்கிச் செய்து வந் தார்கள். அக்காலத்தில் மஹாநுபாவரான அவ்விருஷிகள் திருமா லின் திவ்வியசரித்திரத்தைக் கேட்கவிருப்புற்று, அவ்யாகசாலையில் எழுந்தருளியிருந்த பௌராணிகரான சூதரை நோக்கி அஞ்சலியஸ் தர்களாய் "தேவரீர் எல்லாத் தலங்களையும் தரிசித்திருக்கிறீர்; எல் லாத் தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்திருக்கிறீர்; ஆகையால், பரவு வார்தமக்குப் பாகதியளிக்கும் தலங்களில் உத்தமமானது தேவரீரால் சேவிக்கப்பட்டிருந்தாலும் கேட்கப்பட்டிருந்தாலும், மானிடர் மலங் களை யொழித்துப் பிறவித்துன்பத்தைப் போக்கடிக்கும் தன்மைய தாய்ச் சிறப்புவாய்ந்த தீர்த்தம் தேவரீரால் ஸ்நானம்செய்யப் பெற் றிருந்தாலும் கேட்கப்பட்டிருந்தாலும், அவற்றைப்பற்றி, இந்திரியங் கள் பலவேறு வழிப்பட்டிருக்கும் எங்களுக்கு யாகத்தின் மத்திய

காலங்களில், தெளிவாய் விளம்பியருளல் வேண்டும். கல்லான மனமும் கசிந்துருகும் வண்ணம் அவைகளையெடுத்து வருணிப்பதிற் சிறந்த யோக்கியதையமையப்பெற்ற தேவரீரே, சமஸ்தபுராணங்களுக்கும் ஆதாரபூதராயிருக்கிறீர். ஆதலால், உம்மிடத்தினின்றும் யாதொரு பகவத்கதையைக் கேட்டமாத்திரத்தில் நாங்கள் சரத்கால சந்திரனைப்போல் அழுக்கறப் பரிசுத்தர்களாவோமோ அக்கதையை எங்களுக்குக் கூறியருளல்வேண்டும்" என்று பலவாறு முகமனியம்பிக் கேட்டார்கள்.

இவ்வாறு கேட்ட முனிவர்கள் பொருட்டு ஆத்மஞானியான சூதர் பின்வருமாறு சொல்லலுற்றார்.

நான் வியாசபகவானிடத்தினின்றும் ஒரு விருத்தாந்தத்தைக் கேட்டேன். அது மனிதர்களின் மலங்களைப் போக்கவல்லது; எல்லாப் புண்ணியபலத்தையும் கொடுக்கக்கூடியது. அது கேட்டோர்களுக்கும் படித்தோர்களுக்கும் அவர்களுடைய இஷ்டபூர்த்திசெய்யத் தகுந்ததான, தெற்குச் சமுத்திரக்கரையிலிருக்கிற புல்லாரணியமென்கிற பிரசித்திபெற்ற தலத்தைப்பற்றியது.

## முதல் அத்தியாயம்.

[புல்லருஷிவரலாறு.]

புண்ணியபூமியான இப்பரதகண்டத்திலே, தெற்கு சமுத்திரக் கரையில் புல்லாரணியமென்ற பிரசித்தி பெற்றதும், சகலபாவங்களையும் போக்கவல்லதும், மங்களகரமானதுமான ஓர்வனமிருக்கிறது. முத்தும் பவளமும் மிகுதியாய் உள்ள அக்கடலின் கரையிலுள்ள மணல் வெளிகளும், மணற்குன்றுகளும், அவைகளிலடர்ந்துண்டாயிருக்கும் காட்டுமரங்களும், அவற்றின்மேற் புரண்டுவருகிற கடலலைகளும், நீர்க்கழிகளும், அருகில் வளர்ந்திருக்கும் தாழஞ்செடிகளும் பார்வைக்கினிய காட்சியைத் தருகின்றன. அவ்வனம் புன்னை, மா, பலா, தெங்கு, பனை, கிந்தாலம், கமுகு, கர்ணிகாரம் முதலான அநேகவித விருக்ஷங்களடர்ந்தும், அம்மரங்களைப் பைங்கொடிகளணைவதால் மனமகிழ்ச்சிதரும் கொடிவீடுகள் ஆங்காங்கே யமைந்தும், நேத்திரானந்தத்தை விளைவிக்கும் நீர்ப்பூக்கள் மலர்ந்து ரமணீயமா

யிருக்கும் நிர்மலமான நீர்ச்சுனைகளாலும், பக்கங்களில் மல்லிகை முல்லை மகிழ் இருவாட்சி பாதிரி ரோஜா முதலிய புஷ்பங்கள் பூத்து எங்கும் மணங்கமழ்கின்ற மனோகரமான சோலைகளாலும் அலங்கார மாகவும் இருக்கிறது. அங்கேயுள்ள மிருகங்கள் கொஞ்சமேனும்அச் சந்தாமலும், கிட்டுவோர்க்குச்சிறிதுந துன்பஞ்செய்யாமலும் மிக வும் சாந்தமுடையனவாயிருக்கின்றன. தெய்வசிருஷ்டியின் சிறப்பை மானிடர்க்கறிவிக்கும்பொருட்டே படைக்கபபட்டவையென்று சொல் லுதற்கேற்ற பலநிறமும் இனியகுரலும் உடைய பக்ஷிகணங்கள் தம் கானத்தாற் சிரவணானந்தத்தை விளைவிக்கின்றன. இவற்றின் மத்தி யில் உலகபபற்றை விட்டு இந்திரிய நிக்கிரஹஞ் செய்து தவம்புரிந்து கருமசமபந்தத்தினின்று விடுபட்டு வீடடைந்து பகவான் திருவடித் தொண்டொன்றையே கருதி வைதீகக் கிரியைகளிலும், பகவததியா னத்திலும் தங்கள்காலததைக் கழித்துவரும் முனிபுங்கவர்கள் ஆச்சிர மங்களமைத்துக்கொண்டு ஆங்கு வசிக்கிறார்கள்.

இவ்வண்ணம், எல்லாவுலகங்களுக்குமபிரீதிகரமாயிருக்கும் தவ வனத்தில், உயிர்களிடததே கருணையும், ஈசனிடத்திற் பக்தியும் உடைய புல்லர் என்னும் ஓர் ருஷி இருந்தார். அவர், அதிகாலையி லெழுந்து, நாராயணஸ்மரணை செய்து சக்கரதீர்த்தத்தில் விதிபபடி நீராடி, ஓமமுதலியவைகளை முடித்துவிட்டு, ஐம்புலன்களையும் அவற் றின் பொறிகளின்வழிப் போகவொட்டாமறறுடுத்து, சித்தத்தை சர்வ வியாபகனை வாசுதேவனிடத்திற் செலுத்தி நிஷ்டையிலிருப்பார். ஆத்மஞானியான புல்லர் தவத்திலிருப்பதையும், பர்ணசாலையினரு கில் நிற்கும் மரங்களினின்று பூக்கள் உதிர்ந்து கீழே கிடப்பதையும், மரக்கிளைகள் இனியகனிகளை யேந்திநிறபதையும் நோக்குகையில், அவ்வனதேவதை அரியதவமியற்றும் முனிவரை அருச்சித்துக் களைப் பாற்றும்பொருட்டுக் கனிவர்க்கங்களைக்கொண்டு உபசரிப்பதுபோ லிருக்கும். இவ்விதமாக, ஸ்ரீவைகுண்டபதியான ஸ்ரீமந்நாராயணனை, ஹிருதயகமலத்தில் தியானம் பண்ணிக்கொண்டு அணுவளவேனும் பாவச் செயல்களின்றி மிகவும் சிறப்பாக ஆயிரத்து முந்நூறு வரு ஷம் தவம்புரிந்தார். அவ்விடத்தில் கிளைகள் நீண்டுவளர்ந்து பர வியதும் மிகவும் பெருத்ததுமான அசுவத்த விருக்ஷமொன்றிருக் கிறது.

உண்மையடியார்களிடத்தில் மாறாத நேயமுடைய எம்பெருமான், தம்மையே பிரதிபாதிக்கும் திருமந்திரத்தை ஜபித்துக்கொண்டு நெடுங்காலமாய்ச் செய்துவரும் புல்லரின் மாதவத்தை யங்கீகரித்து, அவருக்குத் தமது காட்சியையளித்துக் கடைத்தேற்றத் திருவுளங்கொண்டு தேவியர் மூவரோடும், சதுர்ப்புஜங்களுடனும், பஞ்சாயுதங்களுடனும் ஸ்ரீவத்ஸமும் கௌஸ்துபம் வனமாலை விளங்கவும், பீதாம்பரமும் திவ்வியாபரணங்களும் தரித்தும், அவ்வனமுழுவதையும் தமது காந்தியாற் பிரகாசிப்பித்துக்கொண்டு, முனிவர்கள் ஸ்தோத்துவ மூலமாகச் சொல்லுகிற அரசினடியில், அத்தவப்பெருஞ் செல்வர் முன்னே ஆவிர்ப்பவித்தார். மஹாத்மாவான புல்லர் தம்முன் பிரஸந்நமான பரமபுருஷனைக் கண்படைத்த பெரும்பயனடையக் கண்டு பேருவகையுற்று, கண்களினின்றும் ஆனந்த நீர்பெருக, அப்பெருமானுடைய கிருபாநோக்கமாகிய பேரின்பக் கடலுளாழ்ந்து, அளவிலாப பிரீதியுடன் தர்ப்பங்களாலாகிய மிகவும் ரமணீயமான ஓர் ஆஸனம் சமர்ப்பித்து "வாஸுதேவனே! சாஸ்வதனே, ஞானாநந்த ஸ்வரூபனே, நிர்மலனே, நித்தியனே! சரணம். கேசவாதித்துவாதச மூர்த்தியா யெழுந்தருளியிருப்பவனே! ஆயிரம் சிரசுகள் ஆயிரம் நேத்திரங்கள் ஆயிரம் திருவடிகளையுடையவனே! சரணம். மச்சகூர்மவராகாதியவதாரங்களை உலக நன்மையின் பொருட்டுச் செய்தோனே! கங்கைக்கும் யமுனைக்கும் மததியிலிருக்கும் சம்பள கிராமத்தில் விஷ்ணுயசஸ் என்பவருக்குப் புத்திரராயவதரித்துக் கலிமுடிவிற் றீமையையொடுக்கி நீதியை நிலைநிறுத்தப்போகும் கல்கிய மூர்த்தியே! சரணம்" என்று பலவாறாகத்துதித்து "தேவரீருடைய திவ்விய ஸேவையால் அடியேனது ஜனனமரணங்கள் ஒழிந்தன. கருமக்குவியல்கள் யாவும் உம்முடைய அருள்நோக்கால் எரிந்துவிட்டன. துன்பக்கடலைத்தாண்டித் தேவரீரதுபரமபதமாகிய இன்பக்கரையையடைந்தேன். இனியான் பெறும பேறு வேறுயாதிருக்கிறது? அடியேனிடத்திற் காட்டிய இப்பெருங்கருணையைச் சேதனர்கள் யாவரிடத்தும் காட்டி, அவர்களும் வழிபட்டு உஜ்ஜீவிக்கும் பொருட்டு இவ்விடத்தே இந்தவிருக்ஷத்தடியில் எப்போதுமெழுந்தருளியிருந்து அருள்பாலிக்க வேண்டும்" என்னும் வரத்தை வேண்டினார். அன்பர்கள் வேண்டியதை யநுக்கிரஹிக்கும் பக்தவத்ஸலனாகிய ஸ்ரீ ஜகந்

நாதன், அத்தவ முதல்வர் வரத்திற்கிசைந்து, அசுவத்தத்தினடியில் ஸ்ரீபூமி நீளாதேவிகளுடன் உலகெலாமுய்யும் பொருட்டு வீற்றிருந்தருளுகிறார்.

பின்னர், பரமாத்மாவை சாக்ஷாதகாரஞ் செய்த புல்லா, மன நிறைவெய்திப பிரதிதினமும் சக்கரதீர்தத ஸநானஞ்செய்து, ஆசிரம ஒழுக்கங்களை வழுவாதனுஷ்டித்து, ஸரஸ்ஸிலும் சோலைகளிலுமுள்ள தாமரை மல்லிகை முதலான புஷ்பங்களையும திருததுழாயையுங்கொண்டு அருசசித்து, அவ்வனத்திலுண்டாகுங் கனிவர்க்கங்களை நிவேதனஞ்செய்து "அருமறை முதல்வனே, ஆழிமாயனே, கருமுகில்வண்ணனே, கருணைமூர்த்தியே, திருமகள்தலைவனே, தேவதேவனே, ஜகந்நாதனே, ஜகத்காரணனே, காரணங்கள் யாவையுங் கடந்தோனே, பக்தரக்ஷகனே! எங்களைக் கடைத்தேற்ற வேண்டும்" என்று மற்றருஷிகளுட ன் போற்றி, வைகானஸ விதிப்படி பகவுமிரமம பூஜிதது பகவசசேஷமான கனிகளையே யாவருட னுமுடகொண்டு மத்தியகாலங்களில சிஷ்யர்களுக்கு ஞானோபதேசப செய்துகொண்டு வநதார். இது நிற்க.

முன்னோர்காலத்தில் வேதவித்துக்களுள் சிறநதவராயும், எல்லா நூலகளையுப கற்றறிநது மேன்மையுறற பண்டிதராயும, சகல தருமங்களையும் அனுஷ்டித்தவராயும, தேவர்களாலும் கொண்டாடப்பட்டவராயுமிருநக தேவலர் எனனுமுனிவர் இயற்கைவனபபு மிகவுமமைந்த தமதாசசிரமத்தில் தவஞ் செய்துவந்தார். அங்கே, ஆம்பல் நெய்தல் தாமரை முதலியவை பூததது அழகான பொய்கை யொன்றிருந்தது. ஒரு நாள் பெண்ணிலக்கணமுழுமையு மமையப்பெற்று, மின்னலுக்கு ஸமமான காந்தியையுடைய ஏழு கன்னியர்கள் அங்கே வந்து தங்கள் கண்களையொத்த வடுக்களையும், தனங்களை யொத்த காய்களையும், மேனியை ஒத்த தளிர்களையும உடைய மா முதலிய மரங்கள் நிறைந்த அச்சோலையில பாடியும் ஆடியும பூக்கொய்தும் மனதிற்கிசைந்தவாறு விளையாடித்திரிநது, பின், தங்கள் முகங்களை நிகர்த்த தாமரைகள் மலர்ந்து சோபிதமாயிருக்கும் தடாகத்தில் அன்னங்கள் வந்து கூடினாற்போல் புனல்விளையாடப் புகுந்தார்கள். வஸ்திரங்களைக் கரையிற் களைந்துவிட்டு, அவர்கள் சந்தோஷமாய் ஜலக்

கிரீடை செய்துகொண்டிருக்கும் பொழுது தேவலர் ஸ்நானஞ்செய்யும்பொருட்டு அவ்விடம் வந்தார். இளமையும் கட்டழகும் வாய்ந்த அக்கன்னியர், தங்கள் முன்னே நிற்கும் மஹாநுபாவரான ருஷியை ஆடவரென்று மதியாமல் வஸ்திரங்களின்றி வெட்கமற்று அவர் முன்னிலையில் நின்றார்கள். தேவலர் இப்படி நிர்வாணமாயிருக்கும் தேவஸ்திரிகளைப்பார்த்து, கோபத்தாற் கண்கள் சிவக்க, அவர்களை, நிந்தித்தத்தக்க யக்ஷஸ்திரிகளாகும்படி சபித்தார். உடனே அவர்கள் மிகவும் பரபரப்புடன் ஆடைகளை யணிந்துகொண்டு, தெய்வீகமான சோலையையும் பொய்கையையும் அசுத்தமாக்கியதோடு, உலகத்தை வெறுத்த உத்தமனுக்குத் தாங்கள் செய்த அபசாரத்தையும், தேவலரிட்ட தவந்தருசாபத்தால் தமக்கு நேர்ந்த இழிவையும் நினைத்து மனமநொந்து, பெரியோர்கள் பிறர்செய்யும் குற்றங்களைக்கண்டு கோபித்துச் சாபமிட்டாலும், அவர்கள் குற்றமுடையோரிடத்து அன்பும் அருளும் நிறைந்தவர்களாதலால், முடிவில் நன்மையையே செய்வார்கள் என்ற எண்ணத்தால் மனந்தேறித தவமுதியோரான தேவலர் திருவடிகளில் வீழ்ந்து, பலமுறை தண்டனிட்டு "அறிவின்மையால் நாங்கள் தேவரீர் ஆச்சிரமத்தையடைந்து அபசாரத்தைச் செய்தோம். பரமகிருபாளுவாகிய தேவரீர் அபலைகளாகிய எங்கள் பிழையைப் பொறுத்துக் காத்தருளவேண்டும்" என்று கண்ணீர்வாரப் பிரார்த்தித்தார்கள். "முனிவினு நல்குவர் முதறிஞர்" என்றபடி, தேவலர் அத்தேவ மாதர்களைத் தண்ணளியுடன் நோக்கி "ஸ்ரீ வைகுண்டத்திற்கு நிகரான புல்லாரண்யம் என்னும் க்ஷேத்திரத்தில் கருணையேயுருவெடுத்ததெனும்படி அருள் வள்ளலாயும் தேஜஸ்வியாயும் இருக்கிற புல்லர் என்னும் ஓர் விஷ்ணுபக்தர் எம்பெருமானை அருச்சித்து வழிபட்டுக்கொண்டிருக்கிறார்; அவரை நீங்கள் சென்றடையின், உங்களுக்குச் சாப விமோசனமாகும்" என்று கூறியருளினர்.

உடனே, கன்னியரெழுவரும், பிரம்மஸ்வரூபமாய் விளங்குகிற புல்லமஹாருஷியின் அழகுமிக்க ஆச்சிரமத்தை யடைந்து உள்ளே நுழைந்து, மிகவும் பயபக்தியுடன் அங்கிருக்கும் தபோநிதிக்குத் தண்டனிட்டு, சமயமறிந்து விண்ணப்பஞ்செய்துகொள்ளவேண்டுமென்று சிறிதுநேரம் தாமதித்து, அவருடைய கிருபாநோக்கத்தால் தைரியங்கொண்டு, தாங்கள் முன்னிருந்ததையும் பின்னடைந்ததை

யும், மறுபடியும் பூர்வஸ்திதியைத் தாங்களடைவதற்கு அவருடைய அருளே காரணமென்பதையும் விநயத்துடன் விக்ஞாபனஞ்செய்து கொண்டார்கள். அதுகேட்டு, பரமகிருபாளுவாய், "நான் உங்களுக்குச் சாபவிமோசனமாகும் வழியைக்காட்டி நன்மையைச் செய்கிறேன். நீங்கள் இனி பயப்படவேண்டாம்" என்று திருவாய் மலர்ந்த அக்குணக்குன்றின் அபய வசனத்தைக்கேட்டு அக்கன்னியர் பேரானந்தபரிதரானார்கள். "தேவஸ்திரீகளே! தசரதகுமாரனை இராகவன் இங்கெழுந்தருளப்போகிறார். அவர் தரிசனமாத்திரத்தில் நீங்கள் இந்நிலைமையையொழித்து முன்னிலைமையை யடைவீர்கள். ஆகையால் அவ்வவதாரபுருஷன்வருமளவும் வைகானசமுறைப்படி ஸ்ரீஜகந்நாதனை ஆராதியுங்கள்" என்று கட்டளையிட்டு, பூஜாவிதியையும் உள்ளவாறு அவர்கட்கு மஹாருஷி உபதேசித்தார். சிறிதுகாலஞ் சென்றபின், புல்லர் தமதுடலை நீத்து மெய்யுடல் பெற்று நித்தியானந்த வாழ்வடையும்நாள் வந்ததை யுணர்ந்து, ஆச்சிரமத்தினின்றும் புறப்பட்டு, சுவஸ்திகவிமானத்தை வலம்வந்து அங்கெழுந்தருளியிருக்கும் பகவானையருச்சித்துக் கரங்கள் சிரமேற்குவியக் கண்களினின்றும் ஆனந்த பாஷ்பம் பெருக "தேவேசனே! எல்லா மனிதர்களும் உம்மைத் தரிசித்து நல்வழியடையும் பொருட்டு, இந்த சக்கர தீர்த்தக்கரையில், அசுவத்த மூலத்திற் சுவஸ்திக விமானத்தில் பூமி பருவதங்கள் சந்திர சூரியர்கள் உள்ளவளவும் அர்ச்சாரூபியா யெழுந்தருளியிருக்கவேண்டும்" என்று பலமுறை பிரார்த்தித்துப் பின் பிராணாயாமத்தால் வாயுவை ஹிருதயத்திற் கொண்டுவந்து நிறுத்தி, அவ்வாயுவை சுழுமுனை என்னும் நாடிவழியாக உயரக்கிளப்பி மெல்லக் கபாலத்தைப் பிளக்கும்படி செய்து, அர்ச்சிராதிமார்க்கமாய் கிருத கிருத்தியராய், எல்லாப் பூதங்களும் யக்ஷ ஸ்திரீகளும் பார்த்துக்கொண்டிருக்க, தவசிரேஷ்டரான புல்லர் பரபமதமடைந்தார்.

அவருடைய சிஷ்யர்களான கன்னியர் ஆறாத்துயரமடைந்து, அவரிட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு, வைகானஸ ஆகமப்பிரகாரம் திவ்வியசாபனைப் பூஜித்துக்கொண்டு, பிராக்ஞனை ஸ்ரீராகவன் எப்போது எழுந்தருளிப் புல்லாரண்யத்தை அலங்கரிப்பாரோ வென்று, அவர் வருங்காலத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

## இரண்டாம் அத்தியாயம்.

[கண்ணுவமுனி வரலாறு]

புல்லாரண்யத்திற்கு வடக்கே ஒரு குரோசதூரத்தில் கண்ணுவருஷியின் ஆச்சிரமமிருக்கிறது. அதற்கு முன்னதாக ஒரு புண்ணிய நதி ஓடுகிறது. அம்முனிவர் அதில் ஸ்நானஞ்செய்து, அஷ்டாக்ஷரம் த்வாதசாக்ஷரங்களைச் செபித்துக்கொண்டும், பஞ்சாக்கினிமததியில் நின்றுகொண்டும மிகவும் உத்கிருஷ்டமான தவத்தைச் செய்துவந்தார். ஐம்புலன்களையும் தம்வசத்தடக்கியவராய் வாஸுதேவனையே தியானஞ்செய்துகொண்டு ஆயிரம் வருஷகாலமாய்ச் சிறந்த தவம்புரியும் கண்வர்சமீபத்தில் "ஓ ருஷியே! நீர் கிருதார்த்தராய்விட்டீர். தசரதகுமாரனை இராமபிரான் புல்லாரண்யத்திற் கெழுந்தருளுங்காலத்தில், நீர் ஒப்பற்ற சக்கரதீர்த்தக் கரையைப்போய்ச் சேரும். உமது மனோபீஷ்டம் நிறைவேறும்" என்று ஓர் அசரீரிவாக்கு உண்டாயிற்று. அதைக்கேட்ட அம்மஹருஷி பேரானந்தமடைந்து ஸ்ரீ ரகுவீரனுடைய திருவரவை எதிர்பார்த்துக்கொண்டு தபோநிஷ்டராய் அங்கு வாழ்ந்துவந்தார்.

---

## மூன்றும் அத்தியாயம்.

[சேதுபந்தன வரலாறு.]

வைவசுவதமந்வந்தரத்தில் திரேதாயுகத்திலே இராவணாதி இராக்கதர்கள், தாங்கள் தவம்புரிந்து பெற்ற வரங்களினுதவியால் இந்திரனுடைய ஆட்சியை யபகரித்து, தேவர்களுக்கு இடுக்கண்கள் செய்து, ருஷிகளின் தவங்களை யழித்து, இன்னும் கணக்கிடற்கரிய கொடுமைகளையும் செய்துவருவதைச் சகிக்கமுடியாது, இராக்கதர்களை யொடுக்கித் தங்களை இரக்ஷிக்கும்படி வேண்டிய தேவர்களின் முறைக்கிரங்கி, மானிடவடிவமெடுத்து உலகத்தில் துஷ்டர்களை யொடுக்கி, சாதுக்களுக்கு நன்மைசெய்து தருமத்தையும் நீதியையும் நிலைநாட்டத்திருவுளங்கொண்டு, இரவிகுலோத்தமனாகிய தசரதசக்கரவர்த்தியின் அருந்தவப்பயனால் அவருடைய திருக்குமாரராக அவ்யயனான ஸ்ரீமந்-நாராயணன் அவதரித்தார். அவர், இளமையிலே மகாவீரனாகி, சுவாகு தாடகைகளைக்கொன்று விசுவாமித்திரரின்

யாகத்தைக்காத்துத் திரும்புகையில், இலக்குமியின் அம்சமான சீதையை மணந்து அயோத்திக்கு வந்து முடிசூட்டப்பெறுந்தருணத்தில், சிற்றன்னை தனக்குத தசரதர் செய்திருந்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டதால், பிதிர்வாக்கிய பரிபாலனஞ் செய்யும்பொருட்டுத் தவவேடம்பூண்டு கானகம் புகுந்தார். ஸ்ரீராம பிரான் சர்வக்ஞராயிருந்தபோதிலும் தாமெடுத்த மானிட வுருவத்திற்கேற்பத் தம்முடைய ஸ்வரூபத்தைக் கிருதார்த்தமாகவே எண்ணியிருந்தார். அவர், தெறகிலுள்ள தண்டகாரணியத்தில் பஞ்சவடீதீரத்தில் பர்ணசாலை யமைத்துக்கொண்டிருந்தகாலத்திலே, நினைத்த மாத்திரத்தில் வேண்டிய வுருவங்களை எடுக்கும சக்தியையுடைய இராவணனால் சீதாபிராட்டி இலங்கைக்குக் கொண்டுபோகப்பட்டாள். இக்ஷ்வாகுகுலதிலகனை ஸ்ரீராமன் சீதையின் பிரிவாற்றுன்புற்று இளைத்து, பிராட்டியைத் தேடிக்கொண்டு தெற்கே வரும்போது, கிஷ்கிந்தையில் சுக்ரீவனை தோழனுயடைந்து, வாலியை வதைத்து, நண்பனுக்கு வானராதிபததியம கொடுத்து, அனுமானால் சீதை இலங்கையிற் சிறைப்படடிருப்பதையறிந்து, சுக்கிரீவன் அங்கதன் நீலன் நளன் ஜாம்பவன் முதலான வானரவீரர்களுடனும் வானரப்படைகளுடனும் தெற்கு சமுததிரக்கரையை யடைந்தார். சேனைகளை மணல் வெளியில் பாளையமிறங்கச்செய்து, இளையபெருமாளுடனும் நண்பர்களுடனும், அருகிலிருக்கும் புல்லாரணிய க்ஷேத்திரத்திற்கு வநது அங்கு எழுந்தருளியிருந்தார்.

தருமநிலை தவறுத்தன்மையும, சாக்ஷாத் நாராயணமூர்த்தியினிடத்தில் நிறைந்தபக்தியும், நிலைதத சத்தியமும், பெரியோர்களிடத்தில் மிகுந்த வணக்கமும்பெற்று, கள்ளியின் வயிற்றில் அகில் பிறந்ததுபோல் துஷ்ட இராக்ஷதர் குலத்திலுதித்தும் மஹானுபாவனுய் விளங்குகிற விபீஷணன், தன் தமயன் இராவணனுக்கு, "லோக நாயகனை ஸ்ரீராமன்பத்தினி சீதாபிராட்டியைச் சிறைவைத்திருப்பது பெருங்கொடுஞ் செய்கை. அக்கினியை வஸ்திரத்தில் முடிந்து வைப்பவர்போல் நீ நமது குலநாச காரணத்தைக் கைக்கொண்டாய். அம்மங்கையர்க்கரசியை விடுத்துப் புருஷோத்தமனை இராமபிரானுடைய கிருபைக்குப் பாத்திரமாய் வாழ்வதே நலம்; இல்லாவிடில் சுற்றத்தாருடனும் சிநேகர்களுடனும் கெடுவது நிச்சயம்" என்று பல

வாறு தன்னால் இயன்றவரை நியாயத்தை எடுத்தோதினான். அதற்குக் கெடுமதியனான இராவணன், 'சத்துரு பக்கத்தில் பேசுகிறவன் தனக்குத் துணைவனல்லன், ஆகையால் விபீஷணன் தன்னை நீங்கி விடவேண்டும்: அன்றேற் கொலைசெய்யப்படுவது திண்ணம்' என்று மறுமொழி புகன்றான்.

உடனே விபீஷணன் மிகவும் ஆப்தசிநேகர்களான நால்வருடன் புறப்பட்டுத் தருமமும, நீதியும, தவமும மதில்களாகவும், கீர்த்தியும், பொறுமையும வாயில்களாகவும், கருணையே ஓர் ஆலயமாகவும் செய்துகொண்டு எழுந்தருளி யிருக்கின்ற பரமபுருஷனை இராகவனைச் சரணம்புகுந் துய்யும்பொருட்டு, வானரசேனைகளுடன் சக்கரவர்த்தித்திருமகன் தண்டிறங்கியிருக்கும் புல்லாரணியத்தையடைந்தான். இவர்கள வரவைப்பார்தது வானரங்கள் பலகொடுமையான வார்த்தைகளைப் புகன்றன. தாங்கள் வந்திருபபதின் எண்ணத்தை விபீஷணன்துணைவரில் ஒருவன் சொல்ல, அதனை வானரசேனாதிபதிகள் இராமபிரானிடதகில் தெரிவித்தார்கள. அப்போது சுக்கிரீவன் அங்கதன் முதலியவர்கள் இராக்கதனுக் கபயமளிபபது தகுதியன்று, கெடுதிக்கே காரணமாகுமென்று சொன்னார்கள். அனுமானோ தாம் இலங்கைக்குப் போயிருநதகாலத்தில், அவனுடைய நல்லொழுக்கத்தையும் அவனுடைய குமாரத்தியின் சிறந்த குணங்களையும் கண்டவராதலால், 'விபீஷணன் தேவரீருடைய பராக்கிரமத்தையும், அபாரகருணையையும் கேட்டும், கொடுஞ் செய்கைகளையும் கொடுங்கோன்மையையும் உடைய இராக்கதர்கள் நிலைதநிருக்கமாட்டார்களென்றெண்ணியும், தேவரீருடைய திருவடியில் அடைக்கலம்புகுந்து அப்பிராகிருதமான பரமபதத்தையடைய விரும்பியும் வந்தவனாதலால் நாம் அவன்விஷயமாக ஆலோசிக்கவேண்டியது யாதொன்றுமில்லை' என்று விண்ணப்பம் செய்துகொணடார்.

துஷ்டர்களைக்கொன்று சாதுக்களைக் காப்பாற்றித் தருமத்தைப் பாலிக்கும்படி யவதரிதத எல்லாமறிந்த இராமபிரான், ஒரு புறாவின் பொருட்டு தனது சரீரத்தைக் கொடுக்கத்துணிந்த சிபியின் வழித்தோன்றலாதலால், என்ன நேரிடினும் அடைக்கலம் புகுந்தோருக்கு அபயங்கொடுப்பதாக அருளிச்செய்யவும், வானரவீரர்கள் விபீஷ

ணனை இட்டுக்கொண்டுவந்து தாசரதியின் சந்நிதியில் விட்டார் கள் பதினாறுகலைகளும் பொருந்திய பூரணசந்திரனைப்போல் பிரகாசிக்கும் அபபிராமனது திருமுகமண்டலத்தையும், உலகரக்ஷணார்த்தம் இராஜமுடியை நீக்கித் தரித்துக்கொண்டிருக்குஞ் சடைமுடியையும் பார்த்துத் தேகம் புளகித்து மனமுருகிக் கண்களில் ஆனந்தபாஷ்பம் பொழியத் தனக்குரிய இராஜகிரீடத்தை எறிந்துவிட்டு ஸ்ரீராம மூர்த்தியின் உபயதிருவடிகளைச் சிரமேறசூடிக் கல்லும் உருகும்படியான அவர் கிருபாகடாக்ஷத்திலீடுபட்டு, சர்வாபீஷ்டவரதராகிய ஸ்ரீ ரகுநாதன்சரணாரவிந்தங்களை ஆனந்தக் கண்ணீரால் திருமஞ்சனஞ் செய்து பூமியில் மார்புபடியும்படி தண்டன்சமர்ப்பித்து, "அடியேன் பிறவித்துன்பம இன்றேயொழிந்தது" என்று நாவாற் சொல்லிச் சரணாகதிபண்ணினான். பெருமான், விபீஷணனைக் குளிரக் கடாக்ஷித்து "உனக்கேயானுரியன் என்று யாசிதது ஒருக்காற் சரணாகதி பண்ணுகிறவனுக்கும், சர்வ பூதங்களுக்கும அபயத்தைக் கொடுப்பதே என் விரதம்" என்று அருளிசெய்து, "இவ்வீரேமூலகங்களும் என்பெயரும் உலகததில் எவ்வளவுகாலம் நிலைத்திருக்குமோ அதுவரை, இலங்கையரசை உனக்குக்கொடுத்தேன்" என்று உறுதிமொழியும் கூறியருளினார்

பின்னர் ரகுவீரன் சக்கரதீர்த்தத்தில் நீராடி, அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, சுத்தஸத்துவகுணத்தையுடையவரும், பிறவியினின்றும் ஜீவாத்மாவை நிர்த்தோஷமாக்கிவிடுகிறவரும் சரணாகதர்களுடைய தாபத்திரயத்தைப் போக்கடிக்கிறவரும் மிகுந்த காருண்யத்தால் உலகங்களைக் கடைத்தேற்றுவித்தலில் முயற்சியையுடையவருமான தயாபரன்எழுந்தருளியிருக்கும் அசுவத்தவிருக்ஷத்திற்குச் சென்றார். அங்கெழுந்தருளியிருக்கும் எம்பெருமான் திருமேனி நீருண்டமேகம்போலிருந்தது. திருமுகமண்டலம் மிகவும் பிரசன்னமாகவும், நயனங்கள் கருநெய்தல் போலவும், கடைக்கண்பார்வை மிகவும் கிருபைநிறைந்ததாகவும், ஜகத்திற்கு ஆனந்தத்தை விளைவிப்பதாகவுமிருந்தன. அதரங்கள் பவளங்கள் வெட்கும்படியாகவும், கபோலபாகங்கள் காதிலணிந்திருக்கும் சுவர்ணகுண்டலங்களாற் பிரகாசமாயும், கன்னத்தினடிப்பிரதேசம் மந்தகாஸசந்திரிகை நிறைந்து மிருந்தன. இவ்வாறு அதிசோபிதமாயுள்ள வதனத்திலணிந்திருக்கும்

திலகம், முகத்தின் சௌந்தரியப்பெருக்கின் திவலையோவென்னும்படி யிருந்தது. பிரமன் முதல் கீடபரியந்தமுள்ள பிரபஞ்சத்தை யுண்டு பண்ணி ஊழியினிறுதியிலடக்கும் உதரம் சிறியதாய் ஆலிலைபோன்றிருந்தது. இவ்வண்ணம் தமது திருவடிகளிலொன்றை நீட்டிக் கொண்டும் மற்றொன்றைப்பரப்பிக்கொண்டும், சங்க சக்கரங்களுடன் பிராட்டிமார்சமேதராய் எழுந்தருளியிருக்கிற ஷாட்குண்ய விக்கிரஹரூபனை ஸர்வேசுவரனை தண்டனிட்டு,

"தேவதேவனே, ஜகந்நாதனே, தீனபந்துவே, தயாநிதே, புண்டரீகாக்ஷனே, சரணாகதவத்ஸலனே! என்னை இரக்ஷியும். சாதுக்களுக்கு மங்களத்தைக் கொடுக்கிறவனே, ஸ்ரீயபபதே, சம்சாரமாகிற கடலைக் கடத்தற்குப் பெரும்புணையாக விருப்பவனே, சீதையின் பிரிவால் யானடைந்திருக்கும் துக்கம் நீங்குமாறருள்புரியவேண்டும். எல்லா ஜனங்களுக்கும் தனது அகிருத்தியங்களால் பயத்தைக் கொடுத்து லோககண்டகனுயிருக்கும் இராவணனைக்கொன்று சீதையை மீட்டுக்கொண்டு யான் வரும்படி செய்வது உம்முடைய பாரமே" என்று போற்றிப் பன்முறை நமஸ்கரித்தார். இவவாறு ஸ்தோத்திரஞ்செய்து வணங்கும், லீலார்த்தமாய் மானிடவடிவெடுத்த இராகவனைப் புன்சிரிப்புடனும் பிரசன்னமான திருமுகமண்டலத்துடனும் பார்த்து தம்முடைய கையிலிருக்கும் சாபத்தை (வில்லை)க்கொடுத்து "இரகுவீர! இவ்வில்லால் நீ இராவணனைக் கொல்லப்போகன்றாய்" என்று திருவாய்மலர்ந்தருளினார். இராமனுக்கு வில்லளித்த காரணத்தால் புல்லாணி எம்பெருமான் திவ்வியசாபன் - (தெய்வச்சிலையார்) என்னும் திருநாமத்தையடைந்தார்.

பிற்பாடு தேவரால் சபிக்கப்பட்ட எழுகன்னியர்களும், தாடகாந்தகனான இராகவன் எழுந்தருளியிருப்பதைக்கண்டு அவருடைய திருவடிகளில் விழுந்து வணங்கவும், தங்களுடைய சாபசரீரம் நீங்கப் பெற்று மிகுந்த ரூபலாவண்யங்களும் பரிமளமும் பொருந்திய தங்கள் பூர்வ சரீரங்களையடைந்து, "முன்னே தேவரீருடைய திருவடி சம்பந்தத்தால் அகலிகை சாபம் தீர்ந்தாள். இப்போது தேவரீருடைய தரிசனமாத்திரத்தில் நாங்கள் சாபவுருவை விடுத்து எங்களியற்கை வடிவைபடைந்தோம்." என்று புகழ்ந்துபோற்றித் துதி

களுடைய விருத்தாந்தத்தை ஆதியோடந்தமாக விண்ணப்பஞ்செய்து அவரிடம் விடைபெற்றுத் திவ்வியசாபன் சன்னிதியையும் தாசரதியின் அருட்பார்வையையும் புல்லாரண்யத்தையும் விட்டு அரிதினகன்று சுவர்க்கலோகத்தையடைந்தார்கள். பின்னர் இராஜீவலோசனனுன ஸ்ரீராமன், எம்பெருமானுராதனநிமித்தம ஆலோசனை செய்து வேதசாஸ்திர வித்வான்களாகிய பிராமணர்களை யழைத்து ஷாட்குண்ய பரிபூர்ணனுன ஜகந்நாதனைப் பகலுமிரவும் ஆராதியுங்களென்று ஆக்ஞாபித்து, அவர்களுக்கு ஆகாரத்திற்கு வேண்டிய விருத்தியையும் கற்பித்தார்.

இவ்வண்ண மேற்பாடுகள்செய்துவிட்டு சுவஸ்திகவிமானத்தைப் பிரதக்ஷிணமாக வந்து சமீபத்திலிருக்கும் ருஷிகள் ஆச்சிரமங்களை நோக்கி மிகுந்த களிப்புடன் இளையபெருமாளைப் பார்த்து "இவ்விருஷிகள் மிகவும் பாக்கியசாலிகள். தவத்தாற் பாவமனைத்தையுமொழித்தவர்கள். பார்வையினுலே பரிசுத்தமாக்கக் கூடிய தூய்மையுடையவர்கள். பிறபபை யொழித்து இவவுலக வியாபாரங்களிற் கவலையற்று, எம்பெருமானிடத்தில் மனததை அர்ப்பித்து, பகவத்தியானத்திலே இன்புற்று, மறுமையில் நித்தியானந்த வீட்டையக் காத்திருக்கும் மஹாத்மாக்கள்" என்று சொல்லிக்கொண்டிருக்கையில், கண்வர்முதலான ருஷிகள் இராமபத்திரனை ஆவலுடன் வந்தடைந்தார்கள். ஆண்மை மிக்க போர்வீரனுகிய ரகுவீரன் அவர்களைப் பூஜிக்கவும், முனிவர்கள் "ஓ இராகவா! நல்ல விரதத்தோடு கூடியவனே! உம்முடைய தரிசனத்தால் நாங்கள் யாவரும் தந்யர்களானேம். உம்முடைய வரவால் எங்களுக்குண்டாயிருக்கும் நன்மைக்களவில்லை. தவத்திற்கேற்பட்ட இடையூறுகள் எல்லாம் ஒழிந்துவிட்டன. இப்போது தான் உலகமுழுவதும் ஜயசீலம் பொருந்தி விளங்குகிறது." என்று போற்றித் தங்களுடைய வேதோக்தஆசீர்வாதங்களை அளித்துத் தங்கள்தங்கள் ஆச்சிரமங்களையடைந்தார்கள். கண்ணுவரும் இராமனுடைய அனுமதி பெற்று, திவ்வியசாபனைத் தொழுது ஆச்சிரமத்திற்குச் சென்று சிலகாலம் வசித்திருந்தபின் பாவாஸுதேவனைத் தியானஞ் செய்துகொண்டு யோகமார்க்கத்தால் தம் சரீரத்தைவிட்டுப் பரமபதமடைந்தார்.

தபோதனர்கள் ஆச்சிரமங்களுக்குச் சென்று வந்தபின் விபீஷ ணுழ்வான் சுவாமியினிடத்தில் வந்து "இராவணனை ஜயிப்பது சத்திய பராக்கிரமனுன தேவரீருக்கு ஒரு பெருங்காரியமன்று: ஆயினும் இவ் வானரப் பெருஞ்சேனை கரையற்றகடலை எவ்வாறு கடப்பது? ஆகையால் நம் சேனை சமுத்திரத்தைத் தாண்டிப் போகும்வழியை ஆலோசிக்கவேண்டும். இக்கடலோ தேவரீருடைய வம்சத்தாராலுண்டாக்கப்பட்டது. ஆகையால் நமக்குவேண்டிய உதவியைச்செய்யச் சமுத்திரம் சித்தமாகவேயிருக்கும். இக்கடலில் சைனியங்கள்போகும் வழியைப் பெற்றுக்கொள்ள வருணனை இப்பொழுது அழைக்க வேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்துகொண்டார். இராஜீவ லோசனனும் விபீஷணன் சொன்னதை யங்கீகரித்துக் கடலினிடத்தில் இலங்கைக்குப் போவதற்குரிய மார்க்கத்தைப் பெறத் திருவுளங்கொண்டு, லக்ஷ்மணனால் சாஸ்திரோக்தமாக முறைப்படுத்தப்பட்ட தர்ப்பசயனத்தின்மீது வருணனைஸமரித்துக்கொண்டு சயனித்தருளினர். இவ்வாறு ஏழுநாள் சயனித்துக்கொண்டிருந்தும் சமுத்திரராஜன் வாராமைகண்டு பெருங்கோபமடைந்து செந்தாமரைமலரை யொத்த இரண்டு திருக்கண்களுஞ் சிவக்க, தமதுவேண்டுகோளை அற்பமாகநினைத்து அவமதித்து வாராதிருந்த சமுத்திரராஜனுக்கு, சமுத்திரத்தை வற்றடித்து வெறுந்தரையாக்கித் தமது சைன்யங்கள் கால்கூசாமல் இலங்கைக்கு நடந்துபோகச்செய்யும் வல்லமையைக் காட்ட உத்தேசித்து, மகாகோபத்துடன் இளையபெருமாள் கையிலிருந்த வில்லைவாங்கி, எல்லாவண்டங்களும் நடுநடுங்கும்படி குணத்தொனிசெய்து மேருவிறகுச் சமமான பலமுடைய கோதண்டத்தை வளைத்து, வடவாமுகாக்கினியினும் கொடிதான ஆக்னேயாஸ்திரங்களைப் பிரயோகித்தார். அப்பாணங்கள் கனலையுமிழ்ந்துகொண்டு தேவர்கள் கண்டஞ்சி யெங்குமோடும்படி அதிவேகமாய்ச் சென்று சமுத்திரத்தில் அனல்மூண்டு வேகச்செய்யவே, கடலிலுள்ள மீன்கள் முதலியவை சமித்துக்களாகவும், சமுத்திரம் ஓமகுண்டமாகவும், கடல்நீரானது ஆகுதிசெய்த நெய்யாகவும், பாணங்கள் அக்கினிபோலவும் இருந்தன. இவ்விதமாகக் கோபமே பலவுருக்கொண்டாலொத்த இராமபாணங்கள் அகத்தியமுனியைப்போல அலையெரியும் சமுத்திரஜலத்தையெல்லாம் வற்றக்குடித்துவிட்டன. இவ்

வருஞ்செயல்களைப்பார்த்துவருணன் பதைபதைத்து லோகரக்ஷகனை இராமன் திருவுள்ளத்தை யறியாமற்போனதனுலன்றோ இவ்வளவு விபத்துக்களும் நேர்ந்தனவென்று தெளிந்து தனது அறியாமைக்கு நொந்து பத்னியை முன்னிட்டுக்கொண்டு பயந்தநெஞ்சையும், நீர்சோர்ந்த கண்களையும், தடுமாறிய நடையையும் உடையவனுகி, அபயக்குரலுடன் ஓடிவந்து சர்வலோகசரண்யன் பாதங்களில் அடைக்கலம் என்று வீழ்ந்து, அறியாமையாற் செய்தபிழையைப்பொறுத்து இரக்ஷிக்க வேண்டுமென்று முறையிடவும், மிகுதியாகக் காய்ந்து பொங்கும்பாலில் ஒருதுளிநீர்பட்டால் அடங்குவதுபோல்,கோபமாறி யிரங்கி, வற்றிய சமுத்திரம் மீண்டுமுண்டாகும்படி யருள்புரிந்தார். வருணனும் "நளனென்னும் வானரசிரேஷ்டனுல் சேதுவையுண்டு பண்ணிக்கொண்டு, கொடிய இராவணனைக்கொன்று லோகமாதாவாகிய சீதையை மீட்டு இலங்கைக்கு எழுந்தருளலாம்" என்று மிகவும் தாழ்மையுடன் விண்ணப்பஞ் செய்துகொண்டான்.

உடனே சுக்கிரீவன், வானரங்களெல்லாம் மலைகள் மரங்கள் முதலானவற்றைப் பெயர்த்துக்கொண்டுவந்து கொடுக்கவும், நளன் அவற்றை வாங்கி யொழுங்காய் வைத்துச சேதுவைக் கட்டும்படியும் கட்டளையிட்டான். வானரங்கள் மிகுந்த ஆரவாரத்துடன் துள்ளிக்குதித்தோடி, வேரோடும் தூரோடும் கைகளிலகப்பட்டவற்றையெல்லாம் பிடுங்கிக்கொண்டுவந்து கொடுக்கக் கொடுக்க நளன் வாங்கி முறையாய்வைத்து நூறுயோஜனை நீளமும், பத்துயோஜனை அகலமுமுள்ள சேதுவைக் கட்டிமுடித்தான். அதைப்பார்க்கையில் சீதாபிராட்டியைக் கொண்டுவருதற் குதவிபுரியும்பொருட்டு உலகங்களையெல்லாம் தாங்கியிருக்கும் ஆதிசேஷனே வழியாக வளைந்திருப்பது போலிருந்தது. சேது கட்டிமுடிந்ததும் நளன் கோதண்டபாணியை அணுகி, சேதுவைக் கடாக்ஷித்தருளக் கேட்டுக்கொண்டான். தயாமூர்த்தியாகிய இராகவன் ஆனந்தமடைந்து நளனை இறுகத்தழுவி ஆசீர்வதித்துப் புறப்பட்டுவந்து சேதுவைநோக்கி, சீதையைப் பார்த்த சந்தோஷமடைந்து சுக்ரீவன், நீலன், நளன், அங்கதன் முதலானவர்கள் புடைசூழ்ந்துவர இளையபெருமாளுடனும் வானரசேனைகளுடனும் இலங்கையை நோக்கிப் புறப்பட்டார்கள்.

## சேதுபதிகளுற்பத்தி.

அக்காலத்தில், பூர்வ ஜென்ம நற்கருமப் பெருக்கையுடைய ஓர் வேடன் சக்கரவர்த்தித் திருமகன் சேவையைப் பெறும் பாக்கியம் பெற்று அவ்விடத்தில் வர, அவனை நோக்கி “ஓ வேடனே! இவ்விடத்தில் விசாலமான பட்டணத்தை யுண்டு பண்ணி நீ இங்கேயேயிருந்துகொண்டு, சேது மூலமான புல்லாரண்ய க்ஷேத்திரத்தை இரக்ஷித்துக்கொண்டுவா. அதனால் நீயும் உன் வம்சஸதர்களும, பெருங் கீர்த்தியையும் சேது பாலகர்கள் என்னும் சிறந்த பெயரையு மடைவீர்கள்” என்று ஆக்ஞாபித்தருளினார். பிற்பாடு அவ்வேடன் இராமபிரான் கட்டளையைச் சிரசாகவகித்து, விசாலமான அரண்மனையும் சுற்றி எதிரிகள் கிட்டவொட்டாமற் றடுக்கும் ஆழ்ந்த அகழியையும் மதிலையுமுடைய ஓர் தேவநகருக்கிணையான நகரத்தை, புல்லாரண்ணிய க்ஷேத்திரத்திற்கு வடமேற்கில் அமைத்து, சகல சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்த வேதியர்களாலும் மற்றும் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர்களாலும் பட்டணத்தைக் குடியேற்றிக் கொண்டு திருப்புல்லைத்தலத்தை வெகு காலம் பரிபாலனஞ் செய்து வந்தான்.

கோசலேசர் சயனஞ் செய்தருளிய காரணத்தால் இந்த க்ஷேத்திரத்திற்குத் தெர்ப்பசயனம் என்றும், இவ்விடத்திலிருந்து திருவணை கட்டியதால் சேதுமூலம் அல்லது ஆதிசேது என்றும் பெயர்களுண்டாயின.

---

## சக்கரதீர்த்தச் சருக்கம்.

பல்லாயிரகோடி யண்டங்களையும் அவற்றிலுள்ள ஜீவராசிகளையும் உண்டாக்கி, அவைகளுக்குள்ளும் புறமும் நின்று அவரவர்கள் கருமத்தையூட்டுவித்துத் தாம் யாதொன்றிலும் பற்றின்றி யிருப்பவரும் யோகிகளும் சிந்திக்க முடியாத தன்மையை யுடையவருமான ஸ்ரீ மஹாவிஷ்ணு உலக நன்மையின் பொருட்டு எழுந்தருளியிருக்கும் அசுவத்த விருக்ஷத்தின் முன்னே, ஒரு யோசனை நீள அகலமுள்ளதும் மிகவும் பரிசுத்தம் பொருந்தியதுமான ஒரு தீர்த்தமிருக்கிறது. அது மிகவும் அழகான அல்லி ஆம்பல் ஆயிரமிதழ்கள் நூறு இதழ்

கலையுடைய செந்தாமரை வெண்டாமரை மலர்களால் அலங்காரமாயும் அன்னங்கள் சக்கரவாகங்கள் தங்கி இனிமையாக சப்திக்கப் பெற்றும் ரமணீயமாய் நிர்மலமான தீர்த்தத்தால் நிறைந்துமிருக்கிறது. அநேகவிதமான விருக்ஷங்கள் செழித்து வளர்ந்திருக்கும் அதன் பக்கங்களிலுள்ள சோலைகளில் இருஷிகள் பரிசுத்தமான ஆச்சிரமமைத்துக்கொண்டிருக்கின்றனர். அந்த தீர்த்தம் தேவர்கள் ருஷிகள் சித்தர் முதலியவர்களால் சேவிக்கப்படுகிறது. முன் காலத்தில், ஸ்ரீயப்பதியாயும் கிரீடதாரியாயுமிருக்கிற ஸ்ரீமந் நாராயணன், அதில் அன்னமாயவதரித்து அபௌருஷேயமான வேதங்களைப் பிரமனுக்குபதேசம் பண்ணினா. அதனால் அது மூவுலகங்களிலும் ஹம்ஸதீர்த்தம் என்று பிரசித்தி பெறறு, எல்லாப பாவங்களையும் போக்க வல்லசக்தியை யடைந்திருக்கிறது. பின்வருங்காரணத்தாலது சக்கரதீர்த்தம் என்னும் பெயர் பெற்றது.

பூர்வகாலத்தில் இலங்கையில் மாலி என்ற ஓர் அரக்கனிருந்தான். அவனுக்கு ஆழ்ந்தபுத்தியும், சாஸதிரங்களில் தேர்ந்தஞானமும், தேசகால விஷயங்களில் மிகுந்த பகுத்தறிவும், வரப்பிரதான பலத்தாலேற்பட்ட பெருமதிப்புமுடையவனான சுமாலி யென்றும், மிகுந்த பிரசித்தியும், தருமமார்க்கத்தில் நடக்கும் ஒழுக்கமும, அதிகமான விஷ்ணு பக்தியுமுடைய மாலியவான் என்றும் இரண்டு சகோதரர்களிருந்தார்கள். ஆக இம்மூன்று இராக்கதத்தலைவர்களும் அக்கினிக்குச் சமமான தேஜஸ்ஸுடன் உபேக்ஷிக்கபபட்ட வியாதியைப்போல் விருத்தியடைந்தார்கள். இம்மூவரில் சுமாலி மாலி என்னுமிருவர்களும் பயங்கரமான கொடுந்தொழிலுடையவர்கள். மூவுலகத்திலுள்ளவர்களுக்கும் துன்பஞ்செய்வதிலே யின்பமடைபவர்கள். இவர்களிடுக்கண்களைப் பொறுக்கமுடியாத தேவர்கள் ருஷிகள் முதலானோர் பிரமாவுடன் திருப்பாற்கடலையடைந்து, அதில் யோக நித்திரை செய்தருளும் தெய்வவான்மரகதமலையினை வழுத்தி, தங்கள் கஷ்டங்களைச் சொல்லி முறையிட்டார்கள். பக்தர்கள் முறைக்கிரங்கி சமஸ்தவுலக உபத்திரவகாரிகளான சுமாலி மாலிஎன்னுமரக்கர்களைச் சங்கரித்து அவர்களைக் காப்பாற்றுவதாகத் திருவாய்மலர்ந்தருளி அவர்கள் யாவரையும் அனுப்பியபின், கருடனை நினைக்கவும், அவர்

உடனே ஆகாய மார்க்கமாயவ்விடத்திற்கு வந்து சேர்ந்தார். பொன் மயமாய்ப் பிரகாசிக்கின்ற ஓர் குன்றின் மேல் பொருந்தி நிற்கும் கருமேகம் போல் விளங்கும்படி பெரிய திருவடியின் தோளில் ஏறிக் கொண்டு, பக்தரக்ஷணார்த்தம் எம்பெருமான் இலங்கையை யடைந்தார். அங்கே பாஞ்ச சன்னியத்தை யெடுத்து கோஷித்து, இராக்கத சேனைகளுடன் கூடிய சுமாலி மாலி என்பவர்களுடன், யாவராலும் இன்னவாறு என்று ஊகிக்கக் கூடாத யுததத்தைச் செய்து, அவர்களைச் சாதாரண அஸ்திரங்கள் கொல்லாமையைக் கண்டு, அத்துஷ்டர்களை நிக்கிரகம் செய்துவரும்படி சுதரிசனாழ்வானை நியமித்தருளினார். பக்தர்களினுபத்திரவதனைப் போக்குவதிலே மிகவும் கருத்துடைய ஹரியால் ஏவப்பட்ட அவ் வாயுதராஜன், சுமாலி மாலி என்பவர்களின் சிரங்களை யறுததுத்தள்ளி, அவர்களுக்கு உபபலமாக வந்த கோடிக்கணக்கான இராக்கதர்களையும் கொன்று ஒரு முகூர்த்தத்தில் எம்பெருமான் பககத்தில் அமர்ந்தார்.

அரக்கர்களைச் சங்கரித்ததினால் சக்கரத்தாழ்வான் திருமேனியில் இரதத மாமிசாதிகளால் அழுக்குண்டாயிருப்பதை நோக்கி "மகாபரிசுததமுள்ள புல்லாரண்ணியமென்னும் என்னுடைய விசேஷமான க்ஷேத்திரததில், ஹமஸதீர்த்தமென்று பிரசித்தி பெற்ற ஓர் பெரிய சரசிருக்கிறது. அதில கங்கை, சிநது, கோதாவரி, ரேவதுங்கபத்திரை முதலான நதிகளும, மானஸம முதலான சரசுகளும் எக்காலத்தும் வசித்துக்கொண்டிருக்கின்றன. ஆகையால் உனது சரீரத்திலுண்டாயிருக்கும் மலத்தைக் கழிப்பதற்கு அதில் ஸ்நானஞ் செய். நீ அதில் நீராடியது முதல் அதற்குச் சக்கர தீர்த்தம் என்னும் பெயருண்டாகும். அந்த தீர்த்தம எல்லா பாவங்களையும் போக்கும். மகா பரிசுத்தியையும் கொடுக்கும, சகல இஷ்டங்களையும் பூர்த்தி செய்யும். வெகு காலம் மலடாயிருப்பவாகளுக்கு புத்திர வுற்பத்தி செய்யும். சரீர சுகத்தையும் கொடுக்கும். எவனொருவன் வேற்றரசன் படையெடுத்து வருவதையறிந்து அதில் ஸ்நானஞ்செய்து, திவ்வியசாபனை வணங்கிவிட்டுச் சண்டைக்குச் செல்லுகிறானோ அவன் எதிரிகளை முறியடித்து ஜயமடைகிறான். தசரத சக்கரவர்த்திக்குத் திருமகனயவதரிக்கப்போகிற யான் இலக்குமணனுடன் அதில் ஸ்நானஞ்செய்து இராவணனுடன் இராக்கதர்களைக் கொல்லப்

போகிறேன். அப்புண்ணிய தீர்த்தத்தில் நீராடுகையில் நியமத்தோடு கருடாழ்வானையும் உன்னையும் என்னையும் ஸ்மரிக்கிறவர்கள் தாங்கள் பெறநினைக்கும் பலன்களையும், நீடித்த வாழ்நாளையும் அடைவதல்லாமலும், மோக்ஷ ஐசுவரியத்தை விரும்புகிறவர்கள், விடாது பற்றிவரும் ஜனனமரணங்களை யொழித்து வீட்டையும் அடைவார்கள்." என்று சக்கரத்தாழ்வானுக்கு, ஹம்ஸதீர்த்த மகிமையை யருளிச்செய்து அதில் நீராடிவரும்படி ஆக்ஞாபித்தார்.

ஆயுத நாயகன் உடனே சென்று அதில முழ்கி, மலமகன்று, இயற்கையான பிரகாசம் பொருந்தி எம்பெருமான் வலது திருக்கையில் விளங்கினர். அது அக்காலந்தொட்டு சக்கரதீர்த்தம் என்று பெயர்பெற்று, வடக்கே புஷ்கரம்போல், தெற்கே அதிபாதகம் மகா பாதகம் முதலிய கொடிய பாவங்களையும் தொலைக்கும் தூய்மையுடையதாயிருக்கிறது.

கங்கை முதலான நதிகளுக்கும், மானஸம் முதலான புஷ்கரணிகளுக்கும் கிருச்சிர சங்கியை ஏற்பட்டிருக்கிறது. சாபபாபநாசகரமான இத்தீர்த்தத்திற்கு கிருச்சிர சங்கியையறிய ருஷிகளால் முடியாமல் தருமசாஸ்திரங்கள் புராணங்கள் ஆகமங்கள் முதலியவற்றை ஆராய்ந்து சாதுவென்று நிச்சயித்தார்கள். அனந்தபுண்ணிய பலத்தையும் கொடுப்பதாலும், அனந்தபாவங்களையும் போக்கடிப்பதாலும், அனந்தனுடைய சான்னித்தியத்தாலும், சக்காதீர்த்தம் மிகவும் பெருமையுற்றது. ஆகையால் அனந்த கிருசிர பலப்பிரதாதமென்று பெரியோர்கள் ஒன்றுசேர்ந்து நிர்ணயித்திருக்கிறார்கள். ஆதலால் இதற்கு நிகரான தீர்த்தம் முக்காலத்தும் கிடையாது.

சக்கரதீர்த்தம் கிருதயுகத்தில் ஒருயோஜனை விஸ்தாரமுள்ளதாயிருக்கும். திரேதாயுகத்தில் அதிற்காற்பங்கு குறையும். துவாபரயுகத்தில் அரை யோஜனை சிறிதாய்விடும் கலியுகத்திலோ ஓர் தடாகமாகத்தான் காணப்படும். இவ்வாறு குறைந்து வந்து ஓர் சதுர்யுகங்கழிந்தபின் மறுபடியும் பூர்வ ஸ்திதியையடையும். இராச்சியத்திற்கு நன்மை தீமைகளுண்டாகப்போவதை இப்பொய்கையில் அவற்றிற்குத் தகுந்த அடையாளங்களாற் றெரிந்துகொள்ளலாம்.

தீர்த்தம் நிர்மலமாயிருந்தால் தேசத்திற்கு மிக்க நன்மை யுண்டாகும். ஜலம் பொன்னிறமானால், நாட்டில் விளைவு குன்றி ஜனங்கள் பசி தாகத்தால் வருந்துவார்கள். இன்னும் பாசிகொத்துகளாலும் ஆபாச ஜந்துக்களாலும் இப்புஷ்கரணி நிந்திக்கப்படுமானால் பசுக்கள் நாசமடைவதுமல்லாமல் கள்ளர் பயமுமுண்டாகும். இவ்விதமாய், இதின் தெளிவு முதலியவற்றால், வரபபோகும் விஷயங்களைப் பெரியோர்கள் ஊகிப்பார்கள். இந்த தீர்த்தத்திற்கு, பிரம்மதீர்த்தம், ஹம்ஸதீர்த்தம், தர்மதீர்த்தம், வருணதீர்த்தம், சக்கரதீர்த்தம் என்று ஐந்து பெயர்களுண்டு.

## அகஸ்திய தீர்த்தம்.

முன்னொருகாலத்தில் அகஸ்திய மகாமுனி கோபமடைந்து, நதி நதங்களுக்கெல்லாம் நாயகனான சமுத்திரத்தைத் தன்னுள்ளங் கையள வாக்கிப் பானஞ்செய்துவிட்டு, ஒரு தீர்த்தத்தை யுண்டாக்கி, அதில் ஸ்நானஞ்செய்து பிதிர்க்களை யுத்தேசித்துப் பிண்டதானமும், அக்கினி முதலான தேவதைகளைக் குறித்துத் தர்ப்பணமும் பண்ணினார். அது முதல் அதற்கு அகஸ்தியகுண்ட மென்று பெயர் வழங்கி வருகிறது. அதில் பிதிர்க்களுக்குப் பிண்டதானமும், தர்ப்பணமும் செய்தால் உத்தாரணமுண்டாகும். அகஸ்திய குண்டம சக்கரதீர்த்தத்திற்குத் தெற்கிலிருக்கிறது.

## ஹிரண்ய தீர்த்தம்.

சக்கர தீர்த்தத்திற்கு மேற்கே பெரியதாய் நதிவடிவுள்ள ஓர் ஜலாசய மிருக்கிறது. அந்நீர் நிலையில் இரணியகசிபு தவம்புரிந்து, பெரியவரங்களைப் பெற்று, அஷ்டதிக்கு பாலகர்களையும் வென்று தன்வசமாக்கிக் கொண்டான். பின்னர் அவன் பெயராலே அத்தீர்த்தம் விளங்கிக்கொண்டு வருகிறது. ஹிரணிய தீர்த்தம்=பொன்னன்கழி. ஹிரணியம்=பொன்.

---

## காலவருஷிச் சருக்கம்.

முன்னொருகாலத்தில், தென் சமுத்திரக் கரையில் பாலாற்றிற்கு வடக்கே, புல்லாரண்ணிய க்ஷேத்திரத்தில், தமதாச்சிரமத்தினருகில்

காலவர் என்னும் ஓர் முனிவர், வாசுதேவனையே பரமப்பிராப்பிய மாகவுடையவராய், சிலகாலம் சருகு கிழங்குகளை யுட்கொண்டும், கொஞ்சகாலம் நீரை மாத்திரமே யருந்தியும், இன்னுஞ் சிலகாலம் வாயு பக்ஷணம் பண்ணியும், வெகுகாலம் ஆகாராதிகளில்லாமலும், ஐம்புல நுகர்ச்சியையும் அறுத்து அவற்றைத் தம் வசப்படுத்திக் கொண்டு, தேவர்களாலுஞ் செய்தற்கரிய தவத்தை 10000 வருஷ செய்து வந்தார். ஆச்சிரமத்திலிராமல், மழைகாலத்தில், வெறும் வெளியிலும், பனிக்காலத்தில் ஜலத்திலும், கோடை காலத்தில் பஞ்சாக்கினி மத்தியிலும் நின்று கொண்டு, வாக்கில் அஷ்டாக்ஷர ஜபமும், மனத்தில் ஜனார்த்தனனைக் குறித்துத தியானமும் நிறைந்து காலவர் புரியும் மாதவத்தை நோக்கி, அவரிடத்திற் கிருபை கூர்ந்து, அவருக்குத் தமது பரஸ்வரூப சேவையைத் தந்தருள்புரியத் திருவுளங் கொண்டு, கருடாரூடராய், அநந்தர் விஷ்வக்சேனர் முதலிய நித்தியர்கள் சூழவும், நாரதாதியர் கானஞ்செய்யவும், சனகாதி யோகிகள் இருபக்கமும் நெருங்கிச சிரமேற கைகுவித்துத துதிக்கவும், பக்தர்கள் தவிர மற்றோர்க் கெட்டாத ஸ்ரீமந நாராயணன் நீலமேக சாமள வர்ணனாய், தமது காந்தியால் புல்லாரண்ணிய முழுவதும் தூய்மையடையவும், தமது புன்சிரிப்பால் மூவுலகும் மோகிக்கவும், லீலார்த்தமாக ஓர் கையில் தாமரைமலரை ஆட்டிக்கொண்டு, காலவருக்கு முன் பிரசன்னமானார். தம் எதிரில் தோன்றும் நீலமேக நெடும் பொற்குன்றத்தைக் கண்களாற் பானம பண்ணி விடுபவர்போல் மலர்ந்த கண்களை யுடைய காலவர்,

"தேவதேவனே, சங்கசக்கரதரனே, சுத்தனே, நித்தியனே, சச்சிதானந்த ஸ்வரூபியே, பக்தர்களிடரைப் போக்கிப் பேரின்ப வீட்டைக் கொடுப்பவனே, கருணா மூர்த்தியே, வாசுதேவனே, சார்ங்கியே" என்று போற்றினார். சுவாமி தம்முடைய பக்தன் துதியைக்கேட்டுப் பிரீதியடைந்து, உன்னுடைய வைராக்கியத்தையும், இடையறாத்தவத்தையும் கண்டு சந்தோஷ மடைந்தேன். உனக்கு வேண்டிய வரத்தைக்கேள்" என்று திருவாய் மலர்ந்தருளினார். "பகவந்! கிடைத்தற்கரிய தேவரீருடைய திவ்விய சேவையைப் பெற்றேன். அதுவே யெனக்கு யாவுமாயிருக்க, அதைவிடப் பெரும்பேறு

அடியேனுக்குயாதிருக்கிறது? தேவரீருடைய தரிசனத்தாலே யான் கிருதார்த்தனாய் விட்டேன். ஆகிலும், தேவரீருடைய திருவடிகளில் எக்காலத்திலும், எந்நிலையிலும் எனக்கு மாறாத பக்தி யிருக்கவே ண்டியது தான் அடியேன் வேண்டும வரம" என்று விக்ஞாபனம் செய்து கொண்டார். பகவானும "அப்படியே என்னிடத்தில் என் றும் நழுவாததும் பலனை யுத்தேசியாததுமான பக்தி உன்னிடத்தில் நிலைநிற்கும். இந்த ஆச்சிரமததில சரீரம் போமளவும் வசித்துக் கொண்டிரு. அது கழிந்தவளவில் என்னை நீ நிச்சயமாயடைவாய்; உனக்குப் பயமெப்போதாகிலு முண்டாகில், சக்கரத தாழ்வானையேவி அதைப் போக்குகிறேன்" என்று திருவாக்களித்து மறைந்தார்.

பின்னர், காலவர் சக்கர தீர்த்தத்தில் நீராடி பகவானைத் தியா னம் பண்ணிக்கொண்டு, ஆசையற்றவராயும் ஜிதேந்திரியராயும் வசி த்து வருங்காலத்தில் ஒரு மாசிமாதத்தில் சுக்கில பக்ஷத்தில் ஏகாதசி யில் உபவாசமிருந்து மறுநாள் துவாதசியன்று, காலையில் ஸ்நானஞ் செய்து, நித்திய கருமானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, எம்ருமானை ஆராதித்து அவரிடத்தில் மனதை யூன்றித் தோத்தரித்த பின் பாரணத்திற்கு சித்தமாயிருக்கையில், அவரை ஓர் இராக்க தன் பிடித்துக் கொண்டான். அக்கொடியவன் வலிமையால் பிடிக் கப்பட்ட ரிஷி ஆபத் பாந்தவனான விஷ்ணு மூர்த்தியைக் குறித்துக் கதறினார்.

"ஓ கருணாஸிந்துவே, இராக்ஷதனுக்கு வசப்பட்டிருக்கும் என்னை இரக்ஷிக்க வேண்டும். பக்தர்களிடர்களைப் போக்குவதால் ஹரி என்னும் திருநாமம் பெற்ற இரக்ஷகமூர்த்தீ, வைகுண்டநாதா, முதலையால் பிடிக்கப்பட்ட வாரணம் 'மெய்நடுங்கிக் கையெடுத்துத் திசையனைத்துஞ் சென்றொலி கொள்ள' ஆதிமூலமே யென்றழைத்த போது ஓடி வந்து கஜேந்திரனைக் காத்தவாறு, என்னையும் இவ்வரக் கன் உபத்திரவத்தினின்றும் விடுவித்தருளும்!' என்று ஓலமிடுகிற தம்முடைய பக்தர் காலவருக்கு நேரிட்டிருக்கும் பயத்தை யறிந்து, அதை நிவர்த்திக்கும்பொருட்டு, சக்கரத்தை யேவினார். எம்பெரு மான் நியமனம் பெற்ற சுதர்சனாழ்வான் கோடிசூரியப் பிரகாசத் துடன் மிகவும் விரைவாய் சக்கரதீர்த்தத்தினருகில் வருவதைக்

கண்ட துராத்துமா பயந்தோடினன்; ஓடியும் ஆயுத ராஜன் அவனை விடாது பின்தொடர்ந்து, அவன் தலையையறுத்துத்தள்ளினர்.

அரக்கனிறந்துவிட்டான் என்று தெரிந்ததும் காலவர் பயம் நீங்கி, சந்தோஷமடைந்து, விஷ்ணுசக்கரமே, உலகங்களின் இரக்ஷணத்தில் தீக்ஷிதரே, நாராயணன் கைத்தாமரைக்கு ஆபரணமாய் விளங்குபவரே, அசுரசைன்னியங்களை வெல்லுவதில் மிகவும் சமர்த்தரே, பயமுள்ள என்னையும், என்னைப்போன்ற மற்றோரையும் காத்தருள வேண்டும். பக்தார்த்திபஞ்சனனே, சுதர்சனப் பிரபுவே, இத்தீர்த்தத்தில் ஸாந்நித்தியம் செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

காலவரை சுதர்சனாழ்வான் அன்புடன் பார்த்து "உம்மை இவ்வாபத்தினின்றும் விடுவிக்க, பகவானால் யானிங்கனுப்பப்பட்டேன். உம்மைப்பீடித்தவனுமிறந்தான். நீரடைந்திருந்த பயமும் நீங்கிற்று. சர்வேசுவரனுடைய கட்டளையாலும், உம்முடைய வேண்டுகோளாலும் நான் இத்தீர்த்தத்தில் வசிக்கிறேன். இனிமேல் சாதுக்களுக்கு எவ்விதமான பயமுமுண்டாகாது. நான் முன்னொரு காலத்தில், இதில் நீராடி மலமகன்று தூய்மை யடைந்ததாலும், நான் இங்கு வசிப்பதாலும், இதற்குச் சக்கரதீர்த்தம் என்று பெயருண்டாகும். இதில் ஸ்நானஞ்செய்கிறவர்கள் பாவங்கள் ஒழியப்பெற்று புத்திர பௌத்திரர்களையடைந்து, நல்லெண்ணங்களும் நன்னடக்கையும் அமையப்பெற்று, சன்மார்க்கத்தில் நடந்து, முடிவில் பரமபதமடைகிறார்கள். பிதிர்க்களை யுத்தேசித்துப் பிண்டதானஞ்செய்கிறவர்கள், பிதிர்க்களைத் திருப்தி செய்விப்பதுமன்றி, சுவர்க்காதி போகங்களையுடைவார்கள்." என்று அருளிச் செய்து மறைந்தார்.

---

## நாகப்பிரதிஷ்டைச் சருக்கம்.

புல்லாரண்ணியத்தில், தெய்வச்சிலைப் பெருமான் திருவருள் சுரந்து தனதடியில் வீற்றிருக்கப் பெறும்பாக்கியத்தைப் பெற்ற திருவரசு, சக்கரதீர்த்தத்திற்கு மேற்கில் நீண்டு வளர்ந்து விசாலமாய்ப் பரவிய கிளைகளுடன், மிகவும் அழகாய்ச் செழித்தோங்கி நிற்கின்

றது. தேவர் கந்தருவர் இயக்கர் வித்தியாதரர் முதலிய சுவர்க்க லோகவாசிகள், அம்மரத்தை யடைந்து, மிகவும் சிங்காரமான நந்தனவனத்திற் சஞ்சரிப்பதாலுண்டாகும் ஆனந்தத்தை யனுபவிக்கிறார்கள். பாஷண்டர்கள், பதிதர்கள், மிலேச்சர்கள், கிராதகர்கள் முதலிய மகா பாவிகளும், இவ்வாசின் தரிசனத்தால், தங்கள் பாவங்களினின்றும் சட்டை கழற்றிய பாம்பைப்போல் நீங்கிச், சுத்தர்களாய், நற்கதிபெறும் யோக்கியதை யடைகிறார்கள். திருவாசே பகவானுடைய உருவங்களி லொன்றாதலாலும், இத்திருவாசடியில் எம்பெருமான் சான்னித்தியம் செய்வதாலும், உண்மையான பக்தியுடன், சித்தத்தை ஜகந்நாதன் திருவடிகளில் ஊன்றிப் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்பவர்களுக்குண்டாகும் பலன்கள் மிகவும் விசேஷமானவை. ஆகையால் இஷ்டகாம்மியார்த்தங்களைப் பெற விரும்புவோர்கள், அசுவத்த விருக்ஷத்தை நியமத்துடன் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து, பின் சொல்லும் விதம் அவ்விருக்ஷ ராஜத்திற்கு அபிஷேகஞ் செய்யவேண்டும்.

பொன், வெள்ளி, செம்பு, என்னும் லோகங்களாற் செய்த குடங்களில், இல்லாவிடில் மண்குடங்களில் 1000, 108, 64, 32, 16, 12, 8 அல்லது குறைந்தது 4-குடஞ் சுத்தஜலத்தால், விஷ்ணுசூக்தம் புருஷசூக்தம் என்னும் மந்திரங்களைப் பாராயணஞ்செய்து கொண்டு இரட்டையிரட்டையாய்த் தாமாகவாவது, சக்தியற்றவனானல் பிறரைக்கொண்டாவது சிரத்தையுடன் திருமஞ்சனஞ்செய்யவேண்டும்.

இவ்விதஞ் செய்கிறவர்கள் தமது எல்லா இஷ்டங்களையும், தீர்க்காயுளையும் அடைகிறார்கள். வித்தியார்த்தி வித்தையையும், கன்னிகை நல்ல கணவனையும், மலடி பிள்ளையையும், புத்திரனை இழந்தவர்கள் நீடித்தவாழ்நாளையுடைய குமாரனையும், விதவை ஞானத்தையும், வைசியன் தனத்தையும், சூத்திரன் சுகத்தையும் அடைகிறார்கள். இராஜ்யமிழந்த அரசன் திருவாசிற்கு ஆயிரம்குடங்களால் திருமஞ்சனஞ்செய்தால், மறுபடியும் தன்னரசை யடைவான். ஸ்தானப்பிரஷ்டனான அரசன் நூறுகும்பங்களாற் செய்யவேண்டும்.

அசுவத்தமூலத்தில் முற்காலத்தில் பகவான் ஆவிர்ப்பவித்த காரணத்தால், அத்திருவாசடி மிகவும் பரிசுத்தமாம். ஆதலால் அதனை

டியிலுள்ள மிருத்திகையை யெடுத்து அதன் ஜீர்ணமான பட்டையுடன் சக்கரதீர்த்தத்தில் நனைத்து ஒன்றுசேர்த்து, அதைக்குழைத்து ஊர்த்துவபுண்டரமாகத்தரித்துக் கையிலிருக்கும் மீதியைச் சக்கர தீர்த்த ஜலத்துடன் கலந்து, பானம் பண்ணித் திருவரசை வலம் வந்து நமஸ்கரிப்பவர்கள், திவ்விய ஞானம் பெற்றுப் பெறுதற்கரிய பரமபதமடைகிறார்கள்.

இன்னும், புத்திரார்த்திகள், திருவரசடியில் நாகப் பிரதிஷ்டை செய்தால், புத்திரசந்தானத்தை யடைகிறார்கள். பெண்குழந்தைகளை மாத்திரமேயுடையவர்கள், மலடியான மனைவியையுடையவர்கள், கலாவபாதங்களாலவமானப்பட்ட ஸதிரீகளின் கணவர் முதலானவர்கள், நல்ல இலக்ஷணமமைந்த நாகப்பிரதிமையை அலங்கரித்து, முறைப்படி பிரதிஷ்டை செய்யவேண்டும்.

பிரதிஷ்டை செய்யும் தினத்திற்கு முதனாளிரவில், நியமத்துடன், புத்திரார்த்தி தானும் தன்னுடைய ஸதிரீயும் கோயிற்குச் சென்று பிரதிமையை ஜலாதிவாஸம் செய்விக்கவேண்டும்.

அன்றிரவில் விரதத்துடனிருந்து, பிராம்ம முகூர்த்தத்தில் (விடிய இரண்டரை நாழிகைக்கு) பாணிபாத பிரக்ஷாளனஞ் செய்து மனோரதபூர்த்தியின்பொருட்டு எம்பெருமானைச் சிந்தித்து சக்கரதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி, சந்தியாவந்தனம் முதலிய காலைக்கடன்களை யனுஷ்டித்து, ஔபாஸனத்தின் பின்பு கோயிற்குப் போகவேண்டும். அங்கே ஸ்ரீஜகந்நாதனை வலம்வந்து தெண்டனிட்டு, தோத்திரஞ்செய்து, திருவரசை யடைந்து சுத்தரான வைகானசப்பிராம்மணரை ஆசாரியராகவரித்து, அவரால் நாகப்பிரதிஷ்டையை முடித்து நன்றாகப்பூஜிக்கப்பட்ட நாகப்பிரதிமையைத் திருவரசடியில் ஸ்தாபித்து, இருவரும் சந்தோஷத்துடன் பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து, எண்ணியவெண்ணம் நிறைவேறும் பொருட்டு, தியானத்துடன், பிரதிமைக்கு நிவேதனஞ்செய்த பாயசத்தை இருவரும் புசிக்கவேண்டும். சக்திப்பிரகாரம், வேதியர்களுக்கன்னமிட்டு, தக்ஷிணைகொடுத்து, அவர்கள் ஆசீர்வாதங்களைப் பெறவேண்டும். இவ்வாறு நாகப்பிரதிஷ்டை செய்கிறவர்கள், நீடித்த வாழ்நாளுடைய

புத்திரர்களைப்பெற்று, நீடுழிகாலம் வம்சாபிவிருத்தியடையும் பாக்கியத்தை யடைந்து, எக்காலமும் நீங்காத சந்தோஷத்தையும், சுகத்தையும் அனுபவிக்கிறார்கள்.

---

## ஆறாம் அத்தியாயம்.

### நான்முகன் வரலாறு.

எல்லா விருக்ஷங்களைக் காட்டிலும அசுவத்த விருக்ஷம் என்ன காரணத்தால மாஹாத்மிய மடைந்தது, என்று கேட்ட இருஷிகளுக்குச சூதர் சொல்லுகிறார்.

பிரம்மா உருத்திரன் பிராமமணர்கள் கோக்கள் அசுவத்த விருக்ஷங்கள் ஆகிய ஐந்தும், ஸ்ரீ வாஸுதேவனுக்குப் பிரதான சரீரமாகச் சொல்லபபடுகின்றன. அதனாறறான் அரசு மற்ற மரங்களைவிட விசேஷமாகச் சொல்லப் படுகிறது.

அவ்வாறானால் எல்லா அரசும் ஒரேவண்ணம் பூஜிக்கத்தக்கவையாயிருக்க, இத்திருவரசிற்கு மாத்திரம் ஏற்பட்ட சிறப்பு என்னவென்று சௌநகாதியர்கள் கேட்கப், புராணிகர் சொல்லலுற்றார்.

பிராகிருதப் பிரளயத்தில் நாராயணன் எல்லாப் பிரஜைகளையும் சிருஷ்டிக்க இச்சித்தார். முதலாவது பிரம்மாவையும், பின் நவப் பிரஜாபதிகள், இந்திரன், தேவதைகள் முதலானவர்களையும் தமது சரீரத்தினின்றும உண்டாக்கி, நான்முகனைபபார்த்துச் சகல லோகங்களையும் படையுமென்று சொல்லிவிட்டு க்ஷீராப்தியில் யோக நித்திரை செய்தருளினார். பிறகு, கமலாசனன் படைத்தற் றொழிலை மேறகொண்டு, சனகாதி யோகிகளை மனத்தினின்றும் சிருஷ்டித்தார். அவர்கள் ஆசையற்றவர்களாய்ப், பரிசுத்தமான மனத்தையுடையவர்களாய், எப்போதும் பகவத் விஷயமான தியானத்தையே மேற்கொண்டு, சம்சாரத்தில் விமுகர்களாயிருந்தார்கள். அப்படியிருக்கும புததிரர்களைநோக்கி "ஓ புததிரர்களே! நீங்கள் மௌனமாய் எதை ஸ்மரித்துக் கொண்டிருக்கிறீர்கள்? நான் பகவானால் பிரஜைகளை யுண்டுபண்ணும்படி ஆக்ஞாபிக்கப் பட்டேன். அதனிமித்தந்தான் உங்களை சிருஷ்டித்தேன். நீங்களிப்படி யிருந்தால் என்னபிப்பிராயம் எவ்வாறு நிறைவேறும?" என்றுபிதாமகன் சொன்னார்.

அதைக் கேட்டுக் கல்மஷமில்லாத சனகாதி யோகிகள் "ஆசையற்ற எங்களுக்குப், பிரஜைகளால் என்ன பிரயோஜனம். எங்களுக்கு பரமாத்மாவே ஆத்மாவாகவிருக்கிறார்" என்று கிரமமாக விடை சொன்னார்கள். அவர்கள் மறுமொழியைக்கேட்டு அவர்கள் வைராக்கியத்தையறிந்து, சீக்கிரமே தமது பிதாவாகவும் ஆசாரியனாகவும் இருக்கிற பன்னக சயனனிடத்துத் தெரிவிக்கும் பொருட்டு, பிரம்மா அன்னவூர்தியாய் சனகாதியோகிகளுடன் புறப்பட்டு க்ஷீராப்தியை நோக்கிச் சென்றார்.

வழியில் ஜம்பூத்துவீபத்தின் தென்கிழக்குப் பிரதேசத்தில் இலவண சமுத்திரக் கரையிற் கோடிசூரிய காந்திக்குச் சமானமான பிரகாசமுடையதாய் தேஜஸ்ஸினால் ஆகாயம் பூமி இன்னும் மற்ற யாவற்றையும் வியாபித்து நிற்கின்ற ஒரு தேஜோராசி காணப்பட்டது. அதைப்பார்த்து 'இஃதென்ன தெரியவில்லையே' யென்று ஆச்சரியமடைந்து வாகனத்தினின்றும் கீழேயிறங்கிப் பரியாலோசனை செய்தார். ஒரு பெருஞ்சோதி காணப்பட்டதையும் திடீரென்று அது மறைந்து விட்டதையும்பற்றி அதிசயமடைந்து, ஒரு முகூர்த்த காலம் தியானம் பண்ணியபிறகு, அதிபக்தியுடன் பகவானை ஸ்தோத்திரம் செய்தார்.

"பரேசனே, பராத்பரனே, அவ்யயனே, விகாரமற்றவனே, நிர்க்குணனே, கல்யாண குணங்களை யுடையவனே, காரணரூபனே, பக்தர்களுக்குக் கிட்டவும், அபக்தர்களுக்கு நெடுந்தூரத்திலுமிருப்பவனே, பரமேசுவரா, உம்முடைய சேவை தந்தருள வேண்டும்" என்று போற்றுகிற பிரம்மாவின் வார்த்தையைக்கேட்டு பக்தவத்ஸலனான பகவான் அவர்களுக்குப் பிரத்தியக்ஷரானார். க்ஷீராப்தி நாதனான எம்பெருமானின் அப்பிராகிருதமான திவ்ய மங்கள விக்கிரஹத்தைக் கண்ணாரக்கண்டுகளித்துப் பலமுறை தண்டனிட்டுக் கைகூப்பி நிற்கும் பிரம்மாவை, ஹரி நோக்கி "ஓ விதியே! சிருஷ்டிக்க வேண்டிய காலத்தில் இவ்விடம் வந்து விட்டனையே; இப்பாலர்களும் ஏன் உன்னுடன் வந்தார்கள்" என்று வினவினார். "ஷாட்குண்ணிய பரிபூரணனே, தேவரீரால் படைத்தற் றொழிலில் ஏவப்பட்ட நான், இவர்களை யுண்டுபண்ணி எனக்கு அத்தொழிலில் உதவி செய்யும்படி சொன்னேன். அதற்கு, மிக்கவைராக்கியத்

துடன், பிரஜைகளாற் றங்களுக்கு யாது பிரயோஜனம் என்றும், தங்களுக்குத் தேவரீரே யாவுமென்றும் சொன்னதைத் தெரியப்படுத்தும் பொருட்டு தேவரீரை யடைந்தேன்" என்று நான்முகன் உத்தரமளித்தார். அதற்குப் பகவான் "அவர்கள் சொல்லுவது மெய்தான், சதா என்னிடத்தில் மனத்தை யூன்றினவர்களாயிருப்பதால் சம்சாரத்தில் விமுகர்களாயிருக்கிறார்கள். தவிரவும், அவர்கள் மனத்தினின்றும் சிருஷ்டிக்கப் பட்டவர்களாகையால் ஒன்றிலும் பற்றின்றி யிருக்கிறார்கள். யோனி சம்பந்ததால் சிருஷ்டிக்கப் பட்டால் உலகம் எக்காலமும் பிரஜாவிருத்தி யடைந்துவரும். ஆனதால் ஆத்தும வருக்கத்தை ஸ்திரீ புருஷர்களுடன் கூடினதாய் சிருஷ்டிக்கக்கடவீர்" என்றுரைத்தார். "ஆக்ஞையின் பிரகாரம் நடப்பதே என் பாக்கியம். இன்னும் யான் கேட்கவேண்டுவதொன்றிருக்கிறது, யாதொரு தேஜஸ்புஞ்சமானது எனக்குக் காணபட்டதோ அதைக் காண்பித்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்த பிரமாவுக்கு ஹரி சொல்லுகிறார். போதஸ்வரூபனை பகவான் போதிரூபனான். (ஞானஸ்வரூபனை பகவான் அசுவத்த ரூபனானான். போதம்=ஞானம்;போதி=அரசு) இவ்விருக்ஷத்தின் கிளைகள் சுவர்ணபிரகாசமாய் மிகவும் விஸ்தாரமாயிருக்கின்றன. இலைகளும் சுவர்ண தேஜஸ்ஸாய் விளங்கிச் சொலித்துக்கொண்டிருக்கின்றன. விருக்ஷம் ஊர்த்துவ பாகத்தில் நூறுயோஜனை விஸ்தீரணமும், அதோபாகத்தில் பதினாறு யோஜனை விஸ்தீரணமும உள்ளது. சுற்றளவு நூறுயோஜனை. இம் மரத்தின்காந்தியால் பத்துத்திக்குகளும அதிகப் பிரகாசமடைவதனால் தேவகந்தருவசித்தவித்தியாதரர்களும் பரமரிஷிகளுங்கூட இதுதான் மேருவோ வென்று சந்தேகிக்கிறார்கள்.

ஷாட்குண்ய மூர்த்தியான ஸ்ரீஜகந்நாதன் திருவாசடியில் பகைவரை வருத்தும் ஆழியையும் சங்கையும அழகிய தாமரைக் கையகத்தே வலனு மிடமுமேந்தி, பொற்பூவாடையுடுத்து, திருமகள் வாஸஞ் செய்யும் மார்பினிடத்து ஸ்ரீவத்ஸமுங் கௌஸ்துபமும் விளங்க, அழகிய திருத்துழாய் மாலையை யணிந்து, பிரசன்னமான திருமுக மண்டலத்துடனும் திருக்கண்களுடனும் நின்ற கோலத்தைக் கண்டு, ஆனந்த அருவி கண்களினின்றும் சொரிய, இன்னது செய்வது என்று தோன்றாது நிற்கும் சதுர்முகனுக்கு ஞானத்தைக்

கொடுத்து “ இவ்வரசினடிக்கு மங்களகரமான தீர்த்தத்தால் திருமஞ்சனம் செய்யும். எல்லா இஷ்டங்களையும் பெறுவீர். இன்னும் எப்போது சீக்கிரம் என்னிடத்தில் வரவேண்டிய காரியம் இருக்கிறதோ அப்போது இவ்விடத்திற்கு வாரும். விளம்பித்து நடக்கவேண்டிய காரியமிருந்தால் க்ஷீராப்திக்கு வாரும். நான், கற்பங்கள்தோறும் ஸ்வர்ண ரூபமாயும், நூறு யோஜனை விஸ்தீரணமுள்ளதாயும் இருக்கிற அசுவத்த ரூபத்தை யடைகிறேன். கற்பங்கள்தோறும் நீர் இங்குவந்து என்னை ஆராதியும்; அப்படிச் செய்வதினால் கற்பங்கள் முடியும்வரை நான் ஆராதிக்கப்பட்டவனாகிறேன்.” என்று ஜனார்த்தனன் திருவாய்மலர்ந்தருளினார். உடனே திருவரசின் முன்பாக ஒரு தீர்த்தத்தை யுண்டுபண்ணி அதினின்றும் விரஜா தீர்த்தத்திற்கு சமானமான தீர்த்தத்தைக்கொண்டுவந்து அரசினடிக்கு அபிஷேகம் செய்து பூஜையும் செய்தார். பிறகு பகவான் “பிரம்மனே! சிருஷ்டி காலம் அதிக்கிரமிக்கிறது. சீக்கிரம் உமது ஸ்தானத்தை யடையும். நான் இந்த அரசின் மூலத்தில் மறைந்தவனாய் ரூபமில்லாமலிருக்கிறேன்” என்று சொல்லிவிட்டு மறைந்தருளினார். முண்டகத்தோனும் அன்னமேற்கொண்டு சத்தியலோகம் சென்றார். அதுமுதல் அசுவத்தம் அழிவற்றதாய் சுவர்ணமயமாக விளங்குகிறது. அதன் முன்னுள்ள ஸரஸும் பிரம்மாவினாலுண்டு பண்ணப்பட்டதாதலால் பிரம்ம தீர்த்தம் என்ற பெயரை யடைந்தது.

கேட்ட மாத்திரத்தில் பாபத்தைப்போக்கவல்ல இத்தீர்த்தத்திற்கு உள்ள பெயர்கள் யாவையும் சொல்லவேண்டும் என்று பணிவுடன் கேட்ட ரிஷிகளுக்குச் சூதர் சொல்லுகிறார். இதற்கு பிரம்ம தீர்த்தம், ஹேமஸ தீர்த்தம், தர்மதீர்த்தம், வருணதீர்த்தம், சக்கரதீர்த்தம் என ஐந்து பெயர்களுண்டு. எவன் இந்த ஐந்து நாமங்களையும் காலையில் எழுந்திருந்தவுடன் உச்சரித்து, இந்த தீர்த்தத்தில் ஸ்நானமுஞ்செய்கிறானோ அவன் பஞ்சமாபாதகங்களினின்றும் விடுபடுகிறான்.

“ இத்தலத்திலுள்ள திருவரசு பொன்மயமென்று முன்னே சொன்னீர். அது ஏன் இப்போது அவ்விதங் காணப்படவில்லை. அதன் காரணத்தைத் தெளியச் சொல்லியருளவேண்டும் ” என்று பிராமணோத்தமர்களான சௌநகாதியர் கேட்க, சூதர் சொல்லுகிறார்.

இவ்வரசு தேவர்களுக்குப் பொன்மயமாகக் காணப்படும்; மனிதர்களுக்குச் சாதாரணமான அரசாகவே தோற்றும். இன்னும் இந்தக்கற்பத்தில் அதற்குள்ள விசேஷத்தைச் சொல்லுகிறேன். முன்னோர் காலத்தில் அஷ்டவக்கிரர் என்ற முனிவர் சத்தியலோகத்தையடைந்து, ஸாமகானத்தால் பக்தியாய்ப் பிரம்மாவைத் துதித்தார். அவ்வாறு கானம் பண்ணுபவரைப்பார்த்து கர்வமுள்ள ஸரஸ்வதி சிரித்தாள். அதனால் மனவருத்தமுற்று மிக்க கோபத்துடன் நீ மனித சரீரத்தையடைந்து வெகுகாலம் பூமியில் வசிக்கக்கடவாய் என்று நாமகளுக்குச் சாபமிட்டார். இச்சாபம் பெற்ற ஸரஸ்வதி நான்முகனிடத்தினின்றும் அனுமதி பெற்றுக்கொண்டு, காசிராஜனுக்குப் பெண்ணாகப்பிறந்தனள். தக்ககாலம் வந்தவுடன் அவள் பிருகுவம்சத்தவனை பிராமமண புத்திரனொருவனைக் கணவனாகக்கொண்டு, சாரஸ்வதன் என்னும் புத்திரனைப் பெற்றனள். அவனுக்கு ஐந்து ஆறு வயது ஆனபின், உபநயனம் பண்ணி வேதாத்தியயனமும் செய்விக்கப்பட்டது. இவ்வாறு வேதமோதிக்கொண்டு வருகையில் அவன் ஒரு பிழை செய்தான். அதற்காகப் பிதா அவனையடித்தார். அப்போது ஸரஸ்வதி மிகவும் கோபங்கொண்டு பிள்ளையை அவரிடத்தில் வேதங்கற்கவேண்டாமென்று சொல்லி, தன்னிடத்தில் அழைத்துக்கொண்டு, எல்லா வித்தையையும் மகனுக்குத்தானே குறைவறக் கற்பித்தனள். பின்பு சாரஸ்வதன் கலைகள் யாவையுமறிந்து சந்தோஷமடைந்து வாழ்ந்துகொண்டிருந்தான்.

அக்காலத்தில், பூமியில் பன்னிரண்டு வருஷங்கள் நீடித்த கொடும் பஞ்சமொன்றுண்டாயிற்று. மழையின்மையால் பார் முழுதும் ஓர் பசும்பூண்டில்லாமல் வறண்டுவிட்டது. உண்ண உணவும் அருந்த நீரும் இல்லாததால் பிராம்மணர்கள் யாவரும் தங்கள் தொழிலை விட்டு விட்டுக் கொஞ்சம் செம்மையுற்றிருந்த கங்காதீரத்தையடைந்து, பாகீரதியின் சிரேஷ்டமான நீரையருந்தி ஆகாரத்திற்கு வேண்டிய விருத்தியையுமடைந்து கொஞ்சகாலந் தங்கியிருந்து பின் ஸரஸ்வதி தீரத்திற்குச் சென்றார்கள். அவ்விடத்தில் சாரஸ்வதன் யஜுர்வேத பாராயணம் பண்ணிக்கொண்டிருந்தான். அவன் அப்போது படித்த சுருதி கல்பசூத்திரத்திற்கு அநுகூலமாயும் மந்திரப் பிராம்மணத்தோடுகூடினதாயுமிருந்தது. அதைப் பிராம்மணர்

ள் யாவருங் கேட்டு "இவன் பாடம் நம்முடைய பாடத்தினின்றும் வறுபடுகிறது. நமக்கோ இதுதான் பாடக்கிரமமென்று நிச்சயப் படவில்லை; நாம் என்ன செய்வோம்" என்று சொல்லிப் பலமுறை நினைத்துப் பார்த்துச் சாரஸ்வதனை நோக்கி "நீ சொல்லும் பாடம் சரியன்று" என்றார்கள். அதற்கு அவன் தான் சொல்லுவதே சரியானதென்றும் அவர்கள் சொல்லுவது பிழையென்றும் மறுத்துரைத்தான்.

இவ்வாறு அவர்களுக்குள் ஒரு விவாதமுண்டாகிச் சந்தேகந் தெளிந்துகொள்ளப் பிரம்மாவிடம் வந்தார்கள். அவர் ஆலோசித்து அவர்கள் விவாதத்தைத் தீர்க்கும்பொருட்டு யாவரையும் அழைத்துக் கொண்டு, தென்கிழக்குத் திக்கில் ஆயிரம் ஆதித்தியப் பிரகாசமாய்ப் பொன்மயமாய் விளங்குகிற அசுவத்த ரூபியான எம்பெருமானை வந்தடைந்து, முன்போலப் பூஜைசெய்து பன்னிரண்டுதரம் பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து தமது நான்கு முகங்களாலும் நான்கு வேதங்களால் ஸ்தோத்திரஞ் செய்தார். அப்போது 'சங்கொடு திகிரி தாங்கிய தடக்கைத் தாமரைக்கண்ணினன்' ஸ்ரீ பூமி நீளைகளுடன் திருவாசடியிற் பிரசன்னமாகி "ஓ பிரம்மாவே! இந்தக்கற்பத்தில் உம்மால் எனக்கு நன்றாக ஆராதனஞ் செய்யப்பட்டது. அதனால் இக் கற்பம் முடியும்வரை நான் திருப்தியடைகிறேன். அப்படியிருக்க, எது நிமித்தம் இவ்விடம் வந்தீர்? எது உமது உள்ளத்திலிருக்கிறதோ அதைச்சொல்லும். தக்கவாறுசெய்கிறேன்" என்று பகவான் திருவாய் மலர்ந்தருளினர்.

"இவ்விருஷிகளும் சாரஸ்வதனும் தருக்கித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள்; இவர்கள் ஐயத்தை நீக்கவேண்டும்" என்று மறைக்கிழவன் விண்ணப்பஞ்செய்தார். சுவாமி "ஓ நான்முகனே! இவர்களபிப்பிராயத்தை நான் அறிவேன்; இவ்விருதிறத்தாரும் தாங்கள் முன் படித்தபடியே தனித்தனியே ஒவ்வொருபாடத்தையும் படிக்கக் கடவர். எப்பாடம் படிக்கையில், இடைவிடாது சலித்துக்கொண்டிருக்குமிவ்வரசின் இலைகள் சலியாமல் அசைவற்றிருக்குமோ, அதுதான் நல்லபாடம்" என்று பிழையறியும் வழிகாட்டியருளி மறைந்தார்.

பிறகு, பிரமதேவர் அவ்விருவகுப்பினரையும சந்தேகமாயிருந்த பாகத்தைப்படிக்கும்படி ஏவினார். ரிஷிகள் தங்கள் பாடத்தைப் படிக்கும்போது இலைகள் சலித்துக்கொண்டும், வித்துவானுன சாரஸ்வதன் படிக்கையில் இலைகள் கொஞ்சமேனும அசைவின்றியும் இருந்தன. பின்னர், பிழையான தங்கள் பாடத்தை யொழித்துவிட்டு, சாரஸவதன் பாடத்தையே யாவரும் கைக்கொண்டு அனுசரித்தார்கள். அதுமுதல் சாரஸ்வதன் பாடமே உலகததில் வழங்கிவருகிறது. ஆகையால் இந்த அசுவத்தம உண்மையையே தெரிவிக்கிறது. இதற்கு இணையான விருக்ஷம உலகத்தில் வேறென்றுமில்லை. இதன் நிழலில் தவஞ்செய்தோர்கள் தாங்கள் கருதிய சித்திகளை யடைந்தார்கள். உதாரணமாக புல்லர், கண்வர், காலவர், அகஸதியர் முதலான ரிஷிகள், இவவிடத்திலேயே தவஞ்செய்து, பெறுதற்கரிய எம்பெருமான் தரிசனம பெற்று, தங்களிஷ்டங்களைப்பெற்றார்கள். இவ்விருக்ஷத்தின் மூலபாகத்தை யடைநதே இராகவன் ஜெகதீசனுக்குத் தெண்டனிட்டு அவரருளால் அவரிடத்தினின்றும் வில்லைபெற்றுக் கடலடைத்து, புத்திரமித்திர அமாத்தியர்களுடன் இராவணனை அமர்க்களத்தில் மடிததுச் சீதாதேவியைத் திரும்ப அடைந்தார். இலங்கையிலிருந்து புஷ்பகவிமானத்தி லேறிக்கொண்டு, சீதைக்கு அவ்வவ்விடங்களி னதிசயங்களைக் காண்பித்தவராய்த திரும்பி வருகையில், புல்லாரணிய சமீபத்தில விமானததினின்று மிறங்கி அங் கெழுந்தருளியிருக்கும் திவ்வியசாபனைச் சேவித்து சீதையுடன் அயோத்திக்குப் புறப்படுந் தருணத்தில், 'ஜானகிப்பிராட்டியுடனும் இளைய பெருமாளுடனும் க்ஷேத்திரத்தில் எக்காலமும் மானிடர்கள் உய்யும்பொருட்டு ஸாந்நியத்தியஞ்செய்யவேண்டு' மென்று பிரார்த்தித்த ரிஷிகளுக்கு அவவாறே செய்வதாகத் திருவருள்புரிந்து மறுபடியும் விமானமேறிக்கொண்டு அயோத்தியை யடைந்து, தமது இஷ்டங்களை சுகத்துடனும் சந்தோஷத்துடனும் நெடுநாள் அனுபவித்து, பிரஜைகளுக்கு மிகவும் க்ஷேமகரமாய் முறைப்படி அரசு புரிந்து வந்தார்.

இத்தலத்தைச் சேவிக்கவிரும்பிப் பிரயாணம் செய்பவர்களைப் பிதிர்க்கள் தொடர்கிறார்கள். க்ஷேத்திரத்தை யடைந்ததும் சர்வாங்க க்ஷௌரஞ் செய்துகொள்ளவேண்டும். பின் தர்மசாஸ்திர விதிப்

பிரகாரம் புண்ணிய தீர்த்த ஸ்நானஞ்செய்து பிண்டதானமும் பிதிர்க்களை யுத்தேசித்துத் தர்ப்பணமும் செய்யவேண்டும். தனவான், திவ்வியசாபனுக்குத் திருப்பணி கைங்கரியங்கள் செய்தால் எல்லா அபீஷ்டங்களையும் பெறுகிறான். மற்றவர்கள் தங்களாலியன்றவரை தானதருமங்களை சந்நிதியில் திருவரசடியிற் செய்யக்கடவர்கள். ஏனெனில் இம்மரத்தடியில் பகவானைக் குறித்து ஒன்று செய்தாலும், அது அநேகஞ் செய்ததாலுண்டாகும் பலனைக் கொடுக்கிறது.

இம் மரத்தினின்றும் இரத்தபிந்துக்கள் விழுந்தாலும், கொப்பு முறிந்து விழுந்தாலும், புகையெழும்பினாலும், காரணமின்றி அசைவுற்றாலும், சக்கரதீர்த்தத்தில் ரக்தமுண்டானாலும், இராஜ்ஜியத்திற்குக் கலக்கமுண்டாகும். இப்படியுண்டானால், அரசன், இராஜ்ய க்ஷேமத்தின் பொருட்டு வைகானஸவிதிப்பிரகாரம் மஹாசாந்தி செய்யவேண்டும். அந்தணர்களுக்கு அன்னமிட்டுப் பிறகு ஆசீர்வாதஞ் செய்விக்கவேண்டும். இதுதவிர, இம்மரத்தினின்றும் பால் பெருகினாலும் சக்கரதீர்த்தம் நிர்மலமாயிருந்தாலும், இராஜ்யத்திற்கு க்ஷேமமுண்டாகும்.

இப்புண்ணியமான விருத்தாந்தத்தை நியமத்துடன் திவ்விய சாபன் சந்நிதியில் படித்தவர்களுக்கும் கேட்டவர்களுக்கும், மிகுந்த சம்பத்துக்களுண்டாகும். பிணியில்லாது நீண்ட ஆயுளையடைந்து புத்திர பௌத்திரர்களுடன் வாழ்வார்கள். பின்னர் ஞானமடைந்து நன்மார்க்கத்தில் நடந்து மறுமையில் அப்பிராகிருதலோகமான பரம பதத்தையு மடைவார்கள்.

புல்லாரணியமான்மியம் முற்றிற்று.

ஸ்ரீ

## திருமாலிருஞ்சோலைக்கலம்பகம்

என்கிற

# அழகர் கலம்பகம்.

அழகரது கலம்பகமென விரியும்; இது - ஆறாம்வேற்றுமைப்பொருளில் தொக்குநின்ற தொகைநிலைத்தொடர்மொழி. விஷயமாகவுடைமை- வேற்றுமைப்பொருளாகிய சம்பந்தம்; விஷ்ணுபுராணம். விநாயகரகவல் என்பவற்றிற்போல. இனி, அழகரைப்பற்றிய கலம்பகம் எனப் பொருளுரைத்து, இத்தொடர்மொழியை இரண்டனுருபும்பொருளுந் தொக்கதொகையாகவுங் கொள்ளலாம். அழகரென்பது - பாண்டியநாட்டில் திருமாலிருஞ்சோலையென்னுந் திருப்பதியில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற திருமாலினது திருநாமம்; இயற்கையழகுடையவரென்பது பொருள். கலம்பகமாவது - ஒருபோகும் வெண்பாவும் கலித்துறையும் முதலுறுப்பாக முதலிற்கூறி, புயவகுப்பு மதங்கு அம்மானை காலம் சம்பிரதம் கார் தவம் குறம் மறம் பாண் களி சித்து இரங்கல் கைக்கிளை தூது வண்டு தழை ஊசல் என்னும் இப்பதினெட்டு உறுப்புக்களும், காலத்தால் மருவிய பிச்சியார் கொற்றியார் வலைச்சியார் முதலியனவும் இயையுமாறு, மடக்கு மருட்பா ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பா ஆசிரியவிருத்தம் கலிவிருத்தம் கலித்தாழிசை வஞ்சிவிருத்தம் வஞ்சித்துறை வெண்டுறை என்னும் இவற்றால் இடையிடையே வெண்பாவுங் கலித்துறையும் விரவிவர அந்தாதித்தொடையால் முற்றுற இறுதியும் முதலும் மண்டலித்துப்பாடுங்கால், தேவர்க்கு - நூறும், அந்தணர்க்கு - தொண்ணூற்றைந்தும், அரசர்க்கு - தொண்ணூறும், அமைச்சர்க்கு - எழுபதும், வணிகர்க்கு - ஐம்பதும், வேளாளர்க்கு - முப்பதுமாகப் பாடுவதொரு பிரபந்தம்; இக்கலம்பகவிலக்கணத்தைப் பன்னிருபாட்டியல், வச்சணந்திமாலை, இலக்கணவிளக்கம் முதலியவற்றுட் காண்க. தொல்காப்பியனார் செய்யுளியலில் "விருந்தே தானும், புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" என்பதனால் 'விருந்துதானும் பழங்கதைமேலதன்றிப் புதிதாகத் தாம் வேண்டியவாற்றால் பலசெய்யுளுந் தொடர்ந்துவரத் தொடுக்கப்படுந் தொடர்நிலைமேலது' என்று கூறினமையின், இக்கலம்பகம் அவ்வாசிரியர் கூறிய விருந்தாமென்று உணர்க. இனி, இதனைச் சிறுகாப்பியத்துள் அடக்குவர் பிற்காலத்தார். "களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த, அலங்கலந்தொடையல்கொண்டடியிணைபணிவானமரர்கள் புகுந்தனராதலி லம்மா" என்னும் பெரியார்பாசுரத்தில். பலவகைமலர்களைக்கொண்டு தொடுக்கப்பட்டுள்ள மாலை 'கலம்பகம்புனைந்ததொடையல்' எனக் கூறப்பட்டுள்ளதனால், அப்பூமாலைபோலப் பலவகைப்பாக்களைக்கொண்டு அமைக்கப்பட்ட பாமாலையைக் கலம்பகமெனப் பெரியோர் பெயரிட்டுவழங்கினரென்பர் ஒருசாரார்; இதற்கு இவ்வாறுபொருள்கொள்ளும்போது, இது கதம்பகம்என்னும்வடமொழியின் திரிபுபோலும்: இனி, கலப்புஅகம்எனப்பிரித்து, மெலித்தல்விகாரம்பெற்றதாக்கி, பலவுறுப்புக்களுங் கலந்தமைத்தன்னிடத்தேயுடையதென அன்மொழித்தொகைக்காரணக்குறியாகவுங் கொள்ளலாம்; மற்றொருசாரார், பன்னிரண்டுமரக்காலென்னும் பொருளுள்ள 'கலம்'என்னுஞ் சொல்லும், கடவுளது ஆறுகுணங்களைக் குறிக்

கின்ற 'பகம்' என்னுஞ் சொல்லும், குறிப்பாய்ப் பன்னிரண்டு ஆறு என்னுந் தொகையைமாத்திரம் உணர்த்தி உம்மைத்தொகையாகப் புணர்ந்து பதினெட்டுஉறுப்புக்களையுடைய பிரபந்தத்துக்கு ஏதுப்பெயராயிற்றென்றும் உரைப்பர்.

இந்நூல் அழகர்பிள்ளைத்தமிழ் பாடிய வேம்பத்தூர்ச்சங்கப்புலவர்கள் செய்ததென்று சொல்லுகின்றனர்.

---

## காப்பு.

காப்பு - ரக்ஷித்தல், அது - இங்கு, காக்கின்ற கடவுள்விஷயமான வணக்கத்துக்குத் தொழிலாகுபெயர். ஆகவே, கவி தமக்கு நேரிடத்தக்க இடையூறுகளை நீக்கித் தமது எண்ணத்தை முடிக்கவல்லதோர் பொருளின் விஷயமாகச் செய்யுந் தோத்திரமென்பது கருத்து. ஸ்ரீவைஷ்ணவசமயத்தவரான இந்நூலாசிரியரால் கூறப்பட்ட இக்காப்புச்செய்யுள்கள், விஷ்ணுபக்தர்களிற்சிறந்தவரான விஷ்வக்ஸேநரென்கிற சேனைமுதலியார் முதலியோரைக் குறித்தன வாதலால், வழிபடுகடவுள்வணக்கமாம். தமதமது மதத்துக்குஉரிய கடவுளை வணங்குதலேயன்றி அக்கடவுளின் அடியார்களை வணங்குதலும் வழிபடுகடவுள்வணக்கத்தின்பாற்படுமென அறிக.

ஆனைக்குமுன்செலவிடபாசலத்திலழகனையெம்
மானைக்கருதிக்கலம்பகங்கூறவரற்கரற்குத்
தானைச்சுரர்க்குச்சடகோபஞ்சித்திக்கத்தாங்குசெங்கோற்
சேனைத்தலைவர்திருத்தாள்கருத்தொடுஞ்சேவிப்பனே

இக்காப்பு, விஷ்வக்ஸேநர் என்கிற சேனைமுதலியாரைப் பற்றியது.

(இதன்பொருள்.) ஆனைக்கு - கஜேந்திராழ்வானுக்கு, முன் செல - விரைவாகச் சென்றருளிய, இடப [   ] - ருஷபகிரியெனனும் பெயருள்ளதிருமாலிருஞ்சோலைமலையில் எழுந்தருளியிருக்கின்ற, அழகனை - அழகனென்னுந் திருநாமமுடைய, எம் மானை - எமது சுவாமியை, கருதி - மனத்தினால்தியானித்து, கலம்பகம் கூற - கலம்பகமென்னும் பிரபந்தத்தைப் பாடுதற்பொருட்டு,— அரற்கு - பிரமனுக்கும் அரற்கு - சிவனுக்கும், தானை சுரர்க்கு - கூட்டமாகத் திரண்டுள்ள தேவர்களுக்கும் சடகோபம் - திருமாலினது பாதுகை, சித்திக்க - (முறைபிறழாமல்) கிடைக்கும்படி, தாங்கு - (கையில்) தாங்கிய, செங்கோல் - செவ்விய பிரப்பங்கோலையுடைய, சேனைத்தலைவர் - சேனைமுதலியாரது, திரு தாள் - திருவடிகளை, கருத்தொடும் - விருப்பத்துடனே, சேவிப்பன் - நமஸ்கரிப்பேன் (யான்); (என்றவாறு.)— ஏகாரம் - ஈற்றசை.

**ஆனைக்கு முன் சென்று** கதை.—பாண்டியநாட்டில் இந்திரத்யும்நனென்று ஓரரசன் மிக்கவிஷ்ணுபக்தியுடையவனாய் ஒருநாள் விஷ்ணுபூஜை செய்கையில் அகஸ்தியமகாமுனிவர் அங்குஎழுந்தருள, அப்பொழுது அவன் தன்கருத்துமுழுவதையும் திருமாலைப்பூசிப்பதிற் செலுத்தியிருந்ததனால் அவ்விருடியின்வருகையை அறிந்திடானாய் உபசாரமொன்றுஞ்செய்யாதிருக்க, அம்முனிவர் தம்மை அரசன் அலட்சியஞ்செய்தானென்று மாறுகக் கருதிக்கோபித்து 'நீ யானைபோலச் செருக்குற்றிருந்ததனால், யானையாகக்கடவை' என்று சபித்தனர்; அங்ஙனமே அவன் ஒருகாட்டில் யானையாகத் தோன்றினனாயினும், முன்செய்த விஷ்ணுபக்தியின் மகிமையால் அப்பொழுதும் விடாமல் நாள்தோறும் ஆயிரந்தாமரைமலர்களைக்கொண்டு விஷ்ணுவை அருச்சித்துப் பூஜைசெய்துவந்தான்; அங்ஙனஞ் செய்யுநாட்களில் ஒருநாள், பெரியதொரு தாமரைத்தடாகத்தில் அருச்சனைக்காகப்

௧ பலைகடலுஞ்செந்நிலமுங்கப்பசுந்துழாய்ப்பரிமளிக்கப
பலகட்மீன்வடிவெடுத்தாய்பார்த்தெம்மைக்காக்கவென்றோ.

௨ போகமடங்குலகமுற்றுமபூவெனவன்புறங்கிடக்க
நீகமடவுருக்கொண்டாய்நினைத்தெம்மைப்புரக்கவென்றோ.

௩ நிலக்கினியதேவகிபானீபிறந்தசுபயோக
விலக்கினமேறக்கடைபிடியோவிடபமலையுவந்தனையே

௪ உதித்ததுநமமிந்துகுலமுயர்த்ததுநந்தமையென்றோ
பதித்தமலயத்துவசபாண்டியனையாண்டனையே.

௫ தருமகதியாய்ப்பாடிதனினவந்தங்கவர்ந்தா
யொருமகதிமுனிமுதலோருளமெனக்குறித்தேயோ

௬. ஆரமுதவுததிபொங்கமரர்குழாமவாயூற
வாரமுதமதித்தெடுத்தாயடியவர்கட்கென்றேயோ

௧ நிலமுதலியவெயினிலவுமிழ்கதிர்மதி
குலதெய்வமவழிபடுகுருவெனவருளினை

௨ அரியபனரெனனவெனவளதுவென
விரியிகடாமிருவினையெனமருவினை

௩ அருள்சிலவறியவனறிவறிதருமொரு
பொருள்பலவெனமறைபுகல்சுகவடிவினை

௪ ஒளியினுளொளியுலகுயிரினுளுயிர்மிகு
களியினுள்களியெனமிகமகிழ்கருணையை

௧. அடலவுணன்பாறகுறங்கியறநிலங்கையேறாய்
கடலகிலையாவுமுந்திகாட்டுவதுகண்டிலேயோ

௨ இலகுகங்கையெனத்திரைகளெறியமுனைதுளைந்தாய்வான
தலகங்கைகாலபிடித்துககூபபிடுதலகேட்டிலேயோ.

௩ கருத்துகளிறேலமிடக்கலுழனெடுமவிண்பறந்தாய்
மருதினுரலொடுதவழ்ந்தாய்மால்விளையாட்டென்றேயோ.

௪ சிறந்தபெருமபகிரண்டத்திரளெலலாநதிருவுருவிற்
பிறந்தகுறுமபுளகெனினின்பெருமையையாருரைக்கவல்லார்.

௧ சகலநற்பொருளுநீதத்துவங்களுநீ
புகறருகரணநீபுவனபோகநீ.

௨, மொழியுநீபொருளுநீமுக்குணங்களுநீ
விழியுநீமணியுநீவிந்துநாதநீ.

௧ தயரதாதவசிலுதித்தனை.
௨. தசமுகனுருளவதித்தனை
௩. உயர்சதுமுகனைவிதித்தனை.
௪. உரனுவசரபமிதித்தனை.

க. செகமிசைநதனை
உ. ககமிசைநதனை
௩. செயல்கடந்தனை
௪. மயல்கடந்தனை
௫. சுகமுகநதனை
௬. மகமுகநதனை
௭ துன்பொழிநதனை
௮ பொன்பொழிநதனை
௯ கருமமண்டினை
௧௦ தருமமண்டினை
௧௧. கதமடக்கினை
௧௨. மதமடக்கினை
௧௩ அருவினைமுநதனை
௧௪ உருவினைமுநதனை.
௧௫ அமிழ்தமைத்தனை
௧௬ தமிழ்தமைததனை

எனவாங்கு,

மேற்படவடகலைதென்கலையெனவிரண்
டாமொழுகரங்கவரவிநதலோசன
குளிர்பதமிடுசடகோபமீதெனவான
வெளிமுகடணிவடவேங்கடவாண
வதிர்குரலைளசுடராழியாமெனமதி
கதிர்புடைவரமிமிர்கரிகிரிவரத
வலமபுரிபோலயன்வாகனமீண்டிச
சிமைபுறுதரளசசிலம்பாறறிறைமை
வெழுமணியாகைடலீநதபொன்னுடனொரு
செழுமணியுரமணிதெய்வசிகாமணீ
யுரனுடைமதலையுமிரணியனுரமொடு
சரபமும்வகிர்தருநரகரிரூபா
பூமியிலசுரபபுன்பணிகளினனெனு
மேநமியப்பரமசாமிவாழி
யிரவினிலாடுமிறையணியொளிகக
வரவினிலாடுநின்னடிமலர்ககியமபுமெ
னண்டகோடியையுமயனையுமுநதிப
புண்டரீகததுபபொதிநதருணின்னை
நெஞ்செனுமலருணிறுததுமெய்யடியாக
கஞ்சுற்றஞ்சுற்றுங்கவாதம்மைக்
கண்டவிடத்துநங்காற்றுகளென்று
தொண்டுபட்டொழுகததுணைசெய்
தண்டமிழ்ச்சங்கததனியிறையவனே

க.—"நீரபூத்த***பரஞ்சோதீ".—(இ - ள) நீர பூத்த - நீரில் தோன றிய, பொன் தகடு நெடு இதழ்-பொனனிறலாகிய மெல்லியதகடுபோன்ற நீண்டஇதழ்களையுடைய, செந் தாமரை - சிவநத தாமரைமலரில் வீற்றிருக் கின்ற, மான்-மான்போலும் பார்வையையுடைய திருமகளது, கார பூத்த - கார்காலத்து மலர்ந்த, முழு நீலம-செறிப்புள்ள நீலோற்பலமலர்போன்ற, கண்ணும் - கண்களும், மனமும்—, குளிர - மகிழ்வடையவும்,—சுரும்பு துவைத்து - வண்டுகள் மிதிதது மொய்ததுககொண்டு, ஓகை மிக - களி ப்பு மிகும்படி, சூடிய - (தான்) அணிந்துள்ள, தாமமும் - பூமாலையையும், கவியும்-பாமாலையையும், தரும் - (எம்பெருமானுக்குக்) கொடுதத, புதுவை தோகை - ஸ்ரீவில்லிபுத்தூரில் திருவவதரிதத மயில்போலுஞ் சாயலை

பூப்பறிப்பதற்குப் போயிறங்கினபொழுது, அங்கே முன் நீர்நிலையில்நின்று தவஞ்செய்துகொண்டிருந்த தேவலரென்னும் முனிவரது காலைப் பற்றியிழுத்தது அதனாற்கோபங்கொண்ட அம்முனிவரது சாபத்தாற் பெரியமுதலையாய்க் கிடந்த ஹூஹூ என்னுங் கந்தருவன் அவ்யானையின் காலைக் கவ்விக்கொள்ள, அதை விடுவித்துக்கொள்ள முடியாமல் கஜேந்திரன் 'ஆதிமூலமே!' என்று கூவியழைக்க, உடனே திருமால் ஸ்ரீகருடவாகநாரூடராய் அங்கெழுந்தருளித் தந் திருவாழியாழ்வானைப் பிரயோகித்து முதலையைத் துணித்து அதன்வாயினின்றுங் கஜேந்திரனை விடுவித்து மோக்ஷமளித்துப் போக, ஹூஹூவும் சாபவிமோசநமாகித் தன்னுலகஞ் சேர்ந்தனனென்பதாம். ஒருதிர்யக்காலே ஒருதிர்யக்குக்கு வந்த நோவையும் பொறுமல் அரைகுலையத் தலைகுலைய மடுக்கரைக்கே வந்து உதவின மகாகுணத்திலே ஈடுபட்டு இவ்வாறு கூறினர்.

முன்செல் - எதிரிற்சென்ற வென்றுமாம். செல் அழகனென இயையும். இடபாசலம் தீர்க்கசந்தி இடபம் - ரிஷபம் எழாமுயிர் இ ஆயிற்று. அசலம் - சலியாதது. விருஷபவடிவமான தருமதேவதை தவஞ்செய்து பேறுபெற்ற மலையாதலால், திருமாலிருஞ்சோலைமலைக்கு 'இடபாசலம்' என ஒருபெயர். தம்மைப்போன்ற அடியார்களையும் உளப்படுத்தி 'எம்மான்' என்றார். கூற என்னுஞ் செயவெனெச்சம், சேவிப்பென் என்பதனோடு இயையும். அரன் முதலிய தேவர்களையும் படைத்தலால், பிரமன் - வரனெனப்பட்டான்; வரன் - ஶ்ரேஷ்டன். இனி, வரற்கு என்பதை - குவ்வீற்று எதிர்கால வினையெச்சமாகக் கொண்டு, கூறவருதற்பொருட்டுச் சேவிப்பெனென்றுமாம். பூர்வஜந்மஞானத்தை மறைத்து அஜ்ஞானத்தை உண்டாக்குகின்ற ஶடமென்னும் வாயுவைப் போக்கியருளியவரென்னும் பொருளதாகிய சடகோபனென்பது, நம்மாழ்வாரது திருநாமம்; அத்திருநாமத்தால் திருமாலினது திருவடிநிலையை வழங்குவது, ஸ்ரீவைஷ்ணவசம்பிரதாயம். பிரமன் முதலிய தே... ளெல்லாம் விஷ்ணுவினது பாதுகையைத் தந்தலைமேல வை... ...றறுக்கொண்டு தூய்யராம்பொருட்டுத் திரளாகவந்து மேல்விழும்பொழுது, ஸ்ரீசேனைமுதலியார் தமது திருக்கையில் தரித்த பிரம்பைக்கொண்டு கோஷ்டிவிலக்கி யாவர்க்கும் முறையே கிடைக்கும்படி செய்தலால், 'வரற்கு அரற்குத் தானைச்சுரர்க்குச் சடகோபஞ் சிதறிக்கத் தாங்கு செங்கோற் சேனைத்தலைவர்' என்றார்; "ஆளிலமரராங்கேசர் சேவைக் கணுகுந்தொறுங், கோளிற் றிரளை விலக்கும் பிரம்பின் கொனைபடலால், தோளிலடித்தழும் புண்டசுரர்க் கசுரர்தொழலால், தாளின் முடித்தழும் புண்டு நஞ்சேனைத்தலைவருக்கே" என முன்னோர் கூறியவாறுங் காண்க. சேனைத்தலைவர் - பரமபதத்திலுள்ள நித்தியமுக்தர்களது திரளுக்குத் தலைவர்.

இது, நேரசை முதலாய் ஒற்றொழித்துப் பதினாறெழுத்துப் பெற்று வந்த கட்டளைக்கலித்துறை; மேலிற் கவியும் இது. (௧)

அத்தியின்மத்தியிலேவிளங்காலிலம்மாமகிழ
நித்திரைகொள்ளுந்தமாலத்துருவனிவனென்பதே
சத்தியமென்னப்புளிக்கீழ்மகிழுந்தமிழ்க்கரசே
நித்தியமாலழகன்றமிழ்கூறமுன்னின்றருளே.

இக்காப்பு, சடகோபர் என்கிற நம்மாழ்வாரைப் பற்றியது.

(இ - ள்.) 'அத்தியின் - பிரளயசமுத்திரத்தினது, மத்தியிலே - நடுவிலே, விளங்கு - விளங்குகின்ற, ஆலில் - ஆலிலையில், அம் மா - அழகிய திருமகள், மகிழ - களிக்கும்படி. நித்திரை கொள்ளும் - அறிதுயில்கொ

ண்டருளுகிற, தமாலத்து உருவன் - பச்சிலைமரத்தின் இலைபோன்ற நீலநிறமுடையவன், இவன் - இத்திருமாலேயாவன், என்பதே சத்தியம்-என்பதுவே சத்தியமாகும்,' என்ன - என்று சொல்லி, புளி கீழ் - திருப்புளியமரத்தினடியில், மகிழ் - மகிழ்ந்து வீற்றிருக்கின்ற, அம் தமிழ்க்கு அரசே - அழகிய [இனிய] தமிழுக்குத் தலைவனாகிய சடகோபனே! நித்தியம் - (பிறப்பிறப்பில்லாமல்) எப்பொழுதும் ஒருதன்மையாகவுள்ள, மால் - பெருமைக்குணமுள்ள, அழகன்-அழகரது, தமிழ் - தமிழ்ப்பிரபந்தத்தை. கூற-(யான்) சொல்லுதற்பொருட்டு, முன் நின்று அருள் - (எனது) எதிரில் எழுந்தருளி வந்துநின்று அருள்செய்வாயாக; (எ - று.)

பிரமன்முதலான சகலதேவர்களு முட்பட யாவும அழிந்துபோகின்ற யுகாந்தகாலத்தில் ஏகார்ணவமான மகாப்பிரளயசமுத்திரத்தில் ஸ்ரீமகாவிஷ்ணு அண்டங்களையெல்லாந் தன்வயிற்றில் வைத்து அடக்கிக்கொண்டு சிறுகுழந்தைவடிவமாய் ஆதிசேஷாம்சமான ஆலிலையின்மீது பள்ளிகொண்டு தனது மாயாஸ்வரூபமான யோகநித்திரையைக் கைக்கொண்டு திருக்கண்வளர்ந்தருளுதலால, 'அத்தியின்மத்தியிலே விளங்காலி லம்மாமகிழ நித்திரைகொள்ளுந தமாலத்துருவன்' என்றார். இங்ஙனங்கூறியது, எல்லாவற்றையும் படைத்துக் காத்து அழிக்கின்ற முதற்கடவுள் இவனேயென நன்குவிளங்குதற்கு. "நளிமதிச சடையனு நான்முகக கடவுளுந், தளிரொளி யிமையவா தலைவனு முதலா, யாவகை யுலகமும யாவரு மகப்பட, நிலநீர் தீ கால் சுடரிரு விசும்பும். மலர்சுடர் பிறவுஞ் சிறிதுடன் மயங்க, வொருபொருள் புறப்பா டின்றி முழுவதும், மகப்படக் கரந்தோ ராலிலைச சேர்நத வெம, பெருமா மாயனை யலல, தொருமா தெய்வமற் றுடையமோ யாமே" எனத திருவாசிரியத்துள நம்மாழ்வார அருளிசசெய்திருத்தல் காண்க. அத்தி - அப்தி யென்னும் வடமொழியின் திரிபு; நீர்தங்குமிட மென்று பொருள். ஆல், தமாலம் என்பன - அதனதன் இலைக்கு முதலாகு பெயர். அம்மா என்பதை,அ மா எனப்பிரித்து, உலகறிசுட்டாகவுமாம். மா-வடசொல். தமாலம் - ஓர்வாசனைமாம. இவனென அண்மையாகச்சுட்டினர், மனத்தின்கண் வீற்றிருத்தலால். எனபதே, ஏ - தேறறம். தமிழ்க்கரசு என்பதற்கு - சிறந்த தமிழ்வேதத்தைப் பாடியருளியவ ரென்பது கருத்து. இனி, முதல மூன்றடிகட்கு. இவ்வாழ்வார் எம்பெருமானது அவதார விசேஷமேயென்பது சத்தியமென்று ஆழ்வாருடைய பிரபாவத்தை அறிந்தவரெல்லாஞ் சொல்லும்படி புளியமரத்தின்கீழ் மகிழம்பூமாலைபூண்டு எழுந்தருளியிருக்கிற சடகோபனே என்றுமாம். இசசெய்யுளில், அத்தி ஆல் மா மகிழ் தமாலம புளி அரசு என்னும் மரப்பெயர்கள் சொல்லாற் பொருந்தி வந்தது காண்க. (உ)

முதலாழ்வார மூவர்தொண்டர் பாதப பொடியார
மதுரகவி மாறன் மழிசைக்கோ—விதவார
குலசே கரன்கோதை பட்டர்பிரான் பாணன்
கலியன் றிருவடிகள் காபபு

இக்காப்பு, ஆழ்வார்கள் பன்னிருவரைப் பற்றியது.

(இ - ள்.) முதலாழ்வார் மூவர் - (பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் என்னும்) முதலாழ்வார்கள் மூன்றுபேரும், தொண்டர்பாதப் பொடியார் - தொண்டரடிப்பொடியாழ்வாரும், மதுரகவி - மதுரகவியாழ்வாரும், மாறன் - நம்மாழ்வாரும், மழிசைக் கோ - திருமழிசையாழ்வாரும், இதவு ஆர் - நன்மை பொருந்திய, குலசேகரன் - குலசேகராழ்வாரும், கோதை - ஆண்டாளும், பட்டர்பிரான் - பெரியாழ்வாரும், பாணன் -

திருப்பாணாழ்வாரும், கலியன் - திருமங்கையாழ்வாரும், (என்னும் ஆழ்வார்கள் பன்னிருவர்களது). திரு அடிகள் - சீர்பாதங்கள், காப்பு - (எனக்குக்) காவலாகும்; (எ - று.)

ஆழ்வார் - எம்பெருமானது திருக்கலியாணகுணங்களாகிய பெருங் கடலில் ஆழ்ந்து ஈடுபடுபவர். ஆழ்வார்கள் பன்னிருவருள், பொய்கையார் முதலிய மூவரும்-மற்றைப்பதின்மர்க்கும் முன்னே திருவவதரித்ததனாலும், மற்றுண்டான பிரபந்தங்களுக்கும் லக்ஷணமாம்படி திருவந்தாதித்திவ்வியப் பிரபந்தங்களைத் திருவாய்மலர்ந்தருளியதனாலும், இவர்களுக்கு முதலாழ்வார் என்று திருநாமம்; "மற்றுள்ள வாழ்வார்களுக்குமுன்னே வந்துதித்து, நற்றமிழால் நூல்செய்து நாட்டையுய்த்த—பெற்றிமையோ. ரென்றுமுதலாழ்வார்களென்னும் பெயரிவர்க்கு, நின்ற துலகத்தே நிகழ்ந்து" என்றார் பெரியாரும். தொண்டர்பாதப்பொடியார் - ஸ்ரீவைஷ்ணவர்களது ஸ்ரீபாததூளியாயிருப்பவர்; ஆர்விகுதி - உயர்வுப்பொருளது. மதுரகவி - இனிமையான பாடலைப் பாடுபவர். வலியவினைகட்கு மாறாக இருத்தலாலும், பாண்டியநாட்டில் திருவவதரித்ததனாலும், மாறனென்று திருப்பெயர். மழிசைக்கோ-மஹீஸாரக்ஷேத்ரமெனகிற திருமழிசைக்குத் தலைவர். இதம் என்பது போல, இதவு என்பதும்-ஹிதமென்னும் வடமொழியின் திரிபு. குலசேகரன்-தான் திருவவதரித்த (சேர)குலத்துக்குத் தலையணிபோலச் சிறந்தவர். கோதை - மாலை: எம்பெருமானுக்கு மாலைபோல நிரதிசயபோக்கியையாயிருப்பவள்; அன்றிக்கே. பாமாலையையும் பூமாலையையுஞ் சூடிக்கொடுத்தவள். பட்டர்பிரான் - புலவர்கட்குத் தலைவர். பாணன் - வீணையுங் கையுமாய்ப் பெரியபெருமாள் திருவடிக்கீழே நிரந்தரசேவைபண்ணிக்கொண்டு பாட்டுப்பாடிப் புகழுபவர்; "பாட்டினாற் கண்டு வாழும் பாணர்" என்பர். கலியன் - மிடுக்குடையவர்.

இது, காசு என்னும் வாய்பாட்டால் முடிந்த இருவிகற்பநேரிசைவெண்பா.

---

## அவையடக்கம்.

அவையடக்கமாவது - கற்றோர்சபைமுன் கவி தன்னைத்தாழ்த்திக்கூறுதல்.

> அழகர் பதின்ம ரருந்தமிழ்கொண் டாரியான்
> குழறியபுன் சொற்றமிழுங் கொண்டார்—முழுதுங்
> கருத்திருத்தி வைத்தவெண்மர் காந்தருமாய்க் கூனி
> யுருத்திருத்திக் கொண்டதுபோ லும்.

(இ - ள்.) அழகர்—, பதின்மர் - (ஆழ்வார்கள்) பத்துப்பேர் பாடிய, அருந் தமிழ் - அரிய தமிழ்த்திவ்வியப்பிரபந்தங்களை, கொண்டார்-ஏற்றுக் கொண்டார்; (அவ்வாறே), யான்-நான், குழறிய-குளறிப்பாடிய, புல் சொல் தமிழும் - இழிவான தமிழ்ச்சொற்களாலாகிய பிரபந்தத்தையும், கொண்டார் - ஏற்றுக்கொண்டார்; (அது),—முழுதும் கருத்து இருத்தி வைத்த - மனம்முழுவதையுந் தன்மேல் உறுதியாகப் பொருத்திவைத்துக் காதல் கொண்ட, எண்மர் - அஷ்டமஹிஷிகளுக்கு, காந்தரும் ஆய் - (தாம்) அன்புள்ள கணவருமாய், கூனி - கூனியினது, உரு-(வளைந்துள்ள) வடிவத்தை, திருத்தி - (அக்கூனையொழித்து) நேராக்கி. கொண்டது-ஆட்கொண்டதை, போலும் - ஒக்கும்; (எ - று.)

பதின்மர்தமிழ்க்கு - எண்மர் திருவுருவமும், தனது தமிழ்க்கு - கூனியுருவமும் உவமை. கூனியுருவைத் திருத்திக்கொண்டதுபோல, எளியேன் தமிழையுந் திருந்தச்செய்து அழகர் அங்கீகரிப்பரென அவையடக்கங்கூறிய வாறு. தமிழும். உம்மை - இழிவுசிறப்புப்பொருளோடு இறந்ததுதழுவிய

எச்சப்பொருளது. காந்தரும், உம்மை - உயர்வுசிறப்புப்பொருளோடு எதிரதுதழுவிய எச்சப்பொருளது. பதின்மர் - கீழ்க்கவியிற்கூறிய பன்னிருவருள் மதுரகவியுங் கோதையுந்தவிர்ந்த மற்றையவர். எண்மர்-ருக்மிணி, மித்திரவிந்தை[காளிந்தி],சத்தியை,ஜாம்பவதி,ரோஹிணி, சுசீலை,சத்தியபாமை, லக்ஷ்மணை [சாருஹாஸிநி] என்கிற எட்டுத் தேவிமார்கள். கூனி - வளைந்த வடிவுள்ளவள்; இ - பெண்பால்விகுதி.

**கூனியுருத்திருத்தியகதை:**—ஸ்ரீகிருஷ்ணன், கம்ஸனால அக்குரூரரைக்கொண்டு அழைக்கப்பட்டுப் பலராமனோடு மதுராபட்டணத்துராஜவீதியில் எழுந்தருளுகையில் சந்தனக்கிண்ணத்தைக்கையிலேந்திவருகின்றமங்கைப் பருவமுடைய ஒருகூனியைக்கண்டு, 'நீலோற்பலம்போன்றகண்களையுடையவளே! யாருக்கு நீ இந்தப்பூச்சுக் கொண்டுபோகிறாய்?' என்று விலாஸத்தோடு கேட்டருள, அந்தக்கூனி இவ்வாறு காமமுடையவன்போலக் கண்ணன் அருளிச்செய்ததைக் கேட்டு அவன்திருக்கண்களினாலே மனமிழுக்கப்பட்டவளாய் அவன்மேலே காதலுற்று, 'ஓ அழகனே! நான் நைகவக்கிரை யென்பவ ளென்றும், கம்ஸனாலே சந்தனுதிப் பூச்சுக்கள் செய்யும் வேலையில் வைக்கப்பட்டவ ளென்றும் நீ அறியாயோ?' என்று விண்ணப்பஞ் செய்ய, கண்ணன் 'எங்கள் திருமேனிக் கேற்ற வெகுநேர்த்தியான இந்தப்பூச்சை எங்களுக்குக் கொடுக்கவேண்டும்' என்று சொல்லியதைக் கேட்டு, அவள் 'அப்படியே திருவுள்ளம் பற்றுங்கள்' என்று வெகு அன்போடு சமர்ப்பிக்க, அப்பூச்சைத் திருமேனியில அணிந்து ஸ்ரீகிருஷ்ணன் அவளிடத்து மிகவும் பிரசன்னராய், நடுவிரலும அதன்முன்விரலுங் கொண்ட நுனிக்கையினாலே அவளை மோவாய்க்கட்டையிற்பிடித்துத் தன் திருவடிகளினால் அவள்பாதங்களை அமுக்கி இழுத்துத் தூக்கிக் கோணலை நிமிர்த்துப் பெண்களுக்குள் உயர்ந்தவளாக்கியருளினு னென்பதாம்.

இது, நாள்என்னும் வாய்பாட்டால் முடிந்த இருவிகற்பநேரிசைவெண்பா.

---

## நூல்.

க. நீர்பூத்தபொற்றகட்டுநெட்டிதழ்ச்செந்தாமரைமான்
கார்பூத்தமுழுநீலக்கண்ணுமனமுங்குளிரச்
சுரும்புதுவைத்தோகைமிகச்சூடியதாமமுங்கவியுந்
தரும்புதுவைத்தோகைகனதனதடங்கள்புளகரும்பப்
பழமுதிர்நான்மறைகுழுறப்பதின்மாகண்முத்தமிழ்முழங்கப்
பழமுதிர்பூஞ்சோலைமலைப்பசசைமரகதத்திலங்க
வந்தவிமானத்தமரர்மலர்தூவிப்பணிசோமச்
சந்தவிமானத்தமருஞ்செளந்தரியபரஞ்சோதி

உ. குறித்தமுகில்பந்தரிட்டுக்குறுந்துளிதூற்றிடவாயா
தறித்தமரமத்தனையுந்தழைத்தலர்ந்துபழுத்துதவக்
கடும்புலிகளயர்ந்துசித்திரகாயமெனும்பெயர்விளக்கக்
கொடும்பணிகண்மாலையதாய்க்குலரத்நவிளக்கேற்றக்
கருங்கற்றூன்வெண்ணெயெனக்கரைந்தோடவிரைந்தோடி
வருங்கற்றூனிமைப்பொழியமழவிடையங்கயர்ந்துநிற்ப
மீகவிளங்கோவியரெழுதவெள்கியதிரிபங்கியுடன்
சுகவிளங்கோவியூர்மழலைதொனித்தகுழலிசைத்தோய்கேள்.

யுடைய ஆண்டாளினது, கன தன தடங்கள் - பருத்த திருமுலைப்படங்கள், புளகு அரும்ப - மகிழச்சியால் புடைபெருக்கவும்,—பழ முதிர் நால் மறை- பழமைமிக்க [அநாதியான] நான்கு வேதங்கள், குமுற - மிக்கு ஒலிக்கவும்,—பதின்மர்கள் முத்த தமிழ் - ஆழ்வார்கள் பதின்மரது (இயல் இசை நாடகம என்று) மூன்றுவகைப்படுந் தமிழிலாகிய திவ்வியப்பிரபந்தங்கள், முழங்க-பேரொலிசெய்யவும்,--பழம் உதிர் பூ சோலைமலை - கனிகள் உதிர்கிற அழகிய சோலைகளையுடைய திருமாலிருஞ்சோலைமலை, பச்சை மரகதத்து இலங்க - (தனது திருமேனியின் நிழலீட்டினால்) பசுநிறமுள்ள மரகதரத்தினம்போல விளங்கவும்,—விமானத்து - (தத்தமக்குஉரிய) விமானங்களில், வந்த - ஏறிவந்த அமரர் - தேவர்களெல்லாம், மலர் தூவி - புஷ்பங்களை அருச்சித்து, பணி - வணங்குகின்ற, சோமச் சந்த விமானத்து-சோமசுந்தரவிமானத்தில், அமரும் - எழுந்தருளியிருக்கிற, சௌந்தரிய - அழகனே! பரஞ்சோதீ - சுயம்பிரகாசமுள்ள கடவுளே! (எ - று.)

சீர் - மங்கலச்சொற்களுள் ஒன்றாதலால், முதலில் வைக்கப்பட்டது. சீர் பூத்த தாமரையென இயையும்; இனி. சீர் பூத்த - சீர்மை [அழகு] மிக்க வென்றும், கார் பூத்த - கருநிறம் விளங்கிய வென்றுமாம். துவைத்து - ஒலித்து என்றுமாம். ஓதை-உவகை யென்பதன் மரூஉ. புதுவை - ஸ்ரீவில்லிபுத்தூர்; "அன்ன வயற்புதுவை யாண்டா ளரங்கர்க்குப், பன்னு திருப்பாவைப் பல்பதிய—மின்னிசையாற், பாடிக் கொடுத்தா ணற்பாமாலை பூமாலை, சூடிக்கொடுத்தாளைச் சொல்" என்றார் மேலோரும். புளகரும்ப-ரோமாஞ்ச முண்டாக வென்றுமாம். விமானமென்னுஞ் சொல் இரண்டனுள், முன்னது தேவர்யாகனம்; பின்னது - தேவாலயத்துள் ஸ்வாமி எழுந்தருளியிருக்கும் ஸ்தானம். இனி, வந்த அவி மானத்து எனப் பிரித்து - அடங்கிய அகங்காரத்தையுடைய தேவர்கள் வந்து பணிகின்ற வென்றுமாம். சந்தம் - அழகு. சோமசுந்தரவிமானமென்பது அத்திருப்பதி விமானத்தின்பெயர். ஸௌந்தர்யம் - அழகு. மிகப்பலவான சோலைகளையுடைத்தாதலால், சோலைமலையென்று திருநாமம், வனகிரி என்று வடமொழிப்பெயர் "ஆயிரம்பூம் பொழிலுமுடை மாலிருஞ்சோலையதே" என்றார் பெரியாழ்வாரும்; 'அநேகஸஹஸ்ராராமைருத்யானைருபலக்ஷிதா" எனனும் வடநூல்மேற்கோளுங் காண்க.

௨.—"குறித்த * * * கேள"—(இ - ள்.) குறித்த - முழங்குகின்ற, முகில் - மேகங்கள், பந்தர் இட்டு - பந்தல்போல (வானத்தின்மேலே) நெருங்கிப்பரவி, குறுந் துளி தூற்றிட - சிறிய மழைத்துளிகளைச் சிந்தவும்—ஆயர் - இடையர்கள். தறித்த - வெட்டின, மரம் அத்தனையும் - (உலர்ந்துபோன) விருக்ஷங்களெல்லாம், தழைத்து - மீளவுந் தளிர்த்து வளர்ந்து, அலர்ந்து - பூப்பூத்து, பழுத்து - பழம்பழுத்து, உதவ - பயன்படவும்,—கடும் புலிகள் - விரைந்தோடுந்தன்மையுடைய புலிகள் அயர்ந்து-மருண்டு அசையாமல் நின்று, சித்திரகாயம் எனும் பெயர் - சித்திரகாயமென்னுந் தமது பேரை, விளக்க - பொருள்விளங்கச்செய்யவும்.—கொடும் பணிகள் - கொடிய சர்ப்பங்கள், மாலையது ஆய் - வரிசை வரிசையாக, குலம் ரத்நம் விளக்கு ஏற்ற - (தத்தம்முடியிலுள்ள) மேம்பட்ட மாணிக்கங்களாகிற தீபங்களை ஏற்றவும்,—கருங்கல்தான் - (மிகவலிய) கருங்கல்லும், வெண்ணெய் என - (நெருப்புப்பட்ட) வெண்ணெய்போல, கரைந்து ஓட - நீராய்உருகிப் பெருகவும்,—விரைந்து ஓடி வரும் - வேகமாய் ஓடிவருகின்ற, கன்று ஆன்- கன்றுகளையுடைய பசுக்கள், இமைப்பு ஒழிய - கண்ணிமைகொட்டாமல் திகைத்துநிற்கவும்,—மழ விடை - இளவெருதுகள், அங்கு அயர்ந்து நிற்ப - அவ்வாறே சலியாது நிற்கவும், மிக விளங்கு ஓவியர் - சித்திரிகப்

பேர்பெற்று விளங்குகின்ற சித்திரகாரர்கள், எழுத வெள்கிய - (சித்திரத்தில்) எழுதத்தொடங்கி (முடியாமையால்) வெட்கமடைந்து போகும்படியான, திரிபங்கியுடன் - மூன்று வளைவுள்ளதொரு திருக்கோலத்துடனே, சுக இளங் கோவியர் - இன்பந்தருகின்ற இளமையான கோபஸ்திரீகளது. மழலை - மழலைச்சொல்போல, தொனித்த - ஒலிசெய்கின்ற, குழல்-வேய்ங் குழலை, இசைத்தோய்-ஊதிநின்றவனே! கேள் - (நான்செய்யும் விண்ணப்பத்தைக்) கேட்டருள்வாயாக; (எ - று.)

சங்கீதசாஸ்திரலக்ஷணத்துக்குப் பொருத்தமான மிக இனிய இசைப்பாட்டைக் கேட்டமாத்திரத்தில் மேகங்கள் வந்து கவிந்து இனிமையாக முழங்கி நீர்த்துளிகளைப் பொழிதலும், பட்டுப்போன மரங்களுந் தளிர்த்துப் பூத்துக் காய்த்துப் பழுத்தலும், புலி முதலிய கொடுவிலங்குகளுங் கொடுமைநீங்கி நெஞ்சுருகித் திகைத்து நிற்பதும், சாப்பங்கள் படமெடுத்தாடுதலொழிந்து பிரமித்துநிற்பதும், கருங்கல்லுங் கரைந்து உருகுவதும், பசுக்களும் எருதுகளுஞ் செவியாட்டாமல் சித்திரம்போல நின்று கேட்டலும் இயல்பு; "பைத்தவரவத்து வளர் பசுமைமுகில் செவ்வாய், வைத்த குழையேழ்தொளையும் வாரியமுதூறித், தத்தவெழு மின்னிசை தலைப்பட முழங்காப், புத்தமுத நுண்டுளி பொழிந்த புயலெல்லாம்," "படுமரன்களு நறிய பசியதண் டளிர்தழைய, வடைவுறுங் குழையினிசை யமுதம்," "சாதகுலம் * * * முடுகுசின மொழிந்து கண்க ளிமையா தாகிச, சாகரமாய்ச் செவிநெறித்தே யுருகிநிற்பச சர்ப்பங்கள் படம்விரித் தாடா நின்ற," "நின்றுயர் வரையு முருக," "தெறித்த கன்றுவாய வைத்த வம்முலையுந் திரண்டு கறித்த புல்லுங் கறவை," "ஆனிரைகள் செவிநெறித்து முலைப்பால் சோர வகங்குழைந்து கன்றினுடன் மோநாகின்றமமா" என்றார், பாகவதங்களிலும். சித்திரகாயம்-(கோடுகளாற்) பலவகைநிறமுள்ள உடம்புடையதென்று பொருள்; இது, புலிக்குக் காரணப்பெயர். இங்குப் புலிகள் எழுது சித்திரங்கள்போல உடம்பசையாமல் நின்றதனால், 'கடும்புலிகளயர்ந்து சித்திரகாயமெனும் பெயர்விளக்க' என்கை கவிசாதுரியமாகக்கூறினார். பிறிதுமொழிதலணி... பிறிநிலை நவிற்சியணி. மாலையதாய் - திகைப்பை அடைந்து என்றுமாம். விளக்கு - பொருள்களை விளங்கச்செய்வது. வெண்ணெய - உருக்காதநெய. கற்றுன - மென்றொடர் வேற்றுமையில்வன்றொடராயிற்று; ஆன், ணகரமெய்-சாரியை. மழ - இளமையுணர்த்தும் உரிச்சொல. சுக விளங் கோவியர்-கிளிபோன்ற மொழியையுடைய இளைய இடைப்பெண்களென்றுமாம். கோவியர் - பசுக்களைக்காப்பவனென்னும் பொருளதாகிய கோபன் என்பதன் பெண்பாலாகிய கோபீ என்பதன் திரிபாகிய கோவி என்பதன் பலர்பால். தொனித்த-த்வனித்த.

இவை இரண்டும் - பெரும்பாலும் நாற்சீர்களுங் காய்ச்சீர்களால் வந்த எட்டடித்தரவுகள்.

க.—"பல * * * வென்றோ."—(இ-ள்.) பல கடலும் - பலவாகிய கடல்களெல்லாம், செதில் அடங்க - தோலின் ஒருபுறத்தில் அடங்கிப்போம்படியாகவும்,—பசுந் துழாய் - (மாலையாகஅணிந்த) பசுமையாகிய திருத்துழாய், பரிமளிக்க - மணம்வீசும்படியாகவும், பல கடம் மீன் வடிவு எடுத்தாய்-வலிமையுள்ள திருமேனியையுடைய மீனினது ரூபத்தைத் தரித்தாய், எம்மை பார்த்து காக்க என்றோ - எங்களையெல்லாங் கடாக்ஷித்துக் காப்பாற்றவேண்டுமென்கிற எண்ணங்கொண்டோ? (எ - று.)

**மீன்வடிவெடுத்த கதை:**—சோமுகனென்னும் அசுரன் வேதங்களை அபகரித்துக் கடலில் ஒளித்துப்போக, தேவலோகத்தளவுஞ்சென்று கடல் வெள்ளம் பரந்தகாலத்தில், திருமால் அவ்வெள்ளமுழுவதையுந் தனது உட

வின் ஒருபுறத்திலே அடக்கவல்ல மிடுக்கையுடைய மத்ஸ்யமாய்வந்து திருவவதரித்து அசுரனைத்தேடிக்கொன்று வேதங்களைக் கொணர்ந்து வந்தன னென்பதாம்; "ஒரு சேலா யொருசெலுவுட் கரந்த, ஆழிப்பெரும்புனல்" என்றார் முன்னோரும். இரண்டாமடியில், பலம் - வடசொல். நீ இவ்வாறு திருவவதரித்தது, பகைவரையழித்து அடியார்களைக் காக்கவேண்டுமென்னும்இச்சையினாலன்றி மற்றையோர் பிறத்தல்போலக் கருமவசத்தாலன்று என்பதாம். மீனுக்கு இயற்கையாக வுள்ள புலால்நாற்றம் இதற்கு இல்லையென்றற்கு, 'பசுந்துழாய் பரிமளிக்க' என்றார். பலகடலும், உம் - முற்று.

௨.—"போக * * * வென்றோ."—(இ - ள்.) போகம் அடங்கு - பலவகைச் சுகானுபவமும் அமைந்த, உலகம் முற்றும் - லோகங்க ளெல்லாம், பூ என - பூப்போல மிகவும்மெல்லியதாக, வல் புறம் - வலிய முதுகின்மேலே, கிடக்க - பொருந்தும்படி, நீ—, கமடம் உரு - ஆமையின் உருவத்தை, கொண்டாய் - தரித்தாய்; எம்மை - (அவ்வுலகத்திலிருக்கிற) எங்களை, நினைத்து - (அழிந்துபோகாதபடி) ஆலோசித்து, புரக்க என்றோ - காப்பாற்றவேண்டுமென்கிற எண்ணங்கொண்டோ? (எ - று.)

**கூர்மாவதார கதை.**—திருப்பாற்கடல்கடைந்தபொழுது மத்தாகிய மந்தாகிரி கடலினுள்ளே அழுந்திவிடாதபடி திருமால் பெரியஆமைவடிவங் கொண்டு அதற்கு ஆதாரமாக எழுந்தருளியிருந்தன னென்பதாம். இனி, உலகங்களின்கீழ்ப் பொருந்தித் திருமால் அவற்றை ஆதிகூர்மவடிவங்கொண்டு தாங்கிநிற்கின்றன னென்றலும் பொருந்தும். போகம் அடங்கு உலகம் - ஆதிசேஷனது படத்தின்மேற் பொருந்திய லோக மென்றுமாம்.

௩.—"நிலக் * * * யுவந்தனையே."—(இ-ள்.) நிலக்கு இனிய - பூமிக்கு இனியவளான. தேவகிபால் - தேவகியினிடத்தில், நீ பிறந்த - நீ (கிருஷ்ணனாய்த்) திருவவதரித்த, சுபம் யோகம் - மங்களகரமான பொருத்தத்தையுடைய. இலக்கினம்மேல் - லக்கினத்தினிடத்திலுள்ள, கடைப்பிடியோ - உறுதியான விருப்பத்தினாலோ, இடப மலை - ருஷபகிரியை, உவந்தனை - விரும்பிவந்து எழுந்தருளினாய்; (எ - று.)

என்றது, கண்ணன் திருவவதரித்தது விருஷபலக்கினத்திலாதலால்; ஏதுத்தற்குறிப்பேற்றவணி. இலக்கினம் - லக்நம். கம்சன் முதலான அசுரர்களுடையவும் கொடிய அரசர்களுடையவும் திரண்ட சேனைகள் மேலே பொருந்தியிருப்பதனாலுண்டான மிக்க பாரத்தினால் துன்பமடைந்து துதித்த பூமிதேவியின் வருத்தத்தைத் தீர்க்கும்பொருட்டுத் திருமால் கண்ணனாகத் திருவவதரிப்பதற்குத் தேவகி தான் இடமாகவிருந்ததனால், 'நிலக்கினியதேவகி' என்றார். தேவகி - வசுதேவர்மனைவி, கம்சனது தங்கை.

௪.—"உதித்தது * * * யாண்டனையே."—(இ-ள்.) உதித்தது-(பாண்டியன்) பிறந்தது, நம் இந்து குலம் - நமது சந்திரகுலத்தில், உயர்த்தது - கொடியாக உயர எடுத்தது, நந்தமை-நம்மை, என்றோ - என்று எண்ணித்தானோ? பதித்த - (உன்னிடத்தில்) மனம்வைத்த, மலயத்துவச பாண்டியனை - மலயத்துவசனென்னும் பாண்டியநாட்டரசனை, ஆண்டனை - அடிமைகொண்டாய்.

கிருஷ்ணனும், பாண்டியனுஞ் சந்திரகுலத்தரசராதலால், 'உதித்தது நம்மிந்துகுலம்' என்றும்; பாண்டியனது கொடியும், திருமாலினது முதல் திருவவதாரமும் மீனாதலால், 'உயர்த்தது நந்தமை' என்றுங் கூறினார்.

**மலயத்துவசபாண்டியனை ஆண்டவரலாறு:**—அகஸ்தியர் வாசஞ்செய்கிற மலயமலையிலே சென்று அம்முனிவர்முன்னிலையில் 'தருமமே நடத்தக்கடவேன்' என்று மலயமலையையெழுதிக் கொடியெடுத்தவனாதலால், மலயத்துவசனென்று ஒருபாண்டியனுக்குப் பெயர். தன் தவவலிமையால் நாள்

தோறுஞ்சென்று கங்கையில் நீராடிவருகிற அப்பாண்டியன் ஒருநாள் தேர்மேலேறிப் புறப்பட்டுக் கங்கையில்நீராடுதற்குச் செல்லும்வழியில், திருமாலிருஞ்சோலைமலை சமீபித்தவளவில்,தேர் அப்பால் வடக்கில் ஓடாமல்நின்றுவிட, அவ்வரசன் 'இங்கே ஒருதீர்த்தவிசேஷமும், தேவஸந்நிதானமும் இருத்தல் கூடும்' என்றுஎண்ணித் தேரைவிட்டு இறங்கி ஆராய்ந்துபார்த்தவளவிலே, அவ்விடத்தில் அழகர் எதிர்ப்பட்டுத் தரிசனந்தந்து 'இவ்வாற்றிலே நீராடு' என்று சிலம்பாறனைக் காட்டியருள, அவன் அவ்வாறே அதில் மூழ்கியெழுந்து அழகர்பக்கல் அளவிறந்தபக்தியுடையவனாய்க் கங்காஸ்நாநத்தை அன்றுமுதல் தவிர்ந்து அழகருக்குப் பலவகைக் கைங்கரியங்களையெல்லாஞ் செய்துவந்தனனென்பதாம்; "கொன்னவில்கூர்வேற்கோன் நெடுமாறன் தென் கூடற்கோன், தென்னன் கொண்டாடுந் தென்திருமாலிருஞ்சோலையே" என்றார் பெரியாழ்வாரும். இதுவும் மேற்கூறிய அணி.

ரு.—"தரும * * * குறித்தேயோ."—(இ - ள்.) தருமகதி-தருமந் தவறாமல் நடக்குமிடமான, ஆயப்பாடிதனில் - திருவாய்ப்பாடியிலே, நவநீதம்-வெண்ணெயை, கவர்ந்தாய - அபகரித்தாய்; ஒரு மகதி முனி முதலோர - மகதியென்னும் வீணையையுடைய ஒப்பற்ற நாரதமுனிவர் முதலியவர்களது, உள்ளம் என - மனமென்று, குறித்தேயோ - எண்ணியோ? (எ - று.)

அடியார்களது அன்புகொண்ட மனம் வெண்ணெய்போல எம்பெருமானது திருவுள்ளத்துக்கு உவப்பாமென்பதாம். ஆய்ப்பாடி - கோகுலம்; ஆய் - சாதிப்பெயர். நவநீதம் என்ற வடசொல்லுக்கு - புதியதயிரினின்று கடைந்தெடுக்கப்பட்டதென்று காரணப்பொருள் கூறுவர். நாரதரது வீணைக்கு - 'மகதி' என்றும், தும்புருவினது வீணைக்கு - 'கச்சபி' என்றும், ஸரஸ்வதியின் வீணைக்கு - 'வல்லகி' என்றும் பெயர்.

சு.—"ஆரமுத * * * கென்றேயோ."—(இ - ள்.) ஆரம் உதவு - முத்துக்களைக் கொழித்துத் தள்ளுகின்ற, உததி - திருப்பாற்கடல், பொங்க - பொங்கும்படியாகவும், அமரர் குழாம் - தேவர்களது கூட்டம்,வாய் ஊற - நாக்கில் நீர் சுரக்கும்படியாகவும், அரு அமுதம் - பெறுதற்கரிய அமிருதத்தைக், மதித்து - கடைந்து, எடுத்தாய்—; அடியவர்கட்கு என்றேயோ - அடியார்களுக்கு என்றுதானோ? (எ - று.)

உததி - நீர் தங்குமிடம்; வடசொல். அமுதமெடுத்தது, கூர்மாவதாரத்தில். அமுதம்-அமருதம்; வடசொல் (உண்டவர்க்கு)மரணத்தைத் தவிர்ப்பது என்று காரணப்பொருள்பெறும்.

இவை ஆறும் - நாற்சீர்களும் காய்ச்சீர்களாகிய ஈரடித்தாழிசைகள்.

௭.—"நில * * * வருளினை."— (இ - ள்.) நிலம் முதலிய - நிலம் நீர் நெருப்புக் காற்று வானம் என்னும் பஞ்சபூதங்களும், வெயில் நிலவு உமிழ்-(முறையே) வெயிலையும் நிலாவையும் வீசுகின்ற, கதிர் மதி - சூரியன் சந்திரன் என்னும் இருசுடர்களும், குல தெய்வம் - அந்தந்தக்குலத்தார் பூசிக்கின்ற தெய்வமும், வழிபடு குரு என - (அவரவர்) வழிபட்டுவணங்குகிற நல்லாசிரியனும், (ஆகிய இவற்றை), அருளினை - வகுத்தருளினாய்; (எ - று.)

குரு-அஜ்ஞாந இருளைப் போக்குபவன்; கு-இருள். 'என'என்னும்எண்ணிடைச்சொல்,நின்றவிடத்திற்பிரிந்து பிறவிடத்துஞ்சென்று பொருந்தும்.

உ.—"அரி * * * மருவினை."—(இ - ள்.) அரி அயன் அரன் என - விஷ்ணு பிரமன் உருத்திரன் என்கிற திரிமூர்த்திகளென்றும், அவன் அவள் அது என - ஆண்பாலும் பெண்பாலும் ஒன்றன்பாலும் ஆகிய உலகத்திலுள்ள உயர்திணை அஃறிணைப் பொருள்களென்றும், விரி இக பரம் - பரந்த

இம்மை மறுமைகளும், இரு வினை நல்வினை தீவினைகளும, என - என்றும் (இவற்றின் உருவமாக), மருவினை - பொருந்தினாய்; (எ - று.)

௩.—"அருள் * * * வடிவினை."—(இ - ள்.) அருள் - (உன்னால்) அருளப்பட்ட, சில - சிலநூறபொருள்களை, அறிபவன் - (கற்றுங் கேட்டும்) அறிந்தவன், அறிவு - (தனது) புத்தியைக்கொண்டு, அறிதரும் - ஆராய்ந்து அறியப்படுகிற, ஒரு பொருள் பல என - ஒருபொருளென்றும பலபொருள்களென்றும், மறை - வேதங்களில, புகல - சொலலப்படுகிற, சுக வடிவினை - இன்பத்தின் சுவரூபமாக இருக்கிறாய்; (எ - று.)

௪.—"ஒளி * * * கருணையை."—(இ - ள்.) ஒளியினுள் ஒளி - ஒளிக்குள் ஒளியாகவும், உலகு உயிரினுள் உயிா - உலகத்திலுள்ள ஜீவாத்மாக்களுள் அந்தராத்மாவாகவும், மிகு களியினுள் களி என் - மிக்க களிப்பிற்குள் களிப்பாகவும், மிக மகிழ் - மிகவும மகிழ்ச்சியோடு பொருந்தியிருக்கிற, கருணையை - கிருபையுடையவனா யிருக்கிறாய்; (எ - று.)

இவை நான்கும் - நாற்சீருங் கருவிளச்சீர்களாகிய ஈரடிஅராகங்கள்.

இவற்றுள், பெரும்பாலும குறறெழுத்துக்களே வந்தது - சொல்லணி.

௧.—"அட * * * கண்டிலையோ".—(இ - ள்.) அடல் - வெற்றியையுடைய, அவுணன்பால - அசுரனாகிய மகாபலிசக்ரவாத்தியினிடத்தில், குறுகி - சென்றுசேர்ந்து, அற்பம நிலம் - கொஞ்சம் பூமியை, கை ஏற்றாய் - கையேந்தி இரந்தாய (நீ); கடல அகிலம யாவும் - கடலசூழ்ந்த எல்லாவுலகங்களையும், உந்தி - (உனது) திருநாபி, காட்டுவது - வெளித்தோற்றுவிப்பதை, கண்டிலையோ - அறிந்தாயில்லையோ? (எ - று.)

இந்திரன் முதலாக யாவரையும வென்று மூவுலகங்களையும் ஒருங்கு அரசாண்ட செருக்குத தோன்ற 'அடலவுணன' என்றும, மிகவுஞ்சிறிய வாமனவடிவங்கொண்டு சென்ற உனது காலகளால் மூனறடிமண் யாசித்தாய் என்பாா 'அற்பநிலம்'என்றும், கொடையாளியாகிய மாவலியின்கை மேலாகவும் இரவலனாகிய உனது திருக்கை கீழாகவு மிருக்க இரந்தாய் என்றற்கு 'கையேற்றாய' என்றுங் கூறினார். இனி, குறுகி - வாமநனாய் உடல்குறுகி என்றும், அறபம நிலம் கை ஏற்றாய - இழிவாக நிலத்தை இரந்தாய் என்றும பொருள் கொள்ளலாம் கண்டிலையோ என்றது - ஸாவஜ்ஞனாகிய நீ காணாத தொன்றுமில்லை. சரணமடைந்த தேவாமுதலியோரைக் காத்தற்பொருட்டே உனது தானென தன்மையை மறநது இரதகல்செய்தாய்; அன்றியும், உனதுமகிமை உனககும் அளவுகாணுதற்கு அரியதே என்றபடி.

௨.—"இல * * * கேட்டிலையோ."—(இ - ள்.) இலகு - விளங்குகின்ற, அம் கை என - அழகிய கைகள்போல, திரைகள் - அலைகளை, எறி - வீசுகின்ற, யமுனை - யமுநாநதியில், துளைந்தாய் - (கிருஷ்ணாவதாரத்தில்) ஜலக்கிரீடை செய்து விளையாடினாய்; வான் - தேவலோகத்திலுள்ள, குலம் - (எல்லாநதிகளினும்) மேம்பட்ட, கங்கை - கங்காநதி, கால் பிடித்து - திருவடியைப் பிடித்துக்கொண்டு, கூப்பிடுதல் - அழைத்தலை [ஆரவாரித்தலை], கேட்டிலையோ - கேட்டாயில்லையோ? (எ - று.)

அலைகள் மடங்கி மடங்கி வீசுவது கைகாட்டி அழைப்பதுபோலக் காணப்படுதலால், 'அங்கையெனத் திரைகளெறி யமுனை' என்றார்; "தெண்டிரைக் கரத்தின் வாரித் திருமலர் தூவிச செல்வர்க், கண்டடிபணிவ தென்னப் பொலிந்தது கடவுள யாறு" என்றாா கம்பரும். அருகிற் காலகளைப் பிடித்துக்கொண்டு வணங்கிக் கூப்பிடுகிற கங்கையை விட்டு வணங்காமல் கைகாட்டி அழைக்கின்ற யமுனையிற் துளைந்தனையே என்றார். இது -

ஸௌலப்யத்தை வெளியிட்டபடி. 'கால்பிடித்துக் கூப்பிடுதல்' என்றது - திரிவிக்கிரமாவதாரஞ்செய்து திருமால் உலகமளந்தகாலத்தில் மேலே சத்தியலோகத்துச்சென்ற அப்பிரானது திருவடியைப் பிரமன் தன்கைக்கமண்டலதீர்த்தத்தாற் கழுவிவிளக்க, அந்தஸ்ரீபாததீர்த்தமே கங்கையானது என்னும் வரலாறுகொண்டு.

௩.—"கருது * * * டென்றேயோ".—(இ - ள்.) கருது-(உன்னையே) தியானிக்கின்ற, களிறு - ஆண்யானை [கஜேந்திராழ்வான்]. ஓலம் இட - (ஆதிமூலமே யென்று) கூவியழைக்க, கலுழனொடும - கருடனுடனே, விண் பறந்தாய் - ஆகாயத்திற பறந்துவிரைந்துவந்தாய்; மருதின் - மருதமரங்களினிடையில், உரலொடு - உரலுடனே, தவழ்ந்தாய - (நிலத்தில) தவழ்ந்து (மெதுவாகச)சென்றாய், மால் விளையாட்டு என்றேயோ - பெரிய திருவிளையாடலென்று எண்ணியோ? (எ - று.)

முற்பிறப்பிற்செய்த பூஜாபலத்தினால் விஷ்ணுபக்திமாறுதிருந்தமேன்மைபற்றி 'கருதுகளிறு' என்றும், கருடனது வேகம தனக்குப் போதாமையால் அதனையும் இழுத்துககொண்டு விரைந்துவந்தமை தோன்ற 'கலுழனொடும் விண்பறந்தாய' என்றும கூறினார். கலுழன் - வடசொறறிரிபு.

**மருதினூரலோடு தவழ்ந்தகதை** —கண்ணன் குழந்தையாயிருக்குங்காலத்தில் தன்பப்படுத்துகின்ற பலவிளையாடல்களைச செய்யக் கண்டுகோபித்த யசோதை கிருஷ்ணனைத திருவயிற்றிற் கயிற்றினாற்கட்டி ஓருரலிலே பிணித்துவிட, கண்ணன் அவ்வுரலை இழுத்துக்கொண்டுதவழ்ந்து அங்கிருந்த இரட்டைமருதமரத்தினிடையே எழுந்தருளியபொழுது. அவ்வுரல் குறுக்காய் நின்று இழுககப்பட்டபடியினாலே அம்மரங்களிரண்டும முறிந்து விழுந்தவளவில் முன் நாரதர்சாபத்தால அம்மரங்களாய்க்கிடந்த நளகூபரன் மணிக்கிரீவன் என்னுங் குபேரபுத்திரர்இருவரும் சாபந்தீர்ந்து சென்றனரென்பதாம. அஃறிணையாகிய யானையினிடத்தும மருதினிடத்துங் கொண்டபேரருளிலே ஈடுபட்டு இவ்வாறு கூறினார் இவையெல்லாந் திருமாலினது திருவிளையாடல்களென்றபடி. ஓலமிடுதல் - அபயமிட்டு அழைததல.

௪.—"சிறந்த * * * நுரைக்கவல்லார்" — (இ - ள்.) சிறந்த - மேம்பட்ட, பெரு - பெரிய பகிரண்டம்-வெளியிலுள்ள அண்டகோளங்களின், திரள் எல்லாம் - கூட்டமனைத்தும,திரு உருவில்-(உனது) திருமேனியிலே, பிறந்த - தோன்றிய, குறும் புளகு - சிறிய மயிர்ச்சிலிர்ப்புகள்போலும், எனில் - என்றால், நின் - உனது, பெருமையை - மகிமையை, உரைக்க வல்லார் - சொல்லி முடிக்க வல்லவர், யார - யாவர்? (எ - று)

உன்பெருமை எவராலுஞ் சொலலுதறகு அரியது, வாசாமகோசரமென்றபடி. பெருமை - பெருந்தோறற மாகவுமாம். புளகு - புளகம்.

இவைநான்கும - நாறசீருங காய்ச்சீராகிய **ஈரடித்தாழிசைகள்.**

௧.—"சகல * * * போகநீ".—(இ - ள்.) சகலம் நல் பொருளும் - (உலகத்திலுள்ள) நல்ல பொருள்களெல்லாம், நீ-நீயே; தத்துவங்கள்-(பஞ்சபூதம் முதலிய) தத்துவப்பொருள்களெல்லாம். நீ—; புகல்தரு - எடுத்துச சொல்லப்படுகின்ற. கரணம - (மன மொழி மெய்க ளென்கிற) திரிகரணங்களும், நீ—; புவன போகம் - உலகங்களில் அனுபவிக்கப்படுகின்ற இன்பங்களெல்லாம். நீ—;(எ - று.)

'சகலம்' என்பதை எல்லாவற்றோடுங் கூட்டுக.

௨.—"மொழியு * * * நாதநீ" —(இ - ள்.) மொழியும் - சொற்களும், நீ—; பொருளும் - (அவற்றின்) பொருள்களும், நீ—;முக் குணங்கள் - (சத்து

வம் ரஜசு தமசு என்கிற, மூன்று குணங்களும், நீ—; விழியும் - கண்களும், நீ—; மணியும் (அக்கண்களின்) கருமணிப்பாவையும், நீ—; விந்து - சுத்த மாயைவடிவமும், நாதம் - ஒலிவடிவமும், நீ—; (எ - று.)

இவைஇரண்டும் - மூன்றுஞ்சீர் மாச்சீரும், மற்றைமூன்றும் விளச்சீர்களுமாகிய நாற்சீரீரடி அம்போதரங்கங்கள்

க —(இ - ள்.) தயரதர் தவசில உதித்தனை - தசரதசக்கரவர்த்தி செய்துள்ள தவத்தின் மகிமையால (அவர் திருமகனாய்த்) திருவவதரித்தாய்.

உ.—(இ - ள்.) தசமுகன உருள வதித்தனை - பத்துத்தலைகளையுடைய இராவணன (நிலத்தில விழுந்து) உருண்டுபோம்படி (அவனைக)கொன்றாய்.

ந —(இ - ள்) உயர் சதுமுகனை விதித்தனை - மேம்பட்ட நான்கு முகங்களையுடைய பிரமனைப் படைத்தாய; (எ - று)

மற்றைய எல்லாப் பொருள்களையும படைக்கிற கடவுளாகிய சிறப்புத் தோன்ற, 'உயர்சதுமுகன' என்றார் விதித்தனை - ஏவினையுமாம்.

ச.—(இ - ள) உரன உள சரபம மிதித்தனை - வலிமையையுடைய சரபத்தை அழித்தாய; (எ று.)

சரபம்மிதித்த கதை இரணியனுக்குப்பரிந்த சிவன் சரபவுருவமெடுத்துப் பொருதுவர,நரசிம்மமாயதாரகுஞ்செய்த திருமால் அதன உடலையும் இரணியனுடலைக் கீண்டதுபோலவே கீண்டு அழித்தன னென்பதாம். "கேழ் கிளரு, மங்கவேள குன்ற மழல்சரபமதைப் பிளந்த, சிங்கவேள குன்றத்தினார்," "தறியின் வயிறறிற ருகுமனெஞ்சுஞ் சரபத்துடலும், நெறியின் வகிர்ந்தபி னனமெர தணிந்தது நீளசினமே" என்பன காண்க. சரபம் - எட்டுக்கால்களுள்ளதாய்ச் சிங்கத்தைக் கொலலும மிருகம்; பறவையென் பாரு முளர்

இவை நான்கும - நடுச்சீர் புளிமாச்சீரும, மற்றை இரண்டும கருவிளச்சீர்களுமாகிய முச்சீர் ஓரடி அம்போதரங்கங்கள்.

க.—(இ - ள.) செகம மிசைந்தனை - உலகங்களையெல்லாம உண்டருளினாய்; (எ - று)

என்றது, பிரளயகாலத்தில சகலலோகங்களையும சிறிதும நிலைகுலையாமல் திருவயிற்றில வைத்துக் காத்ததை செகம - ஜகத்.

உ.—(இ - ள.) ககம் இசைந்தனை - கருடனென்னும பறவையை ஏறினாய்; (எ - று.)

என்றது, கருடவாகன னாதலின ககம - ஆகாயத்திற் செல்வது; கம் கம எனப் பிரிக்க. இது,இங்குப பறவைகளுக்கரசனான பெரியதிருவடியை உணர்த்திற்று.

ந.—(இ - ள்.) செயலகள் தந்தனை - (படைத்தல முதலிய) மூவகைச் செயகைகளையுஞ் செய்தருளினாய; (எ - று.)

என்றது. பிரமரூபியாயப் படைத்துத் தானேநிலையில நின்றுகாத்து உருத்திரரூபியாய அழித்திடுவதனால.

ச.—(இ - ள்.) மயல் கடந்தனை-மாயையைக் கடந்திருக்கிறாய்; (எ-று.)

என்றது,கடவுளொருவனொழியமறறவர்யாவரும அக்கடவுளதுமாயையில் அகப்பட்டு உழல, அக்கடவுள்மாத்திரம் அதற்கு அதீதனாய் நிற்பதனால். இனி, மயல - குற்றமுமாம.

ரு.—(இ - ள்.) சுகம் முகந்தனை - இன்பத்தை நிரம்பக்கொண்டிருக்கிறாய்; (எ - று.)

என்றது, பிரதிசய இன்பமய னென்றபடி

கூ.—(இ - ள்.) மகம் உகந்தனை-(முனிவர் முதலியோர் செய்கிற) யாகங்களை (உனது திருவாராதனையாக)த் திருவுள்ளம விரும்பினாய்; (எ - று.)

எ.—(இ-ள்.) துன்பு ஒழிந்தனை-பலவகைத் துன்பங்களுமின்றி நின்றாய்.

அ.—(இ - ள்.) பொன் பொழிந்தனை - (அடியார்களுக்கு வேண்டிய) செல்வத்தை மிகுதியாகக் கொடுத்தருளினாய்; (எ - று)

கூ.—(இ - ள்.) கருமம் அணைடினை-(நற்கதியின்பொருட்டுச் செய்கின்ற தவம் முதலிய) காரியங்களைச் சேர்ந்து நின்றாய்; (எ - று)

க0.—(இ-ள்.) தருமம மண்டினை-தருமத்தினை உருவமாப்பொருந்தினாய்.

கக.—(இ - ள்.) கதம அடக்கினை - கோபத்தை அடக்கிவைத்தாய்.

என்றது, எம்பெருமான் பகை நண்பு இலலாதவ னாதலின.

கஉ.—(இ - ள.) மதம மடக்கினை - (குவலயாபீடம என்னும்) மதயானையை அழித்தருளினாய்; (எ - று.)

குவலயாபீடத்தின்மதம்அடக்கின கதை —வில்விழாவெனகிற வியாஜமவைத்துக் கம்சனால்வரவழைக்கப்பட்டு ஸ்ரீகிருஷ்ணபலராமர்கள கம்சனரண்மனையை நோக்கிச்செலலுகையில். அவனது அரண்மனைவாயில்வழியில் தம்மைக்கொல்லும்படி அவனாலஏவிநிறுத்தப்பட்ட குவலயாபீடமென்னும் மதயானை கோபித்துவர. அவ்யாதவவீரா அதனையெதிர்த்து அதன்தந்தங்களிரண்டையுமசேற்றிலிருந்து கொடியையெடுப்பது போல எளிதிற்பறித்து அவற்றையே ஆயுதமாகக்கொண்டு அடித்து அவ்யானையைஉயிரொழித்து விட்டு உள்ளே போயின ரென்பதாம்

கங.—(இ - ள.) அரு இழைந்தனை - அரூபியாகப பொருந்திநின்றாய்.

கச.—(இ - ள்.) உரு விழைந்தனை - எல்லாரூபங்களுள்ளும விரும்பி வீற்றிருக்கின்றாய்; (எ - று.)

என்றது, அநதாயாமிநிலையைக் கருதி விசுவரூபியாயிருக்குந தன்மையை நோக்கியாகவுமாம்; இனி. மதஸ்யம கூர்மம் முதலிய பல விபவத் திருமேனிகளை விரும்பி இச்சாமாத்திரததால அவையாகத் திருவவதரித்தா யென்றுமாம்.

கரு.—(இ - ள்.) அமிழ்து அழைத்தனை-(பாற்கடலினின்று) அமிருதத்தை வரவழைத்தருளினாய்; (எ - று.)

என்றது, க்ஷீராப்திமதநத்தை நடத்திய வரலாற்றை.

கசு.—(இ-ள்.) தமிழ் தழைத்தனை - தமிழ் செழித்திருக்கப்பெற்றாய்.

என்றது, தமிழ்முனிவராகிய அகத்தியர்க்கும் தமிழைவளர்த்த பாண்டியர்கட்குமசங்கப்புலவர்கட்கும் உறைவிடமாகிய செநதமிழ்ப்பாண்டிநாட்டுத்திருப்பதிகளுள் திருமாலிருஞ்சோலை சிறப்புடையதாதலால்.

இவை பதினாறும் - முதற்சீா மாசசீரும், மற்றொருசீர் - கூவிளசசீருமாகிய இருசீர் ஓரடி அம்போதரங்கங்கள்.

எனவாங்கு - அசைநிலை இது - தனிசசொல.

"தேறிய***யிறையவனே."—(இ - ள்.) தேறிய - (எல்லாப்பாஷைகளுள்ளுஞ் சிறந்தவையெனத்) தெளிந்து எடுதத. வடகலை தென்கலை என - வடமொழியாகிய சம்ஸ்கிருதமுந் தென்மொழியாகிய தமிழும் போல, இரண்டு ஆறு ஒழுகு - இரண்டுபக்கத்திலும் காவேரிநதி ஓடப்பெற்ற, அரங்க - திருவரங்கமென்னுந் திருப்பதியில் எழுந்தருளியிருப்பவனே!— அரவிந்த லோசன-செந்தாமரைமலர்போன்ற திருக்கண்களையுடையவனே!— குளிர்

பதும இடு-குளிர்ந்த திருவடிகள் பொருந்திய, சடகோபம் ஈது என-எம்பெருமானது திருவடிநிலை இதுவென்னும்படி, வான வெளி முகடு அணி-ஆகாய வெளியின் உச்சியினளவும் பொருந்திவளர்ந்திருக்கின்ற, வட வேங்கடம் - வடக்கிலுள்ள திருவேங்கடமலையில், வாண - வாழ்ந்திருப்பவனே!—அதிர் குரல் - முழங்குகின்ற ஓசையையுடைய, வளை - சங்கமும், சுடர் - விளங்குகின்ற, ஆழி - சக்கரமும், ஆம் என ஒத்திருக்குமென்னும்படி, மதி கதிர் - சந்திரனும் சூரியனும், புடை வர இரண்டுபக்கங்களிலும் வரும்படி, நிமிர் - இடையிலே உயர்ந்து நிற்கின்ற, கரி கிரி - ஹஸ்திகிரியில் எழுந்தருளியிருக்கின்ற, வரத - வரதனே!—வலம்புரிபோல - (வெண்மையான) சங்கம்போல, அயன் வாகனம் - பிரமனது வாகனமாகிய அன்னப்பறவை, ஈண்டி - வந்துபொருந்தி, சிலம்பு உறு - ஒலிசெய்தற்குஇடமான, தாளம் - முதுக்களையுடைய, சிலம்பு ஆறு சிலம்பாற்றுக்கு, இறைவ-தலைவனே!—எழும் - மேன்மேல் எழுகின்ற, அலை - நிரைநிரையாகிய அலைகளையுடைய, ஆல - ஒலிக்கின்ற, கடல் - திருப்பாற்கடல், ஏந்த - தாங்க, பொன்னுடன் - இலக்குமியுடனே, ஒரு செழு மணி - ஒப்பற்ற செழுமையான (கௌஸ்துபமென்னும்) ரத்நத்தையும், உரம் - திருமார்பில், அணி - வைத்துக்கொண்டிருக்கின்ற, தெய்வ சிகாமணி - தேவர்கட்கெல்லாந் தலைமேலணியும் இரத்தினம்போல்பவனே!—உரன் உடை-வலிமையையுடைய, மதலையும் - தூணையும், இரணியன் உரமொடு-ஹிரண்யாசுரனது மார்பையும், சரபமும்-சரபத்தையும், வகிர்தரு-பிளந்திட்ட, நரகரிரூப-நரம் மஹாமூர்த்தியே!—பூமியில்-உலகத்திலேயுள்ள, அசுரர் புல பனிக்கு - அசுரர்கூட்டமாகிய அற்பமான பனியை (இருந்தவிடமுந்தெரியாமற்)போக்குதற்கு, இனன் எனும் - சூரியனென்று சொல்லப்படுகின்ற, நேமி - (சுதர்சநமென்கிற) திருச்சக்கரத்தையுடைய, அம் - அழகிய, பரம - மேலான கடவுளே!—சாமி - யாவரையும் அடிமையாக வுடையவனே!—தண் தமிழ் சங்கம் தனி இறையவனே - குளிர்ந்த தமிழ்ச்சங்கத்துக்கு ஒப்பற்ற முதல்வனாய் நின்றவனே!—வாழி - வாழ்வாயாக, இரவின் - பிக்ஷாடனஞ்செய்யும்பொருட்டு, இல் - வீடுகள்தோறும், ஆடும் - சென்றுவருகின்ற, இறை - சிவபெருமானது, அணி - ஆபரணங்களாகிய சர்ப்பங்களெல்லாம், ஒளிக்க - அஞ்சிஒளிக்கும்படி, அரவினில்-காளியனென்னும் பாம்பின்மேல், ஆடும் - நர்த்தனஞ்செய்த, நின் அடி மலர்க்கு - உனது திருவடித்தாமரைமலருக்கு, இயம்புவென - ஒருவிண்ணப்பஞ் செய்வேன்; (அது எதுவென்றால் —) அண்டகோடியையும் - அண்டகோளங்களின் திரள்களையும், அயனையும் - பிரமனையும், உந்தி புண்டரீகத்து-திருநாபிகமலமலரினுள்ளே, பொதிந்தருள் - அடக்கிவைத்தருளின, நின்னை - உன்னை, நெஞ்சு எனும் மலருள் மனமாகிய தாமரைமலரினுள்ளே, நிறுத்தும் - வைத்திருக்கின்ற, மெய் அடியர்க்கு-உண்மையான அடியார்களுக்கு, அஞ்சுற்று அஞ்சுற்று - பயந்துபயந்துநடந்து, ஆங்கு அவர்தம்மை - அவ்வாறுள்ள அடியார்களை, கண்ட இடத்து - பார்த்த இடத்திலே, நும் கால்துகள் என்று -'(அடியேன்) உமது ஸ்ரீபாததூளி' என்று சொல்லி, தொண்டுபட்டு ஒழுக - அடிமைபூண்டு [கைங்கரியஞ்செய்து] நடக்கும்படி, துணை செய - அருள்செய்வாயாக (என்பதே); (எ - று.)

'கோயில் திருமலை பெருமாள்கோயில் அழகர்திருமலை' என்கிற கிரமப்படியே, 'அரங்க, வேங்கடவாண, கரிகிரிவரத, சிலம்பாற்றிறைவ' என்றார். உபயகாவேரிமத்தியிலுள்ள உயர்ந்தஇடமாதலால், 'இரண்டாறுசூழ்அரங்கம்' என்றார். அரங்கமென்பது, திருமாலினது திவ்வியதேசங்கள் நூற்றெட்டனுள் தலைமைபூண்டதும், சோழநாட்டுத்திருப்பதிகள் நாற்பதில் முக்கியமானதும், கோயிலென்றும் பெரியகோயிலென்றும் மறுபெயருடையதும், 'பூலோகவைகுண்டம்' எனப்படுகிற மகிமையையுடையதுமாகிய தலம்.

ரங்க மென்னும் வடமொழி - அகரம் மொழிமுதலாகி முன்வரப் பெற்றுநின்றது; திருப்பாற்கடல் சூரியமண்டலம் யோகிகளது உள்ளக்கமலம் இவையெல்லாவற்றிலுங்காட்டில் திருமால் இங்கு ரங்கியை [ஆசைப்பெருக்கத்தை] அடைந்து திருவுள்ளமுகந்து எழுந்தருளியிருத்தலால். ரங்கமெனப் பெயர்வந்தது: இங்கு ஆரங்கமென்பது - விமானத்தின்பெயர் திருப்பதிக் கானதோர் ஆகுபெயர் [தானியாகுபெயர்]; இனி, திருமகளார்க்குத் திருநிருத்தஞ் செய்யுமிடமா யிருத்தலாலும், ஸ்ரீவைஷ்ணவர்களது திருவுக்கு [மேன்மைக்கு]க் கூத்தரப்பயிலிட மாதலாலும்.ஆற்றிடைக்குறையாதலாலும் இப்பெயர்வந்ததெனினும் அமையும். வேங்கடம்என்பது-வடநாட்டுத்திருமால்திருப்பதிகளபன்னிரண்டனுள்முதலது இது. தன்னையடைந்தவர்களுடைய பாவமனைத்தையும் ஒழிப்பதனால், 'வேங்கடம்' எனப் பெயர்பெற்றது; வடசொல வேம பாவம் கடம-எரித்தல எனப் பொருள் காண்க. அன்றி, வேம்என்பது - அழிவின்மை, கடமஎன்பது - ஐசுவரியம; அழிவில்லாதஐசுவரியங்களைத (தன்னையடைந்தார்க்குத்) தருதலால், வேங்கடம்எனப் பெயர்வந்த தென்றுங் கூறுவர் வேங்கடமலைக்குச சடகோபரும், அதன் சிகரத்தக்குத திருவடியும் வடிவுவமை வாண - வாழ்ந என்பதன் மரூஉ சங்கம் - சந்திரனுக்கும. சக்கரம - சூரியனுக்கும உவமை. ஒரு யுககாலத்தளவுங் கஜேந்திரன் வந்து ஆராதித்ததனால்,கரிகிரி என்று பெயர்; கரி - யானை வரதன் - அடியார்களுக்கு வேண்டும வரம அளிப்பவன்; பேரருளாளன்.

வாகநம் - வகிப்பதெனக் காரணப்பெயர்; வகித்தல் - சுமத்தல் சிலம்பாறு - நூபுரகங்கை. திருமால உலகமளந்தகாலத்தில் மேலே சத்தியலோகத்திற் சென்ற அவரது திருவடியைப் பிரமன தனகைக்கமண்டல தீர்த்தத்தாற் கழுவிவிளக்க. அக்காரசிலம்பினின்றுந் தோன்றியதனால. சிலம்பாறு என்று பெயர். ஆல்கடல்-வினைத்தொகை. பாற்கடல் கடைந்தகாலத்து அதினின்றுந்தோன்றிய திருமகளையும கௌஸ்துபத்தையும திருமால் திருமார்பில் அணிந்தார். 'கடலீன்ற' எனறும பாடம. உரம - உரஸ். மதலை இப்பொருளதாதலை."மதலையாய மாறதன் வீழூன்றியாங்கு" எனனுமிடத்துங் காண்க இரணியன - பொன்னிறமமைந்தவன் நரஹரி - நரகரியென விகாரம்; மனிதவடிவமும சிங்கவுருவமுங் கலந்த திருவவதாரம. "அளந்திட்ட தூணை யவன் தட்ட வாங்கே. வளர்ந்திட்ட வாளுகிர்ச சிங்கவுருவா.யுளந்தொட் டிரணியனொண்மார்பகலம.பிளந்திட்ட கைகள்" என்றார் பெரியாழ்வாரும். இநன் - வடசொல. எம்பெருமானுடைய திருவாழியாழ்வானது திறமைக்கு முன்னே எல்லாவசுரர்களது சைனியமும சூரியன்முன் பனிபோலக் கண்டமாத்திரத்தில் அழிந்துவிடுதலால், 'அசுரப் புன்பனிக்கு இனன்எனும் நேமி' என உருவகப்படுத்தினார். இங்கு, பரமனுக்கு அழகு - திருவாழியுந் திருக்கையுஞ் சேர்ந்த சேர்த்தியா லுண்டானது. ஸ்வாமி யென்னும் வடமொழி, சாமியெனப் பிராகிருதமாய்ச சிதைந்துவந்தது. பரமஸ்வாமியென்பது, அழகர்க்கு ஒரு திருநாமமுமாம. பிக்ஷாடனஞ் செய்த சிவபிரானுக்கு நாகங்கள் ஆபரணமாதலால், 'இரவினிலாடுமிறையணி' என்றார். அந்நாகங்கள் அஞ்சியொளித்தற்குக்காரணம தமதுஇனத்திற்சிறந்தவனான காளியனுக்கு நோந்த துன்பத்தைக கண்டு தமக்கும்ஒருகால் இவ்வாறானதுன்ப முண்டாகுமோ வென்ற அச்சத்தினா லென்க

**அரவினிலாடியகதை.**—யமுனாநதியில் ஓர்மடுவில் இருந்துகொண்டு அம்மடுமுழுவதையுந் தன்விஷாக்கினியினாற் கொதிப்படைந்தநீருள்ளதாய்ப் பானத்துக்கு யோக்கியமாகாதபடி செய்த காளியனென்னுந் துஷ்டநாகத்தைக் கிருஷ்ணன் தண்டிக்கவேண்டுமென்று திருவுள்ளங்கொண்டு, அம்மடு

விற்குச்சமீபத்திலுள்ளதொரு கடம்பமரத்தின்மேலேறி அம்மடுவிற் குதித்துக் கொடிய அந்நாகத்தின் படங்களின்மேல் எறித்துவைத்து நர்த்தனஞ் செய்து நசுக்கி வலியடக்குகையில், மாங்கலியபிக்ஷையிட்டருளவேண்டு மென்று தன்னை வணங்கிப்பிரார்த்தித்த நாககன்னிகைகளின் விண்ணப்பத்தின்படி அந்தக்காளியனை உயிரோடு கடலிற் சென்று வாழும்படி விட்டருளின னென்பதாம்.

எல்லாவற்றையும் உந்திமலரில் அடக்கிவைத்த உன்னை உள்ளமலரில் அடக்கிவைத்த அடியாரென்று, கவி சாதுரியமாகக் கடவுளினுந் தொண்டர்க்குச் சிறப்புக் கூறினர். அஞ்சுறுதல் - பக்திவிசுவாசங்களால்; அடுக்கு - மிகுதிப்பொருளது. கடவுளடியார்க்குத் தொண்டுபூண்டொழுகுவதற்குக் காலமும் இடமும் பார்க்கவேண்டா; கண்ட இடமும் கண்டகாலமுமே அமையுமென்பார், 'கண்டவிடத்து' என்றார். சங்கம்-புலவர்கூட்டம். தமிழ்ச்சங்கத்துக்குத் திருமாலிருஞ்சோலைமலையழகர் தலைவராதலால், இவ்வாறு கூறினார்; "சுத்தத்தமிழ்ப்புலவா. சங்கத்திருப்பிரியான்" என்பர் மேலும்; "மாலிருஞ்சோலைமலைச்சங்கத்தழகா" என்றார் பிள்ளைப்பெருமாளையங்காரும்.

இது, இருபத்துமூன்றடியாலவந்த நேரிசையாசிரியச்சுரிதகம்.

இப்பாட்டு, தரவும் தாழிசையும் அராகமும் மீண்டு தாழிசையும் அம்போதரங்கங்களும் தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்றுவந்த மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா. (க)

உ அவனிவனென் றெண்ணி யலையா திருத்தி
யவனிவனி தைக்கா மழகன் - கவடா
மருதிடந்தா னேகடவுண் மற்றில்லை நெஞ்சே
யொருதிடந்தான் சொன்னே னுனக்கு.

(இ - ள்.) நெஞ்சே - மனமே! அவன் இவன் என்று எண்ணி - அவன் தான்கடவுள் இவன்தான்கடவுள் என்று தோன்றினபடியெல்லாம் நினைத்து, அலையாது - அலையாமல், இருத்தி - ஒருநிலையாய் நிற்பாயாக; கவடு ஆர் - கிளைகள் நிரம்பிய, மருது - மருதமரத்தை, இடந்தான் - முறித்தருளியவனும், அவனி வனிதைக்கு - பூமிப்பிராட்டிக்கு, ஆம் - அன்புள்ள கணவனுமான, அழகனே - திருமாலிருஞ்சோலையழகனொருத்தனே, கடவுள் - ஒன்றானகடவுளாவன; மற்று இல்லை - வேறே கடவுளில்லை; உனக்கு—, ஒரு திடம் நான் சொன்னேன்-ஒரு உறுதியானபொருளைச் சொன்னேன்.

சொன்னதைக்கேட்டு அவனையே தியானிப்பா யென்பதாம். திடம் - உறுதி.

இது, பிறப்புஎன்னுமவாய்பாட்டால்முடிந்த இருவிகற்பநேரிசைவெண்பா.

ஙா. உனைக்கண்டகங்குளிர்ந்துன்னுமங்கூறவுனைவணங்க
வினைக்கண்டகரிடஞ்செல்லாதிருக்கநல்வீடுபெற
முனைக்கண்டகங்கையைநேராக்குங்காந்திமுகுந்தநந்தன்
மனைக்கண்டகணிதலீலாதென்சோலைமலைக்கொண்டலே.

(இ - ள்.) கண்ட - அழகியகண்டமுடையவனே! கங்கையை - கங்கா நதியை, நேர - நேராக, ஆக்கும் - உண்டாக்கியருளின, காந்தி முகுந்த - நீலவொளியையுடைய முகுந்தனே! நந்தன் - நந்தகோபனுடைய, மனைக்கு - திருமாளிகையில், அண்டு - பொருந்திய, அகணித லீலா - கணக்கில்லாத திருவிளையாடல்களையுடையவனே! தென் சோலை மலை - தெற்கிலுள்ள திருமாலிருஞ்சோலைமலையில்எழுந்தருளியிருக்கின்ற, கொண்டலே-நீர் கொ

ண்ட மேகம்போன்றவனே!—உனை கண்டு - (யான்) உன்னைத் தரிசித்து, அகம் குளிர்ந்து மனங்குளிரப்பெற்று, உன் நாமம் கூற உனது திருநாமங்களைச் சொல்லவும், உனை வணங்க - உன்னை நமஸ்கரிக்கவும், வினை கண்டகரிடம் தீத்தொழில்களையுடைய துஷ்டர்களிடத்தில், செல்லாது இருக்க - சென்று சேராமலிருக்கவும், நல் வீடு பெற - நல்லமுத்தியைப் பெறவும், முன் - நினைத்தருளுவாயாக; (எ - று.)

கண்டகர் - முள்போலக் கொடியவர், கண்டகம் - முள். வீடு-எல்லாப் பற்றுக்களையும் விட்டு அடையு மிடமெனக் காரணப்பெயர்; 'முக்தி' என்ற வடமொழிப்பெயரும் இப்பொருளதே. முன் - ஒருமையேவல். மனக்கு - உருபுமயக்கம. முகுந்தன் -(அடியார்களுக்கு)முத்தியின்பத்தையும இவ்வுலக வின்பத்தையுங் கொடுப்பவன், மு - முத்தி, கு - பூமி, த - கொடுப்பவன். நந்தன் - திருவாய்ப்பாடியிலுள்ள இடையர்கட்குத் தலைவன்; யசோதைக்குக் கணவன்; கண்ணனை வளர்த்த தந்தை.

இது - நிரையசைமுதலாய் பதினேழெழுத்தால்வந்த கட்டளைக்கலித்துறை.

௪ கொண்டல்வண்ணாவன்றேயுன்குரைகழற்கமலம்பெற்றேன்
மண்டலமளந்தகாலமற்றுநான்புறம்போசொல்லா
யண்டர்தெள்ளமுதமுண்ணவாலமுண்டவர்க்கேசோமன்
றுண்டமுன்றந்தாய்தந்தாய்சுந்தரராசமாலே

(இ - ள்) கொண்டல் வண்ணா - நீர்கொண்ட காளமேகம் போன்ற நீலவர்ணமுடையவனே! அண்டர் தெள் அமுதம் உண்ண - (இந்திரன்முதலிய மற்றைத்) தேவர்களெல்லாம தெளிவான அமிருதத்தைப் பானஞ்செய்ய, ஆலம் உண்டவர்க்கே - ஹாலாஹலவிஷத்தைப் புசித்த உருத்திரமூர்த்திக்கே, சோமன் துண்டம் - சந்திரன்பங்கை [பிறைச்சந்திரனை], முன் - முன்னே [பாற்கடல்கடைந்த காலத்தில], தந்தாய் கொடுத்தருளியவனே! தந்தாய் - (யாவர்க்கும்) தகப்பனே! சுந்தரராச மாலே - சுந்தரராஜப்பெருமானே!—அன்றே-அந்நாளிலேயே, உன் - உனது, குரை கழல் கமலம் - ஒலிக்கின்ற வீரக்கழலையுடைய திருவடித்தாமரைமலர்களை, பெற்றேன் - அடைந்தேன்; (எப்பொழுதென்றால்.—மண்டலம் அளந்த காலை - உலகங்களை (நீ திரிவிக்கிரமனாகி) அளவிட்டகாலத்தில, நான் - அடியேன, புறம்போ-(உலகமெங்கும்பரவிய உனது திருவடிக்கு) வெளிப்பட்டவனோ? சொல்லாய் - சொல்லு; (எ - று.)

மற்று - அசை. ஓ - எதிர்மறை. ஆலமுண்டவாக்கே சோமன் துண்டமுன் தந்தாய்' என்றதில், விஷத்தைப்புசித்து ஜீரணஞ்செய்தவர்க்கே அத்திறமைக்கு வியந்து அரையிலுடுக்கும் ஆடையும, மேலேஅணியும் உத்தரீயமுஞ் சம்மானமாகத் தந்தாயென ஒருபொருள் தோன்றவைத்தது காண்க. ஆலம் - ஹாலாஹலம் என்ற வடசொல்லின் சிதைவு. தந்தாய் - தந்தையென்பதன் ஈறுதிரிந்த விளி.

இது. முதல் நான்காஞ் சீர்கள் விளச்சீர்களும், மற்றைநான்கும் மாச்சீர்களுமாகிய அறுசீராசிரியவிருத்தம் (௪)

௫ மாலைக்கரும்பிறைபுரைவாளெயிற்றுநமன்வன்பாசம்வீசவுடலை
மாலைக்கரும்புபடுமுன்னே கண்முன்னே புள்ளரசோடும்வந்துதவுவாய்
வேலைக்கரும்புனிதவிந்திராதியர்க்குநலவிருந்திட்டுவந்துவிதுரன்
சாலைக்கரும்புதுவிருந்தாமருந்தேதடஞ்சோலைமலையழகனே

(இ - ள்.) வேலை - கடல்போன்ற, கரு - கருநிறத்தையுடைய, புனித - பரிசுத்தகுணமுள்ளவனே! இந்திர ஆதியர்க்கு-இந்திரன்முதலிய தேவர்கட்

கெல்லாம், நல் விருந்து இட்டு வந்து நல்ல விருந்துணவை [தேவாமிருதத்தை]க் கொடுத்தருளிந்து, விதுரன் சாலைக்கு-விதுரனது திருமாளிகைக்கு, அரு - வருதற்கரிய, புது - புதுமையான விருந்து ஆம் - விருந்தினனாய்ச் சென்ற, மருந்தே - அமிருதம்போன்றவனே! தட - பெரிய, சோலைமலை - திருமாலிருஞ்சோலைமலையில் எழுந்தருளியிருக்கின்ற, அழகனே—!—மாலைக்கு - மாலைக்காலத்தில், அரும்பு - தோன்றுகின்ற, பிறை - பிறைச்சந்திரனை, புரை - ஒத்திருக்கின்ற, வாள் - வாள்போற கூர்மையான, எயிறு - கோரப்பற்களையுடைய, நமன் - யமன் வல் பாசம் வீச - (தனது) வலிய காலபாசத்தை எடுத்து மேல்எறிய, (அதனாற் பந்தப்பட்டு), உடலம் - உடம்பு, ஆலை கரும்பு படும் முன்னே - யந்திரத்திலவைத்து ஆட்டப்படுகின்ற கரும்புபோல வருத்தப்படுவதற்குமுன்னமே [இறப்பதற்குள்ளே],கண் முன்னே - (என)கண்களுக்கு எதிரிலே, புள் அரசோடும் - பறவைகட்கு அரசனாகிய கருடனுடனே. வந்து - எழுந்தருளித் தரிசனந்தந்து, உதவுவாய் - அருள்செய்வாயாக; (எ - று.)

மாலைக்கு - உருபுமயக்கம். பிறை - வளைந்தவடிவத்தாலும், வெள்ளிய நிறத்தாலும் எயிறுக்கு உவமை. பாசம் - கயிற்று வடிவமாகிய ஆயுதம். கண்முன்னே வருதல் - பிரதியக்ஷமாதல். விருந்திட்டு உவந்து என்றும் பிரிக்கலாம். விதுரன் - திருதராஷ்டிரனுக்கும் பாண்டுவுக்குந் தம்பிமுறையாகிறவன்; பாண்டவர்களுக்குந் துரியோதனாதியர்க்குஞ் சிறிய தகப்பன்; வேதவியாசமுனிவரிடத்து அம்பாலிகையினால் அனுப்பப்பட்ட சூத்திரப்பெண்ணினிடத்துப் பிறந்தவன் பரமபாகவதர்களில் ஒருவன். கண்ணன் பாண்டவர்க்காகத் துரியோதனாதியரிடம் தூதுபேசுதற்பொருட்டு அத்தினாபுரிக்கு எழுந்தருளியபோது, அங்கு வேறுயாருடைய வீட்டிற்குஞ் செல்லாமல் ஞானபக்திகளிற்சிறந்த விதுரனுடைய திருமாளிகையினுட் புக்குத் தங்கி அங்கு அன்பால் மிக்க அன்புடன் அமைக்கப்பட்ட விருந்துணவை அமுதுசெய்தருளினனென்பது பிரசித்தம். இது, எம்பெருமான் அடியவர்க்கெளியவனென்பதைக் காட்டும் விருந்து-புதுமை; புதியனான விருந்தினனை யுணர்த்துகையில், பண்பாகுபெயர்

இது, முதலைந்துசீரும் காய்ச்சீர்களும், மற்றையிரண்டு மாச்சீர்களுமாகிய எழுசீராசிரியச்சந்தவிருத்தம். (௫)

௬ மலைக்குமேன்மலைவிளக்காமழகாவேதவான்குதலைநான்குதலைமகனாவாளா, தலைக்குமேலெழுதுகின்றாரரியென்றெங்கள்தாலத்தின்மேலெழுதச்சமாத்திலாரோ, வலைக்குமேனுடுமலராமிதக்குங்காலமாலமொன்றுகாயாமபூவலர்ந்தாற்போற்பச், சிலைக்குமேற்செங்கண்வளரனந்தானந்தாவிருக்கிலிருக்கும்பொருளேயெம்பிரானே.

(இ - ள்.) அலைக்கு மேல - அலைகளின் மேலே, உடு - நட்சத்திரங்கள், மலர் ஆ - நீர்ப்பூக்கள்போல, மிதக்கும் - மிதக்கின்ற, காலம் - காலத்தில் [நக்ஷத்திரமண்டலமளவும் நீர் வியாபித்துநின்ற நைமித்திகப் பிரளயகாலத்தில்], ஆலம் ஒன்று - விஷத்தின்மேல், காயா பூ அலர்ந்தால்போல் - காயாமரத்தின்மலர் பூத்துவிளங்கினாற்போல, பசு இலைக்கு மேல் - பசியஆலிலையின்மேலே, செம் கண் வளர் -சிவந்த திருக்கண்கள் வளர்ந்தருளுகிற, அனந்த ஆனந்தா - எல்லையிலலாத ஆனந்தமயமானவனே! இருக்கில் இருக்கும் பொருளே - வேதத்திற் பொருந்திய பொருளாகவுள்ளவனே! எம் பிரானே-எமது தலைவனே!— மலைக்குமேல்-திருமாலிருஞ்சோலைமலையின்மேல், மலை விளக்கு ஆம் - பொருந்திய தீபம்போல விளங்குகின்ற, அழகா - அழகனே! வேதம் - வேதங்களாகிய, வான் குதலை - சிறந்த குதலைச்சொற்களை

யுடைய, நான்கு தலை - நான்கு முகங்களையுடைய, மகனார் - (உனது) குமாரராகிய பிரமதேவர், வாளா - பயனில்லாமல், சிலைக்குமேல் - (வலியவெங்களது) தலையின்மேலே, எழுதுகின்றார் - (பலபலவாறுவிதித்து) எழுதுகிறார்; (ஐயா), எங்கள் தாலத்தின்மேல் - எங்களது (மெல்லிய) நாக்கிலே. அரி என்று - ஹரி என்று, எழுத - (இரண்டெழுத்து) எழுதுவதற்கு, சமர்த்த இலாரோ - திறமையில்லாதவரோ? (எ - று.)

நாவினால் அரி என்றுசொல்லி நற்கதியடையவொண்ணுதவாறு எங்கள் விதி இருந்தபடி என்னே!' என்று இரங்கியபடி. பிரமன்தான் இளமையிலேயே ஸ்ரீமகாவிஷ்ணுவினிடத்தில் உபதேசம்பெற்று நான்குவேதங்களையும் நான்குமுகங்களாலும் பாராயணஞ் செய்து வருதலால் 'வேதவானகுதலை நான்குதலை மகனார்' என்றார். ஆவிகுதி - உயாவுகுறித்தது. வாளா - பயனின்மைப்பொருள் தருவதோர் இடைச்சொல். ஆலம் - திருமால் திருக்கண் வளர்ந்தருளும் ஆலிலைக்கும் காயாம்பூ - அவரது திருமேனிக்கும் உவமை, "காயமலர்நிறவா" என்றார் பெரியாழ்வாரும். ஆலம், அம் - சாரியை. பசலை - பிரளயப்பெருங்கடல்நீரிற் குழந்தைவடிவுகொண்ட திருமால் சயனித்தற்குரிய ஆதிசேஷாம்சமான ஆலிலை. கண்வளர்தல் - யோகநித்திரை கொள்ளுதல். 'மகன்' என்பதற்கு ஏற்ப 'குதலை' என்றார்.

இது - முதற்சீர் விளச்சீரும், இரண்டு ஐந்து ஆறாஞ் சீர்கள் காய்ச்சீர்களும், மற்றைநான்கும் மாச்சீர்களுமாகிய எண்சீராசிரியவிருத்தம். (சு)

எ. பிரானெனச்சொன் முராரிபுராரிநீ பிரமனீ குணபேதநீ பூதநீ
தராதலத்திற் சராசரம் யாவுநீ சச்சிதாநந்த விம்பமுநீயன்றோ
மராமரங்கொல் இராமவிராகவ வாசுதேவ வனகிரிவாச முன்
கராசலஞ்சொல் பராபர நாத செங்கஞ்சலோசன அஞ்சனமேருவே.

(இ - ள்.) பிரான் என - (யாவரினும்) மேம்பட்டவனென்று, சொல் - சொல்லப்படுகின்ற, முராரி - முரனென்னும் அசுரனைக் கொன்ற பகைவனே! மராமரம் கொல் - மராமரங்களை யழித்த, இராம - ஸ்ரீராமனே! இராகவ - ரகுகுலத்தில் திருவவதரித்தவனே! வாசுதேவ - வசுதேவ குமாரனே! வனகிரிவாச - சோலைமலையில் வாசஞ்செய்பவனே! முன் - முன்னே, கர அசலம் - துதிக்கையையுடைய மலைபோன்ற கஜேந்திரனால், சொல் - (ஆதிமூலமே என்று) கூவியழைக்கப்பட்ட, பராபர - சிறந்தபொருள்களெல்லாவற்றினுஞ் சிறந்தவனே! நாத - தலைவனே! செம் கஞ்ச லோசன - செந்தாமரைமலர் போலுந் திருக்கண்களையுடையவனே! அஞ்சனம் மேருவே - மைநிறமான நீலமலைபோன்றவனே! — புராரி - திரிபுரசங்காரஞ் செய்த உருத்திரனும், நீ - நீயே; பிரமன் - பிரமனும், நீ —; குணம் பேதம் - (சாத்துவிகம் முதலிய) குணபேதங்கள் மூன்றும், நீ —; பூதம் - பஞ்சபூதங்களும், நீ —; தராதலத்தில் - உலகத்திலுள்ள, சர அசரம் யாவும் - ஜங்கமஸ்தாவரப்பொருள்களெல்லாம், நீ —; சத் சித் ஆநந்த விம்பமும் - உண்மை அறிவு ஆநந்தம் என்கிற இவற்றின் சொரூபமும், நீ அன்றோ - நீயேயன்றோ? (எ - று.)

எல்லாந்தானான திருமாலின் தன்மையை வெளியிட்டவாறு. முரனை அழித்தது - கிருஷ்ணாவதாரத்தில். முரன் - நரகாசுரன் மந்திரி. சராசரம் - அசையும்பொருளும், அசையாப்பொருளும். விம்பம் - பிம்பம். அன்று, ஓ - தேற்றம். ராகவன், வாஸுதேவன் - தத்திதாந்தநாமம். பராபரம் - பராத்பரம் என்னும் வடசொல்லின் விகாரம். கஞ்சம் - நீரிலமுளைப்பதெனத் தாமரைக்குக் காரணவிடுகுறி.

**மராமரம் அழித்த வரலாறு.**— இராவணனால் வலியக் கவர்ந்து செல்லப்பட்ட சீதையைத் தேடிக்கொண்டுசென்ற இராமலக்ஷ்மணரை அநு

மான்மூலமாகச் சிநேகித்த பிறகு, சுக்கிரீவன் தனது பகைவனும் மகாபலசாலியுமான வாலியைக் கொல்லும் வல்லமை இராமபிரானுக்கு உண்டோ இல்லையோ வென்று ஐயமுற்று, தன் சந்தேகந்தீரும்படி 'எதிரிலுள்ள ஏழுமராமரங்களையும் ஏககாலத்தில் தொளைபடும்படி எய்யவேண்டும்' என்று சொல்ல உடனே இராமபிரான் ஓர் அம்பு தொடுத்து அந்தஸப்தஸாலவிருக்ஷங்களை ஒருங்கு தொளைபடுத்தினனென்பதாம். மராமரம் - ஒருவகை ஆச்சாமரம்.

இது - முதலில் மாச்சீரும் மற்ற மூன்றும் விளச்சீரும் பெரும்பாலும் பெற்று நாற்சீரானடந்த - அளவடியாகவும், அரைகுறைக்கட்டிகொண்டது - ஓரடியாகவும், அவ்வடி நான்கு கொண்டு, அரையடிக்கு நிரையசைமுதலாயின் ஒற்றொழித்துப் பன்னிரண்டெழுத்தும், நேரசைமுதலாயின் பதினொன்றும் பெற்றுவந்த கட்டளைக்கலிப்பா. (எ)

அ. அஞ்சாரலு மட்டணிநீ ரூறுங் கிடைக்கரிய
மஞ்சீர மாறு மணிகிரியே பஞ்சவர்தம்
பங்கங் களைந்தான பன்னிரண்டு கண்ணொருவன்
பங்கங் களைந்தான் பதி

(இ - ள்) அஞ்சாரலும் - அழகிய மலைப்பக்கங்களிலும், அணிநீர் ஆறும் - அழகிய நீரையுடைய நதியிலும், (முறையே). கிடை கரிய மஞ்சு சூழ் ஆறு - படிந்து கிடக்கின்ற கறுத்த மேகத்தினது கூட்டங்களும் [கிடைக்க அரிய மஞ்சீரமாறு - கிடைத்தற்கரிய மஞ்சீரம் என்னும் பெயர் நீங்காத]. மணிகிரியே - சோலைமலையே; — பஞ்சவர்தம் - பஞ்சபாண்டவர்களது, பங்கம் - அவமானத்தை, களைந்தான் - போக்கினவனும், பன்னிரண்டு கண் ஒருவன் - பன்னிரண்டுகண்களையுடைய ஒப்பற்ற ஆறுமுகக்கடவுள், பங்கு - பக்கத்தில், அளைந்தான் - பொருந்தப்பெற்றவனுமாகிய அழகனது, பதி - திருப்பதியாம்; (எ - று) அங்கு அசை.

அஞ்சாரலகரியமஞ்சீரமாறு மணிகிரியென்றது - அம்மலை மேகமண்டலத்தினும் மேலாக உயர்ந்திருத்தலால் மஞ்சீரம் - காற்சிலம்பு அங்குள்ள ஆற்றிற்கு நூபுரகங்கையென்று பெயராதலால் அணிநீராறு கிடைக்கரிய மஞ்சீரமாறு மணிகிரி' என்றார். 'பஞ்சவர்தம் பங்கங் களைந்தான்' என்றது - பாண்டவர்கட்குத் தூது சென்றும், அருச்சுனனுக்குத் தேரூர்ந்தும், சக்கரத்தாற் சூரியனை மறைத்தும், துரியோதனனையழிப்பதற்குத் துணையாய் நின்றதனால் முன் இரண்டடியில் ஒருவகையாகப் பிரிபட்டு இருபொருள்படுதலால், பிரிமொழிச்சிலேடையணி பஞ்சவர் - தொகைக்குறிப்பு. பின்னிரண்டடியில 'பங்கங்களைந்தான்ப' என்பதுவரையில் எழுத்து ஒற்றுமைப்பட்டுக் கிடந்தது, 'மடக்கு' என்னுஞ் சொல்லணி இனி, மூன்றாம் அடியில், பஞ்சவர்தம் பங்கு அங்கு அளைந்தான் எனப் பிரித்து - பாண்டவர்கள்பக்கத்தில் அப்பொழுது [பாரதயுத்தகாலத்தில்] சேர்ந்தவன் என்று உரைத்து, நான்காம் அடியில், பங்கம் களைந்தான் எனக்கொண்டு - சுப்பிரமணியனது குறையைத் தீர்த்தருளியவனென்ற பொருள்கொள்ளலுமாம்.

இது. மலர்என்னும் வாய்பாட்டால்முடிந்த இருவிகற்பநேரிசைவெண்பா.

௯ பதிக்கின்றகற்பகப்பூஞ்சோலையையெட்டிப்பார்த்துமதி
குதிக்கின்றமாலிருஞ்சோலைவெற்பாநின்குளிர்வதன
முதிக்கின்றதிங்கண்மெய்யுற்பலக்காடுங்கொழுகுபைந்தேன்
மதிக்கின்றகட்டழகெங்கள்கண்மூழ்குமதுகரமே.

(இ - ள்) பதிக்கின்ற - மேன்மேல் வளர்கின்ற, கற்பகம் - கல்பகவிருக்ஷங்களையுடைய, பூ சோலையை - அழகிய தேவலோகத்து நந்தனவனத்தை, எட்டி பார்த்து - தலையெடுத்துப்பார்த்து, மந்தி - பெண்குரங்குகள், குதிக்கின்ற - குதித்தற்கிடமான, மாலிருஞ்சோலைவெற்பா - திருமாலிருஞ்சோலைமலையில் எழுந்தருளியிருப்பவனே!—நின் - உனது, குளிர் வதனம் - குளிர்ந்த திருமுகமண்டலம், உதிக்கின்ற திங்கள் - உதயமாகி விளங்குகின்ற பூர்ணசந்திரனாகும்; மெய் - (உனது) திருமேனி, உற்பலம் காடு - (அச்சந்திரனொளியால் மலர்கின்ற) நீலோத்பலமலர்த்தொகுதியாகும்; மதிக்கின்ற - (யாவராலும்) கொண்டாடப்படுகிற, கட்டழகு - (உனது) தளராத சௌந்தரியம், அங்கு ஒழுகு பைந் தேன் - அவ்வுற்பலக்காட்டினின்றும் பெருகுகின்ற பசிய [புதிய] தேனாகும்; எங்கள் கண் - (அக்கட்டழகிலே மீளவொண்ணாதபடி அழுந்துகிற) எங்கள் கண்கள், மூழ்கும் மதுகரமே - (அத்தேனில்) மூழ்கிக்கிடக்கின்ற வண்டுகளாகும்; (எ - று)

தேவலோகத்திலுள்ள கற்பகச்சோலைக்கும் நிலவுலகத்திலுள்ள திருமாலிருஞ்சோலைக்குஞ் சம்பந்தமில்லாமலிருக்கச் சம்பந்தத்தைக் கற்பித்தலால், **தொடர்புயர்வுநவிற்சியணி**; வடநூலார் ஸம்பந்தாதிசயோக்தி என்பர். மந்தி-பெண்பெயர்; "குரங்கு முசுவு மூகமு மந்தி". கற்பகம்,உற்பலம்-கல்பகம், உத்பலம். முற்றுருவகவணி. மதுகரம் - தேனைச்சேர்ப்பது. மால் என்றும் இருமை என்றும் இரண்டும் பெருமையைக்குறித்தனவாய்ச் சோலையினுடைய உயர்ச்சியையும் பரப்பையுஞ் சொல்லுகிறது.

இது, நிரையசை முதலாயவந்த **கட்டளைக்கலித்துறை.** (௯)

[புயவகுப்பு.]

(முதலடி.)

௧௦. மதுகயிடவன்சடலமழுகுபடவெங்குருதி
மதுவினிலழிந்தொழுகவிறக்கிநணிபிழிந்தன
மிடிதயிர்முகந்துரலின்வரியவுமிசைந்துபய
மருந்தையுமிடந்துபினுமங்குகூறிநெய்கவர்ந்தன
மகளிர்நகசந்த்ரகலைபதிபடாதழும்புபட
மணிகணிரெனுஞ்சுரபிதிருப்புகுணிலசுமந்தன
வயிறுகுழையும்பொழுதுசிறுகுமுதமொன்றநிரை
மடிமுலைவிரைந்துருவிநுரைத்தசுவைகறந்தன

(இரண்டாமடி.)

புதுவையின்மடந்தைகவிபதின்மர்தமிழ்கொண்டணிது
புளகிதமெறிந்துமரகதக்கிரியினிமிர்ந்தன
பொதுவர்தருபெண்கண்முலைதிமிர்மிருகமதங்களொடு
புதியபசுமஞ்சள்குமுகுமுக்கவிம்மிவளர்ந்தன
புலிகிடுகிடென்றதிரவெதிர்தொடையறைந்துசமர்
பொருமலர்கலங்கமுகமிடித்துமிகநுழைந்தன
புகையுமொருகஞ்சன்விழமுரனடுநடுங்கயம
புரநெளியவும்பாமலரிறைக்கவமர்புரிந்தன

(மூன்றாமடி.)

மிதிலைமயிலின்புருவநிகரலதிதென்றரனும
வெருவிடவ்வன்சிலையைமுறித்தவையிலெறிந்தன

விசையினொடுகொடுமினிணைதிருகிடணிகிந்தரனை
வெறிகொள்கெசகும்பமதுதகர்த்துவிருத்தணிந்தன
விசயன்ரதவெண்புரவிகருவிகொடுரிஞ்சிமிக
மெழுகுசெய்துதண்புனலின்மினுக்கியுளையகிர்ந்தன
விரனுனிசிவந்தபடியுல்லைகள்கொழுந்துவிட
வெண்ணெயின்மலையுங்கரைபவிஞ்சத்தகுழலபயின்றன.

(நான்காமடி.)

மதிகனகனைஞசமிருபிளவுசெய்துறிஞ்சமுக
வருகுதிரமொண்டுதவிநிணத்தகுடர்பிடுங்கின
வணவொதொடைபுனைந்துரகமவளைமலையையொன்றுகொழு
மரசிளமகன்குடுமிதிருத்தியலாபுனைந்தன
வணிமகரகுண்டலநலவிசயமகளுஞ்சலென
வசையவவள்செம்பொனையிலெனதொடிகள்செறிந்தன
வமுதமதிவந்துதவழிடபகிரிநின்றவடி
வழகாதுளவுந்தளவுமணத்ததிரளபுயங்களே

(இ - ள) மது கயிடவன் - மது கைடபன் என்கிற அசுரர்களது, சடலம - உடமபு, மெழுகு பட - தேன்மெழுக்குப்போலாகவும், வெம் குருதி - கொடியஇரத்தநீர், மதுவினில - தேன்போல, வழிந்து ஒழுக - (அதினின்று) பெருகிவழியவும், இறுகநெகிழ்ந்தன - (அந்தஉடம்பை) அழுத்தப்பிடித்து நன்றாயப பிழிந்துவிட்டன; வடி தயிர முகந்து - சிறந்ததயிரை மொண்டுகுடித்து, (அதற்காக), உரலின் வரியவும் - (இடைச்சியர்) உரலிற் பிடித்துக் கட்டவும், இசைந்து - (அதற்கு) இணங்கியிருந்து, உபயம் மருதையும் இடந்து - இரட்டைமருதமரங்களையும் முறித்துத்தள்ளி, பினும் - பின்னும், அடுக்கு உறி நெய்-உறிகளில (ஒன்றன்மேலொன்றாகக் கலசங்களில்) அடுக்கிவைக்கப்பட்டுள்ள நெய்யை, கவர்ந்தன - களவுசெய்து உண்டன; மகளிர் - பெண்களது, நக சந்தரகலை - சந்திரனபங்குபோன்ற நகங்களின் குறிகள், பதி - (ஆலிங்கனஞ்செயயும்போது) அழுந்தப்பெற்றுள்ள, பிடர் - பிடரியானது, தழும்பு பட - சுவடுடையும்படி, (அப் புறக்கழுத்தில்), மணி கணீர எனும் சுரபி திருப்பு குணில்-(அழகுக்காகக்கட்டிய அடிககும்) மணிகள் கணீரகணீர் என்று ஒலிக்கப்பெற்ற பசுக்களைத (தன்விருப்பத்தின்படியே)திருப்பி யோட்டுதற்குக் கருவியான குறுந்தடியை, சுமந்தன-தரித்தன; வயிறு குழையும்பொழுது - வயிறு (பசியினால) சிறிதுநெகிழும்பொழுது, சிறு குமுதம் ஒன்ற - சிறிய செவ்வாமபல்மலர்போன்ற தனவாய் நிரம்பும் படி, நிரை மடி முலை-பசுக்களின் மடியிலுள்ள தனங்களை,விரைந்து உருவி-விரைவோடு (கையினாற்பிடித்து) உருவி, நுரைத்த சுரை-நுரைகளையுடைய பாலை, கறந்தன —;

புதுவையின் மடந்தை - ஸ்ரீவில்லிபுத்தூரில் திருவவதரித்த ஆண்டாளுடைய, கவி - பாடலையும், பதின்மர் - (ஆழ்வார்கள்) பத்துப்பேருடைய, தமிழ் - தமிழ்ப்பிரபந்தங்களையும், கொண்டு - ஏற்றுக்கொண்டு, (மகிழ்ச்சியினால்). இனிது புளகிதம் எறிந்து - இனிமையாக மயிர்சசிலிர்ப்புப்பொருந்தப்பெற்று, மரகதம் கிரியின் - நீலமணிமயமான மலைகள்போல, நிமிர்ந்தன - உயர்ந்து வளர்ந்தன; பொதுவர் தரு பெண்கள் - இடையர்கள் பெறற பெண்களது, முலை - கொஙகைகளில், இமிர் - பூசப்பட்டுள்ள, மிருகமதங்களொடு - கஸ்தூரிப்புழுகுடனே, புதிய பசு மஞ்சள் - புதுமையான

பசிய மஞ்சளும், குமுகுமுகக - குமுகுமுவென்று பரிமளிக்கும்படி, விரி வளர்ந்தன - (களிப்பினால்) பருத்துப் பூரித்தன; புவி கிடுகிடுஎன்று அதிர - தரை கிடுகிடுஎன்று அதிரும்படி, எதிர் தொடை அறைந்து - எதிரே தொடைகளைத் தட்டிக்கொண்டு, சமர் பொரும - போர்செய்துவருகின்ற, மலர் - (சாணூரன் முஷ்டிகன் முதலிய) மற்போர்வீரர்கள், கலங்க - கலக்கமடையும்படி, முகம் இடித்து - (அவர்களது) முகத்தைக் குத்தி, மிக நுழைந்தன - (மேோருக்கு) விசையாகப் பாய்ந்தன, புகையும் - கோபிக்கின்ற, ஒரு - ஒப்பற்ற, கஞ்சன் - கம்சன், விழ - விழுந்து அழியவும், முரன - முரனென்னும் அசுரன், நடுநடுங்க - (அச்சத்தால்) மிகவும் (உடல்) நடுக்கமடையவும், யம புரம் நெளிய - யமபட்டணமும (அச்சத்தால்) கலங்கவும், உம்பர் மலர் இறைக்க - தேவர்கள் பூமழைபொழியவும், அமர் புரிந்தன - போர்செய்தன;

'இது - இவ் வில், மிதிலை மயில - மிதிலாநகரத்திலதோன்றிய மயில் போலுஞ்சாயலையுடைய சீதாபிராட்டியினது, இன புருவம - காணுதற்கினிய புருவத்துக்கு, நிகர் அலது - ஒப்பாகாதது,' என்று - என்றுஎண்ணி, அரனும் வெருவிட - (அவ்வில்லுக்கு உடையவனான) சிவனும அஞ்சும்படி, அவன் சிலையை முறித்து - அச்சிவபிரானது தனுவை ஒடித்து, அவையில - (ஜநகராஜனது) சபையில, எறிந்தன - (அவ்வொடிந்தவில்லின் துண்டுகளை) வீசின; விசையினொடு - வேகத்தோடு, கொமபின இணை - இரண்டு தந்தங்களையும, திருகி - சுற்றிப்பிடுங்கி, (அவ்வாற்றால்), மணி சிந்த - கட்டியமணிகள் சிதறும்படி, ரணம வெறி கொள் கெச கும்பமது - போரில் மயக்கத்தைக் கொண்ட (குவலயாபீடமென்னும) யானையினது குடம்போன்ற மஸ்தகத்தை, தகர்த்து - உடைத்து விருது அணிந்தன - வெற்றியை மேற்கொண்டன; விசயன - அருச்சுனனது, ரதம - தேரிற பூட்டிய, வெள புரவி - வெள்ளைக்குதிரைகளை, கருவிகொடு - ஓட்டுங்கருவியாகிய உளவுகோலால், உரிஞ்சி - தட்டியோட்டி, மிக வெழுகு செய்து - மிகவும நெய்ப்புண்டாமபடி தேய்த்து, தண் புனலின - குளிர்ந்த நீரினால், மினுக்கி - பளபளப்புண்டாம்படி கழுவி, உளை - (அக்குதிரைகளின) பிடரிமயிர்களை, வகிர்ந்தன - வாரிவிட்டு ஒழுங்குசெய்தன; விரல் நுனி சிவந்த படி - கைவிரலின நுனி (பிடித்து வாசித்தலாற) சிவப்படையவும, (அதுபோல), உலவைகள் - உலர்ந்தமரங்கள், கொழுந்துவிட - தளிர்விடும்படியாகவும, மலையும - மலைகளும, வெண்ணெயின் - வெண்ணெயைப்போல, கரைய - நெகிழ்ந்து உருகும்படியாகவும, இசைத்த குழல் - ஏழிசைகளும்பொருந்திய வேயங்குழலை, பயின்றன - ஊதின;

அதிர் கனகன் - பேரொலிசெய்த இரணியனது, நெஞ்சம் - மார்பை, இரு பிளவு செய்து - இரண்டுபிளப்பாகப் பிளந்து, உதிரம் - (அவனது) ரத்தத்தை, உறிஞ்ச - உறிஞ்சிக்குடிக்கும்படி, முக அருகு - (தனது) வாயினிடத்தே, மொண்டு உதவி - மொண்டுமொண்டு கொடுத்து, நிணத்த குடர் - தசைப்பசையையுடைய குடல்களை, பிடுங்கின—, அவை - அக்குடல்களை, தொடை புனைந்து - மாலையாகத் தரித்து, உரகம வளை மலையை வென்று - (அவ்விரணியனுக்குப்பரிந்து சரபவுருக்கொண்டுவந்த) சர்ப்பாபரணங்கள் (தனது அவயவத்தில்) சூழ்ந்திருக்கப்பெற்ற மலைபோன்ற சிவனை வெற்றிகொண்டு, தொழும் அரசு இள மகன் - (தன்னை) வணங்கிக்கொண்டு அருகிலே நின்ற இளைய (அவ்விரணிய) ராஜனது குமாரனாகிய ப்ரஹ்லாதனது, குடிமி - முடியை, திருத்தி - (பட்டங்கட்டிக் கிரீடஞ்சூட்டுவதனால்) அலங்கரித்து, அலர் புனைந்தன - மலர்மாலைகளைச் சூடின; அணி மகர குண்டலம - அழகிய மகரமீன்வடிவாகச் சித்திரிக்கப்பட்டுள்ள குண்டலங்கள், நல விசயமகள் ஊஞ்சல் என - நல்ல ஜயலக்ஷ்மியினது ஊஞ்சல்போல, அசைய - மேலே அசையாநிற்க, அவள் செம் பொன் எயில் என - அவளுடைய சிவந்த பொன் மயமானமதிள்போல, தோடிகள் - தோள்வளைகள், செறிந்தன - நெருங்கப்

பெற்றன ; அமுதம் மதி வந்து தவழ் - அமிருதமயமான (கிரணங்களையுடைய) சந்திரன் வந்து தவழப்பெற்ற, இடபகிரி - திருமாலிருஞ்சோலை மலையின்மேல்; நின்ற - எழுந்தருளிநின்ற, வடிவு அழகர் - வடிவமழகிய எம்பெருமானது, துளவும் தளவும் மணத்த-திருத்துழாயும் முல்லைமலர்களும் வாசனைவீசப்பெற்ற,திரள்-திரண்டுள்ள,புயங்கள்-திருத்தோள்கள்;(எ - று.)

புயவகுப்பு - பிரபந்தத்தலைவனது தோள்களின் சிறப்பைக் கூறுவது.

கயிடவன் - வடமொழிவிகாரம். மெழுகுபட என்பதற்கு - (பூமி முழுதையும்) மெழுகுதல்செய்ய என்றும், எழு கு பட எனப்பிரித்து,எழு தீவுகளிலும [பூமிமுழுவதும்] பொருந்தும்படி என்றும் உரைக்கலாம்; மது கைடபர்களின் மேதஸ்ஸினால [நிணத்தால்] நனைந்து பூமி 'மேதினீ' என்னும்பெயர் பெறறிருத்தலால். குமுதம் - வாய்க்கு உவமவாகுபெயர். மடி - மலையின் மேல்திரள்.

புதுவையின் மடந்தை என முதலில் தனியே எடுத்தது - ஆண்டாள் பதின்மர்களுள் சேராதவ ளாதலாலும், திருமாலிருஞ்சோலை யெம்பெருமானிடத்து அளவிறந்த ஈடுபாடு கொண்டவளாதலாலும். பொதுவர்தருபெண்கள் - கோபஸ்திரீகள். பொதுவர்-குறிஞ்சிநிலத்துக்கும் மருதநிலத்துக்கும் நடுவிடமான முல்லைநிலத்தில் உள்ளவர்; இடையர் என்னும் பெயர்க்கும் காரணம் இது. மிருகமதம் - கஸ்தூரி யென்னும் மானினது மதம். விமி - விம்மி. அமர - ஸமரம. கஞ்சன் - கம்ஸன்என்றவடமொழியின் திரிபு. இவன், கண்ணனது தாயான தேவகிக்குத் தமையனாதலால், கண்ணனுக்கு மாமனாவன்.

சீதைக்குக் கர்யாசுல்கமாகவைக்கப்பட்டுள்ள சிவதநுசைமுறித்ததற்கு, அவள்புருவத்துக்கு ஒப்பாகாதென்கிற எண்ணம் காரணமாகாதிருக்கவும், அதைக் காரணமாகக்கற்பித்தலால, ஏதுத்தற்குறிப்பேற்றவணி. மணிசிந்த-முத்துக்கள்சிதற என்றுமாம்; உத்தமகஜத்தினது மதத்தகத்தில முத்துக்கள் உண்டென்று கற்றவர் கூறுதலால். விஜயன் - மிக்க ஜயமுடையவன். ருவேதவாகனனாதலால், 'வெண்புரவி' என்றார். குழலூதுகிறபொழுது அக்குழலின்துளைகளை அடைத்தும் விட்டும பயிலுதலாற கைவிரல்கள் சிவந்தன வென, அவற்றின் மென்மை கூறியபடி. உலவை - உலாந்திருப்பது: உல - பகுதி, ஐ - வினைமுதற்பொருள்விகுதி ௨ரகம் - மார்பால் நகர்வது. 'மதி வந்துதவழிடபகிரி'எனச சந்திரமண்டலத்தினும உயர்ந்ததென்று மலையின் உயர்வு கூறியவாறு கருவிகொடுரிஞ்சி - தேயக்கருவிகருவியால் தேய்த்தென்றுமாம்.

மல்லரையழித்த கதை:—கம்சனால்வலிய அழைக்கப்பட்டுக் கிருஷ்ணபலராமர்கள அவனது சபையிற் செல்லுகையில், அவர்களை எதிர்த்துப் பொருதுகொலலும்படி கம்சனால் ஏவப்பட்ட சாணூரன் முஷ்டிகன் முதலிய பெருமல்லர்கள்சிலர் வந்துஎதிர்த்து உக்கிரமாகப்பெரும்போர்செய்ய, அவர்களையெல்லாம் அவ்யாதவவீரரிருவரும் மற்போரினாலேயே கொன்றுவென்றிட்டனர் என்பதாம்.

கஞ்சனையழித்த கதை:—தன்னைக்கொல்லப்பிறந்த தேவகீபுத்திரன் யசோதையினிடம் ஒளிந்துவளர்தல் முதலிய வரலாறுகளை நாரதர்சொல்லக்கேட்டுக் கம்சன் அதிககோபங்கொண்டு கிருஷ்ணனைக் கொல்ல நிச்சயித்து,வில்விழாவென்கிறவியாஜம்வைத்துக் கண்ணனை மதுரைக்குவரவழைத்துப் பலவகையில்வதைக்க வழிதேடுகையில், கம்சசபையிலே கிருஷ்ணபகவான் வேகமாகஎழும்பிக் கஞ்சனது மஞ்சத்தின்மேலேறி அவனதுகிரீடம் கழன்றுகீழேவிழும்படி அவனைத தலைமயிர்பிடித்துத் தரையில்தள்ளி அவன் மேல் தான்விழுந்து அவனைக் கொன்றிட்டனனென்பதாம்.

இது - பெரும்பாலும் முதல் மூன்று ஐந்து ஏழாஞ்சீர்கள் கருவிளங்காய்ச்சீர்களும், இரண்டு நான்கு ஆறாஞ்சீர்கள் கூவிளங்காய்ச்சீர்களும், எட்டாஞ்சீர் கருவிளச்சீருமாக வந்தது-காலடியாகவும்; அஃது நான்குபெற்றது-ஓரடியாகவும் வந்த கழிநெடிலடி நான்கு கொண்ட முப்பத்திருசீராசிரிய வண்ணவிருத்தம். (௬0)

௬௧. புயங்க சயனு புயல்வண்ணு பூமின்
முயங்குமணி மார்பா முகுந்தா—மயங்குங்
கருப்பபழகா தன்பரையாள் கண்ணுதென் சோலைப்
பொருப்பழகா நீயே புகல்.

(இ - ள்.) புயங்க சயனு - ஆதிசேஷனைத் திருப்பள்ளிமெத்தையாக வுடையவனே!—புயல் வண்ணு - காளமேகம்போன்ற கருநிறமுடையவனே!—பூ மின் முயங்கும் - தாமரைமலரிலதோன்றிய மின்னற்கொடிபோன்றவளான திருமகள் வீற்றிருக்கப்பெறற, மணி - கௌஸ்துபமணியையணிந்த, மார்பா - திருமார்பையுடையவனே!—முகுந்தா - முகுந்தனே!—அன்பரை - அன்புள்ள அடியார்களை, மயங்கும் - மாறிமாறிவருகின்ற, கருகருப்பங்களில், பழகாது - பழகி மீண்டும்பிறப்படையாதபடி. ஆள் - அடிமைகொள்ளுகின்ற, கண்ணு - கிருஷ்ணனே!—தென் சோலை பொருப்பு அழகா - தென்திருமாலிருஞ்சோலைமலை யழகனே!—நீயே புகல் - நீயே (எனக்குச) சரணம்; (எ - று.)

புயங்கம - புஜங்கம்; வளைந்து வளைந்து செல்வது, அல்லது மார்பால் நகர்வது என்று காரணப்பொருள்படும். மயங்கும் - அறியாமைக்குக் காரணமான என்றுமாம். கரு - வடசொற்றிரிபு கண்ணு - கண்ணோட்டம்[கருணை] உடையவனே யென்றுமாம். ஏ - பிரிநிலையோடு தேற்றம். பூமின் - பூமிப்பிராட்டியாகவுமாம்; பூ - பூமி. வடசொல் மின் - உவமவாகுபெயர்.
இது, மலரென்னும்வாய்பாட்டால்முடிந்தஇருவிகற்பநேரிசைவெண்பா.

[வண்டுவிடுதூது.]

௬௨. நீயாகிலுஞ்சொல்லொணுதோ பிரிநதேகுநிட்டூரருக்கந்தநெட்டாலினிலையோர்பாயாகவிழிதுஞ்சு முகில்சோலைவெற்பிற்பசுநதேன்விருந்துண்கருநதேனினரசே, மீயாகும்வெளிநாகம்வெண்பாலெனுந்தண்மேகங்களுரிபுள்ளிமீனஞ்செவ்வானம,வாயாகும்ரவிகான்றமாணிக்கமெயிறுமதியாலமறுமூச்சுவாடைக்கொழுநதே.

(இ - ள்.) அந்தம் - அழகிய, நெடு - நீண்ட, ஆலின் இலை - ஆலமரத்தின் இலை, ஓர் பாய் ஆக - ஒப்பற்ற திருப்பள்ளிமெத்தையாம்படி, விழி துஞ்சும் - (அதில்) திருக்கண்வளர்ந்தருளுகின்ற, முகில் - காளமேகம்போன்ற கண்ணனது, சோலை வெற்பில் - திருமாலிருஞ்சோலைமலையிலே, பசுந்தேன் - குளிர்ந்த மதுவை, விருந்து உண் - விருந்துணவாகக் கொண்டு பருகுகின்ற, கருந் தேனின் அரசே - கரிய வண்டுகளுக்குத் தலைமையான உயர்சாதிப்பெருவண்டே! மீ ஆகும் வெளி-மேலே பரவியிருக்கின்ற ஆகாய வெளி, நாகம் - சர்ப்பமாகும்; வெள் பால் எனும் - வெண்மைநிறமமைந்தன என்னப்படுகிற, தண் மேகங்கள் - குளிர்ந்த மேகஙகள், உரி - (அப்பாம்பு) உரிக்கின்ற தோல்களாம்; மீனம்-நக்ஷத்திரஙகள், புள்ளி - (அப்பாம்பின்) பொறிகளாம்; செம் வானம் - செந்நிறமமைந்த வானம், வாய் ஆகும்-அதன்வாயாம்; ரவி - சூரியன், கான்ற மாணிக்கம் - (அந்நாகம்) வெளிவிடுகின்ற மாணிக்கமென்னும் இரத்தினமாம்; மதியோ - சந்திரனே, எயிறு - (அதன்) பல்லாம்; மறு - (அச்சந்திரனது நடுவிலுள்ள) களங்கம், ஆலம் -

(அப்பல்லிற்பொருந்திய) விஷமாம்; வாடை கொழுந்து - வடக்கிலிருந்து வருகிற இளங்காற்று, மூச்சு - (அந்நாகத்தின்) மூச்சாகும்; (இதனை),— பிரிந்து ஏகும் நிட்டூரருக்கு - (என்னைப்)பிரிந்து சென்ற கொடுந்தன்மையுடையரான கணவர்க்கு, நீ ஆகிலும் - நீயாவது, சொல் ஒணாதோ - சொல்லலாகாதோ? (எ - று.)

இது, தலைவனைப்பிரிந்த தலைவி தன்காதல்நோயைத் தலைமகனுக்குச் சொல்லும்பொருட்டுத் தூதுபோய்வருமாறு வண்டை விடுத்தது.

கீழ்ப் பலவற்றைத் தூதுவிடுத்து அவையெல்லாம் தன் துன்பத்தைச் சொல்லாமல் வாளா சென்றமை தோன்ற,'நீயாகிலுஞ்சொல்லொணாதோ' என்றாள். மாணிக்கம் - மாணிக்யம். ஓ - உயர்வுசிறப்பு. வாடை - வடக்கிற் செல்வதெனத் தென்றலாகவுமாம். தலைவனைப்பிரிந்ததனக்கு இளஞ்சந்திரனும் மந்தமாருதமும் மேன்மேலுந் துன்பத்தை மூட்டுவதனால், இங்ஙனங் கூறினாள். அந்த எனப் பிரித்துச் சுட்டாகவுமாம். பின்னிரண்டடியில் மூன்றுநவக்கவணி காண்க.

இது - பெரும்பாலும் நான்காஞ்சீரும் எட்டாஞ்சீரும் மாச்சீர்களும், மற்றைஆறுங் காய்ச்சீர்களுமாகிய எண்சீராசிரியவிருத்தம். (கஉ)

[இரங்கல்.]

கங கொழுநனைவிட்டாய்பூவைநிரைக்கின்றாய் வண்டிசையைக் குறித்தாய்கண்ணீர், விழுவதறாயொன்றுமருந்தாதுகைப்பாயிதழ் புலர்ந்தாய்வினையேன்போன்றா, யெழுவிடையுந்தழுவியொருவிடை மலையில்வாழழகரிந்தரநீலச், செழுமலையொப்பாநாட்டில வெண் டளமேவகண்டளவேதேறினேனே

(இ - ள்.) எழு விடையும் தழுவி - எழு எருதுகளையுந் தழுவி, ஒரு விடைமலையில் - ஒப்பற்ற விருஷபகிரியில், வாழ் - வாழ்கின்ற, இந்த்ரநீலம் செழு மலை ஒப்பார் - இந்திரநீலரத்தினமயமாகிய செழுமையான மலை போன்றவராகிய, அழகர் - அழகரது, நாட்டில - நாட்டிலேயுள்ள, வெள் ளளவே - வெண்மையான முல்லைக்கொடியே!—(நீ), கொழுநனை விட்டாய்- கணவனைப் பிரிந்தாய் [கொழு நனை விட்டாய்-செழுமையான அரும்புகளை அரும்பினாய்]; பூவை நிரைக்கின்றாய் - பொலிவை இழக்கிறாய் [மலர்களை அணியணியாகப் பூக்கிறாய்]; வள் திசையை குறித்தாய் - அழகிய திக்கை நோக்குகிறாய் [வண்டு இசையை குறித்தாய் - வண்டுகளின் இசைப்பாட்டைப் பொருந்துகிறாய்]; கண் நீர் விழுவது அறாய் - கண்களினின்றும் நீர் தாரைதாரையாகப் பெருகுவது நீங்காய் [கள் நீர் விழுவது அறாய் - தேன் பெருக்கு இடைவிடாமல் ஒழுகுவது நீங்காய்]; ஒன்றும் அருந்தாது கைப்பாய் - சிறிதும்உண்ணாமல் (எல்லாவுணவையும்) வெறுப்பாய் [ஒன்றும் அருந்தாது உகைப்பாய் - பொருந்திய அரிய பூந்தாதுகளை உதிர்ப்பாய்]; இதழ் புலர்ந்தாய் - உதடு உலரப்பெற்றாய் [பூவிதழ்கள் வாடப்பெற்றாய்]; (ஆதலால்), வினையேன் போன்றாய் - தீவினையையுடைய என்னைஒத்திருக்கின்றாய்; கண்ட அளவே - (உன்னைப்)பார்த்தமாத்திரத்திலே, தேறினேன் -(யான்) சிறிது துன்பந்தீர்ந்தேன்; (எ - று.)

என்னையொத்துவருந்துபவர் எவருமில்லையென்று கணவனைப்பிரிந்ததனால் மிகவும் வருந்தியிருந்த யான், என்னைப்போன்றவள் நீ ஒருத்தி உளளாகக்கண்டு சிறிதுதேறினேனென்று,முல்லைக்கொடியைநோக்கித் தலைவி இரங்கினாள். இங்கு, கேளாதது கேட்பதுபோலச் சொல்லப்பட்டது, மரபுவழுவமைதி. முன் இரண்டடி-செம்மொழியும் பிரிமொழியுமாக வந்த சிலேடைபற்றிய உவமையணி. அன்புள்ள கணவன் வருகிற திக்காதலால், வண்

திசை யென்றாள். பூவை நிரைக்கின்றீய - மலர்மாலைகளை வாங்கியெறிகிறா யென்றுமாம். கணவனைப் பிரிந்த வருத்தத்தால், 'வினையேன்' எனத் தன்னை வெறுத்துக் கூறினாள்.

ஏழவிடை தழுவிய கதை:—கண்ணன், நப்பின்னைப்பிராட்டியைத் திருமணஞ் செய்துகொள்வதற்காக, அவளது தந்தை கந்யாசுல்கமாகக் குறித்தபடி, யாவர்க்கும்அடங்காத அசுராவிஷ்டமான எருதுகளேழையும் எழு திருவுருக்கொண்டு சென்று வலியடக்கித் தழுவின னென்பது.

இது - முதலநான்குசீருங் காய்ச்சீர்களும, மற்றைஇரண்டும மாச்சீர்களு மாகிய அறுசீராசிரியவிருத்தம். (௬௩)

[தவம்]

௬௪ தேறாதுவனமபோயெளவனமும்போனீர சிறுகிழங்கைக் கொண்டுபெருங்கிழங்கைகொண்டீர, தேறாதபலஞ்சுவைத்தோர்பல முங்காணீ ரிலைமேய்நதுமபேறிலையேயிதுவோயோக, மாறாதுசருகு தின்றுசருகுபட்டீா வாயுநுகாநதீர்வாயுமெளனமானீ, ராறாததீயி னிற்பீர் தீயரேநும மருநதவமேதவமழகர்க்காட்பட்டீரே

(இ - ள்.) (நீங்கள்) தேறாது - (நற்கதி பெறும உபாயத்தை நன்றாய்) ஆராய்ந்தறியாமல், வனம போய் - காட்டிற்சென்று வசித்து, யெளவனமும் போனீர் - இளமைப்பருவமுங் கழிந்தீர்கள், சிறு கிழங்கை கொண்டு - சிறிய கிழங்குகளையே (உணவுகளாகக) கொண்டு, பெருங் கிழம் கைக்கொண்டீர் - பெரிய முதுமைப்பருவத்தை ஏற்றுக்கொண்டீர்கள்: தேறாத பலம் சுவைத்து - அதிகப்படாத [சிலவாகிய] பழங்களைப் புசித்து, ஓர் பலமும் காணீர் - ஒருபயனையுங் கண்டீரில்லை; இலை மேய்ந்தும - (விலங்குகள்போல) இலையைத் தின்றும, பேறு இலையே - நற்கதிபெறுதல் இல்லையாயிற்றே; இதுவோ யோகம - இதுதானோ (உமது) யோகத்தின் தன்மை? மாறாது - விடாமல், சருகு தின்று - சருகுகளையே புசித்து, சருகு பட்டீர்-(உடமபு)சருகானீர்கள்; வாயு நுகர்ந்தீர் - காற்றையே உணவாகக்கொண்டீர்கள்; வாயும் மௌனம் ஆனீர் - வாயினால் பேசாத விரதத்தையுங் கைக்கொண்டீர்கள்; ஆறாத - தணியாத, தீயில்-பஞ்சாக்கினிமத்தியில், நிற்பீர் - நிற்பீர்கள்; தீயரே- கொடியவர்களே! நும-உமது அருந் தவமே தவம- அருமையான தவமே தவமாம்! அழகர்க்கு ஆட்பட்டீரே - அழகர்க்குத் தொண்டுபூண்டொழுகுங்கள்.

பகவத்பிராப்திக்கு விரோதியான சரீரசம்பந்தாதிகளை அறுத்துக் கழித்து எம்பெருமானைப்பெறவேண்டுமென்று, "தொனனெறியைவேண்டுவார் வீழ்கனியு மூழிலையு,மென்னு மிவையே நுகாந் துடலந் தாம்வருந்தித்,துன்னு மிலைக்குரம்பைத் துஞ்சியும் - வெஞ்சுடரோன், மன்னு மழல்நுகர்ந்தும் வண்டடத்தி னுட்கிடந்து. மின்னதோர் தன்மையராய்" என்கிறபடியே, மனம் பொறிவழிபோகாமல் நிற்றற்பொருட்டு, வனத்திற்சென்று, நீர்பருகியுங் காற்றுநுகர்ந்துங் கனி கிழங்கு சருகு முதலியவைகளை யுண்டும விரதங்களால் உண்டிசுருக்கலும், கோடைக்காலத்தில் வெயில்நிலையிலும் அக்கினி மத்தியிலும் நிற்றலும், மாரிக்காலத்தும் பனிக்காலத்தும் நீர்நிலையிற் பாசியேற நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு, அவற்றால் வருந் துன்பங்களைப் பொறுத்து, இவ்வாறு சரீரத்தை ஒறுத்து வருந்தல்வேண்டா; அடியார்கள்பக்கல் மிக்க அருளுடையவராகிய எமது அழகரைச் சென்று சேர்ந்து சகலவிரோதிகளும போகப்பெறுவீர்க ளென்று பரோபதேசம் பண்ணுகிறார்; "காயோடு நீடுகனியுண்டு வீசு கடுங்கால் நுகர்ந்து நெடுங்கால மைந்து-தீயோடு நின்று தவஞ்செய்ய வேண்டா திருமார்பனைச் சிந்தையுள் வைத்து மென்பீர், * * * தில்லைத் திருச்சித்திர கூடஞ் சென்று சேர்மின்க

ளே" என்றார் திருமங்கையாழ்வாரும். இனி.எருத பலம் - மரமேறிப் பறிக் காத [தானே உதிர்ந்த]பழ மென்றுமாம். இகழ்ச்சிதோன்ற, 'மேய்ந்து'என்றார். இலையோ, ஆட்படீரோ—ஏகாரங்கள் - இரக்கம். ஓகாரம் - இகழ்ச்சி பற்றிய வினா. உபாயமறியாமையால வீணாக உடமையை அன்பில்லாமல் வருத்துவதுபற்றி,'தீயரே' என்றார். 'நும அருந்தவமே தவம்' என்றது, இகழ்ச்சிக்குறிப்பு; இனி.தவம் ஏது அவம் எனப் பிரித்து,உமது தவம என்னபயன் படும்? வீணேயாம என்றுமாம. வந்த எழுத்துக்களுஞ் சொற்களும மீண்டும் வந்தது - மடக்கு என்னுஞ் சொல்லணி.

இது - முதல் இரண்டு ஐந்து ஆறுஞ் சீர்கள காய்ச்சீர்களும், மற்றை நான்கும் மாச்சீர்களு மாகிய எண்சீராசிரியவிருத்தம். (கச)

கரு. படவரவப்பள்ளிமாலலங்காரா பழமறையுந
திடவரவச்சிரத்தணையுமார்ப்பச்சகடுதைத்த
திடவரவச்சுதவெல்லாவிடுக்கணுந்தீர்த்தருள்க
கடவருந்துமவரைக்கருதுமினே

(இ - ள்) படம அரவம பள்ளி - படத்தையுடைய திருவனந்தாழ்வானைப் படுக்கையாகவுடைய, மால - திருமாலும்,—பழ மறையும தடவர - பழைய வேதங்களும விடாமற் பின்தொடரவும், வச்சிரம தண்டையும் ஆர்பப - வைரக்கற்கள இழைத்துச்செய்த தண்டையென்னுங் காலணிகளும் ஒலிக்கவும், சகடு உதைத்த-சகடாசுரனை(த் திருவடிகளால்) உதைத்து அழித்த, திடம வரவு - வலிமையின வருகையையுடைய, அச்சுதா - அச்யுதனென்னுந திருநாமமுடையவருமாகிய. அலங்காரா - அழகா, எல்லா இடுக்கணும - பிறவித்துன்பங்க ளெல்லாவற்றையும். தீர்த்து - போக்கி, அருள கடவா-(நற்கதியைக் கொடுத்து) அருளசெய்யக்கடவா; (ஆதலால்). அவற்றை கருதுமவரை - அவவெம்பெருமானது திருவடிகளையே தியானிக்கிற அடியார்களையே, கருதுமின - தியானியுங்கள், (எ - று)

பழமறை தடவர என்றது - அநாதியான வேதங்கள இடைவிடாமல் துதிக்க வென்றபடி சகடு சகடம். இனி,திடவர் அச்சுதர் எனப்பிரித்து· வலிமையையுடையவராகிய அந்தஅச்சுதரென்றும, அவற்றைக்கருதுமவரை என்பதற்கு-அவ்விடுக்கண்களை(த் தீர்த்தருள)க் கருதுகின்ற அவ்வெம்பெருமானை யென்றும பொருள்கொள்ளலாம அச்யுதனென்ற வடசொல்லுக்கு- அழிவில்லாதவரென்றும்,தன்னைச் சரணமாகப் பற்றினவரை நழுவவிடாமற் காப்பவரென்றும பொருள், இனி. அச்சுதா எனப்பிரித்து, அசு (யசோதை) குமாரனென்றும்பொருள்கொள்ளலாம.'கடவருமவரை'என்றும் பாடமுண்டு.

சகடுஉதைத்த வரலாறு — வண்டியின்கீழ்ப் பள்ளிகொண்டிருந்த ஸ்ரீகிருஷ்ணன, ஒருகால அச்சகடத்தில கம்ஸனாலேவப்பட்ட அசுரனொருவன வந்து ஆவேசித்து மேலேவிழுந்து கொல்ல முயன்றதை யறிந்து, பாலுக்குஅழுகிற பாவனையிலே தனசிறியதிருவடிகளை மேலேதூக்கியருள, அவ்வடிகளாலஉதைபட்ட மாத்திரத்தில், அச்சகடு திருப்பப்பட்டுக் கீழே விழுந்து அழிந்த தென்பதாம.

இது, நிரையசை முதலதாகி வந்த கட்டளைக்கலித்துறை. (கரு)

[மேகவிடுதூது.]

கசா. மனனுமுகி லேசோலை வெறபழகர் வந்திலா
ருனனையெதிர் கண்டே னுயிர்தரித்தே—னென்னோர்
வெருவவிரு தூதுமவர் மேனிநிற முற்றும
மருவவிரு தூதுபோய் வா.

(இ - ள்.) மின்னும் - மின்னுகின்ற, முகிலே - காளமேகமே! சோலை வெற்பு அழகர் - திருமாலிருஞ்சோலைமலை யழகர், வந்திலர் - (இன்னும்) [நீ வந்தபின்னும்] வந்தாரில்லை; உன்னை எதிர் கண்டேன் - (யான்) உன்னை எதிரிலே கண்டு, உயிர் தரித்தேன் - (நீங்குந்தன்மையதாயிருந்த) உயிரை வைத்துக்கொண்டிருக்கிறேன்; (நீ), ஒன்னார் வெருவ - பகைவர்கள் அஞ்சும்படி, விருது ஊதும் அவர் - வெற்றிக்குஅடையாளமாகத் (தமது பாஞ்சஜந்யமென்னுஞ் சங்கத்தை) ஊதுகின்ற அக்கண்ணபிரானது, மேனி நிறம் முற்றும் - திருமேனியின் திருநிறம் முழுவதும், மருவ-பொருந்தும்படி, இரு - தங்கியிரு; தூது போய் வா - (அவர்பக்கல்) தூதாகச் சென்று (என்வருத்தத்தைச் சொல்லி மீண்டு) வா; (எ - று.)

இது - கார்காலத்தில் மீண்டு வருவதாகக் காலங்குறித்துச்சென்ற தலைமகன் அக்காலம்வந்தவளவிலுந் தான்வாராதாகை, அதுவரையிலும் அவன் குறித்தநாளை எதிர்பார்த்துக்கொண்டு சற்றேஆறியிருந்த தலைமகள், காலங் கடந்ததனால் அவ்வாற்றாமை மேன்மேலும் விஞ்சிப் பொறாதவளாய், இன்னது செய்வதென்று அறியாது திகைத்து அண்ணாந்து வானத்தைநோக்குமளவிலே, அங்குச்செல்கின்ற மேகங்கள் கட்புலனாக, அவற்றைப்பார்க்குமிடத்து அவை நிறம்முதலியவற்றால் எம்பெருமானுக்குப்போலியாய்விளங்கக்கண்டு இவை நமக்கும்நமது தலைவர்க்கும் இனியனவா மென்றுகொண்டு அவற்றைநோக்கி 'எனது நிலைமைகளை எனது தலைவரான திருமாலிருஞ்சோலைமலையழகர்பக்கல் சொல்லி அதற்கு அவர் அருளிச்செய்கிற மறுமொழிகளைக் கேட்டு மீண்டுவந்து எனக்குச்சொல்லுமாறு நீங்கள் தூதாகவேண்டும்' என்று அம்மேகங்களை விடுத்தது.

'உன்னை யெதிர்கண்டே னுயிர்தரித்தேன்' என்றது, மேகந்தான் திருமாலினது திருமேனிநிறத்தை ஒத்தலாலும், தூதுபோய்த் தன் துயரைத் தெரிவித்து வருதற்குஏற்ற துணையாயிருத்தலாலும் 'மின்னு முகில்' என்றதனால், திருமாலினது திருமார்பில் வீற்றிருக்குந் திருமகளுக்கு மின்னலை உவமையாகக் குறித்தபடி.

இது, நாளென்னும் வாய்பாட்டாலமுடிந்த இருவிகற்பநேரிசைவெண்பா.

[இரங்கல்.]

௧எ. வாளுந் திகிரிப்படையுங் கதையும்வளையும்வளையுஞ்சிலையும்புனைவா
ராளுங்குலபூதரனார்மலர்மானன்னாள்பிரியாரெந்நாள்வருவார்
நீளுங்குழலீர்காமம்படுதீநெய்விட்டதுகாணீர்பெய்பனிநீர்
வேளைங்கணையும்விறகாமவர்தாமவேயூதுவதுநீயூதுவதே

(இ - ள்.) வாளும் - (நாந்தகமென்னும்) வாளையும், திகிரி படையும் - (சுதர்சநமென்கிற) சக்கராயுதத்தையும், கதையும் - (கௌமோதகி யென்கிற)கதையையும், வளையும் வளையும் - (வலம்புரியாக)வளைந்துள்ள (பாஞ்சஜந்ய மென்கிற) சங்கத்தையும், சிலையும் - (சார்ங்கமென்னும்) வில்லையும், புனைவார் - (திருக்கைகளில்)தரிப்பவரும்,—மலர் மான் அன்னாள்-தாமரைமலரில்வீற்றிருக்கின்ற (பார்வையில)மானபேடுபோன்றதிருமகளை,பிரியார் - (திருமார்பிலேயேபொருந்தி எப்பொழுதும்)பிரியாதிருக்கப்பெற்றவரும், ஆளும் குலபூதரனார் - (தாம் திருவுள்ளமுகந்து வசிக்குமிடமாகக்கொண்டு) ஆளுகின்ற சிறந்த திருமாலிருஞ்சோலைமலையை யுடையவருமாகிய நாயகர் [என்னைப் பிரிந்து சென்றவர்], எ நாள் வருவார்-எப்பொழுது வருவாரோ? நீளும் குழலீர்-நீண்ட கூந்தலையுடைய தோழிமார்களே! நீர்-நீங்கள்,பெய்-(என்தாபத்தைப் போக்கும்படி என்மேலே)சொரிகின்ற, பனிநீர்-குளிர்ந்த வாசனைநீர், காமம் படு தீ - காமவேதனையாகிய கொடிய நெருப்பில்,நெய்

விட்டது காண் - (மேன்மேல் வளருமாறு நிரம்ப) நெய்யைச் சொரிந்தது போலும்; வேள் ஐங் கணையும் - மன்மதனது பஞ்சபாணங்களும் [புஷ்பங் கள்], விறகு ஆம்-(அக்காமத்தீயை எரிப்பதற்கு இட்ட) விறகுகள்போலும்; அவர் தாம் வேய் ஊதுவதும்-அந்நாயகர் வேய்ங்குழலைப் பிடித்து ஊதுவதும், தீ ஊதுவதே - இத்தீயை(த் தூருத்தியிட்டு)ஊதுவதுபோலும்; (எ - று.)

தலைவியது தாபத்தைத் தணிப்பதற்குத் தோழிமார்கள் சீதளஉபசாரமாகப் பனிநீர்பெய்தல் மலர்சொரிதல் முதலிய பரிகாரங்களையெல்லாஞ் செய்ய,அவை பயன்படாமல் தலைமகனைபிரிந்துவாராததனாலுண்டான நோயை மேன்மேல் வளர்த்து வருத்துதலால், இவ்வாறு தலைமகள் தோழிமாரை நோக்கி இரங்கினாள். மலர்மாணன்றனைப் பிரியாதவ ராதலால, அவர் எந் நாள்வருவாரோ வென்று கவன்றாள். பஞ்சாயுதங்களுள்ளும் பகைவரை யழித்து அடியவரைக் காப்பதற்குப் பெரிதும் பயன்படுவது திருவாழியே யாதலால், அதனை'படை'என்று சிறப்பித்துக் கூறினார்; இனி, படையென் பதை மற்றை வாள் முதலிய நான்கனோடுங் கூட்டுதலும் ஒன்று. வளையும என வந்த இரண்டனுள், முன்னது - எதிர்காலப்பெயரெச்சம். புனைவார என்கிற சொல்லாற்றலால், அவ்வைம்படைகளும அசுரர்முதலியோரை அழிக்குங்காலத்தில் ஆயுதகோடியிலேயாய் மற்றைக்காலங்களில் ஆபரண கோடியிலேயாய்த் திருமேனிக்கு அழகுசெய்துநிற்கு மென்றபடி. பூதரம் - பூமியைத்தாங்குவது என மலைக்குக் காரணப்பெயர். வேள் - ஆண் பெண்க ளுக்கு வேட்கையை [காமத்தை] யுண்டாக்கும் சட்டழகுடைய கடவுள்; மன்மதன் அவனது ஐங்கணை-மாமலா அசோகமலா தாமரைமலர் முல்லை மலர் நீலோற்பலமலர் என்பன.

இது, எல்லாச்சீரும் மாச்சீர்களாகிய எண்சீராசிரியவண்ணவிருத்தம்.

௧௭. வேயினானிரையழைத்துக்களிறழைக்கவோடி மென்பிடிக்
காய்மான்பின்போய்விடைமலைமேலிருப்பீர், பேயின்மாமுலைபருகு
மச்சுதரேகேளீர் பின்னைக்குமுன்னாளைபின்னைக்கென்னாமற், போய்
வாசவன்றருவை வேரினொடுங்கொணர்ந்தீர் புதல்வனார்தமக்குமுந்
திபூவிருப்பென்றளித்தீர், தூயகோவியர்க்குமெல்லவிதழ்கொடுத்
தீர் நம்புநதொண்டன்முடிமேற்றுளைச்சூட்டுவதுங்கடனே.

(இ - ள்.) வேயினால் - வேய்ங்குழலின் ஒலியால், நிரை அழைத்து - (அங்கங்குப் பரவியிருந்த) பசுக்கூட்டங்களை (ஒருங்கு திரளும்படி) அழைத்து,—களிறு அழைக்க-கஜேந்திராழ்வான் (ஆதிமூலமேயென்று) கூப்பிட, ஓடி-(மடுக்கரைக்கே)விரைந்துசென்று,—மெல பிடிக்கு ஆய்-மென்மையான பெண்யானைபோன்ற நடையழகையுடைய ஜானகிப்பிராட்டிக்காக, மான் பின் போய்-மாயமானின் [மாரீசனின்] பின்னேசென்று,—விடைமலைமேல் இருப்பீர் - விருஷபகிரியில் எழுந்தருளியிருப்பவரே!பேயின் மா முலை பருகும - (பூதனையென்னும) பேய்மகளது பெரிய முலையை யுண்ட,அச்சுதரே- அச்சுதனென்னுந் திருநாமமுடையவரே! கேளீர்-(யான் சொல்லும் விண் ணப்பத்தைச் செவிதாழ்த்துக்) கேட்டருள்வீராக; (நீர்), முன் நாளை - முற் காலத்தில் [கிருஷ்ணாவதாரத்தில்], பின்னைக்கு - நப்பின்னைப்பிராட்டிக்கு, பின்னைக்கு என்னாமல்-பின்னால் ஆகட்டுமென்று சொல்லிக் காலவிளம்பஞ் செய்யாமல், போய் - உடனே விரைந்து சென்று, வாசவன் தருவை - இந் திரனது (நந்தனவனத்திலுள்ள) கற்பகவிருக்ஷத்தை, வேரினொடும் - வே ரோடு, கொணர்ந்தீர் - கொண்டுவந்துகொடுத்தீர்; புதல்வனார்தமக்கும் - புத்திரராகிய பிரமதேவர்க்கும், உந்தி பூ - நாபீகமலத்தை, இருப்பு என்று - இருப்பிடமாக, அளித்தீர் - கொடுத்தருளினீர்; தூய கோவியர்க்கு-பரிசுத்தி

யையுடைய இடைப்பெண்களுக்கு, மெல்ல - மென்று சுவைக்கும்படி, இதழ் கொடுத்தீர் - அதரத்தைத் தந்தருளினீர்; நம்பும் தொண்டன் முடி மேல் - (உம்மையே சரணமாக) நம்பியிருக்கின்ற அடியவனாகிய எனது சிர சின்மேலே, தாளை - (உமது) திருவடிமலர்களை, சூட்டுவதும் - வைத்திடுவ தும், கடனே - (உமது) கடமையேயாம்; (எ - று.)

'மலைமேலிருப்பீர்' என்பதற்கு ஏற்ப, வேயும், நிரை களிறு பிடி மான் விடை என்னும் விலங்குகளுங் கூறினார். அ சுதரே என்றும் பிரிக்கலாம். இங்குப் பின்னையெனக் குறித்தது - சத்தியபாமையை.

முந்தி பூ விருப்பென்று அளித்தர் எனப் பிரிபட்டு - முன்னே பூவை விருப்பமென்று கொடுத்தீர் என்றும், மெல்ல இதழ் கொடுத்தீர் என்பது - மென்மையாகப் பூவிதழைக் கொடுத்தீரென்றும் பொருள்படுதலால், மனை விக்கு மலர்மரத்தை வேரோடுங் கொணர்ந்துகொடுத்து மகனுக்கு மலரை அளித்து மற்றைத்தேவிமார்க்கு மலரிதழைத் தந்தருளின நீர், அடியனா கிய எனக்கு அதன் தாளை [நாளத்தை]யாயினுங் கொடுத்தல் கடனன்றோ? என்று சமத்காரந்தோன்றப் பிரார்த்தித்தபடி. முன் நாளை பின்னைக்கு எனஎடுத்த, முன்னே நாளைக்காகட்டும் பின்னுலாகட்டும் என்றுசொல்லா மல் என்றுமாம். வாசவன் - (அஷ்ட)வசுக்களுக்குத் தலைவன். கோவியர்க் குத் தூய்மை - கண்ணன்பக்கலிலேயே கருத்தை யிருத்துதல். சூட்டுவது உம் கடன் [உமது கடமை] என்றும் பிரித்து உரைக்கலாம்.

**பேயின்மாமுலைபருகிய கதை.**—கம்சனால் ஏவப்பட்ட பூதனையென் னும் ராக்ஷசி நல்லபெண்ணுருவத்தோடு இரவிலே திருவாய்ப்பாடிக்கு வந்து தூங்கிக்கொண்டிருந்த கண்ணனாகிய குழந்தையை யெடுத்து நஞ்சு தீற்றிய முலையைக் கொடுத்துக் கொல்ல முயல, பகவானுன அக்குழந்தை அவ்வரக்கியின் முலைகளைக் கைகளால்இறுகப்பிடித்து அவளுயிரோடு உறிஞ் சிப் பேரிரைச்சலிட்டுக் கதறி விழுந்து இறக்கும்படி செய்தது என்பதாம்.

**தேவதருவைக் கொணர்ந்து வைத்த வரலாறு**—கண்ணன் நரகா சுரனைச் சங்கரித்தபின்பு அவனால் முன்னே கவர்ந்துபோகப்பட்ட இந்தி ரன்தாயான அதிதியினது குண்டலங்களை அவளுக்குக் கொடுப்பதற்காகப் பெரியதிருவடியின்மேல் சத்தியபாமையை உட்காருவித்துத் தாமும் உட் கார்ந்துகொண்டு தேவலோகத்திற்குச் செல்ல அங்கு இந்திராணி சத்திய பாமைக்குப் பலஉபசாரங்களைச் செய்தும், தேவர்க்கே உரிய பாரிஜாத புஷ்பம் மானிடப்பெண்ணாகிய இவளுக்குத் தகாதென்று சமர்ப்பிக்கவில் லையாதலின், அவள் அதனைக்கண்டு விருப்புற்றவளாய்ச் சுவாமியைப்பார்த்து 'பிராணநாயகனே! இந்தப்பாரிஜாததருவைத் துவாரகைக்குக் கொண்டு போகவேண்டும்' என்றதைக் கண்ணன் திருச்செவிசார்த்தி உடனே அந்த விருக்ஷத்தை வேரோடுபெயர்த்துப் பெரியதிருவடியின் திருத்தோளின் மேல் வைத்தருளி, இந்திராணி தூண்டிவிட்டதனால் வந்து மறித்துப் போர்செய்த இந்திரனைச் சகலதேவசைந்யங்களுடன் சங்காதத்திலே பங்கப்படுத்திப் பின்பு வணங்கின அவனபிரார்த்தனைப்படியே திருத்துவா ரகைக்குக் கொண்டுவந்து புறங்கடைத்தோட்டத்தில் நாட்டியருளின ரென்பதாம்.

இது - நான்கு எட்டாஞ்சீர்கள் மாச்சீர்களும், மற்றை ஆறுங் காய்ச்சீர் களு மாகிய **எண்சீராசிரியவிருத்தம்.** (௧௮)

௧௯. கடதாரைகுன்றுதவிபராசன்முன்றுவுககராசனுந்தாபு ரொடியூடே;வடமேருவுஞ்சோனைமழைமேகமுமபோலவருமாலலங் காரர்பதிகேளீர், சடகோபர்தப்பாடலெனவேபசுந்தேறல்தவழ்சா

ரல்சங்கீனுமணியாலே, திடராகமஞ்சீரநதியோலிடுந் தூயதிருமா
லிருஞ்சோலைமலைதானே

(இ - ள்.) கடம் தாரை குன்றாத - மதநீர்பெருக்குக் குறையாத, இபராசன் முன் - கஜேந்திராழ்வான்முன்னே, தாவு ககராசனும் தாளும் - தாவிப்பாய்கின்ற பெரியதிருவடியுந் தாளுமாக, நொடியூடே - கைந்நொடிப் பொழுதிற்குள்ளே, வடமேருவும் சோனை மழை மேகமும் போல - வடக்கிலுள்ள மகாமேருகிரியும் அதன்மேற் பொருந்திய விடாப்பெருமழைபொழியுங் காளமேகமும்போல, வரும்-எழுந்தருளிவருகின்ற, மால் அலங்காரர் - பேரழகரது, பதி - (திருவுள்ளமுவந்து எழுந்தருளியிருக்குந்) திருப்பதி, கேளீர் - (இன்னதென்று) கேட்பீராக; (அது), சடகோபர்தம் பாடல் எனவே - நம்மாழ்வாருடைய பாசுரம்போலவே (மிகவும் இனிமையாக), பசுந்தேறல் தவழ் - பசிய தேன்பெருகுப் பாய்கின்ற, சாரல்-மலைச்சாரலிலே, சங்கு ஈனும் மணியாலே - சங்குகள் பெறுகின்ற முத்துக்களின் திரளால், திடர் ஆக - (இடையிடையே) மேடுமேடாக, மஞ்சீரநதி - சிலம்பாறு, ஓலிடும் - பேராரவாரஞ் செய்துவருகின்ற, தூய - பரிசுத்தியையுடைய, திருமாலிருஞ்சோலைமலை தானே—; (எ - று.)

இச்செய்யுள் - ஊரென்னுந் துறையமைந்தது. இபராஜன் - யானைக்கு அரசன், சிறந்ததை அரசனென்றல் மரபு. பொன்மயமான மேருமலை - சுவர்ணவர்ணரான கருடாழ்வானுக்கும், விடாமழை முகில் - எம்பெருமானுக்கும் உவமை; "கருமுகில் தாமரைக்காடு பூத்து நீடு இருசுடரிருபுறத் தேந்தி யேடவிழ, திருவொடும் பொலிய வோர்செம்பொற் குன்றின்மேல, வருவபோற் கலுழன்மேல் வந்து தோன்றினான்", "பொன்வரை யிழிவதோர் புயலின் பொற்புற, என்னையாளுடையவன் தோள்கின்றெம்பிரான்" என்றார் கம்பரும். சோனைமழைமேகமென்றது- கைம்மாறு கருதாமல் பெருங்கருணைமழையை இடைவிடாமற் பொழிபவரென்றற்கு. கடம் - வடசொல்: யானைக்கன்னத்தின் பெயர்; அதிலிருந்து வழிகிற மதநீர்க்கு ஆகுபெயராயிற்று.

இது - முதல் மூன்று ஐந்து எழாஞ்சீர்கள் புளிமாங்காய்ச்சீர்களும், மற்றைமூன்றுந் தேமாங்காய்ச்சீர்களு மாகிய எழுசீராசிரியச்சந்தவிருத்தம்.

[வண்டுவிடுதூது.]

௨0 மலையழகா வண்டினமே வண்டுவரை யார்கா
ணிலைகொள் பொறியளியை நீங்கார்—தலைவரவ
ராழியுடை யாருமக்குண் டாறுகால் பேர்சுமந்தீர்
வாழிசெல லாஞ்சொலலா மால்.

(இ - ள்.) வண்டு இனமே - வண்டுக்கூட்டங்களே! மலை அழகர்-திருமாலிருஞ்சோலைமலை யழகர், வண்டுவரையார் காண் - வண்டுகளை நீங்கார் [வள் துவரையார் காண் - பலவளமுமுள்ள துவாரகையில் எழுந்தருளியிருப்பவர்காண்]; நிலை கொள் பொறி அளியை நீங்கார் - நிலைபொருந்திய புள்ளிகளையுடைய வண்டை நீங்கார் [(மார்பை) நிலைத்திருக்கும் இடமாகக் கொண்ட இலக்குமியிடத்து அன்பை நீங்கார்]; தலைவர் அவர் - அந்நாயகர், ஆழி உடையார் - சக்கரமுடையவர்; உமக்கு - உங்களுக்கும், ஆறு கால் உண்டு - ஆறுஅரங்களையுடைய சக்கரமுண்டு [ஆறுகால்கள் உண்டு]; பேர் சுமந்தீர் - (அரியென்கிற அவ்வெம்பெருமானது) பேரைத் தரித்தீர்கள்; (ஆதலால், அவ்வெம்பெருமானோடு ஒற்றுமைப்பட்ட நீங்கள்),வாழி-வாழ்வீராக; செலல் ஆம்-(நீங்கள் தடையில்லாமல் அவரிடத்துத்) தூதுபோகலாம்; மால் சொலல் ஆம் - (எனது) காமமயக்கத்தைச் சொல்லக்கூடும்; (எ - று.)

இது, தலைவி தன்னைத்தணந்த தலைவனிடம் வண்டுகளைத் தூதுவிடுத்தது. சிலேடைபற்றிவந்த உவமையணி. துவரை - த்வாரகா என்ற வடமொழியின் சிதைவு. அழகர்விஷயமாகப் பொருள்கொள்ளும்பொழுதும், வண்டு வரையார் எனவே பிரித்து - சங்கத்தை நீங்கா ரென்றுமாம். இனி, ஆழியுடையார் - அவர் கடலை (இருப்பிடமாக) உடையவர்; ஆறு கால் உண்டு - (உமக்கு அக்கடலிற்போய்ச்சேருகின்ற)நதிகளும் வாய்க்கால்களும் உண்டு என்றும் பொருள்கொள்ளலாம்.

இது, கீழ்க்கூறியது போன்ற இருவிகற்பநேரிசைவெண்பா. (௨0)

௨௧. மாலாகுமவேளையினீலாசலமொத்துமாபபறவை
மேலாகவநதருள்வாயெங்கள்கோசலைமெய்வயிறெ
ஞலானதிலிளஞ்சேயாயுறங்கியசோதைகண்போற்
சேலாயெழுமழகாகுலபூதரச்சீதரனே

(இ - ள்.) எங்கள் - எஙகளுடைய. கோசலை - கௌசல்யைப்பிராட்டியினது, மெய் - திருமேனியிலுள்ள, வயிறு என் - திருவயிறாகிய, ஆல்ஆனதில் - ஆலிலையிலே, இளஞ் சேய் ஆய்-சிறிய குழந்தையாய், உறங்கி-(ஸ்ரீராமாவதாரத்திற்) பள்ளிகொண்டிருந்து யசோதை கண்போல் - (கிருஷ்ணவதாரதில்) யசோதைப்பிராட்டியினது கண்போலே யிருந்து, சேல் ஆய் எழும் - (முன்னே) மீனமாய்த திருவவதரித்த, அழகா-அழகனே! குல பூதரம் - சிறந்த திருமாலிருஞ்சோலைமலையி லெழுந்தருளிய, சீதரனே - திருமகளைத (திருமார்பில்) தரித்தவனே!—மால் ஆகும் வேளையில் - (யான் அந்திமதசையில்) திகைப்படையுஙகாலத்தில், நீல அசலம் ஒத்து - இந்திரநீலமலைபோல, மா பறவை மேல ஆக - சிறந்த கருடப்புள்ளின்மே லேறி, வந்து அருள்வாய் - வந்து தரிசனந்தந்து பரமபதங கொடுததருள்வாயாக.

"சரணமாகுந் தனதா ளடைந்தார்க்கெல்லாம், மரணமானல் வைகுந்தங கொடுக்கும் பிரான்" ஆதலால், இவ்வாறு கூறினர்; "அப்பொழுதைக் கிப்பொழுதே சொல்லிவைததேன்" என்றார் பெரியாழ்வாரும். கோசலை - வடசொற்றிரிபு;(உததர)கோசலதேசத்தரசன் மகளென்று பொருள்: இவள், தசரதசக்கரவர்ததியின் பட்டமகிஷிகளுள் மூததவள். மகளிர்க்கு வயிறு ஆலிலைபோலிருததல், உததமலக்ஷணம; இனி, ஸ்ரீமகாவிஷ்ணுவுக்கு வாழிடமாயிருத்தலால். வடபத்திரசமமான வயிறு என்றுமாம்: "தன்காதலன், வைகு மாலிலையன்ன வயிற்றினை" என்றார் கம்பரும்;இவ்வாறு வடமொழியுள சாமுத்திரிகநூலாரும் போஜராஜனுங கூறுவர். யசோதை-நந்தகோபனமனைவி; கிருஷ்ணனை வளர்த்தவள். வயிறுபோன்ற ஆலிலை யென்றும், கண்போன்ற சேலா யென்றும பொருள்படுதல் காண்க. சீதரன் - ஸ்ரீதரன். வேளை - வேலா என வடமொழியின் லகரதது்க்கு ளகரம்போலி.

இது, நேரசை முதலதாகிய கட்டளைக்கலித்துறை. (௨௧)

[அம்மானை.]

௨௨. சீதரராஞ் சோலைமலைச் செல்வரைமுன் சந்ததியா
மாத ரசோதை வளர்த்தனள்கா ணம்மானை
மாத ரசோதை வளர்ததனளே யாமாகி
லாதர வில்லார்போ லடித்ததே னமமானை
யடித்ததொரு வன்மத்தா லல்லவோ வம்மானை.

(இ - ள்.) சீதரர் ஆம் - ஸ்ரீதரரென்னுந் திருநாமமுடைய,சோலைமலை செல்வரை-திருமாலிருஞ்சோலைமலையிலுள்ள எல்லாசசெல்வங்களுமுடைய அழகரை, முன் - முன்னே [கிருஷ்ணவதாரததில்], மாதர் அசோதை - அன்புள்ள யசோதைப்பிராட்டி, சந்ததி ஆ-திருமகனாக வைததுக்கொண்டு,

வளர்த்தனள் காண் - வளர்த்தாள்; அம்மானை—; மாதா அசோதை வளர்த்தனளே ஆம் ஆகில் - அவள் அவ்வாறு வளர்த்தாளானல், ஆதரவு இல்லார் போல் - அன்பில்லாதவர்கள் (அடிப்பது)போல, அடித்தது - (அக்குழந்தையை) அடித்தது, என் - எதனுல்? அம்மானை—; அடித்தது - (அவ்வாறு அவள்) அடித்தது, ஒரு வன்மதத்தால் அல்லவோ - ஒரு கோபங்காரணமாக வன்றோ? அம்மானை—; (எ - று.)

மூன்றுமங்கையர் அம்மானையாடும்பொழுது பிரபந்தத்தலைவனது தன்மையைப்பற்றி வார்த்தையாடுவது, அம்மானையென்னும் உறுப்பின் இலக்கணமாம்.

வல் மதத்தால்எனப் பிரிதது - வலியதொரு மத்தினு லன்றோ என்றும் பொருள் சொள்க.

இது - மாச்சீருங் காய்ச்சீரும் விரவிய நான்கடிகளால் தனித்துவந்து, ஈற்றடி எண்சீராய் மிக்கு, ஏனையடிகள் நாற்சீராய் நின்ற கலித்தாழிசை.

உ௩ மானமாலழகர்பதிகனூற்றெட்டே மற்றவையாவுநூற்றெட்டே வளரகநந்தனநதமாமனையே வதைத்ததுமந்தமாமனையே,யேனமாயெடுத்ததெட்டுமாதரையே யிணங்கியதெட்டுமாதரையே யேற்றதுகயவர்க்குடையுமைவரையே யேநதியகுடையுமைவரையே, யானைகூப்பிடுமுன்புகுமிடங்கரையே யன்றுகொன்றதுமிடங்கரையே யன்னையுஙகனகன்கைபொருநதூணே யண்டகோடிகள்பொருநதூணே, பானமுங்கரும்பேய்வனமுலைப்பாலே பயிற்சியும்வனமுலைப்பாலே பாயலுமரவுக்கரசனுலிலையே பரஞ்சுடரவனலாலிலையே.

(இ - ள்.) மானம் - பெருமையையுடைய, மால் அழகர் - மாலலங்காரரது, பதிகள் - திருப்பதிகள், நூற்று எட்டே - (திருவரங்கம் முதல் பரமபதம் ஈருக) நூற்றெட்டேயாம்; மற்றவை யாவும் - மற்றைததேவர்களின் தலஙகளெல்லாம், நூல் தெட்டே - அந்தந்தசசமய நூல்களிற் கூறிய வஞ்சனையேயாம்; வளா அகம் - (அழகர் கண்ணனுய்) வளர்ந்த இடம், நந்தன் - நந்தகோபனது, அந்தம - அழகிய, மா - பெரிய, மனையே - திருமாளிகையேயாம்; வதைததது‌ம் - கொன்றதும, அந்த மாமனையே - தன்மாமனுகிய அந்தக்கம்சனையே; ஏனம் ஆய் - வராகாவதாரமாய். எடுத்தது - (கோட்டாற் குத்தி) எடுத்தது, எட்டும் மா தரையே - அகப்பட்ட பெரிய பூமியையேயாம்; இணஙகியது - (கிருஷ்ணவதாரததிற்)கூடிக்கலந்தது, எட்டு மாதரையே - (ருக்மிணி முதலிய) அஷ்டமகிஷிகளையே; ஏற்றது - (அவ்வவதாரததிற்) காப்பாற்றினது, கயவர்க்கு உடையும் - அற்பர்களாகிய துரியோதனுதியர்க்கு இடைந்துவருந்தின. ஐவரையே - பஞ்சபாண்டவர்களையே; எந்திய குடையும் - எடுததுப் பிடிதத குடையும, மை வரையே - கறுத்த கோவர்த்தனமலையேயாம; ஆனை கூப்பிடும் முன் - கஜேந்திரன் அழைததற்குமுன்னமே, புகும் இடம் - விரைநது சென்ற இடம், கரையே - மடுக்கரையேயாம; அன்று கொன்றதும் - அப்பொழுது (சக்கரததால்)துணித்ததும், இடஙகரையே - முதலையையே; அன்னையும் - தாயும் [பிறந்த இடமும்],கனகன் கை பொரும் தூணே - இரணியனது கையினுல் தட்டப்பட்ட ஸ்தம்பமே; அணடகோடிகள் - எல்லாஅண்டகோளஙகளின் திரளும், பொருந்து ஊணே - தகுந்த உணவேயாம்; பானமும் - குடித்ததும், கரும்பேய் வனம் முலை பாலே - கரிய [பெரிய] பூதனையென்னும் பேய்மகளது அழகிய முலையின் பாலையே; பயிற்சியும் - பயின்றுவிளையாடினதும், வனம் முலை பால் ஏ - காடும் காடுசார்ந்த இடமுமாகிய முல்லைநிலத்தினிடத்தேயாம்; பாயலும - படுக்கையும், அரவுக்கு அரசன் - நாகராஜனுகிய ஆதிசேஷனும், ஆல் இலையே - வடபத்திரமுமேயாம்; பரஞ்சுடர் - மேம்பட்ட

ஒளிவடிவமான கடவுள், அவன் அலால் - அவ்வழகரையேயல்லாமல், இலையே - வேறு இல்லையே; (எ - று.)—ஈற்றேகாரம் - தேற்றம்.

நந்தன் அந்தனெனப்பிரித்து-சுட்டாக்கியும்,மந்த மாமனை எனக்கொண்டு-மந்தபுத்தியையுடைய மாம னென்றுமாம். கம்சன் - தேவகிக்கு உடன்பிறந்தவனாதலால், கண்ணனுக்கு மாமனாயினன். முல்லை - முலை என இடைக்குறைவிகாரமாயிற்று; "முலையணிந்தமுறுவலாள் முற்பாணி தருவாளோ" எனக் கலித்தொகைக் கடவுள்வாழ்த்திற்போல. முல்லைநிலம் - ஆயர்பாடி.

ஏனமான வரலாறு.—இரணியனதுஉடன்பிறந்தவனை இரணியாக்கனென்னுங் கொடியஅசுரராசன் தன்வலிமையாற் பூமியைப் பாயாகச் சுருட்டியெடுத்துக்கொண்டு கடலிலமிழ்கிச் சென்றபோது, தேவர் முனிவர்முதலியோரது வேண்டுகோளினால் திருமால் மகாவராகரூபமாகத் திருவவதரித்துக் கடலினுட்புக்கு அவ்வசுரனை நாடிக் கண்டு பொருது கொன்று பாதாளலோகத்தைச்சார்ந்திருந்த பூமியை அங்குநின்று கோட்டாற் குத்தியெடுத்துக்கொண்டுவந்து பழையபடி விரித்தருளின னென்பதாம்.

'ஏந்தியதுடையும் மைவரையே' என்றதன் விவரம்:—கிருஷ்ணாவதாரத்தில் திருவாய்ப்பாடியில் ஆயர்களெல்லாருங்கூடி மழையின்பொருட்டாக இந்திரனை ஆராதித்தற்கென்று சமைத்த சோற்றை அவனுக்கிடாதபடி விலக்கிக் கோவர்த்தனமலைக்கு இடச்சொல்லித் தானே ஒருதேவதாரூபமாய் அமுதுசெய்தருள, அவ்விந்திரன பசிக்கோபத்தாலே புஷ்கலாவர்த்தகமமுதலிய மேகங்களை ஏவித் தான விரும்பிமேய்த்துக்கொண்டுபோகின்ற கன்றுகளுக்கும பசுக்களுக்கும தனக்கு இஷ்டரான ஆயர்க்கும் ஆய்ச்சிமார்க்குந் தீங்குதரும்படி கலமழையை ஏழுநாள விடாதுபெய்வித்தபொழுது, கண்ணன் கோவர்த்தனகிரியைக் குடையாகப்பிடித்துக் காத்தனன் என்பதாம.

இஃது, அடிதோறுந் தனித்தனியே வந்த இறுதிமுற்றுமடக்கு.

இது - முதல் மூன்று ஐந்து ஆறாஞ்சீர்கள் விளச்சீர்களும், இரண்டு நான்கு ஏழாஞ்சீர்கள் மாச்சீர்களுமாய் வந்தது அரையடியாகவும், அஃதிரட்டிகொண்டது ஓரடியாகவும் வந்த பதினான்குசீராசிரியவிருத்தம். (௨௩)

௨௪. இலையும்பசும்புலலுஞ்செஞ்சூட்டரவுமிடைச்சிமடித
தலையுஞ்சயனங்கொண்டீரடியேன்மனத்தாமரையி
லலையுஞ்செயலொழித்திங்கிருந்தாலென்னவஞ்சனமா
மலையுங்கடலும்பொருந்தமிழ்ச்சோலைமலையரசே

(இ - ள்.) அஞ்சனம் மா மலையும்-பெரிய மைம்மயமான மலையையும், கடலும் - கருங்கடலையும், பொரும் - ஒத்திருக்கின்ற, தமிழ் சோலைமலை அரசே - செந்தமிழ்வழங்கும நாட்டிலுள்ள திருமாலிருஞ்சோலைமலைக்குத் தலைவரான அழகரே!—இலையும் - ஆலிலையையும், பசும் புல்லும் - பசிய புல்லையும, செம் சூட்டு அரவும - சிவந்த உச்சியையுடைய நாகத்தையும், இடைச்சி மடித்தலையும் - யசோதையின் மடியிடத்தையும், சயனம் கொண்டீர் - பள்ளிகொள்ளுமிடமாகக் கொண்டீர்; (இவ்வாறு கொண்ட நீர்), அடியேன் மனம் தாமரையில் - அடியேனது உள்ளக்கமலத்திலும்,அலையும் செயல் ஒழித்து - அலைகிறதொழிலைப் போக்கி, இருந்தால்-வீற்றிருந்தால், என்ன - (உமக்கு) என்ன குறை உண்டாம்? (எ - று.)—இங்கு - அசை.

பசும்புல்லைச் சயனமாகக் கொண்டீ ரென்றது, ஸ்ரீராமாவதாரத்தில் இலங்கைக்குச் செல்லுதற்குக் கடலைக் கடக்கும்பொருட்டு வருணனை வழிவேண்டியபொழுது சமுத்திரக்கரையில் தர்ப்பசயனத்திற்படுத்து ப்ராயோபவேசம்பண்ணினதை யுட்கொண்டு. இலையும் புல்லும் முதலியவற்றில்

சயனித்த நீர் அன்புள்ள எனது மனமாகிய மலரில் வந்து வீற்றிருக்கலாகாதோ? என்று இரங்கினபடி.

இது - நிலையசை முதலதாகிய கட்டளைக்கலித்துறை. (௨௪)

[மறம்.]

௨௫ அரசர தூதகவிஞர் தூதரயனொடுநற் துதிக்கவே ஐயவர் தூதராயளித்த வழகர் நாட்டின் மறவர் யாம், பரசிகால தூதரும் பறப்பரெங்கள் பேர்சொலிற பயமிலாது செலலுமென்று பயமிலோலை வைத்தனை, சரசமவாசியென்று சொலலைசரணிதேடு காவலர் தளமிணக்கமென்கிறாய் சரமதொடுக்கவேணுமோ; சிரமிருக்கவேண்டிலுங்கள் திருமுகங்கிழித்தெறி சேராபெண்ணையீவர் போசிறாரினிப் பொறாரகளே.

(இ - ள்.) அரசர தூத - (எங்கள் பெண்ணை மணம்பேசவந்த) அரசரது தூதனே!—யாம் - நாங்கள், கவிஞர் தூதா - சுந்தரமூர்த்திநாயனாரது தூதராகிய பரமசிவனும், அயனொடும் பிரமதேவனும், துதிக்கவே - இடைவிடாமல் துதிக்கும்படி. ஐவர் தூதா ஆய் - பஞ்சபாண்டவர்களுக்குத் தூதனாகி(த் துரியோதனனிடஞ் சென்றுவந்து), அளித்த - (அவ்வைவரையுங்) காத்தருளின. அழகர் - அழகரது. நாட்டில - நாட்டிலுள்ள, மறவர் - மறவர்களாமே; எங்கள் பேர் சொலில - எங்கள்பேரைச் சொன்னமாத்திரத்தில், கால தூதரும - யமதூதர்களும், (பயந்து), பரசி - துதித்துவிட்டு, பறப்பர - விரைந்தோடிப்போய்விடுவார்கள், (அங்ஙனமிருக்க நீ), பயம இலாது - சிறிதும் அச்சமில்லாமல, செல்லும என்று - காரியசித்தியாமென்று, பயம் இல ஓலை - பயனில்லாத ஓலைச்சீட்டை. வைத்தனை - கொண்டுவந்துவைத்தாய், சரசம் வாசி என்று - இனிமையாக வாசிப்பாயென்று, சொல்லை - சொல்லுகிறாய், சரணி தேடு - நல்வழியைத் தேடுகிற, காவலர் - அரசர்களது, தளம் - ஓலை, இணக்கம என்கிறாய - பொருந்தியுளதென்று (நீ) சொல்லுகிறாய்; சரம தொடுக்க வேணுமோ - அம்பைப் பிரயோகிக்கவேண்டுமோ? சிரம் இருக்க வேண்டில - உனதலை அறுபடாதிருக்க விரும்புவாயானால், உங்கள் திருமுகம கிழித்து எறி - (நீ கொண்டுவந்த)உங்கள் அரசனது திருமுகத்தை [ஓலையை]க் கிழித்து எறிந்துவிடு; சேரா - சேரநாட்டரசர்கள், பெண்ணை ஈவர - பெண்ணைக் கொடுப்பார்கள் [பனையோலையைக் கொடுப்பர்];(ஆதலால), போ - (அங்கே) செல்வாய; இனி - இனிமேல்(இங்கு இருப்பாயானால), சிறார - (எமது) சிறுவர்கள், பொறார்கள் - பொறுக்கமாட்டார்கள் [உன்னை அழித்தேவிடுவார்கள்], (எ - று.)

தமது மகளை மணம்பேசும்படி ஓரரசனால் அனுப்பப்பட்ட தூதனை நோக்கி மறவர்கள் மணம்மறுத்து அவ்வரசனை இகழ்ந்துபேசியதாகச் செய்யுள்செய்வது, மறம் என்னும் உறுப்புக்கு இலக்கணமாம்; மறவர் - வேடர்.

சந்தஇன்பம் நோக்கி, பரசிககால என வலி மிகவில்லை. 'பரசுகாலதூதர்' எனப் பாடங்கொண்டு - யாவராலுங் கொண்டாடப்படுகின்ற யமதூதரென்றுமாம். கா அலா தளம - சோலையிற்பொருந்தியஓலையும்ஆம். மறவர் என்பதில் - படைவீர ரென்றும். வாசி என்பதில் - அம்பென்றும், தளம் என்பதில் - சேனையென்றும். சிரமிருக்கவேண்டில் என்பதில் - இன்னும்பல நாள்வாழவேண்டுமானா லென்றும பொருள்படுதல் காண்க., ஓலையைத் திருமுகம் என்பது - மங்கலவழக்கு. சேரர் பெண்ணை யீவர் என்றது, சேரநாட்டில் பனை அதிகமாதலால்.

தமது ஆத்மாவைத் தேவாதிதேவனாகிய திருமாலுக்கே அடிமையாகச் சமர்ப்பிக்கவிருந்த பாகவதர்களை நோக்கி மதாந்தரஸ்தர் 'தேவதாந்தரங்கட்கு அடிமையாக வைப்பீர்' என்று துருபதேசஞ்செய்ய, அப்பாகவதர் அவர்களை இகழ்ந்துகூறியது, இச்செய்யுளின் உள்ளுறைபொருள் [ஸ்வாபதேசம்].

சிவனை 'கவிஞர்தூதர்' என்றது" சுந்தரமூர்த்திநாயனார் திருவொற்றியூரிலே சங்கிலியாரை விவாகஞ் செய்துகொண்ட சங்கதியைக் கேள்வியுற்று அதிகங்கோபங்கொண்டிருந்த அவரது முதல்மனைவியாகிய பரவையார், நாயனார் தம்மிடம் வருதற்கு உடன்படாமல், 'வந்தால் பிராணத்தியாகம் பண்ணுவேன்' என்றுசொல்ல, அதனையறிந்த சுந்தரமூர்த்தி பரமசிவனைத் தியானித்து, 'பரவையாருடைய ஊடலைத் தீர்க்கத் தூதுசென்றருளவேண்டும்' என்று பிரார்த்திக்க, சிவபெருமான் சிவார்ச்சனைசெய்கின்ற ஒரு ஆதிசைவரது வடிவங்கொண்டும் தாமாந்தன்மையை அறிதற்கு ஏற்ற திருக்கோலத்தோடும் அர்த்தராத்திரியில் இருமுறை தூதுநடந்து சென்று சமாதானஞ்சொல்லி அவள்கொண்ட கோபத்தைத் தணிவித்து நாயனாரை அவளிடத்துப் போம்படி அருள்செய்த வரலாற்றை உட்கொண்டு; "நாதனை கவிஞனைவிநள்ளிருட்போதிற்சென்ற,தூதனை" என்றார் பிறரும்.

இது - ஏழாஞ்சீரும் ஏற்றுச்சீரும் விளச்சீர்களும், மற்றவையெல்லாம் மாச்சீர்களுமாய் வந்த **பதினான்குசீராசிரியவிருத்தம்.** (உ௫)

[இதுவும் அது.]

உ௬. பொறுபொறு தூதபசிபொறாய்முந்திபுனைசுருட்டோலை
யைத்தின்னு புரவலர்காதிற்சொருகுசந்திரிகைபுயனிறத்தழகர்சீப
தியின், மறவரென்றறிந்துங்காரிகைகேட்டாய் மதமலோ வதுபுலவ
ரைக்கேள் வயலிலேயரிவை சிலையிலேநாரி மரதகினுமண்ணினும்பா
வை, குறிதிகழ்தையல்பாணர்பால் வஞ்சி குடக்கினிற்கோதையுமாங்
கே குன்றின்மேற்குன்றிளமபிடிநல்லகுமரியுண் டடவியினுடனே,
நறுமணங்கூடுஞ்சோறுமுண்டோடு நங்கையைப்பார்வினைமுகத்தின்
ஞாலமேனீங்கள்வாலையேபடைத்தானரியொடுநதிரிவதுதிரமே.

(இ - ள்.) தூத - தூதனே! பொறு பொறு - விரையாமலிரு விரையாமலிரு; பசி பொறாய் - பசியைப் பொறுக்கமாட்டாயாகில், முந்தி-முன்னே, புனை சுருட்டு ஓலையை - புதிதாகத்தோன்றிய சுருட்டப்படுகிற குருத்தோலையை [புனைசுருட்டு ஓலையை - பொருந்தாதயோசனையைச் செய்து கொண்டுவந்த சீட்டை], தின்னு - புசி; (அன்றியும), சந்திரிகை - (நீ கொண்டுவந்த) ஓலையை, புரவலர் காதில் - (உனது) அரசர்களது காதிலே, சொருகு - கொண்டுபோய் அணிவாய்; (நாங்கள்), புயல் நிறத்து அழகர் - காளமேகம்போன்ற நீலநிறமுடைய அழகரது, சீர் பதியில - சிறந்த திருமாலிருஞ்சோலைத்திருப்பதியிலேயுள்ள, மறவர் - மறவர்கள், என்று அறிந்தும் - என்று தெரிந்திருந்தும, (சிறிதும் அஞ்சாமல்), காரிகை கேட்டாய் - (எங்களைப்) பெண்கேட்டாய்; மதம் அலோ - (அவ்வாறுகேட்டது) செருக்கல்லவா? அது - அக்காரிகையை, புலவரை கேள் - தமிழ்ப்பண்டிதர்களைக் கேட்பாயாக; [அவர்களைக் கேட்டால் கிடைக்குமென்றபடி]; அரிவை - அரியப்பட்ட நெல் முதலிய பயிர்க்கதிர்கள், வயலிலே-கழனிகளிலே(உண்டு); நாரி-நாணி, சிலையிலே - வில்லிலே(உண்டு); பாவை - சித்திரப்பதுமை, மரதகினும் மண்ணினும்-மரதகினாலும் மண்ணினாலுஞ் செய்யப்பட்டது கிடைக்கும்; குறி திகழ் தையல் - முறைப்படி பொருந்திய தைத்தலதொழில், பாணர்பால் - தையற்காரரிடத்தில் (ஆகும்); வஞ்சி - கருவூர், குடக்கினில்-மேற்கே (பொருந்தியது); கோதையும - சேரராஜனும், ஆங்கே - மேற்கில அக்கருவூரிலேயே(உளன்); குன்று இளம் பிடி-குறைவில்லாத இளைய பெண்யானை, குன்றின்மேல் - மலையிலே (அகப்படும்); நல்ல குமரி - நல்ல பனைமரம், அடவியில் - காட்டில், உண்டு—; உடனே - அப்பனைமரத்துடனே, நறு மணம் கூடும் - நல்லவாசனைபொருந்திய, சோறும்—, உண்டு—; ஓடு -

(அங்கே)விரைந்துசெல்வாய்; நம் கைவண்மை-நமது கையின் திறமையை, வினைமுகத்தில் - போர்த்தொழிலிடத்தே, பார் - காண்பாய்; ஞாலமேல்-உலகத்தில். நீங்கள்—, வாலையே படைத்தால் - இளம்பெண்ணையே பெறவிரும்பினால் [வால் பொருந்தப்பெற்றால்], நரியொடும் - நரிகளுடனே, திரிவது - (நாடுவிட்டுக் காட்டிற்போய்த்)திரிவது. திடமே - உறுதியானகாரியமாகும்.

பொறுபொறு-வெகுளியால் அடுக்கிற்று. புனைசுருட்டு-சதியாலோசனை. 'ஓலை' என்று காதணிக்கும், திருமுகச்சீட்டுக்கும் பெயராதலால், 'புரவலர் காதிற் செருகு சந்திரிகை' எனப்பட்டது காரிகை. அரிவை, நாரி, பாவை, தையல், வஞ்சி, கோதை, பிடி, குமரி, நங்கை, வாலை என்பன - மகளிரது பெயராதலால், சிலேடைபற்றி, இவ்வாறு சமத்காரந்தோன்றக் கூறினார். 'காரிகையைப் புலவரைக் கேள்' என்றது-யாப்பருங்கலக்காரிகையென்னுஞ் செய்யுளிலக்கண நூலைக் கருதி. நாரி - பெண்ணைக் குறிக்கும்போது வடசொல் பாவை, கோதை, பிடி இவை - பெண்ணை உணர்த்தும்போது உவமவாகுபெயர். வஞ்சி - சேரனது ராஜதானி. சோறு என்றது, வைரமற்றதான பனைமரத்தி லுள்ள சோற்றினை. உடனே நறுமணங்கூடுஞ் சோறுமுண்டு என்றதில - காரிகைமுதலியன உள்ள புலவர் முதலிய இடங்களிற் சென்றால் உடனே நல்லகலியாணங் கைகூடும் ஆதலால், சோற்றைப் புசித்து ஓடு என்றும் பொருள்படும். வாலை - பன்னிரண்டுவயதுப்பெண்; பாலா என்னும் வடசொல்லின் திரிபு. உண்டு என்னும் வினைமுற்றை அரிவைமுதலியவற்றுக்கும் பயனிலையாக ஆங்காங்குக் கூட்டிக்கொள்க. அலோ - அல்லவோ.

இது - இருபத்துமூன்றுங் கவிபோன்ற பதினான்குசீராசிரியவிருத்தம்.()

**௨௭** திரவிருப்பணிதாமத்திகிரியே செங்கைமேலணிதாமத்திகிரியே; வரதாமொய்ம்புகுலவரவிந்தமே வாய்கண்காலகைகுலவரவிந்தமே, யுரமிசைக்கரும்பன்னகமலையே யுறையுளுங்கரும்பன்னகமலையே, யரசருக்கிடமுத்தமாசங்கமேயழகர்சேரிடமுத்தமாசங்கமே.

(இ - ள்.) திரம் இருப்பு - நிலையாக இருக்குமிடமாவது, ஆம் அத்தி கிரியே - அழகிதாகிய ஹஸ்திகிரியென்னும் பெருமாள்கோயிலாம்; செம் கைமேல் அணி - சிவந்த (வலது) திருக்கையில் வைத்துக்கொண்டிருப்பது, தாமம் திகிரியே - ஒளியையுடைய சக்கரத்தையே; வரதர் மொய்ம்பு - வரங்களைக் கொடுத்தருளுகிற எம்பெருமானது தோள்கள், குலம் வரம் விந்தமே - குலபருவதங்களுட் சிறந்தோங்கிய விந்தியமலையைப் போலும்; (அப்பெருமானது), வாய் கண் கால் கை - திருவாய் திருக்கண்கள் திருவடிகள் திருக்கைகள் என்கிற திருவவயவங்கள், குலவு அரவிந்தமே - விளங்குகின்ற செந்தாமரைமலர்களையே போலும்; உரமிசை - (அவரது) திருமார்பில் (வீற்றிருப்பவள்), கரும்பு அன்ன கமலையே - கருப்பஞ்சாறு போன்ற (இன்சொற்களையுடைய) திருமகளேயாவள்; உறையுளும் (அவர் திருவுள்ளமுவந்து) எழுந்தருளியிருக்குமிடமும், கரும் பன்னகம் மலையே - பெரிய சேஷகிரியென்னப்படுகிற திருவேங்கடமலையேயாம்; அரசருக்கு - அத்தலைவர்க்கு, இடம் - இடத்திருக்கையிற் பொருந்துவது, முத்து அமர் சங்கம் - முத்துப்பொருந்துமிடமாகிய சங்கமேயாம்; அழகர் சேர் இடம் - அவ்வழகர் எழுந்தருளியிருக்குமிடம், உத்தமர் சங்கமே - சிறந்த புலவர்களது தமிழ்ச்சங்கமேயாம்; (எ - று.)

விந்தம் - வடசொற்றிரிபு. பன்னகமலை - சேஷகிரி; பரமபதநாதனது கட்டளையின்படி அவனுக்குப் பலவகைக்கைங்கரியங்களைச் செய்யும் ஆதிசேஷனே அப்பெருமான் இனிது எழுந்தருளியிருத்தற்கு மலைவடிவமானது

னாலும், மேருமலையினிடமிருந்து ஆதிசேஷனுடனே வாயுவினாற்கொணரப்பட்ட மலை யாதலாலும், திருவேங்கடத்திற்கு 'சேஷகிரி' என்று பெயர் வந்தது. கமலை - தாமரையில் வீற்றிருப்பவள்.

இஃது, அடிதோறுந் தனித்தனியே வந்த இறுதிமுற்றுமடக்கு.

இது* கட்டளைக்கலிப்பா; இலக்கணம் எழாங்கவியிற் கூறப்பட்டது.

௨௮. மேகங்கடன்மணிகாளிந்திபூவைமென்காவிகண்மை
மாகநதொடுபச்சைநின்னுருக்காட்டமனங்குளிர்ந்தேன்
சோகந்தவிர்ந்தனென்மாலிருஞ்சோலைச்சுரும்புசெய்த
யோகந்திகழழகாவவைவாழியொளிசிறந்தே.

(இ - ள்.) மாலிருஞ்சோலை சுரும்பு - திருமாலிருஞ்சோலைமலை. செய்த—, யோகம் - தவத்தால், திகழ் - (அதில்) எழுந்தருளி விளங்குகின்ற, அழகா - அழகனே! மேகம்—, கடல்—, மணி - நீலரத்தினம், காளிந்தி - யமுனாநதி, பூவை - காயாமலர், மெல் காவி - மெல்லிய நீலோற்பலமலர், கண் மை - கண்ணிலிடப்படுகிற அஞ்சனம், மா கம தொடு பச்சை - பெரிய வானுலகத்தையளாவிய(தமாலமெனப்படுகிற)பச்சிலைமரம், (என்கிற இவையெல்லாம்), நின் உரு காட்ட - உனது திருமேனிநிறத்தைக் காண்பிக்க(க் கண்டு), மனம் குளிர்ந்தேன் - மனத்தில் தாபமநீங்கிக் குளிர்ச்சியடைந்து, சோகம் தவிர்ந்தனென் - துன்பம் நீங்கப்பெற்றேன்; அவை-(உனது உருவைக்காட்டி என் துன்பந்தணித்த) அம்மேகம்முதலியவை,ஒளி சிறந்து-விளக்கம் மிகுந்து, வாழி - (நீடுழி) வாழ்வனவாக; (எ - று.)

காளிந்தி-களிந்தமென்னும் மலையினின்றுந் தோன்றியது; அதன்நிறம் கருமை. கள் மை எனப் பிரித்து, கள் - கருவண்டாகவுமாம். வாழி-வாழியவென்னும் வியங்கோள்முற்றின் ஈற்றுஉயிர்மெய் கெட்டது.

இது, கீழ்க்கூறியதுபோன்ற கட்டளைக்கலித்துறை. (௨௮)

௨௯. சிறந்துன் பதந்தொழுவார் சேவடி தொழாம
லிறந்தும் பிறந்து மிரைக்கே—பறந்து
மிகவேசற் றேனிடப வெற்பா வசோதை
மகவேசற் றேகடைக்கண் வை.

(இ - ள்.) இடப வெற்பா - திருமாலிருஞ்சோலைமலையுடையவனே! அசோதை மகவே - யசோதையிளங்குமாரனே!—சிறந்த (எல்லாத் தேவரினும்) மேற்பட்ட, உன் - உனது, பதம் - திருவடிகளை, தொழுவார் - வணங்குகின்ற பாகவதர்களது, சே அடி - சிவந்த திருவடிகளை, தொழாமல் - வணங்கி நற்கதிபெறாமல், இறந்தும்—, பிறந்தும் - பலபிறப்புப் பிறந்தும், இரைக்கே பறந்தும் - உணவுக்காகவே அலைந்தும், மிக எசற்றேன் - மிகவுந் துன்பப்பட்டேன்: (இனி என்பக்கல்), சற்றே கடைக்கண் வை-சிறிது கடாக்ஷம் வைத்தருள்வாயாக; (எ - று.)

எசற்றேன், எசறு - பகுதி; இது - 'அழுக்கறு' என்பதுபோல ஒரு சொல் சிறந்துன் - விகாரம்.

இது, நாள்என்னும் வாய்பாட்டான் முடிந்த இருவிகற்ப நேரிசை வெண்பா. (௨௯)

௩௦. வைக்குமிடத்தன்புவையாமாந்தர்காளம்மறலிகழுதையுறீயீரோவருமேநாளை, தக்ககதைபுகுமேநுங்குணமும்போமேசரமும்போமேயெடுத்தநுவும்போமே,திக்கிலைவேறிக்கணமேசோலைவெற்பிற்சிதரசஞ்சீவிதனைத்தேடிக்கொள்ளுந,துக்கமறுநமனுடைதூரப்பிரியார்க்குந்தோற்றிடீரோருகாலுந்தோற்றிடீரே.

(இ - ள்.) வைக்கும் இடத்து - அன்பு வைக்கவேண்டுமிடமாகிய எம்பெருமானிடத்தில், அன்பு வையா - அன்பை வைக்காத, மாந்தர்காள்-மனிதர்களே!—அ மறலி கதை - அந்தயமனது வரலாற்றை, அறியீரோ - அறியாதவர்களோ (நீங்கள்)? (என்னவென்றால்),—நாளை வருமே - (அவன்) நாளைக்கே வருவான்; தக்க கதை புகுமே - பொருந்திய அவனது (கால) தண்டாயுதம் வந்து கிட்டுமே; நும் குணமும் போமே - உங்கள் குணங்களும் போய்விடுமே; சரமும் போமே - சுவாசங்களையும் போய்விடுமே; எடுத்த தனுவும் போமே-எடுத்துப்பிறந்த உடம்பும் போய்விடுமே; வேறு திக்கு இலை - (அவனையல்லாமல்) வேறே கதிபெறும் உபாயமில்லை; இ கணமே - இப்பொழுதே, சோலை வெற்பில் - சோலைமலையிலுள்ள, சீதர சஞ்சீவிதனை - திருமகளை (த் திருமார்பில்) தாங்கிய திருமாலாகிய ஸஞ்சீவிமருந்தை, தேடிக்கொள்ளும் - தேடிவைத்துக்கொள்ளுங்கள்; (வைத்துக்கொண்டால்), துக்கம் அறும் - (பிறவித்)துன்பம் நீங்கும்; நமன் ஓட - யமன் (உங்களைக் கண்டு அஞ்சி) ஓடும்படி, துரப்பீர் - துரத்திவிடுவீர்கள்; யார்க்கும் தோற்றிடீர்-எவர்க்குந் தோல்வியடைந்து பின்னிடமாட்டீர்கள்; ஒருகாலும் தோற்றிடீர் - இனி ஒருபொழுதும் பிறக்கமாட்டீர்கள்; (எ - று.)

இரண்டாமடியில் - காலனது கதை வருமே, அதுக்கு முன்நிற்கமாட்டாமல், உங்களது குணமும் [வில்லின்நாணும] போமே, சரமும் [அம்பும்] போமே,எடுத்த தனுவும் [வில்லும்]போமே என்னும் பொருளுந் தொனிக்க வைத்தது - கவிசாதுரியம். சஞ்சீவி - மரணத்தைப் போக்கிப் பிழைப்பைக் கொடுப்பதொரு மருந்து. எம்பெருமானது அடியார்களைக் கண்டமாத்திரத்தில் யமனும் அவன்தூதர்களும் வந்து வணங்கிப் போய்விடுவாதலாலும், அவ்வடியவர் பிறப்பற்று முத்திபெறுவராதலாலும், இங்ஙனங் கூறியது. தோற்றிடீர் என்னுஞ் சொல் இரண்டனுள்—முன்னதில், தோல் - பகுதி; பின்னதில், தோன்று - பகுதி. "சென்றநா ளெல்லாஞ் சிறுவிரல் வைத்தெண்ணலாம், நின்றநாள் யார்க்கு முணர்வரிது" ஆதலால், 'வருமே நாளை' என்றார். நாளை என்றது - எதிர்காலத்தை யுணர்த்தவந்ததோர் குறிப்புச்சொல்.

இது, பதினொன்காம கவிபோன்ற எண்சீராசிரியவிருத்தம். (௯௦)

௯௧ தோற்றும்பொய்கைவிடாதாரருவியுந்துலங்கவிட்டவர்
சோலைவெற்பார்சந்தச், சேற்றுமொய்ம்ப ரிவர்க்கரிதோ நமதிருக்
குளக்குறைதீர்ப்பதுமாவலி, யூற்றுநீரினிதென்றே குடங்கைகொண்
டுற்றநாளங்கொருகால விண்ணுச்சிகண், டாற்றுநீதந்ததிங்கொரு
காலுலகளந்துபோகமனைத்துங்கொடுத்ததே

(இ - ள்.) தோற்றும் - பொருந்திய, பொய் - பொய்யை [மாயையை], கைவிடாதார் - நீங்காதவரும், அருவியும் - சிலம்பாற்றருவியை, துலங்க -, தெளிவாக, விட்டவர்-பாய்ந்தொழுக விட்டவரும், சோலைவெற்பார்-சோலைமலையில் எழுந்தருளியிருப்பவரும், சந்தம் சேறு மொய்ம்பர் - சந்தனக் குழம்பை யணிந்த திருத்தோள்களையுடையவருமாகிய, இவர்க்கு - இவ்வழகர்க்கு, நம - நம்முடைய, திருக்கு உளம் குறை தீர்ப்பது - மாறுபாட்டையுடைய மனத்தின் குறையை நீக்கியருள்வது, அரிதோ - அருமையானதோ? [அன்றென்றபடி]; (அவர்), 'மாவலி-மகாபலிசக்ரவர்த்தியே! இனிது - இனிமையாக, நீர் ஊற்று - (கையில்) நீர்த்தாரையை வார்த்து(மூவடிமண்) தத்தஞ்செய்', என்றே - என்று சொல்லி, குடங் கை - அகங்கையில், கொண்டு - (அவன்வார்த்த நீரை) ஏற்றுக்கொண்டு, உற்ற நாள் - பொருந்திய காலத்தில், அங்கு - அவ்விடத்தில், ஒரு கால் - ஒருதிருவடி, விண் உச்சி

கண்டு - ஆகாயத்தின் மேல்முகட்டை யடைந்து, ஆறு நீர் - கங்காநதியின் தீர்த்தத்தை, தந்தது - கொடுத்தது; இங்கு - இவ்விடத்தில், ஒரு கால் - மற்றொரு திருவடி, உலகு அளந்து - நிலவுலகத்தை அளவிட்டு, போகம் அனைத்தும் - சகல பாக்கியங்களையும், கொடுத்தது—; (எ - று.)

மாவலி - வடசொற்றிரிபு. திருமால் உலகமளந்தகாலத்துச் சத்திய லோகத்தை அளாவிச்சென்ற அவரது வலத்திருவடியைக் கண்டு பிரமதேவன் தன்கைக்கமண்டலதீர்த்தத்தைக்கொண்டு திருவடிவிளக்கின நீர், கங்காநதியாய்ப் பெருகியதாதலால், 'அங்கொருகால் விண்ணுச்சிகண்டாற்று நீர் தந்தது' என்றார். இக்கவியில், தோன்றிய பொய்கையை [தடாகத்தை] விடாதவரும், அருவியைத் துலங்கவிட்டவரும், சோலையையுடைய வெற்பி லுள்ளவரும், அழகிய சேற்றின்வலியையுடையவருமாகிய இவர்க்கு நம்முடைய திருக்குளத்தின் குறையைத் தீர்ப்பது அரிதாமோ? ஊற்றின் நீர் இனியதென்று குடத்தைக்கையிற்கொண்டு சென்றபொழுதில் அவருடைய இருவாய்க்கால்களுள் ஒருகால் வெகுதூரம்பரவி ஆற்றுநீரைப் பாயும்படி கொணர்ந்தது; மற்றொருகால் உலகமுழுதும்பரவிப் பலவிளைவுகளையும் பூர்ணமாகக்கொடுத்தது என்னும் பொருளுந் தோன்ற வைத்தது, கவிசாதுரியம். நம என்பதில், அ - சாரியையென்றாயினும், ஆறனுருபென்றாயினுங் கொள்க.

இது, கட்டளைக்கலிப்பா; இலக்கணம் எழாங்கவியிற் காண்க. (௩௧)

௩௨. கொடுக்கின்றசெங்கையழகனென் றோதுங்குழகன்வெய்யோ
னெடுக்கின்றசக்கரத்தேரோடிலங்குமிடபவெற்பி
லடுக்கின்றவாயிரம்பேரோகிரணமஞ்ஞானவிரு
டடுக்கின்றவருமுண்டோபனிகாண்புன்சமயங்களே.

(இ - ள்.) கொடுக்கின்ற - (வரங்களை) அருள்செய்கின்ற, செம் கை - சிவந்த திருக்கையையுடைய, அழகன் என்று ஓதும் - அழகரென்றுசொல்லப்படுகிற, குழகன் வெய்யோன் - இளஞ்சூரியனை, இடப வெற்பில் - விருஷபகிரியிலே, எடுக்கின்ற சக்கரம் தேரோடு - (தன்னைத்)தாங்குகின்ற ஒற்றைச்சக்கரத்தையுடைய தேருடனே [எடுக்கின்ற சக்கரத்து ஏரோடு - கையிலேந்திய சக்கராயுதத்தின் அழகுடனே], இலங்கும் - விளங்குவான்; அடுக்கின்ற - பொருந்திய, ஆயிரம் பேரோ - (அவனது) ஸஹஸ்ரநாமங்களோ, கிரணம் - ஆயிரங் கிரணங்களாம்; அஞ்ஞானம் இருள் தடுக்கின்றவரும் உண்டோ - அஜ்ஞானமாகிய அந்தகாரத்தை அழிக்கிறவர் (அவ்வழகனையேயன்றி) வேறே யாராவது உண்டோ? [இல்லை]; புல் சமயங்கள் - மற்றை அற்பமதங்களெல்லாம், பனி காண் - (சூரியகிரணத்தின்முன்) பனிபோல (அவன்திருநாமத்தின் மகிமைக்கு முன்னே இருந்தஇடந் தெரியாமல்) அழியும்; (எ - று.)

முற்றுருவகவணி; சக்கரத்தேரோடுஎன்கிற பிரிமொழிச்சிலேடையணியை அங்கமாகப் பெற்றுவந்தது. அழகர் கையிலுள்ள இயற்கைச்சிவப்பை அடியார்க்கு எடுத்துஎடுத்துத் தானஞ்செய்வதனால் வந்ததாகக் குறிப்பார் போல, 'கொடுக்கின்றசெங்கை' என்றார். வெய்யோன் - வெப்பமுடையவன்.

இது, நிரையசை முதலதாகிய கட்டளைக்கலித்துறை. (௩௨)

௩௩. சமையமெனமுதுகடவுகடவியுயிர்கறுவிவரு சமனுமொருதிரணமிவனே, யமையுமெனவுழலும் யமபடருமொருமசகமெழுதயனுமவரளவுநமர்காள், கமையுரககிரியிறைவர் கரிகிரியில்வரதர் வளர்கமலைதனகிரியையகலா, ரிமையகிரி ரசதகிரி கனககிரி பரவுநம திடபகிரியழகர்துணையே.

(இ - ள்.) நமர்காள் - நம்மவர்களே! கமை - (நிலத்தைப்) பொறுக்குந் தன்மையையுடைய, உரக கிரி - சேஷாசலமென்கிற திருவேங்கடமலைக்கு, இறைவர்-தலைவரும்,— கரிகிரியில் - ஹஸ்திகிரியென்கிற கச்சித்திருப்பதியி லெழுந்தருளிய, வரதர் - வரதரென்னுந் திருநாமமுடையவரும்,—வளர் - மேன்மேற் பூரித்துவளாகிற.கமலை தனம கிரியை - திருமகளது ஸ்தனங்க ளாகிய மலைகளை, அகலார் - விட்டுநீங்காதவரும்.— இமையகிரி - பனிமலை யான ஹிமவத்பர்வதமும், ரசதகிரி-வெள்ளிமலையான கைலாசபர்வதமும், கனககிரி-பொன்மலையான மேருபர்வதமும, பரவும்-புகழும்படியான,இடப கிரி - விருஷபகிரியென்கிற சோலைமலையி லெழுந்தருளியிருக்கிற, நமது அழகர் - நம்முடைய அழகப்பிரானே,துணை-நல்ல துணையாவர்; (அவரைத் துணையாகப்பற்றினவாகட்டு),—சமையம் என-(இதுதான்)தக்ககாலம் [அந் திமகாலம்] என்று, முது கடவு கடவி - பழமையாகவுள்ள (தன்வாகனமா கிய) எருமைக்கடாவை ஏறிச்செலுத்திக்கொண்டு, உயிர் கறுவி வரும் - உயி ரின்மேல் கறுவைவைத்து வருகிற, சமனும் யமனும, ஒரு திரணம் - ஒரு துரும்புக்கு ஒப்பாவன; இவனை அமையும என - இவன்தான் கொண்டு போதற்குஏற்றவன் என்று, உழலும - (ஆங்காங்குத) திரிகிற, யம படரும் - யமதூதர்களும, ஒரு மசகம - ஒரு கொசுப்போலவர்; எழுது அயனும் - விதி தது எழுதுகிற பிரமனும், அவா அளவு - அவ்யமனும் யமதூதரும் போல அலக்ஷ்யமாக எண்ணத்தக்கவனே, (எ - று)

ஸமயம் - சமையமென விகாரம. கடா என்னுங் குறியதன்கீழ் ஆக் குறுகி உ.கரமேற்று, கடவுஎன நின்றது. மலையரையனுதலால் இமயகிரியை யும்,உருத்திரமூர்த்திக்குஇருப்பிடமாதலாலரஜதகிரியையும்,மற்றைத்தேவர் களெல்லாம பொருந்துமிடமாதலால் கனககிரியையும எடுத்துக்கூறினர்.

இதில் ஒவ்வொருஅடியிலும் ஈற்றுநெட்டெழுத்து ஒன்றுஒழிய மற்றை உயிர்மெய்யெழுத்துக்களெல்லாம குற்றெழுத்தாகவே வந்தது,சொல்லணி; இடையிடையேவந்த ஐகாரங்கள் நெட்டெழுத்தாயினும மாத்திரைகுறைந்து நின்றஐகாரக்குறுக்கமாதலால் குற்றெழுத்தோடொப்பவே எண்ணப்படும.

இது - பெரும்பாலும முதலைந்தும கருவிளங்காய்ச் சீர்களும், மற்றிர ண்டும் புளிமாச்சீர்களுமாகிய எழுசீராசிரியவண்ணவிருத்தம். (௫௫)

௫௬ துணையென்றுவந்தேமெம்மைத்தொடர்ந்துமாலாக்கிக்கொண்
டணையென்றுநாகமீந்தாயாங்கருடனைவிடேமா [டா
லிணையொன்றுமிலலாய்நல்லாயீசசர்வேசபுல்லுஞ்
சுணையென்றவழகாவெண்ணெய்க்களவனேதுளவினனே.

(இ - ள்.) இணை ஒன்றும் இலலாய் - ஒப்புமை சிறிதுமஇல்லாதவனே! நல்லாய - நற்குணமுடையவனே! ஈச - கடவுளே! சர்வ ஈச - எல்லாவற் றுக்குந் தலைவனே! புல்லும் சுணை என்ற - பொருந்திய ஊற்று என்னும்படி மேன்மேற் சுரக்கின்ற, அழகா - அழகனே! வெண்ணெய களவனே - (கிரு ஷ்ணாவதாரத்தில்) வெண்ணெயைக் களவுசெய்து உண்டவனே! துளவின னே - திருத்துழாய்மாலையையுடையவனே!— துணை என்று - (நீயே எங் கட்குத) துணையென்று, வந்தேம - (நாங்கள்)வந்து(உன்னை)அடைந்தோம்; எம்மை - எங்களை, (நீ), தொடர்ந்து - பின்தொடர்ந்து, மால் ஆக்கிக்கொ ண்டாய் - (உன்னைப்போலவே) திருமாலாகும்படி செய்து ஸாரூப்ய மளித் தாய்[உன்னிடத்தில் பேரன்பு வைக்கும்படி செய்தாய்]; அணை என்று நா கம் ஈந்தாய் - சேரென்று சொல்லி மேலுலகத்தைக் கொடுத்தருளினாய் [சயனமென்று சொல்லி ஆதிசேஷனைக் கொடுத்தாய்]; ஆங்கு அருள்தனை விடேம் - அம்முத்தியுலகத்துக்குக் காரணமான (உனது) திருவருளை நாங்

கள் கைவிடோம் [யாம் கருடனை விடேம் - நாங்கள் (உனக்குவாகனமான) கருடனை விடமாட்டோம்]; (எ - று.)

சுனை - சுணையென எதுகைநோக்கி விகாரமாயிற்று.

இது, நான்காங் கவி போன்ற அறுசீராசிரியவிருத்தம். (௫௪)

[கார்.]

௫௫. துளவழகர்கலக்கவரவஞ்சலிக்குங்காலந்தொனித்திடிகள் கலக்கவரவஞ்சலிக்குங்காலம், வளமலிவெற்பருகுகருமஞ்சாருங்காலம்வாடையுயிர்பருகுகருமஞ்சாருங்காலங், களிறுருளச்சிலையருவியம்புதைக்குங்காலங் காயமுறுஞ் சிலையருவியம்புதைக்குங்காலந், தளவமளிபாடீரப்பூச்செறியுங்காலந் தளவமளிபாடீரப்பூச்செறியுங்காலம.

(இ - ள்.) துளவு - திருத்துழாய்மாலையையுடைய. அழகர்—, கலக்கவர - (என்னைத்) தழுவவரும்படி, அஞ்சலிக்கும் - (யான் அவரைக்)கைகூப்பித் தொழுகின்ற, காலம்—; இடிகள்—, தொனித்து - பேரொலிசெய்து, கலக்க - கலங்கச்செய்வதனால், அரவம் - சர்ப்பங்கள், சலிக்கும் - அஞ்சி நடுங்குகின்ற, காலம்—; வளம் மலி - பலவளப்பங்களும் நிரம்பிய, வெற்பு அருகு - மலைப்பக்கத்திலே, கரு மஞ்சு - கரிய நீர்கொண்ட மேகங்கள், ஆரும் - வந்துபொருந்துகிற, காலம்—; வாடை - வடகாற்று, உயிர் பருகு- (எனது) உயிரை உண்ணுகிற [மரணவேதனைப்படுத்துகிற], கருமம் - தொழில், சாரும் - பொருந்துகிற, காலம்--; களிறு உருள - யானைகள்உருளும்படி, சிலை அருவி-மலையினின்றும்பெருகுகிற அருவி,அம்பு உதைக்கும்-சலத்தை(மிகுதியாகவும் வேகமாகவும்)பெருக்குகின்ற, காலம்—;உறும்-பொருந்திய,சிலை-(மன்மதனது) கருப்புவில்லினால், அருவி-எய்து விடப்பட்டு,அம்பு-புஷ்பபாணங்கள், காயம் - (என்) உடம்பு முழுவதிலும், தைக்கும் - தைக்கிற, காலம்—; தளவம்-முல்லைசெடி. அளி பாடு ஈரம் பூ-வண்டுகள்பாடப்பெற்ற குளிர்ந்த மலர்கள், செறியும் - பூதத்துநிரம்பப்பெறுகின்ற, காலம்—; (யான்),தளம் அமளி - பூவிதழ்களாலாகிய படுக்கையையும், பாடீரம் பூச்சு-சந்தனம் பூசுதலையும். எறியும் - விலக்கிவிடுகிற, காலம்—; (எ - று.)

இது - கார்காலத்தில் வருவதாகக் காலங்குறித்துப் பிரிந்துசென்ற தலைமகன் அக்காலம் வந்தவளவிலும் வாராமை, அதுவரையிலும் ஆறியிருந்த தலைவி ஆற்றாமைமேற்பட்டு அக்காலத்தின் நிலைமையையும் தனது நிலைமையையுங் கூறி இரங்கியது. இதில் அடிகள்தோறும் அரையடியால் காலத்தின்நிலையும், அரையடியால் தனதுநிலையுங் கூறப்பட்டுள்ளன.

அருவி என்னுஞ்சொல் இரண்டனுள்—பின்னதில், அருவு-பகுதி. கார்காலத்தில் முல்லை பூத்தலும்,இடியோசைக்கு நாகங்கள் அஞ்சுதலும் இயல்பு.

இது - அடிதோறுந் தனித்தனிவந்த இறுதிமுற்றுமடக்கு. ஈற்றடி-முற்றும் மடக்கு.

இது - பதினெட்டாங்கவிபோன்ற எண்சீராசிரியவிருத்தம். (௫௫)

௫௬. காலமுகந்தானுமோலமுகந்தானுங் காமனைவாய்த்தானுமாமனைமாய்த்தானு,ஞாலமடுத்தானுஞ்சூலமெடுத்தானு நளினவிருப்பானும்புளினவிருப்பானு; நீலமதித்தானுஞ்சீலம்விதித்தானு நீதிபொழிந்தானுஞ்சோதிவழிந்தானுஞ், சாலநிறைந்தானுமாலமுறைந்தானுஞ் சலமலைவென்றானுங்குலமலைநின்றானே.

(இ - ள்.) காலம் - காலத்தை, முகந்தானும்-தன்வடிவமாகக்கொண்டவனும்,—ஓலம் - கடலை, உகந்தானும் - (தான் பள்ளிகொள்ளுமிடமாகத்)

திருவுள்ளமுகந்தவனும்,—காமனை - மன்மதனை, வாய்த்தானும் - மகனாகப் பெற்றவனும்,—மாமனை - (கிருஷ்ணாவதாரத்தில் தனக்கு) மாமனான கம்சனை, மாய்த்தானும் - கொன்றவனும்,—ஞாலம் - உலகங்களையெல்லாம், மடுத்தானும்-(யுகாந்தகாலத்தில்) உண்டருளியவனும்,—சூலம் கடுத்தானும்- சூலாயுதத்தைக் கையிலேந்திய உருத்திரனது வடிவமானவனும்,—நளினம் இருப்பானும் - தாமரைமலரில் தங்குதலையுடைய பிரமனது சுவரூபியானவனும்,—புளினம் விருப்பானும் - (கிருஷ்ணாவதாரத்தில் யமுனாநதிக் கரையில் உள்ள) மணற்குன்றுகளில் விருப்பமுடையவனும்,—நீலம் மதித்தானும் - கரியகடலைக் கலக்கியவனும்,—சீலம விதித்தானும் - நல்லொழுக்கங்களை(சசுருதி ஸ்மிருதிமுதலிய நூல்களைக்கொண்டு)கட்டளையிட்டவனும்,—நீதி பொழிந்தானும்-முறைமையான நியாயங்களை மிகுதியாக(நூல்களால்) தந்தவனும்,—சோதி வழிந்தானும - பேரொளி வெளிப்பட்டு மிக்குவிளங்கப் பெற்றவனும்,—சாலம் நிறைந்தானும்-மாயை நிரம்பியவனும்,—ஆலம் உறைந்தானும் - ஆலிலையில் வாசஞ்செய்பவனும்,—சலம் மலை வென்றானும் - அசைகின்ற மலைபோன்ற (குவலயாபீடமென்னும்) யானையைக் கொன்று வென்றவனும்,—சூலம் மலை நின்றானே - சிறந்தசோலைமலையில் நின்ற அழகனேயாவன்; (எ - று.)

காமனைவாய்த்தான் என்றது - கண்ணபிரானுக்கு ருக்மிணிப்பிராட்டியின் திருவுதரத்தில் மன்மதாம்சமாய்ப் பிரத்யும்நனென்னுங் குமாரன் தோன்றினதை யுட்கொண்டு. நீலம்-நீலநிறமுடைய கடலுக்குப் பண்பாகு பெயர். நீலம் மதித்தல் - ஸ்ரீராமாவதாரத்தில் இலங்கைக்குச் செல்ல வருணனைவழிவேண்டியபொழுது சுடுசரமெய்து கடலைக் கலக்கிய தென்றாயினும், கூர்மாவதாரத்தில் க்ஷீராப்தியை மதனஞ்செய்த தென்றாயினுங் கொள்க. இரண்டாமவகையில் திருப்பாற்கடல் வெளுத்தநிறத்ததாயினும், திருமாலினது திருமேனியினது நிழலீட்டாலே கறுத்த நிறத்த தாதலால், 'நீலம்' என்றாரென்க; "நீலக்கடல்கடைந்தாய்" என்றார் நம்மாழ்வாரும். சாலம்-ஜாலம். சால நிறைந்தானெனப் பிரித்து,(உலகமெங்கும்) மிகுதியாக நிரம்பியிருப்பவ னென்றுமாம். ஆலம், அம-சாரியை. அசலமாகிய மலையை விலக்குதற்கு, 'சலமலை' என்றார்.

இது - ஒன்று மூன்று ஐந்து எழு மாச்சீர்களும, இரண்டு நான்கு ஆறு எட்டு புளிமாங்காய்ச்சீர்களுமாகிய எண்சீராசிரியவிருத்தம். (௩௬)

[கைக்கிளை.]

௩௭ மலைதாங்குமாயர்வனகிரிக்கேமழைதாங்கிச்சந்த்ர
கலைதாங்கியிந்த்ரசிலைதாங்கிக்கஞ்சமுந்தாங்கியங்கே
கொலைதாங்குநீலங்குமிழாம்பலுந்தாங்கிக்கொடியொன்றின்மே
னிலைதாங்குகோங்குமுந்தாங்கியோர்பூங்கொம்புநிற்கின்றதே.

(இ - ள்.) மலை தாங்கும் - கோவர்த்தனகிரியைக் குடையாக எடுத்துப்பிடித்த, மாயர் - மாயையுடைய அழகரது, வன கிரிக்கே - சோலைமலையிலே, மழை தாங்கி - காளமேகத்தைத் தாங்கி, சந்த்ர கலை தாங்கி - சந்திரன்பங்கை [பிறைச்சந்திரனை]த் தாங்கி, இந்த்ர சிலை தாங்கி - இந்திரனது வில்லைத் தாங்கி, கஞ்சமும் தாங்கி - தாமரைமலரையுந் தாங்கி, அங்கே - அத்தாமரைமலரினிடத்தே, கொலை தாங்கும் - கொல்லுதற்றொழிலைப் பயின்ற, நீலம் - நீலோற்பலமலரையும், குமிழ் - குமிழம்பூவையும், ஆம்பல் - செவ்வாம்பல்மலரையும், தாங்கி—, கொடி ஒன்றின்மேல் - ஒரு கொடியின்மேலே, நிலை தாங்கு கோங்கமும் - சாயாமல் நிற்றல்பொருந்திய கோங்கரும்புகளையும், தாங்கி—,ஓர் பூ கொம்பு - பூக்களையுடைய ஒருமரத்தின் கொம்பு, நிற்கின்றதே - நிற்கின்றது (என்ன வியப்போ)! (எ - று.)

இது - பொழில்விளையாட்டுவிருப்பால் தோழிமார்கூட்டம் நீங்க, அப்பொழிலினிடத்துத் தனித்துநின்ற தலைமகளை, வேட்டைவிருப்பால் தோழர்நீங்கத் தனியனாய் வந்த தலைமகன் கண்ணுற்று 'இஃது ஒருவியப்பு என்?' என்றது; காட்சி என்னும் அகப்பொருட்டுறை: "திருவளர் தாமரை சீர்வளர் காவிக ளீசர்தில்லைக், குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள் கொண் டோங்குதெய்வ, மருவளர் மாலை யோர்வல்லியி னொல்கி யன நடைவாய்ந், துருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன் றொளிர்கின் றதே" என்றார் திருக்கோவையாரிலும். மலையினிடத்தே, கருங்குழலைத் தாங்கி, வளைந்த நெற்றியைத் தாங்கி,வளைந்த புருவங்களைத் தாங்கி,அழகிய முகத்தைத் தாங்கி,அம்முகத்தினிடத்தே கொலலுதற்றொழில்பயின்ற கண்களையும் மூக்கையும் அதரத்தையுந் தாங்கி, நுண்ணியஇடையின்மேற் பருத்த படாமுலைகளையுந் தாங்கிப் பூங்கொம்புபோல ஒல்கி ஒசிகின்றதொரு கொடி நிற்கின்றன தென்பது தோன்ற நின்றமையின்,'மழை' முதலியன-உவமையாகுபெயர்கள். இவ்வாறுவருவதனை அலங்காரநூலார் **உருவகவுயர்வுநவிற்சியணி** யென்பர்.

ஆயர் எனப்பிரித்து - ஆய்ப்பாடியில் வளர்ந்தவ ரென்றுமாம். கிரிக்கு-உருபுமயக்கம். கொலைதாங்குநீலம என்றது - கண்கள் காமநோயை உண்டாக்கி மிக வருத்துதலால்

இது - நிரையசை முதலதாகிய **கட்டளைக்கலித்துறை.** (௫௭)

௫௮ தேனைபபழித்தவிசைக்குயிலகாள்செமமாநதழைக்கபபுறப் பட்டீர்,சோனைப்புயல்போலனங்கனமபுதொடுததானினிமேற்றொட பபோமோ, வானைககரசனிடுக்கணிருட்கருணோதயமபோலிமைத்த செம்பொற், றானைததிருமாலலங்காராதநதாரிநதாதநதாரே.

(இ - ள்.) தேனை பழித்த - தேனையும (இனியதனறென்று) வெறுக்கும்படி மிகவும் இனிமையான, இசை - கூவுகிற ஒலியையுடைய, குயில்காள் - குயில்களே! செமமாநது - களித்து, அழைகக - கூவுதற்கு, புறப்பட்டீர் - வெளிப்பட்டு வந்தீர்கள்! [செம் மா தழைககு அப்புறப்பட்டீர - சிவந்த மாமரத்தின் தளிருக்கு அப்பாலானீர்கள]; அனங்கன் - மன்மதன், சோனை புயல் போல் - விடாமழைபெய்கின்ற மேகம்போல, அம்பு - (மாமலர் முதலிய) தன் அமபுகளை,தொடுத்தான்-(முன்பு) எய்தான்;இனிமேல்— தொட போமோ—? ஆனைக்கு அரசன் - கஜேந்திரனது, இடுக்கண் - (முதலையால் வந்த) துன்பமாகிய, இருட்கு - இருளைத் தீர்ப்பதற்கு. அருண உதயம் போல் - (சூரியன்பாகனாகிய) அருணனது உதயம்போல. இமைதத-விளங்குகின்ற, செம் பொன் தானை - சிவந்த பொன்மயமான பீதாம்பரததையுடைய, திருமால் அலங்காரர் - ஸ்ரீயஃபதியான அழகர், தம தார்-தமது மாலையை, இந்தா - இது தரப் பெறறுக்கொள் (என்று), தந்தார்-கொடுததார்.

இது, தலைவனதுதார்பெற்ற தலைவி மகிழ்ந்துகூறியது.

அருணோதயம்-வடமொழிப்புணர்சசி; குணசந்தி. இந்தா-மரூஉமொழி.

இது - மூன்றாஞ் சீரும் ஆறாஞ்சீருங் காய்சசீர்களும், மற்றை நான்கும் மாசசீர்களுமாகிய **அறுசீராசிரியவிருத்தம்.** (௫௮)

**[இரங்கல் - மடக்கு.]**

௫௯. தாரமருங்காமனைப்புளளைதைக்குமருங்காமனைப்புள்ளே சரக்கோடங்கங்குலைபடவேதகுமோவங்கங்குலைபடவே, வேரோடிணபவளவனமேவிடமோவின்பவளவனமே மேகம்பாவிவருந்திடரே விதிகாண்பாவிவருந்திடரே, மாரனுமடை வாட்கேதகையேபயல்கொ

ண்டுடைவாட்கேதகையே மணந்தவிராவம்பொருகமேவந்தவிராவம்பொருகமே, யாரங்கடுக்குமென்னுரையே யாருக்கடுக்குமென்னுரையே யலேகவராவெண்ணந்தினமேயழகாவராவெண்ணந்தினமே.

(இ - ள்.) தாமம் மருங்கு ஆம் - பெடையன்னத்தின் அருகிலே பொருந்திய அனம் புள்ளே - அன்னப்பறவையே! அரு - (பொறுத்தற்கு) அரிய, காமன் அம்பு - மன்மதனது பாணம். உள்ளே - மனத்திலே, தைக்கும் - தைத்து வருத்தாநின்றது; சாகோடு - பலகைப்பண்டங்களுடனே. அங்கு அங்கு உலை - அவ்வவ்விடங்களில் திரிகின்ற, படவே - படகே! அங்கம் - எனது உடம்பு, குலைபட - (காமநோயால்) வருத்தப்பட, தகுமோ - தக்கதோ? வேறு ஓடு - வேறொன்றிப்பாவிப்பிருக்கின்றன. இன் - இனிய. பவளம் மனமே - பவழக்காடே! இன்பம் - இனிமையாக ஊட்டப்படுகிற, வளம் அனம் - வளப்பத்தையுடைய சோறு. விடமோ - விஷந்தானோ? மேகம் பாவி வரும் - மேகத்தை யளாவி உயர்ந்த, திடரே - மணற்குன்றே! பாவி - தீவினையையுடைய யான். வருந்த - வருத்தப்படுகிற, இடர் - துன்பம், விதிகாண் - ஊழ்வினையின் பயனேகாண்; மாரன் உடை யாள் - மன்மதனது உடையாளாகிய, கேதகையே - தாழையே! மபல கொண்டு உடைவாட்கு - காமமயக்கங்கொண்டு வருந்துகிற எனக்கு. அகை - (துன்பத்தைத் தீர்க்கும்) பரிகாரம், ஏது - என்ன இருக்கிறது? மணம் தவிரா - வாசனை நீங்காத [புதிதாக மலர்ந்த]; அம்போருகமே - தாமரையே! வந்து இரா - வந்த இராத்திரி, வம்பு ஊர் உகமே - கொடியதொரு யுகத்துக்கு ஒப்பானதேயாம்; ஆரம் கடுக்கும் - முத்துக்களைநெருங்கிய, மெல் நுரையே - மெல்லிய கடல்நுரையே! என் உரை எனது வார்த்தை, ஆருக்கு அடுக்கும் - யாருக்குப் பொருந்தும்? அலைக்க வரா - அலைகளால் சாரப்படாத [அலைகளின் புறத்தேயுள்ள]. வெள் நந்து இனமே - வெள்ளிய சங்குகளின் கூட்டமே! தினம் - நாள்தோறும். அழகா வரா எண்ணம் - அழகர் மீண்டுவாராத நினைப்பே(உள்ளது.)

இது-பிரிந்துஉறைகின்ற செயதல்நிலத்துத் தலைமகள் அங்குள்ள பொருள்களை நோக்கித் தானபடும் வருத்தங் கூறி இரங்கியது.

'தாமமருங்காம அனப்புள்ளே' என விளித்தது. நீ உனது துணையைவிட்டுச் சற்றும் பிரியாது கூடிவாழ்வதுபோல, யானும் என் துணைவரோடு கூடி வாழவேண்டாமோ? என்ற குறிப்பு அனப்புள் என்பதில். அனம் - ஹம்ஸமென்னும் வடமொழியின் திரிபு. அம்பு-அப்பு என வன்றொடர் மென்றொடராயிற்று, "எவ்வனம்" என்பதில். அனம் - அந்நமென்னும் வடமொழியின் திரிபு. உடையாட்கு-தன்னைப் படாகையாக வைத்துக் கூறிய இடவழுவமைதி. அகை - மாற்று. உடையாட்கேதகையே எனப்பிரித்து-வருந்துகிற எனக்கு (இது) தகுதியோ? என்றாயினும், வருந்துகிற எனக்கு (அவ்வருத்தத்தைத்) தகைவா யென்றாயினும் பொருள்கொள்ளலாம். அம்போருகம் - நீரில் முளைப்பது. துணைவரைப் பிரிந்தவர்க்கு ஒருகணப்பொழுதும் பெரிய யுககாலம்போல நீடித்ததாகக் காணப்படுமாதலாலும், இராத்திரியில் வருத்தம் விஞ்சுதலாலும். 'வந்தவிரா வம்போருகமே' என்றது; "கங்குற்போது குவாலுகமே" என்றார் முன்னோரும். ஆரங்கடுக்கும் - முத்தைப்போல வெண்மையான என்றுமாம். 'ஆருக்கு அடுக்கும் என்னுரையே' என்றது - யான் வருத்தத்தோடு புலம்புகிற வார்த்தையைக் கேட்டு மனமிரங்கி எனதுயரத்தைத் தீர்ப்பவர் ஆரென்றபடி.

இது, கீழ்க்கவிபோன்ற அடிகள் இரட்டித்து வந்த பன்னிருசீராசிரிய விருத்தம். (௩-௬)

௪௦. தினகரனு மபபாலவெண் டிங்களுங்கா ரென்ன
வனகிரிவாழ் காயாம்பூ வண்ணா—வனகா

வறவேத விதம்தந்நின் னம்புயத்தாள் காணா
தறவேத வித்தே னருள்.

(இ - ள்.) தினகரனும் - (தன் ஒளியால்) பகலைச்செய்பவனாகிய சூரியனும், அம் பால் வெள் திங்களும் - பால்போல் வெளுத்த அந்தச் சந்திரனும், கார் என்ன - கருநிறமுடையவரென்னும்படி, வனகிரி வாழ் - சோலைமலையில் வாழ்கிற, காயா பூ வண்ணா - காயாமலர்போன்ற திருநிறமுடையவனே! அனகா - குற்றமற்றவனே! அறம் வேதம் வித்தே - தருமத்துக்கும் வேதத்துக்கும் முதற்காரணமானவனே! — நின் அம்புயம் தாள் - உனது தாமரைமலர்போலுந் திருவடிகளை, காணாது - தரிசிக்கப்பெறாமல், அறவே தவித்தேன் - மிகவும் வருந்தினேன்; அருள் - (அத்திருவடியின் தரிசனத்தைத்) தந்தருள்வாயாக; (எ - று.)

முதல் இரண்டடிக்குக் கருத்து - ஆயிரங் கிரணங்களையுடைய செந்நிறமமைந்த சூரியனும், பதினாறுகலைகள் நிரம்பிய வெண்ணிறம் பொருந்திய சந்திரனும் எம்பெருமானது திருமேனியின் திவ்வியதேஜசுக்கு முன்னே கரியஇருளோடு ஒப்ப எண்ணப்படுவ ரென்பது. இனி, காரென்ன என்னுமிடத்தில் எண்ணும்மை தொக்குநின்றதாக் கொண்டு, சூரிய சந்திரர்களும் காளமேகமும்போலத் (திருவாழி திருச்சங்குகளுந்) தானுமாய் விளங்கி வாழ்கின்ற என்று உரைப்பினும் அமையும். அற வேத வித்தே - தருமநெறியை ஓதுகின்ற வேதத்தை அறிந்தவனே என்றுமாம்.

இது, மலரென்னும் வாய்பாட்டால் முடிந்த இருவிகற்பநேரிசை வெண்பா.
(௪0)

[களி.]

௪௧ அருணன்பரிபோற்பரியிலகவமரில்விசயனதேர்கடவு மழ
கரிணையில்குழகரெமையாளும்பெருமாள்வாளரக்கர், செருவென்றி
றுத்தார்மதுவார்க்குஞ்செயலைமுடித்தார்பின்னுமன்பர் தேனுக்கலை
யாமற்கருணைசெய்தா ரவர்தந்திருவடிகள், கருதுங்களியேங்கனம
டத்தைக்கழுவுமினியவினையடையுங் கஞ்சாக்கருக்குவகைநிறையுங்
கற்பத்தயன்வீழ்ந்தனனன்று, குருவிசாரமச்சமறுங்குலவாரணங்
கண்முன்படியுங்குறும்பாட்டையுமோதிடுமவாருங்குடியும்படையும
வேண்டியவே.

(இ - ள்.) (நாங்கள்), அருணன் பரிபோல - அருணனால் ஓட்டப்படுகிற சூரியனது குதிரைகள்போல, பரி - குதிரைகள், இலக - விரைந்தோடி விளங்கும்படி, அமரில் - பாரதயுத்தத்தில், விசயன் தேர் கடவும் - அருச்சுனனது தேரைச் செலுத்திய, அழகர் - அழகரும், இணை இல குழகர் - ஒப்பில்லாத இளமையையுடையவரும், எமை ஆளும் பெருமாள் - எங்களை அடிமையாகக்கொண்ட பெருமையையுடையவரும், வாள் அரக்கர் - வாள் போற் கொடிய ராக்ஷஸர்களது, செரு - யுத்தத்தில், வென்று - (அவர்களை) வெற்றிகொண்டு, இறுத்தார் - அழித்தவரும், மது ஆர்க்கும் செயலை - மது வென்னும் அசுரன் ஆரவாரித்துப் போர்செய்துவருகிற தொழிலை, முடித்தார் - ஒழித்து அவனைக் கொன்றவரும் [மது வார்க்கும் செயலை முடித்தார் - கள்ளை வார்க்கின்ற தொழிலைத் தாம் முடித்தவரும்], பின்னும் - மேலும், அன்பர் தேனு கலையாமல் கருணைசெய்தார் - (தமக்கு) அன்பினராகிய ஆயரது பசுக்கள் கலைந்துபோகாதபடி (குழலூதிக் குவித்து) அருள்செய்தவரும் [அன்பர் தேனுக்கு அலையாமல் கருணை செய்தார் - அன்பர்கள் மதுவுக்கு அலையாதபடி கொடுத்தருளினவரும்], (ஆகிய), அவர்தம் - அவ்வெம்பெரு

மானது, திரு அடிகள் - சீர்பாதங்களை [திரு வடி கள் - மேன்மையான வடித்தெடுத்த கள்ளை], கருதும் - தியானிக்கின்ற [விரும்புகிற], களியேம் - மகிழ்ச்சியுடையவர்களாவோம் [களிப்புடைய கட்குடியராவோம்]; கணம் மடத்தை கழுவும் - (நீங்கள்) நிறைந்த அஜ்ஞானத்தைப் போக்குங்கள் [கணம் அடத்தை கழுவும - (குடிக்கக்கூடாதென்கிற) பெரும்பிடிவாதத்தை விடுங்கள்]; இனிய வினை அடையும் - நற்காரியத்தைச் செய்யுங்கள் [சதாசாரத்தை ஒழியுங்கள்]; கஞ்ச அக்கருக்கு உவகை நிறையும - தாமரைமலர்போலுந் திருக்கண்களையுடைய எம்பெருமானுக்கு (உங்கள்திறத்தில்) நிரம்பத் திருவுள்ளவுகப்பு உண்டாம்படி செய்யுங்கள் [கஞ்சா கருக்கு வகை நிறையும் - கஞ்சா முதலிய மயக்கந்தரும் பலவகைப்பொருள்களைக் கொண்டு வந்து நிரப்புங்கள்]; கற்பத்து அயன் வீழ்ந்தனன் அன்று - பிரமன் (உங்களைக்) கருப்பத்திற்பிறப்பிக்க விரும்பினவனல்லன் [கல்பமென்னும் ஆயுள் நாளையுடைய பிரமனும் முன்னே (கள்ளை)விரும்பினான்]; குரு விசாரம அசசம் அறும் - மிக்க கவலையையும அச்சத்தையும நீக்குங்கள் [குருவி சாரம் மச்சம் அறும் - குருவிகளையும சாரமான மீன்களையும் அறுங்கள்]; குலவு ஆரணங்கள் முன் படியும் - விளங்குகிற வேதங்களை முன்னே படியுங்கள் [குலம் வாரணங்கள் முன்பு அடியும - கூட்டமான கோழிகளை முன்னே அடியுங்கள்]; குறும்பாட்டையும் மோதிடும் - பொல்லாங்கையும் நீக்குங்கள் [குறும்பாடு என்கிற ஆடுகளையும அழியுங்கள்]; வாரும் - கூடவாருங்கள் [(கள்ளை)வாருங்கள்]; குடியும் படையும் வேண்டியவே - (எம்பெருமானை அடைவதற்கு) உயர்குடிப்பிறப்பும் மற்றை உபகரணங்களும் வேண்டுவன வோ? (வேண்டுவனவல்ல) [குடியும் - குடியுங்கள்; வேண்டிய படையும் - வேண்டுவனவற்றையெல்லாங் கொண்டுவந்து உண்கலத்திலிடுங்கள்]; (எ - று.)

கட்குடியர் அக்கள்ளைச் சிறப்பித்துக்கூறுவதாகச் செய்யுள்செய்வது, களியென்னும் உறுப்புக்கு இலக்கணமாம்.

பாகவதர்க்குங் கட்குடியர்க்குஞ் சிலேடையாகச் சொல்லப்பட்டது, இச்செய்யுள்.

மதுவார்க்குஞ் செயலை முடித்தார் - திருப்பாற்கடல்கடைந்து எடுத்த அமிருதத்தைத் தேவர்க்கு வார்க்கிற செய்கையை முடித்தவரென்றும், தேனைப்பெருக்குகின்ற மாலையை அணிந்தாரென்றுமாம. கஞ்சாக்கர் - கஞ்ஜாக்ஷரென்னும வடமொழியின் விகாரம; கஞ்ச அக்ஷ எனப்பிரிக்க: தீர்க்க சந்தி. கஞ்சா - கள்ளுமாம். கற்பம் - முறையே கல்பம், கர்ப்பம் என்பவற்றின் விகாரம். குறும்பாட்டையும ஓதிடும் என்றபிரித்து - சொற்சுருங்கியபாடல்களையும் ஓதுங்களென்றுமாம்; இதற்குப் பிறவாறு பொருள் கூறுவாருமுளர்; அவை பொருந்துமாயிற் கொள்க.

இது, முப்பத்தொன்பதாங் கவிபோன்ற பன்னிருசீராசிரியவிருத்தம்.

[பறவைவிடுதூது.]

சஉ வேண்டலர்நகைக்கவொருபாங்கியுமவெறுக்கவனை வேங்கையினதட்டமதன்வில்லாலே, தூண்டில்படுமச்சமெனநான்பதைபதைக்கும்விதிதூங்கியிரைகுத்திநிமிர்புள்ளீரே, பாண்டவர்துதிக்கமயில்கூந்தல்சொருகத்தவள பாஞ்சசனியத்தொனிசெய்செவ்வாய, ராண்டுதுருவற்குநிழலீந்தவனவெற்பிலெனையாண்டவழகர்க்கினிது சொல்லீரே.

(இ - ள்) தூங்கி - (தனது இரைக்குத்தக்கமீன் வந்துகிடைக்குமளவும் உயிரில்லாததுபோலத்) தூங்கியிருந்து, இரை குத்தி - இரை அகப்பட்டபொழுது (தப்பிப்போவதற்குமுன்னே விரைந்து) குத்தி, நிமிர் - தலையெடுத்து விளங்குகிற, புள்ளீரே - பறவைகளே! — வேண்டலர் நகைக்க - விருப்பமில்லாத

அயலார் சிரித்துப் பழிதூற்றவும், ஒரு பாங்கியும் வெறுக்க - (உயிருக்கொப்பான) ஒப்பற்ற தோழியும் வெறுத்துவிடவும், அன்னை - பெற்றுவளர்த்த தாய். வேங்கையின் அதட்ட - புலிபோல அதட்டிப்பேசவும். நான்—மகன் வில்லாலே - மன்மதனது வில்லினால் (எய்யப்பட்டு). தூண்டில் படும் மச்சம் என - தூண்டிலில் அகப்பட்டு வருத்தப்படுகின்ற மீனைப்போல. பதைபதைக்கும்படி மிகவும் வருந்துகிற. விதி - ஊழ்வினைப்பயனை,—பாண்டவர் துதிக்க - பாண்டவர்கள் தோத்திரஞ்செய்ய. (அதற்கு இரங்கி), மயில கூந்தல் சொருக - மயில்போன்ற திரௌபதி விரித்தகூந்தலை எடுத்து முடிக்கும்படி, தவள பாஞ்சசன்னியம் தொனி செய் - வெண்மையான பாஞ்சஜந்யமென்னுஞ் சங்கத்தின் ஒலியைச் செய்த. செம் வாயர் - சிவந்த வாயை யுடையவரும், ஆண்டு - அப்பொழுது [முன்காலத்தில்]. துருவற்கு - துருவனுக்கு, நிழல் ஈந்த - நல்ல இருப்பிடத்தைக் கந்தருளியவரு மாகிய, வன வெற்பில் - சோலைமலையில் எழுந்தருளியிருக்கிற, எனை ஆண்ட - என்னை அடிமையாக அங்கீகரித்தருளின, அழகர்க்கு - அழகருக்கு, இனிது - இனிமையாக, சொல்வீர் - சொல்லுங்கள், (எ - று.)

இது, தலைவி தன்னைப்பிரிந்த தலைவனிடத்திற் பறவைகளைத் தூது விடுத்தது.

அனை - அன்னை; விகாரம். தூண்டில் - மீன்பிடிக்குங் கருவி. மச்சம் - மத்ஸ்யம். பாண்டவர் - பாண்டுமக்கள்; தத்திதாந்தநாமம்.

பஞ்சபாண்டவர்களின் மனைவியாகிய திரௌபதியைத் துரியோதனன் துச்சாதனனைக்கொண்டு கூந்தலைப்பிடித்து இழுத்துச் சபையிற் கொணர்ந்து துகிலை உரிந்தும், தன்மடிமேல் உட்காரென்று சொல்லியும் பங்கப்படுத்தினபொழுது, 'துரியோதனாதியர் நூற்றுவரையுங் கொன்று அவர்களிரத்தத்தில் நனைத்தாலன்றி விரிந்த கூந்தலை எடுத்து முடித்து அலங்கரிப்பதில்லை' என்று சொல்லிச் செய்த அவளுடைய சபதத்தை நிறைவேற்றுதற்குக் கண்ணபிரான் பாரதயுத்தத்தில் பாண்டவர்பக்கல் துணையாய்நின்று துரியோதனாதியரைக் கொல்வித்து ஜயசங்கம் ஊதினதனால், இவ்வாறு கூறினார். பஞ்சஜநனுடைய சம்பந்தத்தினால், கிருஷ்ணனுடைய சங்கத்துக்குப் பாஞ்சஜந்யமென்று பெயர் வந்தது; கிருஷ்ணபலராமர்களது ஆசாரியராகிய சாந்தீபிநி யெனனும் பிராமணனுடைய புத்திரனைக் கொண்டுபோன சங்கினுருவங்கரித்துச் சமுத்திரஜலத்தில் வாசஞ்செய்கிற பஞ்சஜநனென்கிற அசுரனைக் கண்ணன் கொன்று அவனெலும்பினாலுண்டான உத்தம சங்கத்தை எடுத்துக்கொண்டாரென்பது பாஞ்சசன்னியத்தின் வரலாறு.

துருவனுக்குநிழலீந்த வரலாறு —உத்தானபாதன் எனனும் அரசனது மூத்தமனைவியாகிய சுநீதியினது குமாரனாகிய துருவன், தன் மாற்றாந்தாயான சுருசியின் புத்திரனை உத்தமன் தன் தகப்பனது மடியில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்துத் தானும் அப்படி உட்காரவேண்டுமென்று கிட்டபோனபொழுது, சிறியதாயினாலும் அவள்வார்த்தைக்கு இணங்கின தகப்பனாலும் அவமதித்துத் தள்ளப்பட்டவனாய். மிகவும் மனம்வருந்தி எல்லாவற்றினும் மேற்பட்ட ஸ்தானத்தைப் பெறவேண்டுமென்று எண்ணித் தாயாருடைய அனுமதிபெற்று வனத்துக்குச் சென்று ஸப்தரிஷிகளிடத்தில் துவாதசாக்ஷரமகாமந்திர உபதேசம் பெற்று ஸ்ரீமகாவிஷ்ணுவைத் தியானித்துக்கொண்டு கடுந்தவஞ்செய்ய, அவ்வெம்பெருமான் அந்த ஐந்து பிராயத்துச் சிறுவனது பெருந்தவத்துக்குத் திருவுள்ளமுவந்து பிரத்யக்ஷமாகி, அவன்பிரார்த்தனையின்படி, மூன்றுஉலகங்களுக்கும் மேற்பட்டதாய், சகல தாரா கிரகநக்ஷத்திரங்களுக்கும் ஆதாரபூதமாய், சூரியசந்திராதியரது ஸ்தானங்களுக்கும் அதியுன்னதமாய் விளங்குகிற திவ்வியஸ்தானத்தைத் தந்தருளிக் கற்பகாலபரியந்தம் சுகமாகவாழும்படி அனுக்கிரகித்தாரென்பதாம்.

இது - பெரும்பாலும் ஈற்றுச்சீர் மூன்று தேமாங்காய்ச்சீரும், மற்றைய ஆறும் கூவிளங்காய்ச்சீர்களும் ஆகிய எழுசீராசிரியச்சந்தவிருத்தம். (௬௪)

[தழை.]

௬௫ சொல்லிடபாசல மாயாநன் னாட்டிற்சுடர்க்கொதுங்கு
மல்லிடாநீர்க் குழலாய்நின் படாமுலையானை கண்டால்
மல்லிடறுந் திணபுயத்தார் கனகவளை நிரைப்பார்
புல்லிடவுஞ் செய்வார்நீ தா பிடியென் றிப்பூந்தழையே

(இ-ள்.) சொல் (யாவராலுந் துதித்துச்) சொல்லப்படுகிற, இடபாசலம் - ரிஷபகிரியில் எழுந்தருளியிருக்கிற, மாயா - மாயையையுடைய திருமாலினது, நல் நாட்டில் - நல்லநாட்டில் பொருந்திய, சுடர்க்கு ஒதுங்கும் அல் இடா நீர்க்குழலாய் - (சூரியன் சந்திரன் அக்கினி என்கிற) மூன்று ஒளிகளுக்குமுன் நிற்கமாட்டாமல் அஞ்சிப் பதுங்குகிற இருளினது துன்பத்தைத் தீர்க்கிற [இருட்சிக்குத் தங்குமிடமான] கருங்கூந்தலையுடையவளே! நின் - உனது, படா முலை யானை - சாயாத தனங்களாகிய யானையை, கண்டால் - பார்த்தால், மல் இடறும் திண் புயத்தார் - (கம்சனாலேவப்பட்ட) மல்லர்களை அழித்த வலிய தோள்களையுடைய தலைவர், கனகம் வளை நிரைப்பார் - பொன்னாலாகிய கைவளைகளை (உனக்கு நிரம்ப) அணிந்திடுவார் [கனம் கவளை நிரைப்பார் - பருத்த கவளத்தை ஒன்றன்பின் ஒன்றாக முறையே தருவார்]; புல்லிடவும் செய்வார் - ஆலிங்கனஞ் செய்யும்படியாகவும் அருள்செய்வார் [அணைத்துக் கட்டவுஞ் செய்வார்]; இப் பூ தழை - இந்தப் பொலிவுள்ள தழையை, பிடி என்று நீ தா - பிடி என்று சொல்லிக்கொடுத்தார்.

இத்துறை, தலைமகளைக் குறைநயப்பித்துச் சேட்படைகூறத் துணிந்து நின்ற தோழியிடத்தில் தலைமகன் தழைகொண்டுசென்று 'இத்தழையை வாங்கிக்கொண்டு என்குறை முடித்தருளவேண்டும்' என்று வேண்ட, அதனை அருமையாக ஏற்றுக்கொண்ட தோழி, தலைமகளிடஞ் சென்று அவள் குறிப்பறிந்து 'இத்தழை நமக்கு எளிய தொன்றன்று, இதனை ஏற்றுக்கொள்வாயாக' எனத் தலைமகளைத் தழை ஏற்பித்தது.

படாம் எனப் பிரித்து, படமெனனும் வடசொல்லின் விகாரமாகக் கொண்டு, கச்சினால் கட்டப்பட்டுள்ள முலையென்றுமாம். கொங்கைகளுக்கு யானையின் கொம்புகளையும் மஸ்தகங்களையும் உவமையாகக் கூறுவது மரபாதலால், 'முலையானை' என்றார். மல் இடறும் - வலிமைபொருந்திய என்றுமாம். கவளம் - கபளமென விகாரம். புல்லிடவுஞ்செய்வார் என்பதில் - புல்லை இடச்செய்வாரென்றும், பிடி என்று என்பதில் - பெண்யானையென்று என்றும் பொருள்படும்.

இது, நேரசை முதலதாகிய கட்டளைக்கலித்துறை. (௬௫)

[பாண்]

௬௬ தழைவிருந்தவனத்தர் பூமிசைக்குழைவிருந்தவனத்தனைத் தந்தசுந்தரராசர் மேகசவர் தம்பதங்களினினைவிலை, நிழைமருங்குடைவாணியுந்தொழவிங்கொர்பாணருளாரவரிசைபுந்திடுகாதின்மற்றவரிசைபுகாதுதகாதுநீ, மழைதொடுங்கொடிமாடவீதியில்வந்ததேழிழையியிறையிவண் வரத்தைவிட்டனர்ஞானமவந்துபரத்தைநச்சினாவினையும், பழையபேச்சுரையுந்தொடுத்தனைபுதியபேச்சுரைகாணது பாடினிக்குமவட்கெழுந்தருள்பாடினிக்குமணாளனே.

(இ-ள்) பாடினிக்கு மணாளனே - கீதம்பாடுகின்ற மகளுக்குக் கணவனான பாணனே!— தழை விருந்த வனத்தர் - செழிப்பான பிருந்தாவனத

தில் (கிருஷ்ணாவதாரத்தில்) எழுந்தருளினவரும், பூமிசை-(தமது)நாபீகமல மலரில், குலவுஇருந்த அனத்தனை-மென்மைபொருந்தியஅன்னப்பறவையை வாகனமாகவுடைய பிரமனை, தந்த-பெற்ற, சுந்தர ராசர் - அழகப்பிரானும்,கேசவர்தம்-கேசவனென்னுந் திருநாமமுடையவருமாகிய எம்பெருமானது,பதஙகளில் - திருவடிகளிலேயே, நினைவினா - நினைப்பையுடையவராகிய,ஓர்பாணர்-ஒருபாடல்பாடுபவர்,இழைமருஙகு உடை வாணியும் தொழ-நூலிழைபோன்ற இடையையுடைய (இசைமகளாகிய) ஸரஸ்வதியும் (பாட்டுக்குத் தோற்று) வணங்கும்படி, இஙகு - இவ்விடத்தில, உளார் - இருக்கின்றார்; அவர் இசை புகுந்திடு காதில - அப்பாணருடைய இசைப்பாடல் நுழைந்த காதிலே, மற்றயவர் இசை புகாது - மற்றைப் பாணர்களுடைய பாடல் நுழையாது; - நீ—, மழை தொடும கொடி மாடம் வீதியில் - மேகமண்டலத்தை அளாவுகிற துவசஙகளையுடைய மாளிகைகளையுடைய இவ்வீதியிலே, வந்ததே - வந்ததுவே, பிழை - தவறும்; தகாது - தக்கதன்று; இறை - நாயகர், இவண் வரததை விட்டனா - இங்கே வருதலை விட்டுவிட்டார் [இம்மையிற் பெறுகிற வரஙகளை விட்டார்]; ஞானம் வந்து பாததை நச்சினர் - அறிவுகெட்டு விலைமகளை விரும்பினார் [தத்துவஞானமுண்டாகிப் பரகதியை விரும்பினார்]; வீணையும் பழைய பேசசு உரையும் தொடுத்தனை - வீண்வார்த்தைகளையும் முன்னே பேசிப்பேசியுள்ள பழம்பேசசுக்களையுமே தொடுத்துசசொன்னாய்[வீணையையும் அதிறகட்டியபழமையான பேய்சசுரைக்காயையும் பிடிதது வந்தாய]; அது - இப்பொழுது நீ சொல்லுகிற வார்த்தை, புதிய பேசசு உரை காண் - புதுமையான வெறும்பேசசு வார்த்தைதான்; இனிக்குமவட்கு - இனிப்பாகக் கேட்குமவளிடதது,பாடு-(உன்கீததகதைப்) பாடு [என்னிடத்திற் பாடவேண்டா மென்றபடி]; எழுந்தருள் - (இஙகே இராமல்) அஙகே புறப்பட்டுப்போ; (எ - று.)

தலைமகளை வரைந்து எய்திய தலைமகன், நாள்தோறும் பாலையே உண்ணுபவன் இடையிலே புளிஙகாடியையும உண்டு அப்பாலின் இனிமையை அறிந்தாற்போலத தலைமகளின் இனிமையை அறியும்பொருட்டு வேசையரிடததுசசென்று இன்பநுகர்ந்து மீண்டுவநது வாயிலில்நின்றுஉள்ளேபோகப் பெறுனாய்,தலைமகளது துனியைத் தீர்தது வாயிலவேண்டுமபடி பாணனொருவனை அனுப்ப, அப்பாணனும இனிய பாடல்களைப் பாடிக்கொண்டு தலைமகளிடஞ்சென்று 'தலைவா உன்னிடதது நீஙகாத பேரருளுடையார' என்று இவ்வாறு புனைந்துரைதது அவளதுஊடலைத தணிவிக்கமுயல,அப்பாணனை நோக்கித தலைமகள் வெகுண்டுகூறியது, இச்செய்யுள்; **'பாணனொடு வெகுளுதல்'** என்னுந் துறை.

விருந்தவனம - வடசொற்றிரிபு. "ஒருபொருளிருசொற்பிரிவில வரையார்" என்னுந் தொல்காப்பியசூத்திரத்த 'வரையார்' என்றதனுல், 'பேசசுரை' என்பது வேறும் ஓர் பொருள் தந்துநிற்றலால் 'பேய்சசுரை' எனவும் நின்றது; இதற்கு யகரவொற்று விகாரததால் தொக்கதாம் "அருஙகழிகாதமகலுமென் றாழென்றலந்துகண்ணீர் வருஙகழி காதல் வனசஙகள்" என்ற திருக்கோவையாரில், 'அலர்ந்து'என்பது அலந்து என்று விகாரப்பட்டு நின்றாற்போல;இதனை,"பாடுசும் பாவைபொற்பே பற்றிமற றெமக்கூசல்கின்" என்ற சிந்தாமணிசசெய்யுளில் 'பொறபே'என்பது-பொன்னுயிருப்பதொரு பேய் என்று பொருளபட்டதற்கு நசசினார்க்கினியர் உரைத்த உரையை நோக்கி அறிக. பாடினி - பாடுந னென்பதன் பெண்பெயர்

௳ இது - முதல் மூன்று ஐந்தாஞ்சீர்கள் மாச்சீர்களும், இரண்டு நான்கு ஆறு ஏழாஞ்சீர்கள் கூவிளச்சீர்களும் ஆகி வந்தது அரையடியாகவும்,அஃதிரட்டிகொண்டது ஓரடியாகவும் வந்த **பதினான்குசீராசிரியவிருத்தம்.** (௪௪)

[ஊசல்.]

௪௫. மணங்கமழ்பூவையுமயிலுந்தமாலக்காடும வண்கிளியுநீல
வெற்புமடமான்கன்று, மிணங்குகடலுந்துகிருங்காருமின்னும்யமு
னையெனுந்திருநதியுமெகினபபேடுங், கணங்குழையகோசலைதேவகி
யசோதைகண்மணியும்பாவையுமபோற்கமலவீட்டி,லணங்கரசினுட
னகுலவியாடிரூச லலங்காரமாயவரேயர்டிரூசல்.

(இ - ள்.) மணம கமழ் பூவையும - வாசனை வீசுகினற காயாமரமும், மயிலும் - (அதில்ஏறி உட்கார்ந்திருக்கிற) மயிலும; தமாலம காடும - பசசிலை மரசசோலையும, வள் கிளியும்-(அதிறபொருந்திய) அழகிய கிளியும; நீலம்வெறபும்-நீலரதநமயமான மலையும, மடம் மான் கனறும்-(அதில் வாழ்கின்ற) இளையபேடைமான்கன்றும்; இணங்கு கடலும் - பொருநதிய சமுத்திரமும், துகிரும் - (அதிறபடர்ந்த) பவழக்கொடியும்; காரும - காாமேகமும், மின்னும் - (அதில்விளஙகுகிற) மின்னற்கொடியும்; யமுனை எனும் திரு நதியும்- யமுனையென்கிற சிறந்த ஆறும, எகினம் பேடும் - (அதில வசிககினற) அன்னப்பேடையும்; கணம் குழைய-பலவாய்ததிரண்ட குழையென்னுங காதணிகளையுடைய, கோசலை - கௌசல்யை, தேவகி—, யசோதை—, (என்ற இவர்களது), கண்மணியும் - கண்ணின் கருமணியும, பாவையும் - (அக்கணணின்நடுவிலுள்ள)விழிப்பாவையும.போல்-போல,கமலம் வீட்டில் அணங்கு அரசினுடன் - செந்தாமரைமலராகிய இருப்பிடத்தில் வாழ்கிற தெய்வமகளிர்க்குத தலைவியான திருமகளுடனே, குலவி - பொருந்தி, ஊசல் ஆடிர்- ஊசலாடுவீராக, அலஙகார மாயவரே - அழகரென்கிற திருநாமமுடைய மாயையையுடைய எமபெருமானே! ஊசல் ஆடிர்—, (எ - று.)

ஊசலாவது-ஆசிரியவிருத்தத்தாலாதல்,கலித்தாழிசையாலாதல் "ஆடிரூசல்," "ஆடாமோவூசல", "ஆடுகவூசல" எனவொன்றால் முடிவுறக் கூறுவது.

பூவை தமாலககாடு நீலவெறபு கடல் கார யமுனை கணமணி - மாலுக்கும், மயில் கிளி, மான் துகிர் மின் எகினம பாவை - திருவுக்கும உவமை.

இது. ஆறுசீர்களைக்கொண்ட எண்சீராசிரியவிருத்தம். (௪௫)

[தவம்.]

௪௬. ஊசிமுனைநின்றுமெனை தாழ்குகைநுழைந்துமெனை யூமரி
ருந்துமெனை வளைபோலே,காசினிசுழன்றுமெனை வானிடைபறந்து
மெனை காயமிதெழுந்துவிழுமவினைபோமோ, நீசரையுமண்டர்செய
சோலைமலையின்கண்முழுநீலமலையுண்டுதொழுமியலாதேற், கேசவ
முகுந்தமதுசூதனவனந்தககேதனவெனுந்தவரினினைவீரே.

(இ-ள்.) தளா இல் நினைவீரே - சோர்தலில்லாத எண்ணத்தையுடையவர்களே!-ஊசி முனை நின்றும-(தவஞ்செய்தற்பொருட்டு)ஊசியினது நுனியில் (ஒருகாலை ஊன்றிக்கொண்டு)நின்றாலும், என - என்னபயன் உண்டு?[ஒன்றுமில்லை யெனறபடி]; தாழ் குகை - உள்ளேநீண்டுசெல்லுகிற மலைக்குகையிலே, நுழைந்தும் - பிரவேசித்து வசித்தாலும, என - என்ன பயன்? ஊமரில் - ஊமைகள்போல. இருந்தும் - பேசாதபடி மௌனவிரதத்தைக கைக்கொண்டிருந்தாலும, என - என்னபயன்? வளைபோலே - சக்கரம் போல, காசினி சுழன்றும - பூமிப்பிரதக்ஷிணஞ் செய்தாலும், என - என்ன பயன்? வானிடை - ஆகாயமாாகத்தில், பறந்தும் - (யோகவலிமையாற்) பறந்து சென்றாலும்,என-என்னபயன? காயம் இது - இவ்வுடம்பு; எழுந்து விழும் - பிறந்து இறததற்குக காரணமான, வினை - முன்னைய் ஊழ்வினை, போமோ - (இத்தவவிரதங்களாற்) போய்விடுமோ ? [போகாதன்றோ]?

தி(பின் எதனாற் கருமந் தீருமென்றால்).—நீசனையும்-மிகவும் கீழ்மக்களையும், ம(தன்னை அடைவாராயின்). அண்டர் செய - சிறந்த தேவர்களாகச் செய்வதற்கு, சோலைமலையின்கண் - சோலைமலையிலே, மூழ நீலமலை-உயர்ந்த நீலரத்தினமயமான பருவதம் போன்ற கரியதிருமால். உண்டு-எழுந்தருளியிருக்கின்றார்; தொழும் - (அவரைச் சென்று சேர்ந்து) வணங்குங்கள்; இயலாதேல்-(அங்ஙனம் அங்குச் சென்றடைவது உங்கட்குக்)கூடாதாயின், —'கேசவ கேசவனே! முகுந்த - முகுந்தனே! மதுசூதன மதுசூதனனே! அனந்த-அநந்தனே! ககேதன - கருடக்கொடியுடையவனே! எனும - என்று (அவன் திருநாமங்களை வாயினால்) சொல்லுங்கள்; (அல்லது மனத்தால் நினையுங்கள்) [இம்மாத்திரமே உமது பேற்றிற்குப் போதுமென்றபடி;] (எ - று)

தவத்தை விலக்கிப் பகவத்தியானத்தை வற்புறுத்துதல், தவமென்னும் உறுப்பின் இலக்கணமாம்.

காசினி - காச்யபீ என்னும் வடமொழியின் திரிபு; (பரசுராமனால்) கச்யபமுனிவர்க்குத் தானஞ்செய்யப்பட்டதென்பது பொருள் சந்தவின்பம் நோக்கி, 'செயச் சோலைமலை' என வலி மிகவில்லை. கேசவன் என்பதற்கு- பிரமனையும் உருத்திரனையுந் தன் அங்கத்திற் கொண்டவனென்றும், அழகிய மயிர்களையுடையவனென்றும், கேசியென்னும் அசுரனைக் கொன்றவனென்றும்; மதுஸூதநன் என்பதற்கு - மது என்னும் அசுரனை அழித்தவனென்றும்; அநந்தன் என்பதற்கு-திருக்கல்யாணகுணங்களுக்கு ஒரு எல்லையில்லாதவனென்றும். அழிவில்லாதவனென்றும் பொருள். 'எனுந் தளரினினைவீரே' என்னுமிடத்தில் - என்று சொல்லிக் துதியுங்கள். (அதுவுங் கூடாதபடி) தளர்ச்சிநோந்தால் நினைத்துத் தியானியுங்கள் என்றும் பொருள் கூறலாம்

இது - பெரும்பாலும் ஈற்றுச்சீர் ஒன்று புளிமாங்காய்ச்சீரும், மற்றை ஆறுங் கூவிளச்சீர்களு மாகிய எழுசீராசிரியச்சந்தவிருத்தம். (௬௬)

௬௭ நினையாதவர்தமையாளலங்காரனைநோக்கிநந்தன
றனையாதவாநண்பவென்றிடபாசலச்சாரலிற்போய்
முனையாதவர்தகைதீர்சிலம்பாற்றின்முடையுடலை
நனையாதவர்சன்மமுஞ்சன்மமோவிந்தநானிலத்தே

(இ - ள்) இடபாசலச்சாரலில்-ருஷபகிரியின் பக்கத்திலே, போய்—, நினையாதவர்தமை ஆள அலங்காரனை - (தன்னை) நினைந்த இடையர்களை அடிமையாகக்கொண்டருளிய அழகப்பிரானை, நோக்கி - சமீபித்து. 'நந்தன் தனையா - நந்தகோப குமாரனே! தவா நண்ப - முனிவர்கட்கு நண்பனே!' என்று - என்று சொல்லி, முனையாது - (பிறப்பறுத்தற்கு) முயற்சிசெய்யாமலும்,—அவர் - அவ்வெம்பெருமானுடைய, தகை தீர் - பிறவித் துன்பத்தைத் தீர்க்கும்படியான. சிலம்பாற்றில் - நூபுரகங்கையிலே, முடை உடலை - முடைநாற்றமுடைய தமது உடம்பை, நனையாதவர் - நனைத்து நீராடாமலும் இருப்பவர்களுடைய, சன்மமும் - பிறப்பும், இந்த நானிலத்தே - இந்நிலவுலகத்திலே, சன்மமோ - ஒரு பிறப்பாமோ? [ஆகாது].

பலபிறவிகளுள்ளுஞ் சிறந்ததாய்ப் பெறுதற்கரிய மானுடஜன்மத்தைப் பெற்றவர் அப்பிறப்பில் தம்பிறவித்துன்பத்தைத் தீர்த்துக்கொள்ளும்படி எம்பெருமானைச் சரணமடைந்து உபாஸனைசெய்யாராயின், அவர் பிறந்த பயனைப் பெறாமையால் பிறவாதவராகவே எண்ணப்படுவரென்பதாம்.

யாதவர் என்னுஞ் சொல்லுக்கு - யதுவென்னுஞ் சந்திரவம்சத்தரசனது குலத்தில் தோன்றியவரென்பது பொருள்; யதுகுலத்தில் திருவவதரித்த கண்ணன் இடையர்வீட்டில் வளர்ந்த சம்பந்தத்தால், இடையர்கள் யாதவரெனப்படுவர். நினையாதவர்தமையாளலங்காரனென்றது - ஒருநாள்

யமுனையில் தீர்த்தமாடுகிற சமயத்தில் ஓர்அசுரனால் வருணலோகத்திற் கொண்டுபோய் ஒளிக்கப்பட்ட நந்தகோபரை ஸ்ரீகிருஷ்ணன் அங்கெழுந் தருளி மீட்டுவந்தபொழுது, தன்னைப் பூசித்த உத்தமபக்தியை அடையவிரும்பிய சகலகோபாலர்களுக்கும் ஞானக்கண்ணைக் கொடுத்துத் தமது திவ்வியதேஜோமயமானஸ்வரூபத்தையும் பரமபதம் முதலிய சகலஉத்தமலோகங்களையுங்காணும்படியருளினரென்கிற ஸ்ரீபாகவதக்கதையையுட்கொண்டதென்னலாம் நானிலம்-நான்காகிய நிலத்தையுடையது: பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை;நான்குநிலங்களாவன - குறிஞ்சி முல்லை பாலை மருதம் நெய்தல் என்பவைகளில் பாலை நீங்க நன்மக்கள்குடியிருத்தற்குஉரிய மற்றைநான்குமாம் பாலைக்கு நிலமில்லை யாதலால், நீக்கப்பட்டது; "நடுவ ணைந்திணை நடுவண தொழியப், படுதிரை வையம் பாத்திய பண்பே" என்றார் தொல்காப்பியனார் 'நானிலம்வாய்க்கொண்டு நன்னீரறமென்றுகோதுகொண்ட, வேனிலஞ் செலவன் சுவைத்துமிழ் பாலை" என்பதுவும் இக்கருத்தேபற்றியது.

இது, நிரையசை முதலதாகிய கட்டளைக்கலித்துறை. (௪௭)

௪௮ நிலங்குலவுநாபர்பணிலங்குலவுமுத்த நிரைக்குமருவிக்குல
வரைக்குமருவியகா,ரிலங்கையில்வெவ்வாளிகொடிலங்கையிலிருக்கு
மிராவணவிராவணனிராவணமறுத்தோ, ரலங்கலையளித்தனரலங்க
லைகடற்கு மந்தமதனுக்கு மனைசந்தமதனுக்குங், கலங்கலெனெனக்
கணிகலங்கலவைதம்மின் கையிலமனைதாருமுலைசையிலமனையாரே

(இ - ள்.) முலை சையிலம் அனையாரே - தனங்கள் மலைகளையொத்த தோழிமார்களே!—நிலம் குலவும் நாபர் - எல்லாவுலகங்களும் உண்டாகப் பெற்ற திருநாபீகமலத்தையுடையவரும், பணிலம் - சங்குகள், குலவும் முத்தம் - விளங்குகிற முத்துக்களை, நிரைக்கும் - கொழித்துக் குவித்திருக்கிடமான, அருவி - நீரருவிகளையுடைய, குல வரைக்கு - சிறந்தசோலைமலையில், மருவிய - எழுந்தருளிய, கார் - காளமேகம்போன்றவரும், இலங்கு ஐயில் வெம் வாளி கொடு - விளங்குகின்ற கூர்மையான கொடிய அம்பினால், இலங்கையில் இருக்கும் - லங்காபட்டணத்தில (பலநாளாக)வாசஞ்செய்துகொண்டிருக்கிற, இரா வணம் இராவணன் - இருள்போன்ற கருநிறத்தையுடைய ராவணன், இரா வணம - உயிரோடு வாழ்ந்திராதபடி, அறுத்தோர் - (அவனது பத்துத்தலைகளையும) அறுத்தவருமாகிய அழகர், அலங்கலை - பூமாலையை, அளித்தனர் - (எனக்குத்) தந்தருளிவிட்டார்; (இனி யான்), அலை அலங்கு கடற்கும் - அலைகள் அசையப்பெற்ற கடலின் ஒலிக்கும், அந்த மதனுக்கும் - அந்த மன்மதனுக்கும், அனை சந்தம் அதனுக்கும் - தாயினது (கொடிய) குணத்துக்கும, கலங்கலென் - மனங்கலங்கமாட்டேன்; எனக்கு—, அணிகலம் - அணிதற்குஉரியஆபரணங்களையும், கலவை -(பலவகைவாசனைப் பண்டங்கள்) கலந்த சந்தனத்தையும், தம்மின் - கொண்டுவந்து கொடுங்கள்; கையில் - கையிலே, அமனை - அம்மானையை, தாரும் - (விளையாடுதற்குக் கொண்டுவந்து) கொடுங்கள்; (எ - று.)—அயில் - ஐயில் எனப் போலி.

இது - தார்பெற்ற தலைவி பாங்கிமார்க்கு மகிழ்ந்து கூறியது

வணம்-வர்ணம். மன்மதனது கொடுந்தன்மை உலகமுழுவதும்பிரசித்தமாயிருப்பதனால்,'அந்தமதன்'என்றாள். இனி, அந்தம் மதன் எனப்பிரித்து-இறுதியைச் செய்யும்படியான மன்மதனென்றும், அழகிய மன்மதனென்றுமாம். தருமின் என்னும் முன்னிலையேவற்பன்மைமுற்று, தம்மின்என விகாரப்பட்டது. அமனை - விகாரம.

இது, பதினெட்டாங் கவிபோன்ற எண்சீராசிரியவிருத்தம். (௪௮)

௬௬. ஆராமவெற்பிலழகர்சுருதிக்குமெட்டா
சேவாரார்பதந்தீண்டவெத்தவங்கள்செய்தனவோ
சூராணவன்சிலையுந்துந்துபியென்புஞ்சகடுங்
காராயகட்டையுமவெங்காளியப்பேர்நாகமுமே

(இ - ள்.) சூர் ஆன வல் சிலையும் - தெய்வப்பெண்ணாகிய வலிய கலலும் [அகலிகையும்]. துந்துபி என்பும் - துந்துபியென்னும் அசுரனது எலும்பும், சகடும் - வண்டிவடிவமாய்வந்த அசுரனும், கார் ஆய கட்டையும் - கரிய கட்டையும், வெம் காளியன் பேர் நாகமும் - கொடிய காளியனென்கிற பெயரையுடைய மகாசர்ப்பமும்,— ஆராமம் வெற்பில் - சோலைமலையில் எழுந்தருளிய, அழகர் - அழகரது, சுருதிக்கும் எட்டா - வேதங்களுக்கும் எட்டாத, ஏர் ஆர் பதம் - அழகுபொருந்திய திருவடிகள், தீண்ட -(தம்மேற்) பரிசிக்கப்பெறுவதற்கு, எ தவங்கள் செய்தனவோ - என்னென்ன பெருந்தவங்களைச் செய்திருந்தனவோ? (எ - று.)

யானும் முற்பிறப்பில் நல்லதவஞ்செய்திருந்தால் அவர் திருவடி தீண்டப்பெற்று, நற்பேறு பெறுவேனே யென்று இரங்கியபடி. ஆராமம்-பூஞ்சோலை.

**சிலையை மிதித்த வரலாறு**:— கௌதமமுனிவனது மனைவியாகிய அகலிகையினிடத்திற் பலநாளாய்க் காதல்கொண்டிருந்த தேவேந்திரன் ஒருநாள் நடுராத்திரியில் அம்முனிவனாசிரமத்துக்கு அருகே வந்து பொழுதுவிடியுங்காலத்துக்கோழிகூவுவது போலக் கூவ, அதுகேட்ட கௌதமன் சந்தியாகாலம் சமீபித்துவிட்ட தென்று கருதி யெழுந்து காலைக்கடன்கழித்தற்பொருட்டு நீர்நிலைநோக்கிப் புறப்பட்டுச் செல்ல, அப்பொழுது இந்திரன் இதுவேசமயமென்று அம்முனிவனுருக்கொண்டு ஆச்சிரமத்துட்சென்று அவளோடுசேர்கையில், அவளும் 'தனகணவனல்லன், இந்திரன்' என்றுஉணர்ந்தும் விலக்காமல் உடன்பட்டிருக்க, அதனை ஞானக்கண்ணினால் அறிந்து உடனே மீண்டுவந்த அம்முனிவன் அவளைக் கருங்கல்வடிவமாம்படி சபித்தது, உடனே அவள் அஞ்சிநடுங்கிப் பலவாறுவேண்டியதற்கு இரங்கி, 'ஸ்ரீராமனது திருவடிப்பொடி படுங்காலத்து இக்கல்வடிவம் நீங்கி நிசவடிவம் பெறுக' என்று அநுக்கிரகிக்க, அவ்வாறே கல்லுருவமாய்க்கிடந்த அகலிகை ஸ்ரீராமலக்ஷ்மணர் விசுவாமித்திரனோடு மிதிலைக்குச்செல்லும்போது இராமபிரானது திருவடித்துகள் பட்டமாத்திரத்தில் கல்வடிவம்நீங்கி இயற்கைநல்வடிவம் அடைந்தன ளென்பதாம்.

**துந்துபியென்பை எற்றிய வரலாறு**:—முன்னொருகாலத்தில் எருதுவடிவங்கொண்ட துந்துபியென்னும் அசுரன் வாலியை எதிர்க்க, அவன் உக்கிரமாகப் போர்செய்து துந்துபியைக் குத்திக் குமைத்துக் கொன்று அவனுடம்பை ஆகாயத்தில் உயரவிட்டெறிந்தான். அததிரள், மதங்காசசிரமத்தின் அருகே வீழ்ந்துகிடந்தது. அநுமான்மூலமாக இராமலக்ஷ்மணர் சுக்கிரீவனிடம் சிநேகங்கொண்டபிறகு 'வாலியைக்கொன்று உன்மனைவியையும் அரசையும் நான் தருகிறேன்' என்று இராமபிரான் சுக்கிரீவனுக்கு வாக்குத்தத்தஞ்செய்து அங்கிருந்து நடந்துபோகையில் துந்துபியின் உலர்ந்துள்ள உடற்குவையின் வரலாற்றைச் சுக்கிரீவன்மூலமாகத் தெரிந்துகொண்டு, இராமபிரான், சுக்கிரீவன்மனத்தில் ஐயம்நீங்குதற்பொருட்டு, இலக்குமணனைநோக்கி 'உன்காலால் இவ்வென்புக்குவையை யெற்றிவிடுக' என்று சொல்லியருள, உடனே இளையபெருமாள் தனது இடப்பாதத்தின் கட்டைவிரலால் தள்ளுதலும் அது வெகுதூரஞ்சென்று வீழ்ந்தது என்பதாம்.

**காராய கட்டை** யென்றது - அசுவத்தாமனாற் பிரயோகிக்கப்பட்ட அபாண்டவாஸ்திரத்தினால் தகிக்கப்பட்டுப்போன அபிமந்யுமனைவியாகிய

உத்தரையின் வயிற்றுக்கருவை; அக்கரு. கண்ணனது திருவடிபட்டமாத்திரத்தில் மீள உருப்பெற்றுப் பரீக்ஷித்தென்னும் அரசகுமாரனாகிய தென்பது வரலாறு: "பசுந்துளவின். மட்டவிழ்தொங்க லரங்கர்பொற்றாள்பட வாளிவெந்தீச, சுட்டகருங்கட்டையும் பெற்ற தாருயிர் சொல்லுதென்னே" என்றார் முன்னோரும்.

இது,மாச்சீர்களுங் காய்ச்சீர்களுமாய் விரவிவந்த கொச்சகக்கலிப்பா.

[மதங்கு.]

௫௦. காளமேகமும்வெளிறமின்னிய கண்ணனார்வனகிரியினிற் காமதங்கமதங்கமாமெழின்மாமதங்கமடந்தைகேள், தாளநின்முலையிடைகுறுந்துடிதவளசங்கதிர்களமுகந் தக்கசந்திரவலயநூபுரசரணமென்பதுமத்தளம், நீளும்யாழினமுன்கைகார்குழனெயனம்வேடனதம்புரு நிறுத்தினன்றொருசற்றுடுக்கைநெகிழ்க்கவேண்டுநின்சிந்தையே, நாளுநச்சினநாடகத்தினிநட்டுவாவெனினதிசயம நாட்டவாளிணைசுழலுமுன்பலகூட்டவாள்சுழல்கின்றவே.

(இ - ள்.) காளமேகமும் - சூல்கொண்ட கருமுகிலும், வெளிற - வெண்ணிறமுடையதென்னும்படி, மின்னிய - கருநிறமுடையவராய் விளங்குகின்ற, கண்ணனார் - கிருஷ்ணபகவானது, வனகிரியினில் - சோலைமலையிலே, காம தங்கமதது அங்கம் ஆம் - விரும்பப்படுகிற மாற்றுயர்ந்த பொன்போன்ற மேனியையுடைய, எழில் - அழகிய,மா மதங்க மடந்தை - சிறந்த மதங்கியே! கார் குழல் - கரிய கூந்தலையுடையவளே! கேள் - (யான் சொல்வதைக்) கேட்பாயாக: நின் முலை - உனது தனங்கள், தாளம்-தாளமாகும்; இடை - சிறுத்த இடுப்பு, குறுந் துடி - நடுசிறுத்த துடியென்னும் வாசசியமாம்; களம் - கண்டம், அதிர் தவளம் சங்கு - ஒலிக்கின்ற வெள்ளிய சங்கமாம; முகம்—, தக்க சந்திர வலயம் - பொருந்திய சந்திரமண்டலமாம்[சந்திரவலயமென்னும் வாத்தியமாம்]; நூபுரம சரணம் என்பது - சிலம்பையணிந்த கணைக்காலென்பது,மத்தளம் - மத்தளமாம; முன்கை - முன்னங்கை, நீளும் யாழ் இனம - நீண்ட வீணையின் இனமாம்; நெயனம் - கண், வேள்தனது அமபு உரு - மன்மதனது அம்பின் வடிவமாம் [வேள் தன தம்புரு - மன்மதனது தம்புருவென்னும் வாசசியமாம்]; ஒரு சற்று-சிறிதுபொழுது, உடுக்கை - (ஆட்டத்தில் அடிக்கப்படுகிற) உடுக்கையென்னும் ஒருவகைவாசசியத்தை, நிறுத்தின் - முழங்காமல் நிறுத்திவைத்தால், நன்று - நல்லது [உனது உடையை நேரநிறுத்திவைத்தால் நல்லது]; நின் சிந்தை நெகிழ்க்க வேண்டும் - உனது பாட்டை நிறுத்தவேண்டும் [உன் மனம் இரங்க வேண்டும்]; 'நாளும் நச்சின - இத்தனைநாளாய் விரும்பிவந்த, நாடகத்து - ஆட்டத்தில், இனி-இனிமேலும், நட்டு வா - விரும்பிவா,' எனின் - என்றால், அதிசயம் - (அவ்வாறு வருதல்) அரியதாம்; நாட்டம் வாள் இணை சுழலும் முன் - (உனது) கண்களாகிய இரட்டைவாள்கள சுழலுதற்குமுன்னமே,பல கூட்டம் ஆள்-பல ஆடவர்களின் கூட்டம[பலவாளாயுதங்களின் கூட்டம்],சுழல்கின்ற-(வேட்கையால்)மனஞ்சுழல்கின்றன[சுழலுகின்றன].

இரண்டுகைகளிலும் வாளையெடுத்துச சுழற்றிக்கொண்டு தானுஞ் சுழன்றுஆடுவாளொரு இளமங்கையினிடத்துத் தனக்கு உண்டான வேட்கையை ஒருகாமுகன் வெளிப்படுத்திககூறுவதாகச செய்யுள்செய்வது, மதங்கியாரென்னும்உறுப்பிற்கு இலக்கணமாம். மதங்கமடந்தை - ஆடல் பாடலை வல்ல பதினாறுவயதுப்பெண்.

நயனமென்னும் வடமொழி மோனைநோக்கி நெயனமென நின்றது. நட்டுவா என்பதில், நடனமாட்டுகின்ற நட்டுவனை அழைத்ததாகவும் பொருள் தோன்றும்.

இது, நாற்பத்துநான்காங் கவிபோன்ற பதினான்குசீராசிரியவிருத்தம்.

௫௧. சுழல்காற்றை மாய்த்துஞ் சுடர்நெருப்பை யுண்டு
நிழல்பார்த் திடபகிரி நின்றான்—குழலூதிக்
கற்றாக் குவித்த கடவுளவ னேயனைத்தும்
பெற்றாக் குவித்த பிரான்.

(இ - ள்.) சுழல காற்றை - சுற்றிச்சுற்றியடிக்கிற கடுங்காற்றை, மாய்த்தும் - அழித்தும், சுடர் நெருப்பை - எரிகிற அக்கினியை, உண்டும் - புசித்தும், நிழல் பார்த்து - குளிர்ந்தநிழலுள்ள இடந் தேடி, இடபகிரி - ரிஷப கிரியில், நின்றான் - வந்தெழுந்தருளி நின்றவனும், குழல் ஊதி - வேய்ங் குழலை ஊதி, கன்று ஆ - கன்றையுடைய பசுக்களை, குவித்த -(தன்னைச்சுற்றி லும் வந்து) திரளச்செய்த, கடவுள் - கடவுளும் ஆகிய, அவனே - அக்கண் ணனே,—அனைத்தும் - எல்லாவுலகங்களையும், பெற்று - படைத்து, ஆக்கு வித்த - காத்தருளின, பிரான் - பெருமையையுடையவனுவன்; (எ - று.)

**சுழல்காற்றை மாய்த்த கதை.**—கம்சனுலேவப்பட்ட காலியனென்னும் அசுரன் பெருங்கடுஞ் சுழல்காற்றின் வடிவங் கொண்டு வந்து மிகவும் வேகமாய யுகாந்தகாலத்துக் காற்றுப்போல வீசியடித்துப் புழுதிகளை மேலே பொழிந்து குழந்தைப்பருவமுடைய கண்ணனை ஆகாயமார்க்கத்தில் எடுத்துச்செல்ல, கண்ணபிரான் தனது திருமேனியில் மிக்கபாரத்தை யுண்டாக்கி அவ்வசுரனைக் கீழே தள்ளிக் கழுத்தைவளைத்து நெரித்துக் கொன்றனனென்பதாம்.

**சுடர்நெருப்பை யுண்ட கதை.**—பிருந்தாவனத்தில் முஞ்சாரணியத் திற் பிரவேசித்தபோது தெய்விகமாகத் தோன்றிய தங்களைச்சூழ்ந்த பெருங்காட்டுத்தீயில் அகப்பட்டுக்கொண்டு கோபாலர்களும் கோக்களும் முறையிட்டுப் பலவாறு துதிக்கக் கேட்டு, ஸ்ரீகிருஷ்ணன் 'நீங்கள் யாவரும் பயப்படாமல் உங்கள் நேத்திரங்களை மூடிக்கொள்ளுங்கள்' என்று நியமித்தருளித் தமது விராட்ஸ்வரூபத்தை வகித்து அவ்வக்கினியைச் சுவாலையோடும் பானஞ்செய்து ஆயர்களையும் ஆநிரையையுங் காத்தனனென்பதாம்.

சோலைமலையாதலால், அவ்விளைப்புத்தீர 'நிழல்பார்த்து நின்றான்' எனக் கவி குறித்தார்.

இது, மலரென்னும் வாய்பாட்டால் முடிந்த இருவிகற்பநேரிசைவெண்பா.

௫௨. வித்தகர் கருத்துட் பத்தி பாய
நீலம் பழுத்த கோல மேனி
கார்க்கடல் முகந்த கூற்புய லென்று
கதிரிளங் கொங்கைச் சதிரிள மங்கைய
ரியலுறு கலாப மயினட மாடக்
'காயா மலர்விரி காயா வனமென
வரையர வல்லி வரையர மகளிர்
குழலிசை வண்டு குழலிசை பாட
வங்கையிற் றுங்குஞ் சங்கமுந் திகிரியும்
புதையிருள் சீக்கு மதிகதி ரென்னக்
கவண்கலா விசைசெய் சிவந்தவாய் மழலைக்

கொடிச்சியர் கண்போ லடிக்கடி சுனைதொறும்
பதுமச் செங்கா டிதழ்குவிந் தலர
விருவகைக் காந்தமும பெருமுனி வர்க்குப்
கரு. புனலுமபுகையாக் கனலுங் கொடுப்ப
வனநதிரி மேதி யினஞ்சொரி தீமபால்
கங்கையிற் பரகசுப் பொங்குதேன் வெள்ளஞ்
சாமபுன தமபோன் மேம்படு சாரற்
சோலை மாமலை மேலினி தமர்நதோ
உ0. யதிரந்துவெண் பரிக ளெதிர்நதவெனு றஞ்சிப்
பசுமபரி யேழும் விசுமபிடை மறுக
விரிதிரை கொழிக்குமபரிபுர நதியோய்
மழுபபடைக் கடவுள் விழிகுடை யாத
சிததசா கோடி யொததகட் டழக
உரு. சடைகொடு வேட்ட விடையுடை யவற்காப்
புரஞ்செற் றருளிய பரஞ்சுடர் மூர்த்தி
குருகூர் விளங்க வருசட கோபர்
வழுததவிர் நான்மறை விழுபபொருள் பழுத்த
வாக்கெனு மமுதந தேககிய வொருநீ
௩0. புவிமேற் சிற்சிலர் கவியுங் கொண்டனை
யாங்கவை தமக்குப பாஙகெனுமவனைகாய்ப
புளியெனமகிழ்நதனை போலு
மெளியேன் புன்கவி யேற்பதெதத திறமே.

(இ - ள்.) வித்தகர் - ஞானிகளுடைய, கருததுள் - மனத்திலே, பத்தி பாய - பகதி மிகப்பெருகும்படி, நீலம் பழுதத - நீலநிறம் மிகமுதிர்ந்த, கோலம் மேனி - அழகிய திருமேனியை, கார் கடல் முகந்த - கரிய கடல் நீரை (நிரம்ப)மொண்டுஉட்கொண்ட, சூல் புயல் என்று-கருமுதிர்ந்த காள மேகமென்றுஎண்ணி,கதிர் இளங கொஙகை-ஒளிபொருந்தியஇளைய தனங் களையுடைய, சதிர் இள மங்கையர் - அழகிய இளமபருவமுடைய மகளி ரது, இயல் உறு - சாயல்பொருந்திய, கலாபம் மயில் - தோகையையுடைய மயில்கள், நடம் ஆட-(மகிழ்ந்து) நர்ததனஞ்செய்யவும,—காயா மலர் விரி- காயாத [அன்றுமலாநத] மலாகள் பரவிய, காயா வனம் என - காயாமரக் காடென்று எண்ணி,அர வல்லி அரை-பாம்பையுங கொடியையும் போன்ற இடையையுடைய, வரை அரமகளிர் - மலையில்வாழ்கின்ற தெய்வப்பெண்க் ளது, குழல் - கூந்தலில், இசை - பொருநதிமொய்க்கின்ற, வண்டு - வண்டு கள், குழல் இசை பாட - வேய்ஙகுழலின் இசைபோன்ற இசைப்பாட்டைப் பாடவும்,—அம் கையில் தாஙகும் - அழகிய திருக்கைகளில் தரித்த, சங்க மும் திகிரியும் - சஙகத்தையுஞ் சக்கரத்தையும், புதை இருள் சீக்கும் - நெ ருஙகிய இருளைப் போக்குகின்ற, மதி கதிர் என்ன - சந்திரனுஞ் சூரியனும் என்று எண்ணி, கவண் கலால் - கயிற்றில்வைத்துவீசி விட்டெறிகிற கற்க ளால், இசை செய்-ஆரவாரத்தைச செய்கின்ற, சிவந்த வாய்-சிவந்த வாயை யும், மழலை - மழலைப்பேச்சையுமுடைய, கொடிசசியர் - குறிஞ்சிநிலத்துப் பெண்களது, கண்போல் - கண்போல. அடிக்கடி—, சுனைதொறும் - சுனை களிலெல்லாம், செம் பதுமம் காடு - செந்தாமரைக்காடு, இதழ் குவிந்து

அலர - இதழ்கள் கூம்பியும் மலர்ந்தும் இருக்கவும்,— இருவகை காந்தமும் - (சந்திரகாந்தம் சூரியகாந்தம் என்கிற) இரண்டுவகைக் காந்தக்கற்களும், பெரு முனிவர்க்கு - பெரிய இருடிகட்கு, புனலும் - தண்ணீரையும், புகையா கனலும் - புகையாத நெருப்பையும், கொடுப்ப - (முறையே)கொடுக்கவும்,—வனம் திரி மேதி இனம்-காட்டில் திரிகின்ற எருமைகளின் கூட்டம், சொரி - (தானாகவே) சொரிகின்ற, தீம் பால்-இனிய பாலானது, கங்கையின் பரக்க - கங்காநதிபோல வெண்மையாகப் பரவாநிற்க, பொங்கு தேன் வெள்ளம்-பொங்குகிற தேன்பெருக்கு, சாம்புனதம்போல் - (உருக்கிவார்த்த) செம்பொன் ஒழுக்குப்போல,மேம்படு - சிறந்து காணப்படுகின்ற, சாரல்-பக்கங்களையுடைய, சோலைமாமலைமேல் - திருமாலிருஞ்சோலைமலையின்மேல்,இனிது அமர்ந்தோய்-இனிமையாக எழுந்தருளியவனே!—'வெள் பரிகள் - வெள்ளைக்குதிரைகள்பல. அதிர்ந்து-ஆரவாரித்துக்கொண்டு, எதிர்ந்த - எதிரிட்டன', என்று-என்றெண்ணி, அஞ்சி-பயந்து, பசும் பரி எழும்-(சூரியனது) பச்சைக்குதிரைகள் எழும், விசும்பிடை - ஆகாயத்திலே, மறுகலங்கும்படி, விரி திரை கொழிக்கும்-பரவிய(வெள்ளிய)அலைகளையெறிகிற, பரிபுரநதியோய்-சிலம்பாற்றையுடையவனே!—மழு படை கடவுள் விழிக்கு-மழுவாயுதத்தையுடைய உருத்திரமூர்த்தியினது நெற்றிக்கண்ணுக்கு, உடையாத - தோற்று அங்கமழியாத, சித்தசர் கோடி - ஒருகோடி மன்மதர்களை, ஒத்த - ஒத்திருக்கின்ற, கட்டழக-நிலைகுலையாத அழகுடையவனே!—சடை கொடு - (தவவேஷத்திற்கு உறுப்பாகச) சடையைத் தரித்துக்கொண்டு, வேட்ட - விரும்பிப்பிரார்த்தித்த, விடை உடையவற்கு ஆ - விருஷபவாகனமுடைய சிவனுக்காக, புரம் - திரிபுரத்தை, செற்றருளிய - அழித்தருளின, பரஞ்சுடர், மூர்த்தி-மேம்பட்ட ஒளியையுடைய திருவடிவமுடையவனே!—குருகூர் - திருக்குருகூர், விளங்க - விளக்கமடையும்படி,வரு - (அவ்வூரில்) திருவவதரித்த, சடகோபர் - நம்மாழ்வாரது, வழு தவிர் - குற்றமில்லாத, நால் மறை விழு பொருள் பழுத்த - நான்குவேதங்களின் சிறந்தபொருள் மிகஅமைந்த, வாக்கு எனும் - திருவாக்காகிய, அமுதம் - அமிருதத்தை, தேக்கிய - தெவிட்டும்படி பானஞ்செய்த, ஒரு நீ - ஒப்பற்ற நீ, புவிமேல் - பூமியில், சிற்சிலர் - வேறுசில பெரியோர்களது, கவியும் - பாடல்களையும், கொண்டனை - ஏற்றுக்கொண்டாய்; ஆங்கு அவைதமக்கு - (அப்பெரியோரது) பாசுரங்களாகிய அமுதந் தெவிட்டாமைக்கு, பாங்கு எனும - உரியது என்கிற, ஊறுகாய் புளி என - புளிங்காய்க் காடியாக, எளியேன் - எளிய வனுகிய எனது, புல் கவி - அற்பமான பாடல்களை, மகிழ்ந்தனை போலும்-திருவுள்ளமுவந்து ஏற்றுக்கொண்டாய்போலும்; (அவ்வாறு ஏற்றுக்கொள்ளாவிடின்), ஏற்பது - (வேறுவகையாக) ஏற்றுக்கொள்வது, எத் திறமே - எவ்வாறோ? (எ - று.)

மயில் ஆட, வண்டு பாட, பதுமக்காடு குவிந்து அலர,காந்தம் புனலுங் கனலுங் கொடுப்ப, மலைமேல் அமர்ந்தோய்! என்க. எம்பெருமானது நீல மேனியைக் காளமேகமென்று மயங்கி மயில்கள் ஆடியதாகவும், திருக்கை முதலிய அவயவங்கள் விளங்குகின்ற திருவுருவத்தை மலர்கள்விரிந்த காயாங்காடென்றுமயங்கி வண்டு பாடியதாகவும், சங்கத்தைச் சந்திரனென்று மயங்கித் தாமரை குவிந்ததாகவும் சந்திரகாந்தம் நீர்கொடுத்த தாகவும், சக்கரத்தைச சூரியனென்றுமயங்கித் தாமரை மலர்ந்ததாகவும் சூரியகாந்தம் அனல்கொடுத்ததாகவும், சிலம்பாற்றில் வெண்மையாக எழுந்த அலைகளை வெள்ளைக்குதிரைகள் எழுந்தனவென்று மயங்கிச் சூரியனது குதிரைகள் அஞ்சியதாகவுங் கூறியதனால், மயக்கவணி. அர - குறியதன்கீழ் ஆ, குறுகிற்று. இசைசெய் கொடிச்சியரென இயையும். கண்கள் அடிக்கடி

இமைத்து விழிப்பதுபோலத் தாமரை இதழ்குவிந்து அலர வென்க. சந்திர காந்தம் - சந்திரன்முன்னே நீர்கால்வதாதலாலும், சூரியகாந்தம் - சூரியன் முன்னே தீயை உமிழ்வதாதலாலும் இங்ஙனங் கூறியது. ஜாம்பூநதம் - தத்திதாந்தநாமம்: ஜம்பூநதியில் உண்டானதென்று பொருள்; மேருமலையின்சாரலிலுள்ளதொரு நாவல்மரத்தினின்று கீழ்விழுகிற பெரும்பழங்களின் சாற்றினால் ஓடுகிற ஜம்பூஎன்னும் நதியின் இரசத்தில் நனைந்த அவ்வாற்றங்கரையின் மண் உலர்ந்து சிறந்த சுவர்ணமாகிறதனால்,'சாம்பூநதம்' என்று பெயர்: [ஜம்பூ - நாவல்.] "நாவலொடு பெயரிய பொலம்புனை யவிரிழை" என்றார் திருமுருகாற்றுப்படையிலும். பரிபுரம் - காற்சிலம்பு. சித்தஜன் - மனத்தில் நினைத்தமாத்திரத்தில் உண்டாகிறவன். மழுப்படைக் கடவுள் விழிக்குடையாத சித்தசாகோடியொத்த கட்டழகவென்றது - இல்பொருளுவமையணி. உருத்திரன் திரிபுரசங்காரஞ் செய்ததற்குத் திருமால் கணையாகஇருந்து துணையானதனால, 'சடைகொடுவேட்டவிடையுடையவற்காப்,புரஞ்செற்றருளிய பரஞ்சுடர்மூர்த்தி'என்றார்; "குழல்நிற வண்ணநின் கூறு கொண்ட, தழல்நிற வண்ணன் நண்ணா நகரம், விழ நனி மலைசிலை வளைவுசெய்தங், கழனிற வம்பத வானவனே" என்றா பெரியாரும். சடகோபர்வாக்கு-திருவிருத்தம, திருவாசிரியம், திருவந்தாதி, திருவாய்மொழி.

இது - ஈரசைச்சீர்கள் பெற்று, ஈற்றயலடி முச்சீரடியும் மற்றையடிகளெல்லாம் நாற்சீரடிகளுமாக வந்த **நேரிசையாசிரியப்பா.** (௫௨)

[குறம்.]

௫௩ எற்றபூங்கோதைகேளிடபமாலவரையில்வா ழிளங்குறப் பாவையான்விளங்குறப்பாவையுஞ், சாற்றுவேன்கண்ணர்முன்வெண்ணெயாகக்குவியவே தானடுக்குறிசொனேன்சயிலமாதினைமுதற், போற்றினேனாழியினெல்லையுஞ்சங்கையும பூரியெட்டக்கரஞ்சீரினிட்டெம்பிரான், தோற்றுவாராவாகுநன்கூழ்பெலங்கஞ்சியச்சுதர்விடாரமபரத்துணிவையாயினியமே

(இ - ள்.) எற்ற பூ கோதை - பொருந்திய மலர்களைச் சூடிய கூந்தலையுடையவளே! கேள் - (நான்சொல்வதைக) கேட்பாயாக யான்—, இடபம் மால் வரையில் வாழ் - பெரியருஷபகிரியில் வாழ்கிற, இளங் குறப் பாவை - இளைய குறமகளாயேன்; விளங்குற - விளக்கமாக, பாவையும் - (குறி சொல்லுகிற) பாடல்களையும், சாற்றுவேன் - சொல்வேன், கண்ணர் - கிருஷ்ணனுக்கு, முன் - முன்னே, வெண்ணெய் ஆ குவிய - வெண்ணெய்க்குக் காரணமான பசுக்கூட்டந் திரளும்படி, நடு குறி சொனேன் - நியாயமான குறியைச சொன்னேன் [வெண்ணெயா குவிய - வெண்ணெயாகத் திரள, அடுக்கு உறி சொனேன்-(ஒன்றன்மேலொன்றாகக் கலசங்களை) அடுக்கிவைத்துள்ள உறியை இடமாகசசொன்னேன்]; சயிலம் மாதினை-இமயமலையின் மகளாகிய பார்வதியை, முதல் போற்றினேன் - (இவ்வாறுபிறப்பளென்று) முன்னமே அறிந்து குறிசொன்னேன் [சயிலம் - மலையிடத்துஉண்டாகிற, தினை - தினையரிசியினது, மா முதல-(இடித்த)மா முதலியவற்றை, போற்றினேன் - விரும்பினேன்]; எம்பிரான் - தலைவர், ஆழியின் எலலையும்-சக்கரத்தினது ஒளியையும், சங்கையும் - சங்கத்தையும், பூரி எட்டு அ கரம் - பெருமைபொருந்திய அப்படிப்பட்ட [சிறந்த] திருக்கைகளிலே, சீரின் - அழகிதாக, இட்டு - தரித்துக்கொண்டு, தோற்றுவார் - (நாளைக்கே)வந்துசேருவர்; நல் கூழ் - நல்ல கூழையும், பெலம் கஞ்சி - பெல்லக்கஞ்சியையும், வாகு - (எனக்கு) வாரு; அச்சுதர் இனி விடாரம் - அச்சுதனென்னுந் திருநாமமுடைய

அந்நாயகர் (உன்னை)இனி விட்டுப்பிரிந்திரார்; அமே - அம்மையே! அம்பரம் துணி வையாய் - ஒருவஸ்திரத்தின் துண்டு கொடுப்பாயாக; (எ - று.)

இது, தலைவி தலைமகனைப்பிரிந்துவருந்தி மயங்கிநிற்கிறநிலையில், குறிகண்டறிந்து கூறவல்ல குறத்தி அவளிடம்வந்து குறிதேர்ந்து நல்வரவுகூறியது.

இனி, நான்காமடியில், வாக்கு நன்கு - சகுனவார்த்தை நன்றாயிருக்கிறது; ஊழ் பெலம் - நல்லூழ்வினை வலிமையுடையது; கஞ்சி அச்சுதர்-கச்சிப்பதியில்வாழ்கிற அச்யுதா, விடார் என்றும் பொருள்படும். அமே - அம்மையென்பதன் விளியாகிய அம்மே எனபதன விகாரம்.

இது, பெரும்பாலும் எல்லாச்சீரும் விளச்சீராகியஎண்சீராசிரியவிருத்தம்.

[கைக்கிளை.]

௫௪. இனியஞ்ச னெஞ்சே யினியவிசை யேழுங்
கனியாறு காலுமிரு காலு—முனிவர்
தொழுதா ளழகர் சுரும்பி
லெழுபூ வாய்ந்த திவளணங் கலளே

(இ - ள்.) நெஞ்சே - மனமே! இனி - இனிமேல், அஞ்சல் - (ஐயப்பட்டு) அஞ்சாதே; இனிய-கேட்பதற்கு இனிமையான, இசை ஏழும்-எழிசைகளையும், கனி - உருக்கமாகப்பாடுகின்ற, ஆறுகாலும்-ஆறுகால்களையுடைய எல்லாவண்டும், எழு பூ-(சூட்டப்பட்டு இவளிடத்தில்)பொருந்திய மலர்களை, ஆய்ந்தது-ஆராய்ந்துமொய்த்தது; (ஆதலால்), இரு காலும் - (காலை மாலை என்னும்)இரண்டுகாலங்களிலும், முனிவர் - முனிவர்கள், தொழு - வணங்குகின்ற, தாள் - திருவடிகளையுடைய, அழகர் - அழகரது, சுரும்பில் - சோலைமலையிடத்திலுள்ள, இவள் - இம்மகள், அணங்கு அலள் - தெய்வமகளல்லள், (மானுடமகளே); (எ - று.)—எ - தேற்றம்.

இத்துறை-தலைமகளைக்கண்டு 'தெய்வமகளோ, மானுடமாதோ' என்று ஐயுற்றுநின்ற தலைமகன், மாலையில வண்டுமொய்த்தலாகிய குறியைக்கண்டு 'தெய்வமல்லள், மகளுள்ளாள்' என்று தெளிந்தது; எனவே, தெய்வமல்லளாதற்குக் காரணம் இக்குறி ஒன்றே, வேறறுமை யில்லை யென்று கருதது. இது, நாயகநாயகிகளுள் ஒருவருள்ளக்கருத்தை ஒருவர்அறியாத ஒருதலைக்காமமாதலால், கைக்கிளையாயிறறு. தேவர்கள்மாலையில வண்டுமொய்த்தல் இல்லை யாதலால், இங்ஙனங்கூறியது. இது, "வண்டே யிழையே வள்ளி பூவே" என்னுஞ் சூத்திரவிதி; "கடியேறு கொன்றையர் கோடீச சுரவெற்பிற் கண்டதொரு, கொடியே யிதனடிக் கொண்டது பூமுகங் கொண்டது வேர்,முடிமேல் நியவண்டு நோக்கி யையறன் முன்னுமிந்தப், படியே யிதனிலை யென்று நெஞ்சே யிவைபன்னிடுமே" என்பது காண்க.

இது - முதலிரண்டடிகளும் வெண்பாஅடிகளாய், மற்றையஇரண்டும் ஆசிரியஅடிகளாய, அவ்வறுள்ளும் ஈற்றயலடி முச்சீரதாய் வந்து, துணிதலைசொன்ன ஒருதலைக்காம முணர்த்தியதனால், கைக்கிளைமருட்பா. (௫௪)

[சித்து.]

௫௫. அலகைமாமுலையுண்டகொண்டல்புள்ளலகையன்றுபகுநதமா லழகர்தாடரிசித்தசித்தரனுக்ரகம்பெறுசித்தர்யாஞ், சலனமேனொருகடகநற்கரிதனையழைபபிமுன்னுகமாதங்கமாக்குவெ மெய்தராவிடுசந்தமிக்குயர்பணம்வரு, மிலகிரும்புதனைப்பொன்வெள்ளியொடேற்றுவேமுணாகுறைபடா தெடுத்ததாம்பிரமாழைமச்சநம்மிர்தவாதமிதன்றியும், பலமருநதறிவேஞ்சொல்வோமதிபசியவர்க்குபசரியையாபடியளப்பைநமக்குமாவடைபழவனம்பிரியமப்பனே.

(இ - ள்.) அப்பனே - தலைவனே!—யாம் - நாங்கள், அலகை - பேய்மகளது, மா முலை - பெரிய தனங்களை, உண்ட - பருகின, கொண்டல்-மேகம் போன்றவரும், புள் - கொக்குவடிவமாய் வந்த பகாசுரனது, அலகை - வாயை, அன்று - அந்நாளில் [கிருஷ்ணாவதாரத்தில்], பகுந்த - பிளந்த, மால் - திருமாலும் ஆகிய, அழகா - அழகரது, தாள் - திருவடிகளை, தரிசித்த - தரிசனஞ்செய்து வணங்கின, சித்தர் - சித்தர்களது, அனுக்ரகம் - அருளை, பெறு - பெற்ற, சித்தர் - சித்தர்களாவோம்; சலனம் என் - சந்தேகமென்ன? ஒரு கடகம் நல் கரிதனை அழைப்பி - ஒருகூடை நிறைய நல்ல கரியைக் கொணரச்செய [சேனையிலுள்ளதொரு யானையை வரவழைப்பி]; மூன்று ஆக மா தங்கம ஆக்குவெம - எதிரிலேயே மாற்றுயர்ந்த தங்கமாகச் செய்வோம் [முன்னே நாகமென்றும மாதங்கமென்றும் பெயருடையதாகச் செயவோம்]; மெய் தரா இடு - உண்மையாகத் தாாஎன்கிற லோஹத்தைக் கொடு; சந்தம மிக்கு உயர் பணம வரும - நிறம்மிக்குச சிறந்த பணமாக மாறிவிடும் [எய்து அரா விடு - பொருந்திய பாமபை வெளியிலவிடு; சந்தம் மிக்கு உயா பணம் வரும் - வடிவம் மிக்கு உயாநத படம பொருந்தும்]; இலகு இரும்புதனை பொன் வெள்ளியொடு எற்றுவெம் - விளங்குகிற இரும்பைப் பொன் வெள்ளிகளுடனே சமானமாகச செய்வோம [இரும்பு கருமபொன் எனறும,பொன செமபொன் அல்லது பசுமபொன என்றும், வெள்ளி வெண்பொன் என்றும வழஙகப்படுதலால இரும்பைப் பொன் வெள்ளிகளுடனே ஏற்றுவோம], உரை குறைபடாது - மாற்றுக் குறைவுபடாது [எஙகள்பேச்சுக் குறையையடையாது]; எடுத்த தாமபிரம் - (நாஙகள்) கையிலெடுத்த செம்பு, மாழை மச்சம - பொன் துண்டாகும் [எடுத்தது ஆம்பிரம் - உயர்ந்த மாமரம், மாழை மச்சம் - மாழையென்னும் பெயருடையதாம்]; நம் இரதவாதம் இது அன்றியில் - நமது ரஸவாதம் இவ்வளவுமாததிரமேயல்லாமல, பல மருநது அறிவெம - அநேகம ஔஷதங்களைத் தெரிவோம, சொல்வோம - (அவறறையெல்லாஞ்) சொல்லுவோம்; அதி பசியவர்க்கு - மிக்க பசியையுடைய எஙகளுககு, உபசரி - (உணவுமுதலிய) தநதருள்வாயாக, ஐயா—! படி அளப்பை - படிகொடுப்பாயாக; நமக்கு - எஙகளுக்கு, மா அடை - மாவினாலாகிய அடையும, பழ அனம - பழஞ்சோறும், பிரியம - விருப்பமாகும்; (எ - று.)

இரசவாதிகள் தமதுதிறமையை ஒருதலைவனுககு எடுததுககூறுவதாகச செய்யுள்செய்தல, சித்து எனனுமு உறுப்பின் இலககணமாம்; இரசவாதம் - பொன்செய்தல்.

தரிசித்தல் - கண்டுதொழுதல. சித்தா - ஸித்திபெற்றவா. தாமபிரம் - தாம்ரம்; ஆம்பிரம் - ஆமரம. வடசொறகள இரசவாதமாவது - கீழ்ப்பட்ட லோஹஙகளை மேறபட்ட லோகமாகசசெய்தல. பசியவர்க்கு - தமமைப் படர்க்கைபோறக் கூறிய இடவழுவமைதி; 'பசியெமககு' என்றும் பாடஙகொள்ளலாம். ஐயா, அப்பனே இவை - சித்தாகள் வழஙகுஞ் சொல் விழுக்காடுகள். படியளப்பை என்பதில - புூமியளக்குந் தன்மையுடையவனே யென்னும் பொருளுந் தோன்றும்.

புள்அலகைப் பிளந்த கதை—பகன்என்னும அசுரன் கொக்குவடிவங்கொண்டு கண்ணபிரானைக் கொல்லுவதாக நெருஙகிவர, அப்பொழுது கண்ணன் அப்பறவையின் வாயலகுகளை இருகையாலும் பிடித்துக் கிழித்து அதனை அழித்தனன் என்பதாம.

இது, நாறபததுநான்காங் கவிபோன்ற பதினுன்குசீராசிரியவிருத்தம்.

ருசு. அப்போதகத்துறைசெநதிருமாபத்தழகர்பனைக்
கைப்போதகஞ்சொன்னமாய்ரெக்காலங்கருணைசெய்வார்

மெய்ப்போதகநமக்கெந்நாள் வரும்வினையென்றொழியு
மெப்போதகமும்மமதையும்போம்புகலேழைநெஞ்சே.

(இ - ள்.) ஏழை நெஞ்சே - அறியாமையையுடைய மனமே! போது அகத்து உறை - தாமரைமலரிடத்தில் தங்குகின்ற, செம் திரு - சிவந்த இலக்குமியைத்தாங்கிய, மார்பத்து - திருமார்பையுடையவரும், பனை கை போதகம் சொன்ன - பனைமரம்போலுந் துதிக்கையையுடைய யானையினாற் கூப்பிடப்பட்ட, மாயர் - மாயையையுடையவருமாகிய, அ அழகர் - அந்த அழகர், எக்காலம் - எப்பொழுது, கருணை செயவார் - அருள்செய்வர்? மெய் போதகம் - உண்மையான ஞானம், நமக்கு—, எந்நாள் வரும் - எப்பொழுது உண்டாகும்? வினை - கருமம், என்று ஒழியும் - எப்பொழுது நீங்கும்? அகமும் - (தானல்லாத உடம்பை யானெனகிற) அகங்காரமும், மமதையும் - (தனதல்லாதபொருளை எனதெனகிற) மமகாரமும், எப்போது - எப்பொழுது, போம் - ஒழியும்? புகல - சொல்லு; (எ - று.)—அவ்வழகா என இயையும்.

அகம் - யானென்னும் அகப்பற்று; மமதை - எனதென்னும் புறப்பற்று.

இது. நேரசைமுதலதாகிய **கட்டளைக்கலித்துறை** (ருசு)

[சம்பிரதம்.]

ருஎ. ஏழுலோகமுமிக்கமண்டலத்தூடடைத்திடுவோங்குணக்கு
வெய்யோரெமதிசைபுகச்செயவோமுத்தரத்தூடுபன்னிருதிங்க
ளெண்ணிவிடுவோம, வாழ்குகையுளண்டரையரம்பையரைநாரதனை
வரவழைப்போம படர்கொடிமருப்பங்கயங்கள பலகுதிரைகுடை
சுனையிலெழமாதேரையடையநினைவோந, தாழ்வறும்புல்லையடிபுலி
செய்வோந திரணத்தையுந்திருத்தூணுக்குவோந்தருமெறும்பிதனை
மதகரிசெய்வோநதுவரையைசசண்பகாடவியாக்குவோ, மாழிநீர்
முன்பொருப்பாக்குவோ மெய்யகலுமாயிகள்வரப்பண்ணுவோ மதி
ரகசியங்கேளுமழகாதாட்காளலாவதிதெய்வமுன்விடுவமே

(இ - ள்.) ஏழு லோகமும சப்தலோகங்களையும், இ கமண்டலத்தூடு - இச் சிறு கரகத்துக்குள்ளே, அடைத்திடுவோம - அடைத்துவைப்போம் [மிக்க மண்டலத்தூடு - பெரிய அண்டகோளத்திறகுள், ஏழுலோகங்களை அடையச்செய்வோம]; குணக்கு - கிழக்கே உதிக்கின்ற, வெய்யோர் - சூரியர்கள் பன்னிருவரும, எம திசை - நாங்கள்செல்லுந் திக்கிலே, புக - செல்லும்படி, செய்வோம்— [குணக்கு வெய்யோர் - மாறுபாட்டையுடைய துஷ்டர்கள், எம திசை புக - யமலோகத்துக்குச் செல்லும்படி, செய்வோம்]; உத்தரத்தூடு - வடக்கிலே, பன்னிரு திங்கள் - பன்னிரண்டு சந்திரர்களை, எண்ணி விடுவோம் - கணக்கிட்டு அனுப்புவோம [உத்தரத்தூடு - மறுகூணத்திலே, பன்னிரு திங்கள் - பன்னிரண்டு மாசங்களையும், எண்ணிவிடுவோம் - பெயரெண்ணிச் சொல்லிவிடுவோம்]; கையுள் - (எங்கள்) கைக்குள்ளே, வாழ் கு - வாழ்கின்ற பூமியையும, அண்டரை - தேவர்களையும், அரம்பையரை - தெய்வப்பெண்களையும, நாரதனை - நாரதரையும, வர அழைப்போம் - வரும்படி செய்வோம் [வாழ் குகையுள் - பொருந்திய மலைக்குகையுள்ளே, அண்டரை - பகைவர்களையும், அரம்பை அரை - வாழைமரத்தின் அரையிலே, நார் அதனை - நாரையும், வர அழைப்போம் - வந்துபொருந்தச் செய்வோம்]; படர் கொடி - பரவிய துவசங்களும், மருப்பு அம் கயங்கள் - தந்தங்கள் அழகிய யானைகளும், பல் குதிரை - பல குதிரைகளும், குடை - குடைகளும், சுனை ஐயில் - வெள்வேல்களும், எழ - (இங்கே) வரும்படியாகவும், மா தேரை - குதிரைகள்பூட்டிய இரதங்களையும, அடைய - இங்

சே வரும்படியாகவும், நினைவோம் - நினைப்போம் [படர் மரு பங்கயம் கொடிகள் - பரவிய வாசனையையுடைய தாமரைக்கொடிகள், பல்கு திரை குடை சுனையில் - மிக்க அலைகள் புரளுகின்ற நீர்ச்சுனையிலே, எழ - உண்டாம்படியாகவும், மா தேறை அடைய - (அதிலே) பெரியதவளைகள் பொருந்தும்படியாகவும், நினைவோம்—]; தாழ் வறும் புல்லை - நிலத்திலே கிடக்கிற வெறுமையான புல்லை, அடு புலி செய்வோம் - கொல்லுகின்ற புலியாகச் செய்வோம் [தாழ்வு அறும புல்லை அடு புலி செய்வோம் - கொல்லுதற்றொழிலுடையபுலியைக் குறைவில்லாத புல்என்னுமஒருபெயருடையதாகச் செய்வோம்]; திரணத்தையும் திரு தூண் ஆக்குவோம் - சிறு துரும்பையுஞ் சிறந்த கம்பமாகச் செய்வோம [பசும்புல்லை, திருத்த ஊணா ஆக்குவோம் - திருத்தமானவிலங்குணவுகளாகச் செய்வோம]; தரும் எறும்பு இதனை மதகரி செய்வோம் - வருகிற எறும்பை மதயானையாகச் செய்வோம் [மதகரிதனை தரும் எறும்பி செய்வோம் - மதயானையைப் பொருந்திய எறும்பியென்னும் பெயருடையதாகச் செய்வோம்]; தூவைரயை சண்பக அடவி ஆக்குவோம் - துவரஞ்செடிகொல்லையைச் சண்பகக்காடாகச் செய்வோம் [சண்பக அடவியை துவரை ஆக்குவோம - சண்பகமலர்த்தொகுதியைச் சிவந்தநிறமுடையதாகச் செய்வோம்]; ஆழி நீர் முன் பொருப்பு ஆக்குவோம் - ஆழமுள்ள நீரைக் கண்முன்னே மலைகளாகச் செய்வோம் [கடலநீரிலே முன்னே மலைகளைப் பொருந்தச்செய்வோம்]; மெய் அகலும் ஆவிகள் வர பண்ணுவோம் - உடம்பைவிட்டுநீங்கின உயிர்களை (மீண்டும அவ்வுடம்பில்) வந்துசேரச்செய்வோம் [சரீரத்தினின்றும் பெரிய மூச்சுகள் வரச்செய்வோம்], அதி ரகசியம் கேளும - மிகவும அந்தரங்கமானதொரு ஜாலஞ் சொல்லுவோம கேளுங்கள்; அழகர் தாட்கு ஆள அலா - அழகர்திருவடிகளுக்கு அடிமை யல்லாத, அதிதெய்வம் - கடவுளை, முன் விடுவம் - முன்னே கொண்டுவந்துவிடுவோம்; (எ-று.)—என்றது - அழகர்க்கு அடிமையல்லாத தேவதாந்தரம் எவ்வுலகத்திலும் இல்லையாதலால் அதனையும் இனித் தேடி முன்னே கொணர்ந்துவிடுவோமென அருமை அறிவித்தபடி; இனி, அழகர்பாதத்துக்கு ஆளாகாத தெய்வத்தை முன்னே விட்டுவிடுவோம் என்னும் பொருளுந் தோன்றும்.

இந்திரஜாலமுதலிய மாயைவித்தை வல்லவர் தமது சிறப்பைத் தாமே யெடுத்துக்கூறுவதாகச் செய்யுள்செய்வது, சம்பிரதம என்னும உறுப்பின் இலக்கணமாம்

குணக்குவெய்யோ ரெமதிசைபுகச்செய்வோம் என்பதற்கு - கிழக்கில் உதிக்கின்ற துவாதசாதித்யர்களை எமனுடையதிக்காகிய தெற்கிற் போகப் பண்ணுவோமென்றும் பொருள்கொள்ளலாம. துவரையைச் சண்பகாடவியாக்குவோம் என்பதற்கு - சம்பகவனமாகிய ராஜமன்னார்கோயிலென்னுந் திருப்பதியைத் துவாரகையாகச் செய்வோமென்று பொருள்கூறி, அத்திருப்பதிக்கு 'தக்ஷிணத்துவாரகை' என்று ஒருபெயர் உண்டென்பர்.

இது - பெரும்பாலும் முதலைந்து காய்ச்சீர்களும், மற்றை இரண்டும் மாச்சீர்களுமாய் வந்தது அரையடியாகவும், அஃதிரட்டிகொண்டது ஓரடியாகவும் நின்ற பதினான்குசீராசிரியவிருத்தம். (ரு

[இரங்கல்.]

ருஅ. விடலருமறையினும்விடவராவினு
நடமிடுமழகரெநநாளிரங்குவார்
தடமுலைமயிலொருசரம்விடாமுன
மடன்மதன்விடுசரமனந்தகோடியே.

(இ - ள்.) விடல் அரு - விட்டுநீங்குதற்கரிய, மறையினும் வேதங்களிலும், விடம் அராவினும் - விஷத்தையுடைய (காளியனென்னும்) பாம்பின் முடியிலும், நடம் இடும் - மகிழ்ந்து திருநடனஞ்செய்கின்ற, அழகர் —, எந்நாள் - எப்பொழுது, இரங்குவார் - மனமிரங்கி வந்து கூடியருள்வாரோ? தடமுலை மயில் - பருத்த தனங்களையுடைய மயில்போன்ற என்மகள், ஒரு சரம் விடாமுனம் - ஒருசுவாசம விடுதற்குமுன்னே, அடல் மதன் - வலிமையையுடைய மன்மதன், விடு - பிரயோகிக்கிற, சரம் - அம்புகள், அனந்த கோடியே - அளவில்லாத கோடியென்னுந் தொகையுடையனவேயாம்.

இது, தலைமகனைப்பிரிந்து வருந்துகிற தலைமகள்பொருட்டாக நற்றாய் இரங்கியது.

விடலருமறையின் நடமிடு மழக ரென்றது - எந்நாளும் வேதங்களில் எங்குங் கொண்டாடப்படுவ ரென்றபடி.

இது, மூன்றாஞ்சீர் மாசசீரும், மற்றவை விளசசீருமாகிய கலிவிருத்தம்.

௫௯. கோடிதவமுயல்முனிவோர்க் கருள்பததாமரையார்
குறியவராகமபெரிய நெடியவராகமுமா, யாடிரணசிங்கமுமாமெம்
மான்பல்கலையோ டம்புலிதாழ்கோட்டிடபத்தணிவரையைக் கண்
டான்,மூடிருளைப்பொருதறுகண்மறலிகடாவிடிலே முடுகொருகடா
மடங்குமூன்றுகடாமடங்கா, தோடிவரக்குளிறிவெளிறியகளிறுவந்
தே யுறப்பிடரினிணைத்துலவும் பிறப்பிடர்மற்றிலையே.

(இ - ள்.) கோடி தவம முயல் முனிவோர்க்கு - அநேகந் தவங்களை முயன்றுசெய்த முனிவர்கட்கு, அருள் - கிருபைசெய்கிற, பதம் தாமரையார் - திருவடித்தாமரையையுடையவரும், குறியவர் - உடல்குறுகிய வாமனாவதாரமும், ஆகம் பெரிய - உடம்பு பருத்த, நெடிய - நீண்ட, பன்றியும் - வராகாவதாரமும், ஆய் - ஆகி, ஆடு இரணம் சிங்கமும் ஆம் - போர்த்தொழில்வல்ல நரசிங்கமுமாய்த் திருவவதரித்த, எமமான் - எம்பெருமானது, பல் கலையோடு அம்புலி தாழ் கோடு - பலகலைகளோடுகூடிய பூரணசந்திரன் தவழப்பெற்ற [மிகஉயர்ந்த] சிகரத்தையுடைய, இடபத்து அணி வரையை - அழகிய ருஷபகிரியை, கண்டால் - (ஒருதரம) தரிசித்தால், — (பின்பு அந்திம காலத்தில்), மூடு இருளை பொரு - உலகங்களை மூடிக்கவிகிற அந்தகாரத்தைப் போன்ற [கருநிறமுடைய], தறுகண் அஞ்சாமையுடைய, மறலி - யமன், கடாவிடில் - (தன்வாகனத்தை அவர்கள்மீது) செலுத்தினால், முடுகு ஒரு கடா - விரைந்துவருகின்ற (அவ்யமன்வாகனமாகிய) எருமைக்கடா, மடங்கும் - மேறசெல்லாமற் பின்னிடும்; வெளிறிய களிறு - வெண்ணிறமுடைய யானை [இந்திரனது ஐராவதம], மூன்று கடாம அடங்காது ஓடிவர - மூவகை மதஜலமும அடங்காமல் மேன்மேற சுரந்து ஒழுகும்படி, குளிறி - ஆரவாரஞ் செய்துகொண்டு, வந்து —, பிடரின் - தன்பிடரியிலே, உற - பொருந்தும்படி, இணைத்து (அவர்களை)வைத்துக்கொண்டு, உலவும் - உலாவரும்; மற்று - பின்னும், பிறப்பு இடர் இலையே - அவர்கட்குப்) பிறவித்துன்பமும் இல்லையாம்; (எ - று.)

அழகரது சோலைமலையை ஒருகால் தரிசித்தவர்கள் யமபயமொழிந்து பலநாள் இந்திரபோகம் முதலிய இன்பங்களை அனுபவித்து இறுதியிற் பிறப்பற்று முத்திபெறுவ ரென்பதாம்.

பல்கலையோடு அம்புலிதாழ் கோடு என்பதற்கு - (அவ்விடத்துப் பகைமைக்குண மில்லாமையால்) பல மான்களும் அழகிய புலிகளுங் கூடிவாழ்கின்ற சிகர மென்றும் உரைக்கலாம். கடாவிடில் - எதிர்காலவினையெச்சம்; கடாவு - பகுதி, இடு - துணைவினை. இது, அங்ஙனங் கடாவாமை குறித்து

நின்றது: "திறம்பேன்மின் கண்டீர்திருவடிதன் னாமம், மறந்தும் புறந்தொழா மாந்த - ரிறைஞ்சியுஞ். சாதுவராய்ப் போதுமின்க ளென்றான் நமனுந் தன், தூதுவரைக் கூவிசெவிக்கு" எனப் பெரியார் கூறியது காண்க. பிடர் - புறக்கழுத்து.

இது, பதினெட்டாங் கவிபோன்ற எண்சீராசிரியவிருத்தம். (ருகூ)

கூ0. இடர்களென்றதிரைகளாலிடிந்துதீரம்வீழவே யெழுந்த பாவசாகரத்தினிடைமிதந்ததிரணநான், மடமைநெஞ்சநாளிலேமகிழ்ச்சிகூர்ந்ததெம்பிரான் மந்த்ரமூலசொருபகாந்தி யிந்த்ரநீலமல்லவோ, வுடன்மறந்தமறவிராதனுமுவிராதகறுகணுனெடுங்கவந்தனுமாவி போயொடுங்கவந்தநிருதருந, திடமலைந்துவிடமலைந்து தென்னிலங்கைவென்றவன் றிங்களகுன்றமுத்திலங்குநங்கள குன்றமாயனே.

(இ - ள்.) இடர்கள் என்ற - துன்பங்களாகிய, திரைகளால் - அலைகளால் இடிந்து-இடிபட்டு. தீரம்-மனவுறுதியாகிய இருகரைகளும், வீழ-விழுந்துபோம்படி, எழுந்த - பொங்கிக் கிளர்ந்த. பாவ சாகரத்தினிடை-பாவமாகிய கடலின் நடுவிலே, மிதந்த - விழுந்து மிதந்துகிடந்த, திரணம்-துரும்பு போன்றவனாயேன், நான்—; மடமை நெஞ்சம் - (எனது) அறியாமையையுடைய மனம், நாளிலே - இத்தனைநாளாக. மகிழ்ச்சிகூர்ந்தது - (அவனைத் துதியாமல் வீணே விஷயாந்தரங்களிற்சென்று) களிப்பு மிகுந்தது; எம்பிரான் - எமது அழகப்பிரானுடைய, மந்த்ரம் மூலம் - எல்லாமந்திரங்கட்கும் முதலதாகிய திருமந்திரத்தாற் சொல்லப்படுகின்ற, சொருபம் - திருமேனியினது. காந்தி - ஒளியானது. இந்த்ரநீலம் அல்லவோ-இந்திரநீலரத்தினத்தை ஒத்ததன்றோ? உடல் மறந்த மறம - தன்உடலையுந் தான்மறந்த வலிமையையுடைய, விராதன் - விராதனும். உறவு இராத கறுகணுனொடும் - ஒப்புமையில்லாத வலிமையையுடைய கானும், கவந்தன்-கபந்தனும், ஆவி போய் ஒடுங்க - உயிர் ஒடுங்கிப்போகவும் [இறந்தழியவும்], வந்த நிருதரும் - எதிர்த்துவந்த மற்றைராக்ஷஸர்களும், திடம அலைந்துவிட - நெஞ்சுறுதி ஒழிந்து அழியவும், மலைந்து - போர்செய்து, தென் இலங்கை-தெற்கிலுள்ள லங்கையை, வென்றவன் - சயித்தவன்,—திங்கள் குன்ற - சந்திரனும் ஒளி குறையும்படி, முத்து இலங்கும் - முத்துக்கள் விளங்குகின்ற, குன்றம் - சோலைமலையில் எழுந்தருளிய, நங்கள் மாயனே நமது மாயவனேயாவன; (எ - று.)

சாகரம் - சகரபுத்திரர்களால் தோண்டப்பட்டது. முதலடி, உருவகவணி. தனக்கும்அளவுதெரியாதமிக்கவலிமையென்பார். 'உடலமறந்தமறம்' என்றார்.

விராதனை வதைத்தது:—விராதன் - ஓர்அரக்கன்; இவன், முன்னே தும்புருவென்னும் பெயருள்ள கந்தருவனாயிருந்து குபேரனதுசாபத்தாற், பின்பு ராக்ஷஸனாகி வனத்தில் திரிந்துவருபவன; விராத னென்னும் வடசொல்லுக்கு - மிகுதியாய் அபராதஞ்செய்பவ னென்று பொருள். இராமலக்ஷ்மணர் சீதையுடனே அயோத்தியைநீங்கித் தண்டகவனம் புகுந்தவுடனே விராதனென்னும்பெயர்பெற்ற அரக்கனொருவன் ஜாநகியைத் தூக்கிக்கொள்ளக் கண்டு ஸ்ரீராமலக்ஷ்மணர்கள் எதிர்க்க, அவன் அவளைவிட்டு இவர்களிருவரையும் தூக்கிக்கொண்டு செல்ல, இவர்கள் அவனதுதோள்களைத் துணித்துத தள்ளியவுடனே முற்பிறப்புணர்ச்சிவந்துகூடிய அவனது வேண்டுகோளின்படி அவனைப் பள்ளம்வெட்டிப் புதைத்துக் கொன்றுவிட்டன ரென்பதாம்.

கரனென்னும் ராக்ஷஸன் எதற்குமஞ்சாத கொடுமையுடையவனாதலின், அவனை 'உறவிராததறுகணன்' என்றார். கரன் - இராவணனது சிறிய

தாயாகிய கும்பீநசியின் குமாரன்; இராவணனுக்குத் தம்பிமுறையில் நிற்பவன்; தண்டகாரணியத்திலே ஜனஸ்தானத்தில் சூர்ப்பணகைவசித்தற்கென்று ஏற்படுத்திய இராசியத்தில் அவளுக்குப் பாதுகாவலாகவும், அவளிட்டகட்டளைப்படி நடப்பதற்காகவும் இராவணனால் நியமித்துவைக்கப்பட்ட பெரியஅரக்கர்சேனைக்கு முதல்தலைவன். இலக்குமணனால் மூக்கு முதலியஉறுப்புக்கள் அறுப்புண்ட சூர்ப்பணகை இராமலக்குமணரிடத்துக் கறுவுகொண்டுசென்று கரன்காலில் விழுந்து புலம்பிமுறையிட, அதுகேட்டு அவன் சினந்து மிகப்பெரியசேனையோடும் அறுபதுலக்ஷம்படைவீரர்களோடும் சேனாத்தலைவர் பதினால்வரோடும் தூஷணன் திரிசிரா முதலிய முக்கிய சேனாதிபதிகளோடும் புறப்பட்டுச் சென்று போர்தொடங்குகையில், இராமன் போர்க்கோலங்கொண்ட லக்ஷ்மணனை விலக்கிச் சீதைக்குக்காவலாக வைத்துவிட்டு, தான் தனியே எதிர்த்துச்சென்று பெரும்போர்செய்து பலரையும்அழித்து, முடிவில் கரனையும் கொன்றனனென்பதாம்.

கவந்தன் - தநுவென்னும் யக்ஷனது மகன்; இவன், ஸ்தூலசிரஸ்என்னும் முனிவரது சாபத்தால்அரக்கனாகிப் பிரமனருளால் தீர்க்காயுசுபெற்றுத் தேவேந்திரனோடு எதிர்த்து அவனது வச்சிராயுதத்தாற் புடைபட்டுத் தனது தலை வயிற்றில் அழுந்தியமைபற்றிக் கவந்தம்போலத் தோற்றமுடையனாயிருந்ததனால், இப்பெயர்பெற்றான். கபந்தம் என்ற வடசொல்லுக்கு-தலையற்றதும் தொழிலுடன்கூடியதுமான உடலென்பது பொருள். இவன், தண்டகாரணியத்தில் ஒருபக்கத்திலே இருந்து, தனதுநீண்டகைகளிரண்டையும் எட்டினமட்டிற் பரப்பித் துழாவி அதற்குள் அகப்பட்ட சீவராசிகளையெல்லாம் வாரிவாய்ப்பெய்து விழுங்கிக்கொண்டிருக்க, அங்குச்சென்று இவன் தோள்களினிடையே அகப்பட்டுக்கொண்ட இராமலக்ஷ்மணர் அத்தோள்களை வாளால் வெட்டித் தள்ளினவளவில், முன்னையசாபமும் முற்பிறப்பின்தீவினையும் தீர்ந்து இராட்சசசரீரத்தைவிட்டுத் திவ்வியசொரூபம் பெற்றுப் பெருமானைப் பலவாறு துதித்து நற்கதிக்குச் சென்றனன் என்பது, கபந்தனைக்கொன்ற வரலாறு.

இது - இருபத்தைந்தாங்கவிபோன்ற பதினொன்றுசீராசிரியவிருத்தம்.

[இரங்கல்.]

௬௧. மாய்கின்றதேவர்க்கெலாமணவாளாவடிவழகர்
வேய்கின்றதுல்லையென்றோதருவாரெங்கண்மின்கரும்பு
சாய்கின்றபூவணையாலைபொன்னோலையிற்றாவுங்கண்ணீர்
பாய்கின்றசாறுகுறுவேர்பிதுங்கியபான்முத்தமே.

(இ - ள்.) மாய்கின்ற தேவர்க்கு எலாம்-அழிகின்ற நிலைமையையுடைய எல்லாத்தேவர்கட்கும், மணவாளர் - தலைவராகிய, வடிவு அழகர்—, வேய்கின்ற துல்லை - (தாம்) சாத்தியருள்கிற திருத்துழாய்மாலையை, என்றோ தருவார்-எப்பொழுது தருவாரோ? எங்கள் மின்-எங்களது மின்னற்கொடி போலும் மகள், கரும்பு - கரும்பாவள்; சாய்கின்ற பூ அணை - (அவள்) படுத்துக்கொள்கிற மலர்ப்படுக்கை, ஆலை - (அக்கரும்பை ஆட்டும்) ஆலையாம்; பொன் ஓலையின் தாவும் - பொன்னினாலாகிய காதணியை அளாவுகிற, கண் - கண்களினின்று பெருகுகிற, நீர் - நீரானது, பாய்கின்ற-(அக்கரும்பினின்றும்) பெருகுகிற, சாறு - சாறாகும், குறு வேர்-(அவளுடம்பினின்று அரும்புகிற)சிறிய வேர்வைநீர்த்துளி, பிதுங்கிய பால முத்தமே-(அக்கரும்பினின்றும்) வெளிப்பட்ட வெள்ளிய முத்துக்களாம்; (எ - று)

'மாய்கின்றதேவர்க்கு' என்றதனால், இவர் மாய்வு இல்லாதவர் என்றதாயிற்று. மணவாளர் - நாயகர். உருவகவணி.

இது, நேரசை முதலதாகிய கட்டளைக்கலித்துறை. (௬௧)

[தூது.]

சுஉ. பாலிருந்தநீர்பிரிப்பீரொருநீருங்கள்பங்கயத்தோன்றன்னா
வைப்பாரானென்கண், போலிருந்தாரையுமென்னையும்பிரித்தானிந்தப்
புண்ணியமுங்களையடையும்போமோசொல்லீர், சேலிருந்தகொடி
யோனைப் பெறுமால்சோலைச் சிலம்பாற்றினிரைதெவிட்டித் திரை
முத்தூஞ்சன், மேலிருந்துவிளையாடிக்கமலவீட்டின் மென்பேட்டி
னுடன்செல்செங்கால்வெண்புள்ளீரே.

(இ - ள்.) சேல் இருந்த - மீன்வடிவம் பொருந்திய, கொடியோனை - துவசத்தையுடைய மன்மதனை, பெறும் - மகனாகப் பெற்ற, மால் - திருமாலினது, சோலை - சோலைமலையிலுள்ள, சிலம்பாற்றின் - சிலம்பாற்றிலே, இரை - (மீன்களாகிய) இரைகளை, தெவிட்டி - வயிறுநிரம்ப உண்டு, திரை - (அவ்வாற்றின் வெண்மையான) அலைகளாகிய, முத்து ஊஞ்சல்மேல் - முத்துக்களாலாகிய ஊசலில், இருந்து - தங்கியிருந்து, விளையாடி—, கமலம் வீட்டில் - தாமரையாகிய தங்குமிடத்திலே, மெல் பேட்டினுடன் - மென்மையான பேடைகளுடனே, செல் - சென்றுவாழ்கிற, செம் கால் - சிவந்த கால்களையுடைய, வெள் - வெண்மையான, புள்ளீரே - அன்னப்பறவைகளே!— ஒரு நீர் - ஒப்பற்ற நீங்கள், பால் இருந்த நீர் - பாலுடனே கூடியிருந்த நீரை, பிரிப்பீர் - பிரிக்குந்தன்மையுடையீர்; உங்கள் பங்கயத்தோன் - உங்கள்தலைவனாகிய பிரமன், தன் நாவை பாரான் - தனது நாக்கின்தன்மையை ஆலோசியாமலே, என் கண் போல் இருந்தாரையும் - எனக்குக் கண்போலிருந்த கணவரையும், என்னையும் - என்னையும், பிரித்தான் - (தனித்தனியே) பிரித்துவிட்டான், இந்த புண்ணியம் - (இவ்வாறு பிரிந்து வருந்துகிற என்னைக் கணவரோடு கூடச்செய்கிற) இந்நல்வினை, உங்களை—, அடையும் - வந்துசேரும்; போமோ - வீணாகப்போய்விடுமோ? [போகாது]; (ஆதலால்), சொல்லீர் - (என்நிலைமையை என்நாயகர்க்குத் தூதுபோய்ச்) சொல்லுங்கள்.

'உங்கள்பங்கயத்தோன்' என்றது - பிரமன் ஹம்ஸவாகனனாதலின். பங்கயத்தோன் - தாமரையில் வாழ்பவன். பிரமன் தன்மனைவியாகிய சரசுவதியை அரைக்கணமும் விட்டுப்பிரியாமல் எப்பொழுதும் தன்நாவிலேயே பொருந்தியிருக்கவைத்து வாழ்வதனால், 'தன் நாவைப் பாரான்' என்றாள். சேலிருந்த கொடியோனைப் பெறும் - மீனக்கொடியையுடைய பாண்டியனை அடிமையாகப்பெற்ற என்றுமாம். இனி, பாலும் நீரும்போல வேறுபாடின்றிக் கூடியிருந்த எங்களைத் தனியேபிரித்த இப்புண்ணியம் உங்களை அடையும், அடையாமற்போய்விடுமோ? சொல்லுங்கள் என்றுங் கருத்துக்கொள்ளலாம்; இங்கே பாவத்தைப் புண்ணியமென்றது, குறிப்பினால்.

இது, பதினான்காங்கவிபோன்ற எண்சீராசிரியவிருத்தம். (சுஉ)

[இரங்கல்.]

சுஙா புள்ளின்வாய்கிழித்தார் மருதிடந்தழித்தார் பூதனையா
ருயிர்கழித்தார் புறஞ்சுழலகாற்றுண்டுதிரமொண்டிறைத்தார் புரவி
யோடிரவியைமறைத்தார், துள்ளியகுயிலைப்பூத்ததேமாவைத்தூற்று
மன்னையைச்சிறுகாற்றைச் சுடுமதிகோரமதியினைவிடுத்தார் தோன்
றியமதியையென்சொல்வேன்; விள்ளருமயிலத்துட்பணிகளோவெ
ன்றுவிகங்கபூபதியெழக்கனகன் வெங்குடர்பிடுங்கியெறிந்துரங்கிழி
த்துவிடாய்க்குவெங்குருதிநீருறிஞ்சிப், பிள்ளையைப்புரந்தவெள்ளெ
யிற்றகல்வாய்ப் பெருங்குரற்சிங்க மெங்களூர்ந்தேன் பெருக்கெறி
சோலைப்பொருப்பலங்காரர் பிறாக்ருபகாரமொன்றிலரே.

(இ - ள்.) புள்ளின் - கொக்குவடிவமாய்வந்த பகாசுரனது, வாய் - வாயை, கிழித்தார் - கிழித்து அழித்தவரும்;—மருது - இரட்டைமருதமரங்களை, இடந்து - முறித்துத்தள்ளி, அழித்தார் - அழித்தவரும்;—பூதனை-பூதனையினது, அரு உயிர் - அரிய உயிரை,கழித்தார் - போக்கினவரும்;—புறம் சுழல் காற்று - வெளியிலே சுழல்கின்ற பெருங்காற்றின் வடிவமாய் வந்த காலியாசுரனை, உண்டு—, உதிரம்-(அவனது) ரக்தத்தை, மொண்டு இறைத்தார் வாரி இறைத்தவரும்;—புரவியோடு - (தேரிற்கட்டிய) குதிரைகளுடனே, இரவியை - சூரியனை, மறைத்தார் - மறைத்தவருமாகிய அழகா,—துள்ளிய குயிலை - களித்துக்கூவுகின்ற குயிலையும், பூத்த தேமாவை - பூப்பூத்துள்ள தேன்மாமரத்தையும், தூற்றும் அன்னையை - (கண்ட இடமெங்கும் என்னைப்)பழிதூற்றுகின்ற தாயையும், சிறு காற்றை-மந்தமாருதத்தையும்,சுடும் அதி கோர மதியினை-சுடுகின்றமிகவும்பயங்கரமான சந்திரனையும், (அழியாமல்), விடுத்தார்-(என்னை வருத்தும்படி) விட்டிட்டார்; தோன்றிய மதியை-(அவருக்கு)உண்டான அறிவை,என் சொல்வேன்-என்னவென்று சொல்வேன்; விள அரு-உட்புகுந்துசெல்லுதற்குஅருமையான, பிலத்துள்-பாதாளலோகத்தில்வசிக்கிற, பணிகளோ - பாம்புகளோ, என்று - என்று சந்தேகித்து, விகங்க பூபதி - பறவைகட்கு அரசனான கருடன், எழ - எழும்படி, கனகன் வெம் குடர்-இரணியனது கொடிய குடல்களை,பிடுங்கி எறிந்து—, உரம் கிழித்து - மார்பைக் கீண்டு, விடாய்க்கு - அவ்விளைப்புத் தீர்தற்பொருட்டு, வெம் குருதி நீர் உறிஞ்சி - கொடிய ரக்தநீரைக் குடித்து, பிள்ளையை புரந்த-பிரகலாதாழ்வானைக் காத்த,வெள் எயிறு-வெள்ளிய கோரப்பற்களையும், அகல் வாய்-அகன்ற வாயையும், பெருங் குரல-பெரியகுரலையுமுடைய, சிங்கம - நரசிங்கமானவராகிய —எங்கணும் தேன் பெருக்கு எறி - எல்லாவிடத்துந் தேனொழுக்கைப் பெருக்குகின்ற, சோலை பொருப்பு - சோலைமலையிலுள்ள, அலங்காரா - அழகர், பிறர்க்கு - அயலார்க்கு, உபகாரம் ஒன்று இலரே - சிறிதும் உதவிசெய்தல் இல்லாதவரே யாவர்; (எ - று.)

தன்னைக்கொல்லுதற்குக் கம்ஸனால் ஏவப்பட்டுவந்த பறவையின் வாயைக் கிழித்தவரும், தன்வழியைத்தடுத்த மருதமரங்களை முறித்தழித்தவரும், தன்னைக்கொல்லவந்த பூதனையினது உயிரை ஒழித்தவரும், தன்னை எடுத்துக்கொண்டுபோக வந்த பெருஞ்சுழல்காற்றை உண்டு ஒழித்தவரும், தன்அன்பராகிய பாண்டவர்பொருட்டுச் சூரியனை மண்டலத்தோடு மறைத்தவரும் ஆகிய நாயகர்க்கு, அவரைப்பிரிந்தகாலத்து என்னை வருத்துகிற குயிலை வாய்கிழித்து, தேமாவை இடந்தழித்து, அன்னையை ஒழித்து, சிறு காற்றை உண்டு,மதியை மறைப்பது ஒரு அரியபெரியகாரியமன்று; ஆயினும் அவ்வாறு செய்யாததனால், தன்காரியம் பார்த்துக்கொள்பவரே யன்றிப் பிறருக்கு உதவிசெய்பவ ரன்று என்று தலைமகள் இரங்கினாள். மூறைநிரனிறைப் பொருள்கோள.

விகங்கம் - ஆகாயத்திற் செல்வது. பூபதி - பூமிக்குத்தலைவன்; இங்கு அரசனென்றமாத்திரையாய் நின்றது. இரணியனது உடம்பினுள் உள்ள குடல்களைப் பிலத்திலுள்ள பாம்புகளென்று கருடன் மயங்கியதாகக் கூறியதனால், மயக்கவணி.

இரவியை மறைத்த கதை.—பாரதயுத்தத்திலே பதின்மூன்றாநாளில் தன்மகனான அபிமந்யுவைக் கொன்ற ஜயத்திரதனை மறுநாள் சூரியாஸ்தமயத்திற்குமுன்னே கொல்வதாகவும், கொல்லமுடியாமற்போனால் அக்நிப்பிரவேசஞ்செய்து இறப்பதாகவும் பிரதிஜ்ஞைசெய்த அருச்சுனனது சபதத்தை நிறைவேற்றியருளுதற்பொருட்டுக் கண்ணன் பதினான்காநாட்போரில் பகலிலே சூரியனைச் சக்கரத்தால் மறைத்துவைக்க, அவ்வரையில்

இருந்தவிடந்தெரியாதபடி ஒளித்திருந்த அசைசந்தவன் அப்பொழுது அஸ்தமித்தது என்று எண்ணி வெளியில் வர, அதுபொழுது கண்ணன் திருவாழியை வாங்கியருள, அருச்சுனன் அச்சயத்திரதனைக் கொன்றானென்பதாம்.

இது, இருபத்தாறுங்கவி போன்ற பதினான்சீராசிரியவிருத்தம். (௬௩)

௬௪. ஒன்றாகிமூன்றாவடிவாயடியவருள்ளத்துள்ளே
நின்றாய்புறத்துமபுளேறிவந்தாயெங்குநிறைந்தாய்
நன்றாமுன்னாடல்பொன்னாடர்கைகூப்பியநங்கள்குன்றிற்
குன்றாமரகதக்குன்றேகுன்றேந்துகுணக்குன்றமே

(இ - ள்.) பொன் நாடர் - பொன்னுலகமாகிய சுவர்க்கத்திலுள்ள தேவர்களெல்லாம், கைகூப்பிய - அஞ்சலிசெய்து வணங்குகின்ற, நங்கள் குன்றில - நமது சோலைமலையில் எழுந்தருளிய, குன்றா - ஒருயாற்றானுங் குறைவில்லாத, மரகதம் குன்றே - மரதகமலைபோன்றவனே! குன்று ஏந்து - கோவர்த்தனத்தை(க் குடையாகத்) தாங்கிய, குணம் குன்றமே - திருக்கலியாணகுணங்களுக்கு மலைபோன்றவனே!— நீ—, ஒன்று ஆகி - ஒப்பற்றதொருபொருளாய், மூன்று வடிவு ஆய் திரிமூர்த்தி சுவரூபமாய், அடியவர் உள்ளத்துள்ளே - பகதர்களது மனத்தினுள், நின்றாய் - எப்பொழுதும பொருந்திநின்றாய்; புறத்தும் - வெளியிலும், புள் ஏறி வந்தாய் கருடனை ஏறிவந்து காட்சிகொடுத்தாய்; எங்கும் நிறைந்தாய் - எல்லாவிடத்தும்நிரம்பி நின்றாய்; உன் ஆடல் - உனது திருவிளையாட்டு நன்று ஆம் - நன்றாயிருந்தது.

ஒருகாலத்தே ஒன்றாகியும் மூன்றாகியும் இருத்தலும், உள்ளேயும் புறத்தேயும் நிற்றலும, எங்கும் நிரமபுதலும வியக்கத்தக்கனவாதலால், 'உன் ஆடல் நன்றாம்' என்றது ஒன்று - அத்விதீயம்.

இது, நேரசை முதலதாகிய கட்டளைக்கலித்துறை. (௬௪)

[தூது.]

௬௫. குணசலதியாமழகாகுலவரையின்முகில்காண்
மணமலரின்வண்டுநிகர்வன்கணார்பிரிந்தார்
கணவரவர்நெஞ்சதுகருங்கலலவோவென்
புணர்முலையில்வந்துவிளைபொன்னையுரையீரே.

(இ - ள்) குலம் வரையின் முகில்காள் - சிறந்த சோலைமலையில் வாழ்கின்ற மேகங்களே!—மணம் மலரின் வண்டு நிகர் - வாசனையையுடைய புஷ்பத்தில் (வந்துமொய்த்துத் தேனையெடுத்துஉண்டு போயவிடுகின்ற) வண்டு போல (என்பக்கல்வந்து இன்பநுகர்ந்துபோன), வன்கணர் - இரக்கமில்லாமையையுடையவராகிய, குண சலதி ஆம் - திருக்கலியாணகுணங்களுக்குக் கடலாகிய, அழகர்—, பிரிந்தார் - (என்னைவிட்டு) நீங்கினார்; கணவரவர் - அந்நாயகரது, நெஞ்சது - மனம், கருங்கல் அலவோ - வலிய கருங்கல் அன்றோ? என் - எனது, புணர் முலையில் - நெருங்கிய தனங்களில், வந்து - உண்டாகி விளை - பரவுகின்ற, பொன்னை - (விரகவேதனையாலுண்டாகிற) பொன்நிறமான பசலையை, உரையீர் - (அவருக்குச) சொலலுங்கள்; (எ - று.)

'கருங்கலலவோ, பொன்னையுரையீா' என்றவற்றில் - கரியஉரைகல்லன்றோ? ஆதலால், அதில் பொன்னைஉரைத்திடுங்கள் என ஒருபொருள் தொனிக்கவைத்தது காண்க. ஜலதி - நீர்தங்குமிடம். பொன் - அதுபோன்றநிறமுடைய தேமலுக்கு உவமையாகுபெயர்.

இது, ஈற்றுச்சீர் மாசசீரும், மற்றவை விளங்காய்ச்சீருமாகிய கலிவிருத்தம்.

[இரங்கல் - மடக்கு.]

௬௬. ஈரமதிச்சோலைவரையிறைவர்மதிச்சோலைவரை
சாரகவிமானமரார்தாரகவிமானமரு

*ராரணந தாமோதரனூரயனூந தாமோதரனூர்*
*சீரரங்கமொழியாரே தீயரங்கமொழியாரே.*

(இ - ள்.) மதிச்சு - பெருமைப்படுத்தி, ஓலை - சீட்டுகளில், வரை - எழுதப்படுகின்ற, சார கவி - சிறந்த பாடல்களினது, மானம் - சிறப்பை, மறார் - மறுக்காதவரும்,—தாரக விமானம் - தாரகமென்கிற விமானத்தை, அறார் - நீங்காதவரும்,—ஆரண்ம்தாம ஓது-வேதங்களிற்கூறப்படுகிற, அரனூர் - உருத்திரனது வடிவமும், அயன் - பிரமனது வடிவமும், ஆம்-ஆகிய, தாமோதரனூர் - தாமோதரனென்னுந் திருநாமமுடையவருமாகிய, ஈரம் மதி - குளிர்ந்த சந்திரமண்டலத்தை அளாவுகின்ற, சோலைவரை - சோலைமலையிலுள்ள, இறைவா - அழகராகிய நாயகா,—சீர் அரங்கம் - சிறந்த திருவரங்கத்தை, ஒழியாரே - விட்டுநீங்கார் காண்; தீயர் - கொடிய, என்தோழிமார்,—அங்க மொழியாரே - அங்குச (சென்று என்நிலைமையைச) சொல்லார்காண்; (எ - று.)—இவர்கள் சென்று சொல்வாராயின், அவர் உடனே வந்து அருள்வ ரென்று இரங்கியபடி

தாமோதரன்என்பதற்கு - (யசோதையினால்) கயிற்றைக்கொண்டு(கட்டப்பட்ட) வயிற்றையுடையவ ரென்றும, வயிறறில் திருத்துழாய்மாலையையுடையவ ரென்றும் பொருள். அங்கு - அங்கவென ஈறுதிரிந்தது

இது, பெரும்பாலுமெல்லாசசீர்களுங்காயசசீர்களாகிய **கொச்சகக்கலிப்பா.**

[இரங்கல்.]

**௬௭** மொழியுமினியீர்குழைவாரநதீர்முததமிழ்சசெய்யுட்பயின்றீர், வழியுமாசாரமுஞ்சிறநதீர்மதுரக்கழைகாளினிக்கேளீர், பொழியுங் கொடையாரழகர்வெற்பிற் புராரிகெதிர்போய்ததழல்விழியா, லழியுங்காமன்பழிகாரனங்கேயிணக்கமாகாதே

(இ - ள்.) பொழியும கொடை ஆர - (வரையறையில்லாமற்) சொரிகிற ஈகைததன்மையையுடையவராகிய, அழகர் - அழகரது, வெற்பில் - சோலைமலையிலேயுள்ள, மதுரம் கழைகாள்-இனிமையான கரும்புகளே!—(நீங்கள்), மொழியும் இனியீர் - இனிமையான சொற்களையுடையீர் [இனிய ஒலியையுடையீர்]; குழைவு ஆர்ந்தீர் - உள்ளன்பு நிரமப மிகுந்தீர் [குழைவார்ந்தீர் - தழைகள் நிரம்பப்பெற்றீர்]; மு தமிழ் செய்யுள் பயின்றீர் - மூவகைப்பட்ட தமிழின் பாடல்களைப் பயிற்சிசெய்தீர் [முதது அமிழ செய்யுள் பயின்றீர் - முததுக்கள் நிரம்பும்படி வயல்களிலே பொருந்தினீர்]; வழியும் ஆசாரமும் சிறந்தீர் - நல்நெறியும் நல்லொழுக்கமும் மிகுந்துள்ளீர் [வழியும் மா சாரமும் சிறந்தீர் - வழிகின்ற மிக்கசாறும் சிறந்திருக்கின்றீர்]; (இப்படிப்பட்ட நற்குணமுடைய நீங்கள்), இனி கேளீர் - இப்பொழுது (யான்சொல்வதைக்) கேட்பீராக; புராரிக்கு எதிர் போய் - திரிபுரசம்ஹாரஞ்செய்த சிவபெருமானுக்கு எதிரிலே போய், தழல் விழியால் அழியும்-(அவ்வுருத்திரனது) நெற்றிக்கண்ணினது நெருப்பால் அழிந்துபோன, காமன் - மன்மதன், பழிகாரன்-யாவரும் பழிக்கத்தக்க தீச்செய்கையையுடையவன்; அங்கே இணக்கம் - அக்காமனிடத்திலே சேர்க்கை, ஆகாது - (நற்குணமுடைய உங்கட்குத்) தக்கதாகாது; (எ - று.)

**புராரிவிழியாற் காம னழிந்த கதை.**—முன்னொருகாலத்திற் கைலாசகிரியிலே பரமசிவன், ஸநகர்முதலிய நால்வர்க்கு யோகநிலையை உணர்த்துதல்நிமித்தம் தான் யோகஞ்செய்துகொண்டிருக்கையில், பிரமனேவலால் மலரம்புகளையெய்து தனதுதவத்தைக்கெடுக்கலுற்ற மன்மதனைச் சினந்து நெற்றிக்கண்ணை விழித்து அதன்நெருப்புக்கு இரையாய் உடலெரிந்துசாம்பலாய்ப்போம்படி செய்தன னென்பதாம்.

குழை வார்ந்தீர் - வணக்கம் பொருந்தினீ ரென்றுமாம். கரும்பு - முத்துப்பிறக்குமிடங்களிருபதி லொன்று. தமிழசசெய்யுள், அ - வேற்றுமைப் புணர்ச்சியில் வந்த சாரியை. அங்கே இணக்கம் என்றது - காமனுக்கு வில்லாயிருக்குந்தன்மையைக் கருதி.

இது, முப்பததெட்டாங்கவிபோன்ற அறுசீராசிரியவிருத்தம். (சுஎ)

சுஅ. அங்காப் பொழிய வருணனுககுத தேனருவி
அங்காப பொழியேற் றசலமே—பங்கயமேற்
றுங்கத் திருபபிரியான் சுத்தத தமிழ்ப்புலவா
சங்கத் திருப்பிரியான் சார்பு

(இ - ள்.) அருணனுககு - சூரியனது சாரதிக்கு, அங்காப்பு - வெயில் வெப்பத்தாலுண்டான தாகவிடாய், ஒழிய நீங்கும்படி, தேன் அருவி-தேன் பெருக்கை, அம் கா - அழகிய சோலைகள், பொழி - சொரிகின்ற, ஏறு அசலமே - விருஷபகிரியானது,—பஙகயமேல் - செந்தாமரைமலரில் எழுந்தருளிய, துஙகம் திரு - சிறந்த இலக்குமியை, பிரியான்-பிரியாதவனும்,— சுததம் பரிசுததகுணமுடைய, தமிழ்ப் புலவர் -, தமிழ்ப்புலவர்களது, சங்கத்து - சங்கத்திலே, இருப்பு - இருததலை, இரியான் - நீங்காதவனுமாகிய அழகனது, சார்பு - சார்ந்திருக்கும் இடமாம்; (எ - று.)

இது, இடமென்னுந் துறை.

அங்காப்பு - வாய்திறத்தல் என்றது, இங்குத் தாகத்தை. அருணன் - செந்நிறமானவன்; விநதையின்மகன் கருடனது தமையன்: இடைக்குக் கீழுறுப்பில்லாத இவன் சூரியனுககுச் சாரதியானான். சூரியமண்டலமட்டும் உயர்ந்துள்ளது சோலைமலை யென்பது, தொனி. சஙகம் - கூட்டம். இது,காசு என்னும் வாயபாட்டால் முடிந்த ஒருவிகற்பநேரிசைவெண்பா.

சுகூ. சாரலங்காரமால், சாரலங்காரமால
நீரலங்காரமால், நீரலங்காரமால

(இ - ள்.) அம் - அழகிய. கார - மேகஙகளையுடைய, மால் - பெரிய, சாரல் அஙகு - சாரல்களினிடத்தே, ஆர் - பொருந்திய, அம் - குளிர்ந்த, ஆல் - ஆரவாரிக்கின்ற, நீர் - அருவிநீரிலே. அலஙகு-அலைகிற, ஆரம் - முத்துக்களையுடைய,மால் - (சோலை)மலையில் (எழுந்தருளிய), அலஙகார மால்- அழகப்பிரானை, நீர் - நீஙகள், சாரல் - (சரணமாகச) சார்வீராக; (எ - று.)

சாரல்-உடன்பாட்டுவியஙகோள்; "மக்கட்பதடியெனல்" என்னுமிடத்துப்போல. கார - குறிப்புப்பெயரெசசம். மால்-உரிசசொல். சாரல் - மலைப் பக்கம். அஙகு - எழனுருபு புறனடையாற் கொள்க; அசையுமாம். 'நீர் அலங்காரமால் சாரல்'எனச செய்யுளின் ஈற்றிலும் முதலிலும் நிற்கும்மொழிகள் ஒன்றோடொன்று அனுவயிததலால், பூட்டுவிற்பொருள்கோள்.

இது,இரண்டிரண்டடி ஒருவகையாக முழுவதும் மடங்கிவந்ததனால், பாதமடக்கு என்னுஞ் சொல்லணி.

இது, இருசீருங் கூவிளச்சீராகிய குறளடிநான்கால் வந்த வஞ்சித்துறை.

[தூது.]

எ0. அலங்காரன் யமனும்புறஞ்சாய விதழ்மென்றதுங்காது பொருகும்பகனன்வீழா, விலங்கேசன்மகுடந்தகர்ந்தோட்டமுனையம் பெயுங்கார்முகமன்முன்பென்மயல்கூறீர், கலங்காமலரன்முன்செலுங்காமனதுவசங்களேந்தேவின்முதறின்றுமகிழ்வாயே, சிலம்பாறுதனில்வந்திளம்பேடைகுமுறுஞ்சிலம்போசைநறவுண்டகுருகாரே.

(இ - ள்.) கலஙகாமல் - (மனம்) அஞ்சாமல், அரன்முன் - சிவனுக்கு முன்னேயும், செலும் - சென்ற, காமன் - மன்மதனது, துவசம்-கொடியா

கிய மீனை, கவர்ந்து - குத்தியெடுத்து உண்டு, எவின் - (அவனது) அம்பாகிய மலர்களை, முதல் தின்று - அடியோடு புசித்தது, மகிழ்வு ஆய் - மகிழ்ச்சி பெற்று, சிலம்பாறுதனில் வந்து—. இளம் பேடை குமுறும் - இளமையான (தம்)பேடுகள் ஆரவாரிக்கின்ற, சிலம்பு ஓசை - மகளிர்காற்சிலம்புபோன்ற ஓசையாகிய, நறவு - மதுவை, உண்ட - குடித்துக் களித்த, குருகாரே - நாரைகளே!— யமனும்—, புறம் சாய - முதுகுகாட்டி ஓடும்படி, இதழ் மென்று - உதட்டைக் கடித்துக்கொண்டு, அதுங்காது - பின்னிடாமல், பொரு - போர்செய்கிற, கும்பகனன் - கும்பகர்ணனும், வீழா - தளராத, இலங்கேசன் - லங்கைக்கு அதிபதியான இராவணனும், மகுடம் தகர்ந்து ஓட - முடிகள்பிளந்து ஓடிப்போம்படி, முனை - முன்னே [ராமாவதாரத்தில்], அம்பு எயும் - பாணங்களைப் பிரயோகித்த, கார்முகம் - (கோதண்டமென்கிற) வில்லையுடைய, மன் - தலைவனாகிய, அலங்காரன் முன்பு - அழகனுக்குமுன்னே சென்று, என் மயல் கூறீர் - எனது காமமயக்கத்தைச் சொல்லுங்கள்.

கும்பகாணன் - ராவணன் தம்பி: பானைபோன்றகாதையுடையவனென்று பொருள். தம்பேடைகள் கூவுகிறஒலியைக்கேட்டுக் குருகுகள் களிப்படைதலால், 'இளம்பேடைகுமுறுஞ்சிலம்போசைநறவுண்டகுருகாரே' என்றாள்.

இது, பத்தொன்பதாங்கவிபோன்ற எழுசீராசிரியச்சந்தவிருத்தம். ()

[சந்திரோபாலம்பனம்.]

எக காமனார் வெள்ளைக் கருப்புவில்லே கீற்றுமதி
தாமவுடுச் சிந்து சரங்களே—யாமாம்
வளைத்தெய் வசிகா மலைநிகரில் லாவெள்
வளைத்தெய் வசிகா மணி.

(இ - ள்.) சி கா மலை - திருச்சோலைமலையி லெழுந்தருளிய, நிகர் இல்லா - ஒப்பில்லாத, வெள் வளை - வெண்மையான சங்கத்தையுடைய, தெய்வசிகாமணி - தேவர்கட்குத் தலைமேலணியும் இரத்தினம் போன்றவனே!— கீற்று மதி - கீற்றுவடிவமாகிய பிறைச்சந்திரன், காமனார் வெள்ளை கருப்பு வில்லே ஆம் - மன்மதனது வெண்ணிறமமைந்த கரும்புவில்லேயாம்; தாமம் உடு - ஒளியையுடைய நக்ஷத்திரங்கள், வளைத்து எய்வ - (அவ்வில்லை) வளைத்து எய்யப்படுவனவாகிய, சிந்து சரங்களே ஆம - சிந்தியுள்ள அம்புகளேயாம்.

சி - ஸ்ரீ என்னும் வடமொழியின் சிதைவு. பின்னிரண்டடி முதலில் யமகம்.

இது, மலவென்னும் வாய்பாட்டால் முடிந்த இருவிகற்பநேரிசை வெண்பா. (எக)

[இரங்கல்.]

எஉ. மணியுந்தியானநதிபாய்வனவெற்பன்மண்ணும்விண்ணுந்
தணியுந்தியானலங்காரனெங்கோவெனுந்தாமமென்னும்
பணியுந்தியானநதவேளென்னுநீலம்பசுங்குரும்பைக்
கணியுந்தியானமிடுநதிசைபார்க்குமென்னாரணங்கே.

(இ - ள்.) என் ஆர் அணங்கு - எனது அரிய இலக்குமிபோன்ற மகள், 'மணி உந்தி ஆன - முத்துக்கள் நீர்ச்சுழிகளிற பொருந்தப்பெற்ற, நதி - சிலம்பாறு, பாய் - பாய்கின்ற, வனம் வெற்பன் - சோலைமலையிலுள்ளவன்; மண்ணும் விண்ணும் - கீழுலகங்களும் மேலுலகங்களும், தணி - பொருந்திய, உந்தியான் - நாபியையுடையவன்; அலங்காரன் - அழகன்; எம் கோ - எமது நாயகன்', எனும் - என்பாள்; தாமம் என்னும் - மாலையென்பாள்; பணியும் - நமஸ்கரிப்பாள்; 'அந்த வேள் - அந்த மன்மதன், தியான் - கொடியவன்', என்னும் - என்பாள்; நீலம் - (தலையிற்சூடுதற்குஉரிய) நீலோற்பலமலரை, பசு

குரும்பைக்கு-பசிய தென்னம்பிஞ்சுபோன்ற தனங்களிலே, அணியும-தரிய பாள்; தியானம் இடும் - மனத்தில் தியானஞ்செய்வாள்; திசை பார்க்கும் - திக்குக்களை (அவன்வருகிறானோவென்று)எதிர்பார்ப்பாள்; (எ - று.)—என்று தலைமகள் தலைமகனைப்பிரிந்து படும்பாட்டைச சொல்லித் தாய்இரங்கியது.

"சிந்திக்குந் திசைக்குந் தேறுங் கைகூப்புந் திருவரங்கத்துள்ளா யென்னும், வந்திக்கு மாங்கே மழைக்கண் ணீர்மல்க வந்திடாயென் றென்றே மயங்கும்" என்றார் நம்மாழ்வாரும்.

தீயான்-தியானெனக் குறுக்கல்விகாரம்; "திருந்தார் நன்றென்றேன் தியேனோ" என்னுமிடத்துப்போல நீலமலரைக் கொங்கைமேல் அணிதல், தலைவனது வடிவொப்புமைபற்றி யென்க.

இது, நிரையசைமுதலதான கட்டளைக்கலித்துறை. (எஉ)

[நாரைவிடுதூது.]

எ௩. ஆரமாமலையிற்றோன்றியங்கங்கோடிசசெய்தீங்கா
லீரமேவியதென்காற்றுமிந்துவுஞ்சமனேகண்டீர்
வீரமாலலங்காரர்க்குவிடவராவிடவராதோ
நீரமேநாரைகாணீர்செல்லுவீர்சொல்லுவீரே

(இ - ள்.) தீரம் மே நாரைகாள் - நீர்த்துறைகளில் மேய்கின்ற நாரைகளே!—ஆரம் மா மலையில் தோன்றி சந்தனமரங்களையுடைய பெரியமலய பருவதத்தினின்றும் உண்டாகி [ஆரம் ஆம் அலையில் தோன்றி - முத்துக்கள்பொருந்திய கடலினின்றும் உதித்து], அங்கு அங்கு ஓடி-பலவிடங்களிலுந் திரிந்து [அங்கம் கோடி - உடம்பு வளைந்து], செய் தீங்கால் - தீமை செய்வதனாலே, ஈரம் மேவிய - குளிர்ச்சி பொருந்திய, தென் காற்றும் - தென்றலும், இந்துவும் - பிறைச்சந்திரனும், சமனே - ஒன்றுக்கொன்று ஒப்பானதே: கண்டீர் - அறியுங்கள்; வீரம் மால் அலங்காரர்க்கு - வீரத் தன்மையையுடைய அழகப்பிரானுக்கு, விடம் அரா விட வராதோ - (இக் காற்றையுஞ் சந்திரனையும் உட்கொண்டு உண்ணும்படி) விஷத்தையுடைய பாம்பை ஏவுதற்குத் தெரியாதோ? நீர் செல்லுவீர் சொல்லுவீர் - நீங்கள் சென்று சொல்லுங்கள்; (எ - று.)

முன் இரண்டடி-சிலேடையுவமையணி. ஈரமேவிய என்பதை இந்துவுக்குங் கூட்டுக. அங்கம் கோடி எனறதற்கு ஏறப, இந்து - பிறைச்சந்திர னெனப்பட்டது. சமன் - ஸமம் என்னும் வடமொழியின் திரிபு;இதை யமனென்னும் வடமொழித்திரிபாக் கொண்டு, தென்றலும் பிறையும் எனக்கு யமன்போலத் தீங்குசெயயும என்னும் பொருளுந் தோன்றுதல்காண்க. பாம்பு-காற்றை உணவாகக் கொள்ளுதலாலும், இராகுகேதுக்களென்னும் பாம்புகள் - சந்திரனை விழுங்குதலாலும். இரண்டுக்கும பரிகாரமாக 'விட வராவிடவராதோ' என்றாள். தீரமே - உறுதியாகச் சென்று சொல்லுங்க ளென்றுமாம்.

இது, நான்காங்கவிபோன்ற அறுசீராசிரியவிருத்தம். (எ௩)

எ௪. சொல்லாரணப்பொருண்மாலலங்காரர்தண்சோலைவெற்பில்
வல்லாரிளங்கொங்கைமங்கையெங்கேமனுநூல்வழியிற்
செல்லாச்செலுத்தொருகோல்போன்முடங்கியதீங்கருப்பு
வில்லானெங்கோல்வென்றுமுக்கோல்விழைந்திட்டவேதியரே.

(இ - ள்.) மனு நூல் வழியில் - மனுவினாற்சொல்லப்பட்ட நீதிநூலின் வழிப்படியே, செல்லா - செல்லாமல், செலுத்து - (தீயவழியிற்) செலுத்தப்

படுகிற, ஒருகோல்போல் - ஒருகொம்புகோல்போல, முடங்கிய - வளைந்திருக்கின்ற, தீம் கரும்பு வில்லான் - இனிய கரும்பாகிய வில்லையுடையவனான மன்மதனது, ஐங் கோல் - பஞ்சபாணங்களை, வென்று - சயித்து, முக் கோல் -, திரிதண்டத்தை, விழைந்திட்ட - விரும்பிக் கையிற்கொண்ட, வேதியரே - பிராமணர்களே!—சொல் ஆரணம் பொருள் - சிறப்பித்துச் சொல்லப்படுகிற வேதங்களின் பொருளாகிய, மால் அலங்காரர் - அழகப்பிரானது, தண் - குளிர்ந்த, சோலை வெற்பில் - சோலைமலையிலே, வல் ஆர் இளங்கொங்கை மங்கை - சூதாடுகருவியையொத்தஇளையதனங்களையுடைய மகள், எங்கே - எவ்விடத்திற் சென்றாள்? (எ - று.)

என்று தன்னைப்பிரிந்துபோன தலைமகனதுபின்னே உடன்சென்ற தலைவியைக் காணாமல் தேடிவந்த செவிலித்தாய். இடையிலே திரிதண்ட சந்நியாசிகளைக் கண்டு 'எங்கள்மகள் எங்கே சென்றாள்? சொல்லுங்கள்' என்று வினவியது; இது, 'வேதியரைவினவல்' என்னுந் துறை.

வல் ஆர் - வலிமைபொருந்திய என்றுமாம். கொம்புகோல் கோணியிருத்தல்போலக் கோணி வளைந்த வில் என்க. "நூலே கரக முக்கோல் மணையே, ஆயுங் காலை யந்தணர்க்குரிய" என்றதனால், முக்கோல்கூறினார். முப்பகையை வென்றதற்கும், மூன்றாசைகளை யொழித்ததற்கும் அறிகுறியாகத் துறவிகள் முக்கோலதரித்தல் இயல்பு.

இது, நேரசை முதலதான கட்டளைக்கலித்துறை. (எசு)

[போதாவிடுதூது.]

எரு வேதாவெனச்சொலசுதாபூமேலவரததளிரின்மீதாம்விசித்ரர்மறைவேராஞர், வாதாசனச்சயனராராமவெற்பிறைவர்வாராமலெய்தததுயர்சீராமா, சாதாரணததலவேள்பூசலிப்பொழுதுதாராமடைக்குருகுதூதாமோ, போதாவவைக்கறிவுபோதாவெனிற்பரிவர்போதாமலர்த்துளவுபோதாவே

(இ - ள்.) வேதா என சொல் - பிரமனென்று சொல்லப்படுகின்ற, சுதர் - குமாரர், பூமேல் - உந்திப்பூவினின்றும், வர - பிறக்கும்படி, தளிரின்மீது ஆம் - ஆலிலைமேற் பொருந்திய, விசிதரர் - பேரழகுடையவரும், மறை வேர் ஆனார் - வேதங்களுக்கு முதற்காரணமானவரும், வாதாசனம் சயனர் - ஆதிசேஷனைப் படுக்கையாகஉடையவரும ஆகிய, ஆராமவெற்பு இறைவர் - சோலைமலைத்தலைவர், வாராமல - மீண்டுவாராததனால், எய்தத - (யான்)வருந்தி அனுபவிக்கிற, துயர் - துன்பம், சீர் ஆமா - தகுதியாகுமா? வேள் பூசல் - மன்மதன் செய்யும் போர், சாதாரணத்தது அல - சாதாரணமானதன்று; இப்பொழுது—, தாரா - தாராவும், மடை - நீர்மடையிலே வாழ்கிற, குருகு - குருகும், தூது ஆமோ - தூதாக (அவரிடத்து)ச் செல்லுமா? 'போதா - செல்லமாட்டா; (ஏனெனில்), அவைக்கு - அத்தாராவுக்கும் குருகுக்கும், அறிவு போதா - (தூதுசென்றுசொல்லிக் காரியத்தை முடித்துவருதற்கு ஏற்ற) அறிவு போதமாட்டா.' எனில் - என்றால்,—போதாவே - பெருநாரையே! பரிவர்-(அவர்) அன்போடு இரங்கிக்கொடுத்தருள்வர்; மலர் துளவு - மலர்களையுடைய திருத்துழாய்மாலையை, போதா - (நீ) போய் வாங்கிக்கொண்டுவந்து கொடு; (எ - று.)—என்று அவற்றைத் தூதுசெல்ல வேண்டினளென்க.

இனி, முதலிலுள்ள 'போதா' என்பதையே விளியாகக் கொண்டு, தூதாமோ? [ஆகமாட்டாய்]; போதாவே! போது ஆம் மலர் துளவு போதா என்று உரைப்பினுமாம். வாதாசனம் என்பதற்கு-காற்றை உணவாகவுடைய

தென்ற பொருள். ஆமா, ஆ - எதிர்மறை. தாரா, குருகு, போதா இவை - நீரில்வாழும் நாரைப்பறவைகளின் சாதிபேதங்கள். அூதாமோ, ஓ - வினா.

இது, நாற்பததிரண்டாங்கவிபோன்ற எழுசீராசிரியச்சந்தவிருத்தம்.

எகூ தாவுமன்புள்ளவர்மேவுமன்புள்ளவர் தக்கதாமலையினார் மிக்கசேமலையின்மேலாவியுங்கூடுமாவோவியந்தேடுமேயலகிலாவஞ் சன்முன்னுலகெலாங்கஞ்சமுங், காவியுமகரமுநாவியுஞ்சிகரமுங் காந்தளுஞ்சங்கமுமபாந்தளுஞ்சிங்கமுங், கோவையும்மாரமும்பூ வையுங்கீரமுங் கொஞ்சுமின்சொல்லுநீண்மஞ்சுமவிண்வில்லுமே.

(இ - ள்.) தாவும - பாய்ந்துவருகின்ற, மன் புள்ளவர் - பெரிய கருடப்பறவையை யுடையவரும், மேவும் - (அடியார்களிடத்துப்) பொருந்திய, அன்பு உள்ளவர் - அன்பையுடையவரும். தக்கது ஆம - (பள்ளிகொள்ளுதற்கு) ஏற்ற இடமான, அலையினார - கடலையுடையவருமாகிய அழகரது. மிக்க சே மலையின்மேல்-சிறந்த விருஷபகிரியென்கிற சோலைமலையில்,ஆவியும் கூடும் ஆ ஓவியம் - உயிரும் உடமபுமாகப் பொருந்திய தொரு சித்திரப் பாவையை,தேடும் - தேடுங்கள்; அலகு இலா வஞ்சன் முன் - அளவில்லாத தீவினையையுடைய எனது எதிரில்,—உலகு எலாம் - உலகம் முழுவதும்,— கஞ்சமும் - தாமரைமலரும், காவியும - நீலோற்பலமலரும, மகரமும் - மகரவீணையும், நாவியும் - கஸ்தூரிப்புழுகும், சிகரமும் - மலையுசசியும், காந்தளும் - செங்காந்தள்மலரும, சங்கமும - சங்கும், பாந்தளும் - பாம்பும், சிங்கமும—, கோவையும் - கொவ்வைப்பழமும், ஆரமும - முத்தும், பூவையும் - குயிலும, கீரமும - கிளியும, கொஞ்சும் இன் சொல்லும் - மழலையாகப்பேசுகின்ற இனிய சொலலும், நீள மஞ்சும் - நீண்ட மேகமும்,விண் வில்லுமே - ஆகாயத்தில உண்டாகிற இந்திரதனுசும ஆகிய இவையே,(எங்கும காணப்படுகின்றன); (எ - று.)

இது, தலைமகளது உருவெளிப்பாடு கண்ட தலைமகனது கூற்று.

தாமரைமலர்-முகம் கை கால்களுக்கும், நீலோற்பலமலர் - கண்களுக்கும், மகரயாழ் - முன்கைக்கும. நாவி-மயிரொழுக்குக்கும், சிகரம் - தனங்களுக்கும், காந்தள் - அகங்கைக்கும், சங்கம - கழுத்துக்கும், பாம்பின்படம் - அல்குலுக்கும், சிங்கத்தின்இடை - சிற்றிடைக்கும் கோவைக்கனி - அதரத்துக்கும், முத்து-பல்லுக்கும, குயில் கண்டத்தின்தொனிக்கும், கிளிமூக்கு-கைந்நகத்துக்கும், மஞ்சு-கருங்குழலுக்கும், வானவில் - நெற்றிஅல்லது புருவத்துக்கும் உவமை. பூவையுங் கீரமுங் கொஞ்சு மின்சொல் என்பதற்கு - குயிலுங் கிளியுங் கேட்டு மெச்சும்படியான இனிய சொல் என்றுமாம். நாவி-கஸ்தூரிமானெனக் கொண்டு, பார்வைக்கு உவமையாகவுமாம். சே - எருது. ஆவியுங்கூடுமாவோவிய மென்றது-உயிர்பெற்று இயங்குகின்ற சித்திரப்பிரதிமைபோன்ற கட்டழகுடைய மக ளென்றபடி. இச்செய்யுள் முதலில் மடக்கும், பிறகு பிராசமும் பெற்றுவந்தது

இது,பெரும்பாலும் எல்லாசசீரும் விளசசீராகிய எண்சீராசிரியவிருத்தம்.

[மேகவிடு தூது.]

எஎ. மஞ்சுகா ளுங்களைப்போன மாரன்பூ மாரிபெய்ய
விஞ்சிய்து பேராசை வெள்ளங்காண்—டஞ்சம
வழுத்தீர் மதிச்செங்கண் மாலலங் காராக்கு
வழுத்தீர் மதிச்செங்கண் மால.

(இ - ள்.) மஞ்சுகாள் - மேகங்களே!—உங்களை போல் - நீங்கள் விடா மழைபொழிவதுபோல,மாரன் - மன்மதன்,பூ மாரி பெய்ய - புஷ்பபாணங்

களாகிய மழையைப் பொழிய, பேர் ஆசை வெள்ளம் - மிக்க ஆசையாகிய வெள்ளம், விஞ்சியது - மேன்மேல் மிகுந்தது; தஞ்சம் - (உங்களையே) பற்றுக்கோடாகப் பற்றுகின்றேன். வழு தீர் மதி - குற்றமில்லாத அறிவையும், செம் கண் - சிவந்த கண்களையுமுடைய, மால் அலங்காரர்க்கு - அழகப்பிரானுக்கு, எங்கள் மால் - எங்களது மயக்கநோயை, மதிசசு - நினைத்து, வழுத்தீர் - (அதுபோய்ச்) சொல்லுங்கள்; (எ - று.)

கண் - அசை. மூன்றுமடிக்கு - குறைவில்லாத பூர்ணசந்திரனைச சிவந்த இடதுகண்ணாக வுடைய அழக ரென்றமாம். மதித்து - மதிசசு எனப் போலி. எங்கள் - தனித்தன்மைப்பன்மை.

இது, நாளென்னும் வாய்பாட்டால் முடிந்த இருவிகற்பநேரிசைவெண்பா.

[இயலிடங்கூறல்.]

எஅ. செங்கண்மாயவர்சீபதி, மங்கையாரிடம்வண்புனங்
கொங்கையுங்கணுங்குதலையு, மங்கரும்பிணையாகுமால.

(இ - ள்.) சீ பதி - திருமகளுக்குக் கணவராகிய, செம் கண் மாயவர் - சிவந்த கண்களையுடைய மாயையுடைய அழகரது. மங்கையார் - மகளுடைய, இடம் —, வள் புனம - வளப்பம்பொருந்திய சோலையாம்; (அவளுடைய), கொங்கையும் - தனங்களும, கணும் கண்களும், குதலையும - குதலைப்பேசசும், அங்கரும்பிணையாகும் —; (எ - று) — கொங்கை, அங்கு அரும்பு இணை ஆகும் - இரண்டு தாமரையருமபுகளாகும்; அங்கு - அசை கண், அம கரு பிணை ஆகும் - அழகிய கரிய பெண்மானின் பார்வையாம்; குதலை, அம் கரும்பு இணை ஆகும் - கருப்பஞ்சாற்றுககு ஒப்பானதாம; அம - அசை மூன்று வகையாகப் பொருள்பட்டுவந்த சிலேடைபற்றிய உவமையணி ஆல் - அசை.

தெய்வப்புணர்ச்சியின் இறுதியில் தலைமகளது அடைதற்கரிய தன்மையை நினைந்து வருந்துகின்ற தலைமகனை எதிர்ப்பட்டு உற்றதுரைக்கக் கேட்ட பாங்கன் 'நின்றாற் காணப்பட்ட வடிவுக்கு இடமும் இயலும் யாது? கூறுவாயாக' எனக் கேட்க. தலைவன் தான்கண்ட மகளின் இடத்தையும் இயலையுங் கூறியது. இது.

இது - முதற்சீர் தேமாசசீரும், மற்றிரண்டுங் கூவிளசசீர்களுமாகிய சிந்தடி நான்கு கொண்டு வந்த வஞ்சிவிருத்தம். (எஅ)

[கார்காலம்.]

எகூ. மாலுநான்முகனுமரனுமாமழகர்மால்விடைச்சயிலமயிலனீர், நீலராமிறைவரின்னம்வந்திலர்கனெஞ்சர்போலுமினியென்செய்வே, ஞலகாலம்வடகாலதாகவெதிரம்புகாலவில்வளைத்ததால், காலகாலர்களமெனவிருண்டுபலகாறிறந்தமழைகாலமே.

(இ - ள்.) மாலும் - திருமாலும், நான்முகனும் - பிரமனும், அரனும் - உருத்திரனும், ஆம்-ஆகிய, அழகர் - அழகரது, மால் - பெரிய, விடை சயிலம் - விருஷபகிரியிலேயுள்ள, மயில் அனீர்-மயில்போலுஞ் சாயலையுடைய பாங்கிமார்களே!— வடகால்அது - வாடைக்காற்று, ஆலகாலம் ஆக - ஹாலாஹலவிஷம்போல மரணவேதனை செய்யாநிற்க, காலகாலர் களம் என் இருண்டு - யமனுக்கும் யமனாகிய உருத்திரமூர்த்தியினது நஞ்சுண்டகண்டம்போல (மேகங்கள்) கறுத்து, பல கால் திறந்த - பலகால்கள் இறங்கிய, மழைகாலம் —, எதிர் அம்பு கால - எதிராக அம்புகளைச சொரிய [எதிரே மழைநீரைப்பொழிய], வில் வளைத்தது - வில்லை வளைததது [இந்திரவில்லை

வளைத்தது]; இன்னம - (மீண்டுவந்து அணைவதாகக் குறித்துப்போன) கார் காலம் வந்தபின்னும், நீலர் ஆம் இறைவர் - நீலநிறமுடையவராகிய தலைவர், வந்திலர் - மீண்டுவந்தாரில்லை; (ஆதலால் அவர்), கல்நெஞ்சர் போலும் - கல்போல (என்றுமஇளகாமல்) வலிய மனமுடையவர்போலும்; இனி என் செய்வேன் - இனி (யான்) யாதுசெய்வேன்! (எ - று.)—ஆல் - அசை.

இது, தலைவி இரங்கியது.

இது - பெரும்பாலும் முதல் மூன்று ஐந்தாஞ்சீர்கள் மாச்சீர்களும், இரண்டு நான்கு ஆறுஞ்சீர்கள் கூவிளங்காய்ச்சீர்களும், ஏழாஞ்சீர் விளச்சீருமாகிய எழுசீராசிரியவிருத்தம். (௭௧)

௬௦. மழையுறங்குதடஞ்சோலைமாமலைவாணர்வாணன்கரங்களை
ப்பூதங்கள், விழையும்பாரமெழுக்கென்றேபறறி வீசுமாலுமபர்
வேந்தாமவருக்கே, பழையநான்மறைசிங்காசனமலர்ப்படுக்கைவீடு
நடுக்கடலவெண்ணெயபோற், குழையுமன்பாகருத்தேயுபரிகைகுளிர்
நிலாமுற்றங்கோகுலங்காணுமே

(இ - ள்.) மழை உறங்கு - மேகங்கள் வந்து தங்குகின்ற, தட - பெரிய, சோலை மா மலை - மாலிருஞ்சோலைமலையில், வாணர் - வாழ்ந்திருப்பவரும்,— வாணன் - பாணாசுரனது, கரங்களை - (ஆயிரம்) கைகளை, பூதங்கள் விழையும் - பூதகணங்கள (உண்ணுதற்கு) விரும்பும்படியான, பாரம் எழுக்கள் என்றே - பெரியஇருப்புத்தூண்களென்றே, பறறி வீசும் - பிடித்து அறுத்து எறிந்த, மால் - திருமாலும், உமபர் வேந்து ஆம் - தேவர்நாயகனுமாகிய, அவருக்கே - அவ்வழகர்க்கு,—பழைய நால் மறை - அநாதியான நான்குவேதங்கள், சிங்காசனம் - (ஏறி வீற்றிருக்கின்ற) சிம்மாசனமாம்; நடு கடல் - திருப்பாற்கடலின் நடுவிடம், மலர் படுக்கை வீடு - (பள்ளிகொள்ளுகிற) புஷ்பப் படுக்கையறையாம், வெண்ணெய் போல் குழையும் - வெண்ணெய் போல நெகிழ்ந்து இளகுகின்ற, அன்பர் கருத்தே - அடியார்களது மனமே, உபரிகை - (வாழ்கிற) மேல்மாளிகையாம்; கோகுலம் - திருவாய்ப்பாடி, குளிர் நிலா முற்றம் - (விளையாடுகிற) குளிர்ந்த நிலாமுற்றமாம்; (எ - று.)

நிலாமுற்றம் - நிலாக்காலத்தில் உலாவுதற்கிடமான வீட்டின் வெளியிடம். காணும் - முன்னிலையசை.

வாணன்கரங்களை வீசிய கதை:- பலிசக்ரவர்த்தியின் புத்திரனாகிய பாணாசுரனது மகளான உஷையென்பவள், ஒருநாள் ஒருபுருஷனோடு தான் சம்போகஞ்செய்ததாகக் கனாக்கண்டு, அவனிடத்தில் மிகவும் ஆசை பற்றினவளாய்த் தன் உயிர்த்தோழியான சித்திரலேகைக்கு இச்செய்தியைத் தெரிவித்து, அவள்மூலமாய் அந்தப்புருஷன் கிருஷ்ணனது பேரனும் பிரத்யும்நனது குமாரனுமாகிய அநிருத்தனென்று அறிந்துகொண்டு, அவனைப் பெறுதற்கு உபாயஞ் செய்யவேண்டுமென்று அத்தோழியையே வேண்ட, அவள் தன் யோகவித்தைமகிமையால் துவாரகைக்குச் சென்று அநிருத்தனைத் தூக்கிக்கொண்டுவந்து அந்தப்புரத்திலே விட, உஷை அவனோடு போகங்களை அனுபவித்துவர, இச்செய்தியைக் காவலாளரால் அறிந்த அப்பாணன் தன்சேனையுடன் அநிருத்தனை எதிர்த்து மாயையினாலே பொருது நாகாஸ்திரத்தினாற் கட்டிப்போட்டிருக்க, துவாரகையிலே அநிருத்தனைக் காணாமல் யாதவர்களெல்லாம் கலங்கியிருந்தபோது, நாரதமகாமுனிவரால் நடந்தவரலாற்றை அறிந்துகொண்ட ஸ்ரீகிருஷ்ணபகவான் பெரியதிருவடியை நினைத்தருளி உடனேவந்துநின்ற அவர்தோள்மேல் ஏறிக்கொண்டு பாணபுரமாகிய சோணிதபுரத்துக்கு எழுந்தருளிப் போர்செய்து

சக்கரத்தை எடுத்துப் பிரயோகித்து அப்பாணனது ஆயிரந்தோள்களையுந் தாரைதாரையாய் உதிரம் ஒழுக அறுத்துவிட்டன ரென்பதாம்.

இது, கட்டளைக்கலிப்பா; இலக்கணம் கீழ்க் கூறப்பட்டது. (அ௦)

அக. குலமலைமாயாவாழி கொடியவென்றன்சிந்தா குலமலைமா யாவாழிகொடியமதிளிலங்கை, நிலமலையமாதவரினாணெறிந்தாய்மந் தாநிலமலையமாதவர்கைநின்னாவங்கண்டாய், பலவருணவாரீசநயன முழுநீலோற்பலவருணவாரீசன்பயபபடவெற்பெடுத்து,நலவரிசைக் கவிகைபுனைகாரேதென்குருகூர் நலவரிசைக்கவிகைவிடாநளினமின் னாயகனே.

(இ - ள்.) குலம் மலை - சிறந்த சோலைமலையில எழுந்தருளிய, மாயா - மாயவனே! கொடிய மதிள் - கொடிகளையுடைய மதில்களையுடைய, இலங் கை நிலம் - இலங்காபட்டணம், அலைய - அழியும்படி, மா தவரின் நாண் எறிந்தாய் - பெரிய (கோதண்டமென்னும்) வில்லின் நாணியை(க் கைவிர லால்) எறிந்து டங்காரத்தொனி செய்தவனே!—மந்தாநிலம் - இளந்தென் றற்காற்றுக்கு உற்பத்திஸ்தானமான, மலையம் - பொதியமலையிலெழுந்தரு ளிய,மா தவர்-மிக்கதவத்தையுடைய அகஸ்தியரது, கை-கையில்,நின் ஆவம்- உனது அம்பறாத்தூணியை, கண்டாய்-கண்டவனே!—பல அருணம் வாரீசம நயன - பலவாகிய சிவந்த தாமரைமலர்கள்போன்ற திருக்கண்களையுடைய வனே!—முழு நீலோற்பல வருண - நிறைப்புள்ள [அன்றுமலர்ந்த] கருங் குவளைமலரின் நிறமுள்ளவனே!—வாரீசன் பயப்பட-மேகவாகனனாகிய இந் திரனும் அஞ்சும்படி, வெறபு எடுதது - கோவாததனகிரியைத தூககி, நல வரிசை கவிகை புனை - நல்ல ஒழுங்காகவுள்ள குடையாகப் பிடித்த, காரே- காளமேகம் போன்றவனே!—தென் குருகூர் நலவர் - தெற்கிலுள்ள திருக் குருகூரிலெழுந்தருளிய நற்குணங்களையுடைய நம்மாழ்வாரது, இசை கவி- தனது புகழைப் பாடிய பாடல்களை, கைவிடா - நீங்காத [எப்பொழுதுந் திருவுள்ளமுவந்து கேட்டருளுகிற],நளினம மின் நாயகனே - தாமரைமல ரிற் பொருந்திய மின்னற்கொடிபோன்ற திருமகளது தலைவனே!—வாழி- வாழ்வாயாக; கொடிய - கொடுந்தன்மையையுடைய, என்தன் - எனது, சிந்தாகுலம் - மனக்கவலை, அலை மாயா ஆழி - அலைகள் ஒழியாத [மேன் மேல் வருகிற] கடல்போல ஒரு எல்லையில்லாததாம்; (எ - று.)—அதனைப் போக்கியருளவேண்டு மென்றபடி.

'மலயமாதவர்கை நின்ஆவங் கண்டாய்' என்றது, ஸ்ரீராமபிரான் சர பங்கருக்குப் பரமபதமளித்தபின்னர் அகத்தியமுனிவரது ஆச்சிரமத்திற் சென்று, முன் வருணனிடத்திற் கொடுத்திருந்த தூணீரமும் வில்லும் வா ளுந் தண்டும் அம்முனிவர்தரப் பெற்றுக்கொண்ட வரலாற்றைஉட்கொண்டு. "பல அருண வாரீச நயன' என்றது, ஆயிரங் கண்க ளுடையவனாதலால். வாரிஜம் - வாரீசமென விகாரம்; நீரிற் பிறப்பது.

இஃது, அடிகள் தோறுந் தனித்தனி வந்த முதல்மூன்றுமடக்கு.

இது, பதினெட்டாங்கவிபோன்ற எண்சீராசிரியவிருத்தம். (அக)

[இரங்கல்.]

அஉ. நளினவிலோசனரழகர்புலோமசைநாதன்ற
னிளவலுமாயவர்மாயவர்வெற்பினிலிலையோகாண்
டளையவிழ்மல்லிகைபுல்லியவண்டேர்தமியேன்போல்
வளைகலைநாண்மதிதோற்றிடநின்றேமருண்மாலை.

(இ - ள்.) தளை அவிழ் - முறுக்குவிரிந்து மலர்ந்த, மல்லிகை - மல்லிகைமலரை, புல்லிய-மொய்த்திருக்கின்ற, வண்டீர் - வண்டுகளே!—நளினம் விலோசனர்-தாமரைமலர்போலுந் திருக்கண்களுடையவரும், புலோமசை நாதன்தன் இளவலும் ஆயவர் - புலோமசையினது கணவனாகிய தேவேந்திரனுக்குத தம்பியானவரும், மாயவர் - மாயையையுடையவரும் ஆகிய, அழகர் - அழகரது, வெற்பினில் - சோலைமலையில்,—தமியேன்போல் - (அவரைப் பிரிந்து) தனியளாகிய என்னைப்போல,—வளை கலை நாண் மதி தோற்றிட நின்று - கைவளைகளும் அரையுடையும் நாணமும் அறிவும் இழக்க நின்று [வளை கலை நாள் மதி தோற்றிட நின்று-வளைந்த வடிவமாகிய குறைந்தகலையையுடைய அப்பொழுதுண்டான இளம்பிறைச்சந்திரன் விளங்கும்படி நின்று], மருள் - மயங்குகிற [மயங்குதற்குக் காரணமான], மாலை - மாலைப்பொழுது, இலையோ - இல்லையோ? (எ - று.)—காண் - அசை.

பிரிந்தவர் வருந்துதற்குக் காரணமான இவ்வந்திப்பொழுது தலைவர் பிரிந்துசென்றுள்ள அம்மலையிடத்தி லிருக்குமாயின், அவரும என்னைப்போலவே வருந்தி உடனே வந்திருப்ப ரென்று தலைவி மாலைப்பொழுதிற்கு இரங்கிக்கூறிய துறை இது

புலோமஜை - இந்திராணியின் பெயர்களி லொன்று; புலோமனிடத்தினின்றும் பிறந்தவ ளென்று பொருள். இந்திரனைக் காததற்பொருட்டு அவன் வேண்டுகோளின்படி தம்பியாகத் திருவவதரித்து விரோதிநிரஸநஞ்செய்து உபேந்திரனாக அவனருகில் எழுந்தருளியிருத்தலால், 'புலோமசை நாதன்றன் இளவலுமாயவர்' என்றார்; "முறைமையினாற், புருகூதனுக்குத் திருத்தம்பி யாகிப் புரக்கும்"என்றார முன்னோரும். ஈற்றடி-சிலேடையணி.

இது - பெரும்பாலும் ஈற்றுச்சீர் ஒன்று காய்ச்சீரும், மற்றைநான்கும் விளச்சீர்களு மாகிய கலிநிலைத்துறை. (அஉ)

[இதுவும்அது.]

௯௩. மருதொடித்துவிளவெறிந்துகுருந்திலேறி வடத்துறங்கிச்சோலைமலைவருமால்வெற்பி, லிருதலைப்புள்ளென்னவிருந்திமைப்புநீங்காவெனைப்பிரிந்தபாதகர்நாட்டில்லைபோலு, மருவிமதமிக்களைமாதளைகடள்ளியடையலர்மாகோட்டையிடந்தாவிதேக்கித்,தெருவுதொறுமால்யானைக்கன்றுபோலத் தென்றலிளங்கன்றோடித்திரியும்வேனில்.

(இ - ள்.) மருது-இரட்டைமருதமரங்களை, ஒடித்து-முறித்துத்தள்ளி, விள எறிந்து-விளாமரத்தைச சாய்த்து,—குருந்தில் ஏறி - குருந்தமரத்தின் மேல் ஏறி,—வடத்து உறங்கி - ஆலிலையிற் பள்ளிகொண்டு,—சோலைமலை வரும் - திருமாலிருஞ்சோலைமலையி லெழுந்தருளியிருக்கின்ற, மால்-அழகரது, வெற்பில் - மலையிலே,—இருதலைப்புள் என்ன - இரண்டுதலைகளையுடையபறவைபோல,இருந்து-கூடியிருந்து,இமைப்பும் நீங்கா-கண்ணிமைப்பொழுதளவும் விட்டுநீங்கப்பொறாத,எனை-என்னை, பிரிந்த - விட்டுநீங்கின, பாதகர் - தீதொழிலுடையவர் (சென்ற), நாடு-தேசத்தில்,—அருவி மதம் மிக்கு - மதநீர்ப்பெருக்கு மிகுந்து [அருவி மத மிக்கு - நீரருவிகளிலே மிகப் பயின்று], அளை மா தளைகள் தள்ளி - பொருந்திய பெரிய கட்டுச்சங்கிலிகளை அறுத்துத்தள்ளி [அளை மாதளைகள் தள்ளி - குழைகின்ற மாதளஞ்செடிகளைச சாய்த்து], அடையலர் மா கோட்டை இடந்து - பகைவர்களது பெரிய கோட்டைமதிலை யழித்து, ஆவி தேக்கி - (அப்பகைவரது) உயிரைத் திரளாக ஒழித்து [அடை அலர் மா கோட்டையிடம் தாவி தேக்கி - இலைகளையும் பூக்களையுமுடைய மாமரத்தினது கொம்பினிடத்தைத்

தாவி நெருங்கி], தெருவுதொறும்-தெருக்களிலெல்லாம், மால் யானைகன்று போல - பெரிய இளயானைபோல, தென்றல் இளங்கன்று-தெற்கிலிருந்து வருகிற மந்தமாருதம், ஓடி திரியும் - பரவி உலாவப்பெற்ற, வேனில் - வசந்த காலம், இல்லை போலும்—; (எ - று.)

இருக்குமாயின், தலைவர் என்னை வந்து கூடினவராதல்வேண்டுமென்று தலைவி வேனிலுக்கு இரங்கிக்கூறியது இது.

விளவெறிந்த கதை:—கம்சனுலேவப்பட்ட கபித்தாசுரன் விளாவின் வடிவமாய்க் கண்ணன் தன்கீழ் வரும்பொழுது மேல்விழுந்துகொல்வதாக எண்ணிவந்துநிற்க, அஃதறிந்தகிருஷ்ணபகவான், அவ்வாறேதன்னைக்கொல்லும்பொருட்டுக் கன்றின்வடிவங்கொண்டுவந்த வத்ஸாசுரனைப் பின்னிரண்டு கால்களையும் பிடித்து எடுத்துச் சுழற்றி விளாமரத்தின்மேல் எறிய, இருவரும் இறந்து தமது அசுரவடிவத்துடனே விழுந்தன ரென்பதாம்.

கண்ணன் குருந்தில் ஏறியது —குளத்திலிறங்கிநீராடிக்கொண்டிருந்த இடைப்பெண்களது துகில்களை விளையாட்டாகக் கவர்ந்துகொண்டுபோய் ஒளித்தபொழுதி லென அறிக; "நீரினிற குடைந்து பாரில் நிகரிலாக்கலன்கள் பூண்ட, நாரியர் துகிலை வாரி நலனுறங் குருந்தி லேறி" என்றார் பிறரும்: "குருந்திடைக்கூறை பணியாய்" எனப் பெரியோர்கூறியதுங் காண்க.

சற்றும்பிரியாமைக்கு இருதலைப்புள்ளை உவமைகூறினர்; இருதலைப்புள் - கண்டபேரண்ட மென்பர். சோலைமலையென்றதற்கேற்ப, மருதம்முதலியமரங்கள்வரிசையாகக் கூறினர்போலும் இரக்கஞ்சிறிதுமின்றிப்பிரிந்து போனதேயுமன்றிக் குறியிட்டகாலத்தே மீண்டும் வாராமைபற்றி, 'பாதகர்' என்றார்; இனி, வருத்தமுறுத்துபவர் என்றும் பொருள்கொள்ளலாம். அடையலர் - சேராதவர். ஏறு ஏற்றையென்பதுபோல, கோடு-கோட்டையென ஐயீற்றுடைக் குற்றியலுகரம்; இனி, உருபுமயக்கமாகவுமாம். சிலேடை யுவமையணி.

இது, பதினன்காங்கழிபோன்ற எண்சீராசிரியவிருத்தம். (அரு)

அச. திரியுங்கிரிக்கெதிர்சென்றோரழகர் திருமலைமேற்
பரியுங்கொடித்தடந்தேர்வலவா பரிபோற்றிரைகள்
விரியும்புனற்கடலுண்டமையாது நம்மின்கொடிகண்
சொரியும்புனற்கடற்கோடுதல்பார் நுண்டுளிப்புயலே.

(இ - ள்.) திரியும் கிரிக்கு - சஞ்சரிக்கின்ற மலைபோன்ற கஜேந்திராழ்வானுக்கு, எதிர் - முன்னே, சென்றோர் - போய்த் துயர் தீர்த்தருளினவராகிய, அழகர் - அலங்காரரது, திரு மலைமேல் - சிறந்த சோலைமலையிடத்தே, பரியும் - அன்புகொண்ட, கொடி தட தேர் வலவா - துவசத்தையுடைய பெரியதேரைச் செலுத்துகிற சாரதியே!—நுண் துளி புயல் - சிறிய நீர்த்துளிகளைப் பொழிகின்ற மேகங்கள், பரிபோல்-குதிரைப்பந்திகள்போல, திரைகள் விரியும் - அலைகள் (ஒன்றன்பின் ஒன்றாக ஒழுங்காகப்) பரவப்பெற்ற, கடல் - கடலினது, புனல் - நீரை, உண்டு-குடித்து, அமையாது-திருப்திப்படாமல், நம் மின் கொடி-நமது மின்னற்கொடிபோன்ற காதலி, கண் சொரியும்-கண்களினின்று பெருக்குகின்ற, புனல் கடற்கு - கண்ணீராகிய கடலுக்கு, ஓடுதல் - விரைந்துசெல்லுதலை, பார்—; (எ - று.)

இது-பகையரசனுக்குப்பின்னிடைந்து தன்னைவந்தடைந்தானொரு வேந்தனுக்கு உதவிசெய்தற்பொருட்டுத் தலைமகளைப் பிரிந்துசென்ற தலைமகன் தான்சென்றவினைமுடிந்தபின்பு மீண்டுவருகிறவன், வழியிடையில் தலைமகளது நிலைமையை நினைத்துத் தேர்ப்பாகனுக்குக் கூறியது; நிலைமை நினைத்துக்கூறல் என்னுந் துறை. இங்ஙனம் கூறுதற்குப் பயன் - இதனைக்

கேட்டுத் தேர்ப்பாகன் விரைவில் தேரூர்பவனுதல். புயல் ஓடுதல் பார் என்றதனால். தலைமகன் கார்காலத்தில் வருவதாகக் காலங்குறித்துப்போனவனென அறிக. நம் இன் கொடி எனப் பிரித்தல் மோனைக்குச் சிறவாமை காண்க

இது, நிரையசை முதலதான கட்டளைக்கலித்துறை. (௮௪)

௯௫ புயல்பார்க்குஞ் சாதகமே போன்றேன்பொன் னாட்டி
னியல்பார்க்குஞ் சேமலைமே லெந்தாய்—தயையி
னிலையா திருக்கவரு ணேயா மிடிதீர்த்
தலையா திருக்க வருள்

(இ - ள்) பொன் நாட்டின் இயல் பார்க்கும்-பொன்னுலகமாகிய தேவலோகத்தினது தன்மையை எட்டிப்பார்க்கிற [மிக உயர்ந்த], சே மலைமேல் - விருஷபகிரியில் எழுந்தருளியிருக்கிற, எந்தாய் - எமது ஸ்வாமியே!—தயையின் நிலையா-அருளுக்கு இருப்பிடமானவனே!—திரு கவர்-திருமகளால்முழுவதுங்கவரப்பட்டுள்ள, உள நேயா - உள்ளன்புடையவனே!—(அடியேன்),—புயல் பார்க்கும் சாதகமே போன்றேன்-மேகத்தினது வருகையையே எதிர்பார்க்கிற சாதகமென்னும் பறவை போல (உனது கருணை மழையையே) எதிர்பார்த்திருக்கின்றேன்; (ஆதலால்), மிடி-எனது பிறவித் துன்பத்தை, தீர்த்து-ஒழித்து, அலையாது இருக்க - வருந்தாமலிருக்கும்படி, அருள் - அருள்செய்வாயாக; (எ - று.)

மேகத்தினின்றும் பெய்கிற மழைநீர்த்துளியைத் தரையில் விழுதற்கு முன்னமே வாய்திறந்து ஏற்றுக் குடித்தல், சாதகபட்சியினது இயல்பு அது மற்றைநீரைக் குடியாததுபோல யான் மற்றைத்தெய்வங்களினருளை எதிர்பாரேனென்றார். நிலயம் - வடசொல்; நிலையமெனப் போலி

இது, மலரென்னும்வாய்பாட்டாலமுடிந்த இருவிகற்பநேரிசைவெண்பா.

[வலைச்சியார்.]

௯௬ அலைகடலினடுத்துயிலுமழகர்நாட்டி லஞ்சொலெலாங்குளமாகவஞ்சனக்கண், வலையெறிவீர்பொய்கைவிட்டென்னாவிதாங்கும வரலாறுகேளுமச்சமருங்குநில்லும்; கலைமதியோடாரலலர்வெளிசைமீறுங் கவலைமுன்னீரிரையேறுகுங்கனகருப்பனு, சிலையருவரால்மலங்குபடுத்தபொருந்திருக்கைவையுமழைச்சுறவைத்தேடுவீரே.

(இ - ள்.) அலை கடலின் - அலைகின்ற பாற்கடலினது, நடு - நடுவிடத்திலே. துயிலும்-யோகநித்திரைசெய்கின்ற, அழகர் - அழகரது, நாட்டில் - நாட்டிலே.—அம் சொல் எல ஆம் குளம் ஆக - அழகிய செந்நெற்பயிர்கள் நிறைமுமையாகிற குளத்திலே பொருந்த [அம் சொல் எலாம்-அழகிய சொல் முழுவதும், குளம் ஆக - வெல்லப்பாகாக], அஞ்சனம் கண் வலை - கறுத்த கண்களையுடைய வலையை [மையிட்ட கண்களாகிய வலையை], எறிவீர் - மேலேவீசுகிற வலைச்சியார்களே!— பொய்கை விட்டு-குளங்களை விட்டு [பொய்கைவிட்டு - வஞ்சனையை முழுவதும்விட்டு], என் ஆவி தாங்கும் - எனது ஆவியை வந்தடையுங்கள் [எனது உயிரைத் தரிக்கச்செய்யுங்கள்]; வரல்ஆறு கேளும் - ஆறுவருகையைக் கேளுங்கள் [எனது விருத்தாந்தத்தைக் கேளுங்கள்]; மச்சம் மருங்கு நில்லும் - மீன்களின் அருகிலே நில்லுங்கள் [மச்சு அ மருங்கு நில்லும் - (எனது) வீட்டினிடத்தே வந்து நில்லுங்கள்]; கலை - கலையென்னும் மீனும், ஆரல் - ஆரலென்னும் மீனும், மதியோடு - அறிவுடனே, அலர் வெளிசை - பெரிய தூண்டிலை, மீறும் - கடந்து அப்பால் துள்ளிப்போய்விடும் [கலை மதியோடு - கலைகளையுடைய சந்திரனுடனே, ஆரல்

அலர் - இணங்குதல் பொருந்திய, வெள் - மன்மதனால், இச்சை - காமமயக்கம், மீறும் - விஞ்சும்]; க அலை - நீரலைகளையுடைய, முன்னீர் - கடலில், இரை ஏற்கும் - உணவுக்கு ஏற்ற,கன கருப்பம் - பெரிய வயிற்றையுடைய, சிலை - ஆரவாரத்தையுடைய, அரு - கிடைத்தற்கரிய, வரால் - வராலென்னும் மீனும், மலங்கு - மலங்கு என்னும் மீனும், படுதல் - பொருந்துதலை, பாரும் - பாருங்கள் [கவலை முன்னீர - என்வருத்தத்தைக் கருதுவீராக; இரை - ஒலியையுடைய, ஏற்கும் - கையில் எடுத்த, கனம் கருப்பஞ் சிலை - பெரிய கரும்புவில்லையுடைய, அருவரால் - உருவமில்லாத மன்மதனால்,மலங்குபடுதல் - (யான்)கலக்கமடைதலை, பாரும-நோக்குங்கள்]; திருக்கை வையும் மழை சுறவை தேடுவீர் - சிறந்தகைகளை வைத்து மேகம்போற் கரிய சுறாமீனைத் தேடுவீராக [திருக்கை வையும் - (என்மீது உங்கள்) கண்ணோக்கத்தை வையுங்கள்; அழைச்சு உறவை தேடுவீர - அழைத்துக் கூடுதல்பொருந்துவீராக], (எ - று.)—வெள் - வேள்என்பதன் விகாரம்.

மீன்விற்கும் வலையாமகளொருத்தியைக் கண்டு காமுற்ற ஒருவன் அம்மகளை முன்னிலைப்படுத்திச் சிருங்காரமான வார்த்தை பேசினதாகச் செய்யுள்செய்வது, வலைச்சியார் என்னும் உறுப்புக்கு இலக்கணமாம்.

இனி, கலை மதியோடு ஆர் அல் அலர் வெள் இச்சை மீறும் எனப்பிரித்து,கலைநிரம்பிய சந்திரனோடு பொருந்திய இராத்திரியில்மிகுகின்ற வெண்மை [வெறுமை]யான விருப்பம் விஞ்சுகிறது என்றும பொருள்கொள்ளலாம். கவலை-கவ் அலை எனப்பிரித்து, மடங்குகின்ற அலைகளையுடைய முன்னீரென்றுமாம். அருவா - அரூபா; மன்மதனென்று பொருள். திருக்கு - தருக் என்னும் வடமொழியின் திரிபு. இனி, திருக்கை வையும - மாறுபாட்டை ஒழியுங்கள். வலைச்சியார - வலைவீசி மீன்பிடித்து விற்கிற நெய்தனிலத்துப்பெண்கள.

இது, பதினன்காங்கலிபோன்ற எண்சீராசிரியவிருத்தம். (௮௬)

[இடைச்சியார்.]

௮௭ தேடுதமிழ்வடிவழகர்நெடியவிடைமலைமேற் சிறியவிடைப்பெரியவிடைத்திருக்குலத்தினமுதே, கூடுகின்றவெண்ணெயொடும்வேனிலானெய்யுங் குறைவிலைவிறபோரதிகங்கொண்டதெழுபடிகா, ணாடறிந்தத்திமோகமுறையிணக்கம்வையு நவமணிசேர்பொன்னாழிநல்குவேன்மெல்ல, வாடைதனையொதுக்கிடுமென்பால்வாருமிச்சமாமுழக்குமோர்போதுமகலேனநதமிலே.

(இ - ள்.) தமிழ் - தமிழினால், தேடு-ஆராய்ந்துசொல்லப்படுகிற, வடிவு அழகர் - திருமேனியழகரது, நெடிய - பெரிய, விடைமலைமேல் - விருஷபகிரியின்மேலுள்ள, சிறிய இடை - சிறுத்த இடுப்பையுடைய, பெரிய இடை திரு குலத்தின் அமுதே - சிறந்த இடையர்களது மேன்மையான குலத்தில்தோன்றிய அமிருதம் போன்றவளே!—கூடுகின்ற வெண்ணெயொடும்-திரளுகிற வெண்ணெயையும், வேனில் ஆன் நெய்யும் - வெதும்பக்காய்ச்சப்பட்டுள்ள பசுவின்நெய்யையும், குறைவிலை விறபோர்-குறைந்தவிலைக்கு விற்பவர்கள், அதிகம் - மிகுதி; எழு படி - எழுபடி, கொண்டது - கொள்ளப்பட்டது: காண்-நீஅறிவாயாக;அறிந்த ஆடு ததி - அறிந்த ஆட்டுத்தயிரையும், மோகம்-மோர்நீரையும், உறை - உங்கள்வீட்டில், இணக்கம் வையும் - கொண்டுபோய் வையும்; நவம் சேர் மணி - புதுமையான ஒருசேர் நெல்மணியையும்,பொன் நாழி - ஒருநாழி பொன்னையும், நல்குவேன்-கொடுப்பேன்; மெல்ல - உண்ணுதற்கு, ஆடைதனை - எட்டை, ஒதுக்கிடும் - ஒதுக்கி எடுத்

துக் கொடும்; மெல் பால் வாரும் - இனிமையான பாலை வாரும்; அகல் ஏனம் தமில் - வாயகன்ற பாத்திரத்தில், மிசசம் ஆம் - மிகுதியாக வுள்ள, உழக்கு மோர் - ஒருஉழககுமோர், போதும் - (எனக்குப்) போதும்;—[கூடுகின்ற எண் - பொருந்திய வலிமையையுடைய, எடும் - (புஷ்ப) பாணஙகளால், வேனிலான் - வசந்தகாலததிறகு உரிய மன்மதன், எய்யும் - எய்கின்ற,வில் போர் - வில்லின் போாககு, குறைவு இலை-குறைவில்லை; எழுபடி அதிகம் கொணடது - (முனனினும) எழுமடஙகு மிகுதியைககொணடது; நாடு அறிந்தது அதிமோகம-(எனது) அதிகமான காமமயக்கததை நாடெல்லாம் அறிந்தது; முறை இணககம வையும-முறைமையாக (என்னிடததில்) நண்பு வையும்; நவ மணி சேர பொன் ஆழி நலகுவேன-நவரததினஙகளும் பதிததுசசெயத பொன்மயமான மோதிரததைக கொடுப்பேன்; மெல்ல - மெதுவாக, ஆடைதனை - வஸ்திரததை, ஒதுககிடும்—; என்பால் வாரும - என்னிடம வாரும்; இசசம ஆம - இசசைகொள்ளும, உழக்கும் - கூடும்; நந்தமில் - நம்மினின்றும், ஓாபோதுமஅகலேல் - ஒருபொழுதும் நீங்கற்க].

தெருவில் தயிரகொண்டுவிறகும் இடைசசியை நோக்கிக் காதல்கொண்டா னொருவிடன் தனதுவேட்கையை வெளிப்படுததி அவளைமுன்னிலைப்படுததிச சொன்னதாகக கூறுவது, இடைச்சியார் என்னும் உறுப்பின் இலககணமாம்.

'அமுதே!'என ஒருமையாக விளிததததறகுஏறப,'காண்',·அகலேல்'என ஒருமைவினைகொடுததுக கூறினா; இடையிலவந்த பனமைவினைகள் - உயர்வுபறறியன. எடுயாடும - எடுயாடும என விகாரம ஆடை - பால் முதலியவற்றின் ஏடு இனி, உழககும - பெயரெசசமாய, யான வேட்கையால்வருந்துகிற ஒரு சிறுபொழுது மெனறுமாம இடைசசியாா - பால் நெய் தயிர் முதலியவற்றைக கொணடுவிறகிற ஆயாமகளிா. காண - முன்னிலையசையுமாம்.

இது, பதினெட்டாங கழிபோன்ற எழுசீராசிரியவிருத்தம். (அஎ)

அஅ நநதனந்தனவென் றுகாாதனைநஙகைசெங்கைமுகிழ்க்கு மின் னளினமாதெனவிகலுமாரனைநமதுசாபமவிடாதெனுஞ், சந்தர சூரியர்தஙகளைசசெயசங்குசகரமெனதமதொழூஉ சலதியாடுதலய முனைமூழ்குதறவமெனுநலைநாளிலே, யைநலைபணியுநதருப்பையுமாகிலேலெனுமவேணுவா யமுதமுண்டுயர்வமசமானததிட்டமே யெனுமாசைநோய், மநதிரததிலருதுதீாககுநின்வாசமவீசிய துளவு காண் வாசவன்பதிபரவுசீபதிவாசசுநதரராசனே

(இ - ள்.) வாசவன் பதி பரவு - இந்திரனது உலகத்திலுள்ள தேவர்களெல்லாந துதிக்கின்ற, சீ பதி - சிறந்த (மாலிருஞ்சோலைத) திருப்பதியில், வாச - வாசஞ்செயபவனே!—சுநதரராசனே - அழகப்பிரானே!—நஙகை - எமதுமகள்,—கார்தனை - (உனதுதிருமேனிநிறமமைந்த) மேகததை நோக்கி, (நீயென்றே நினைதது),நந்தன்நந்தன என்று - 'நந்தகோபகுமாரனே!' என்று கூப்பிட்டு, செம கை முகிழ்க்கும - சிவந்த கைகளைக் கூப்பித்தொழுவாள்; மின் - (அம்மேகத்தினிடததிற பொருந்திய) மின்னலை நோக்கி, நளினம் மாது என - (உனது திருமார்பில வீறறிருக்கிற) தாமரையிலுள்ள திருமகளென்று எண்ணி, இகலும் - (தனக்கு அவ்வாறு உன்னுடன் கூடிவாழ்தல் கிடைக்கவில்லையே என்று) பொறாமைப்படுவள்; மாரனை-(தன்னை வருததுகிற) மன்மதனைக்குறித்து, நமது சாபம் விடாது எனும் - 'நாம்சபிக்கிற சாபசசொல் உன்னைச சும்மாவிடாது' என்று அதட்டுவாள்; சந்த்ர சூரி

யர்தங்களை - சந்திரனையும் சூரியனையும் நோக்கி, செய சங்கு சக்ரம் என - (உனது திருக்கைகளிற் பொருந்திய) வெற்றியையுடைய சங்கமுஞ் சக்கரமும் என்று எண்ணி, தொழும் - வணங்குவாள்; 'சலதி ஆடுதல் - (நீ வாழ்கிற) கடலிலே நீராடுதலும், யமுனை மூழ்குதல் - (நீ கிருஷ்ணாவதாரத்தில் மூழ்கின) யமுனாநதியில் ஸ்நானஞ்செய்தலுமே, தவம் - நல்லதபசாகும்,' எனும் - என்பாள்; 'தலைநாளிலே - முன்காலத்திலே, ஐந்தலை பணியும் தருப்பையும் - நீ படுக்கும் இடமான ஐந்துதலைகளையுடைய ஆதிசேஷனும் தருப்பைப்புல்லுமாக, ஆகிலேன் - ஆகாமற்போனேனே!' எனும் - என்று இரங்குவாள்; 'வேணு - வேய்ங்குழல், வாய அமுதம் உண்டு - (உனது) அதரத்தின் அமிருதத்தைக் குடித்து, உயர் வம்சம் ஆனது - உயர்ந்த குலம் [மூங்கில்] ஆகியது, அதிட்டமே - (அதன்) நல்வினைப்பயனே,' எனும் - என்பாள்; ஆசை நோய் - (அவளுடைய) காமப்பிணி, மந்திரத்தில் அறாது - (தேவதாந்தரபரா உச்சரிக்கிற) மந்திரங்களினால் நீங்காது; நின - உனது, வாசம் வீசிய - வாசனை வீசுகிற, துளவு - திருத்துழாய்மாலை யொன்றுதான், தீர்க்கும் - (அந்நோயை) நீக்கவல்லது, (எ - று) — காண - தேற்றம், முன்னிலையசையாகவுமாம்.

இது, தலைமகனிடஞ்சென்று தலைமகளது காதல்நோயைக் கூறி அவள் நோயைத் தணிக்குமாறு மாலையைத் தந்தருளும்படிகேட்கிற தோழிமார்களது கூற்று. நந்தனன் - மகன்; களிப்பையுண்டாக்குபவனென்று பொருள்.

இது, ஒன்று மூன்று ஐந்தாறுஞ் சீர்கள் மாச்சீர்களும், இரண்டு நான்கு ஏழாஞ் சீர்கள் விளச்சீர்களுமாகி வந்தது அரையடியாகவும், அஃது இரட்டிகொண்டது ஓரடியாகவும் வந்த பதினான்குசீராசிரியவிருத்தம். (௮௮)

௮௯ சுந்தரத்தோளரழகாநன்னாடன்னதூவியந்தாண்
மந்தரத்தீஞ்சொற்கிளிசெல்லுமோசக்கரவாளஞ்சுற்றி
யந்தரபானுவுமோடச்செந்தீயுநெட்டாழிவிழக்
கந்தரத்தன்குளக்கண்போற்கொதிக்குங்கடுஞ்சுரமே.

(இ - ள்.) சுந்தரம் தோளர் அழகா - அழகிய திருத்தோள்களையுடைய அழகரது, நல் நாடு - நல்ல நாட்டிலேயுள்ள, அன்னம் தூவி அம் தாள் - அன்னப்பறவையின் சிறகுபோல மெல்லிய அழகிய பாதங்களையும், மந்தரம் தீம் சொல் - மடமையையுடைய இனிய சொற்களையுமுடைய, கிளி - கிளி போன்ற காதலி, — அந்தரம் பானுவும் - ஆகாயத்துச் செல்லுகின்ற சூரியனும், சக்ரவாளம் சுற்றி ஓட - (கடலுக்கு அப்புறத்துள்ள) சக்ரவாளகிரியைச்சுற்றி ஓடிப்போம்படியாகவும், — செம் தீயும் - சிவந்த அக்கினியும், நெடு ஆழி விழ - பெருங்கடலிற்புக்கு விழும்படியாகவும், — கந்தர் அத்தன் குளம் கண்போல் - சுப்பிரமணியக்கடவுளது தந்தையாகிய உருத்திரனது நெற்றியிலுள்ள (நெருப்புக்)கண்போல, கொதிக்கும் - மிகச்சுடுகின்ற, கடுஞ் சுரம் - கொடிய பாலைநிலத்தில், செல்லுமோ - செல்லுவாளோ? (எ - று.)

இது - தலைமகளை உடன் அழைத்துக்கொண்டு போகும்படி தோழியினாற்கூறப்பட்ட தலைமகன், தலைமகளது அடிகளின் மென்மையையுந் தான் செல்லும் வெஞ்சுரத்தின் வன்மையையும் நினைந்து மனம் வாடியது; 'அடியோடுவழிநினைந்தவனுளாய்வாடல்' என்னுந் துறை.

செந்தீயென்றது - சமுத்திரத்தின்நடுவிலிருக்கும் படபாமுகாக்கினியை. சுடுந்தன்மையையுடைய சூரியனும் அக்கினியும் சுரத்தின்வெம்மைக்குத் தோற்குவதைப் பொறுக்கமாட்டாமல் முறையே ஓடிக் கடலில்விழுவரென, சுரத்தின் வெம்மைமிகுதி கூறியபடி; ஏதுத்தற்குறிப்பேற்றவணி: "சூரியன், தேரு மோடாது மாமாகமீ" என்றார் கம்பரும்.

இது, நேரசை முதலதாகிய கட்டளைக்கலித்துறை. (௮௯)

[பிச்சியார்.]

கூo. மேதினிபோற்றழகர்மலைத்திருப்பிச்சியாரே வெளிப்பட்டீர்.
முனிவர்மலைத்திருப்பிச்சியாரே, கோதுபடுகுழல்போகவிளங்குதலைச்
சுகமே கொள்ளைகொண்டீரிங்குவரவிளங்குதலைச்சுகமே, காதிலிட்
டசெம்பணியுநடுக்காவியுடையுங் கபாலமுஞ்சூலமுங்கண்டேநடுக்
காவியுடையு, மாதரியுமுங்கள்சிவமதவேடந்திரமே யறிவீரேயன்
றெதிர்த்தமதவேடந்திரமே

(இ - ள்) மேதினி போற்று - உலகமெல்லாந் துதிக்கின்ற அழகர் - அழகரது. மலை - சோலைமலையிலுள்ள. திரு பிச்சியாரே - அழகிய பிச்சியாரே!—வெளிப்பட்டீர் -(நீங்கள்) புறப்பட்டு வீதியில்வந்தீர்கள்; (இனி), முனிவர் - முனிவர்கள், மலைத்து இருப்பு - வருந்தித் தவஞ்செய்திருத்தலை, இச்சியார் விரும்பார் [தமது தவத்தைவிட்டு உம்மைவிரும்புவரென்றபடி]; (நீங்கள்), இங்கு வர - இங்கே (இவ்வாறு வேஷந்தரித்து) வருமபொருட்டு, கோது படு குழல் போக விளங்குதலை - கோதுகள் படும்படியான கூந்தல் இல்லையாக விளங்குவதனை, சுகமே - சுகமாக, கொள்ளைகொண்டீர் - மிகுதியாக உடைத்தாயிருக்கிறீர்; இளங் குதலை (உமது) இளமையான குதலைச்சொல், சுகமே - கிளிமொழியே போலும்; காதில இட்ட - (நீர்) காதில தரித்த, செம்பு அணியும - செம்பினாலாகிய ஆபரணத்தையும, நடு - அரையில்(உடுத்த), காவி உடையும - செங்காவிக்கலவில தோயத்தெடுத்த காஷாயவஸ்திரத்தையும, கபாலமும் - கையிலுள்ள தலையோட்டையும, சூலமும் - சூலாயுதத்தையும், கண்டே - பார்த்தே. ஆவி நடுக்கு உடையும - (காண்பவரது) உயிர் நடுக்கமுடையதாய அழியும்; உங்கள் சிவமத வேடம் - உங்களைசைவமதத்துக்குஉரிய வேஷத்தை, திரமே - உறுதியாக, ஆதரியும - காப்பாற்றுங்கள்; அன்று எதிர்த்த - முன்னே(சிவனோடு)எதிரிட்டுஅழிந்த,மத வேள் - மன்மதனது, தந்திரம - வஞ்சனையின்பயனை, அறிவீரே - நீர் அறிவீரன்றோ?

சிவசின்னம்பூண்டு தெருவிற் பிச்சைக்குவருகிற மகளொருத்தியை நோக்கி ஒருகாமுகன் தன்வேட்கையைபபுலப்படுத்தி முன்னிலைப்படுத்துக் கூறுவதாகச் செய்யுள்செய்வது, பிச்சியாரென்னும் உறுப்பாம்

இனி, இரண்டாமடிக்கு - குற்றமில்லாத கூந்தல்போனதனால் விளங்குகின்ற முடியழகினாலுண்டான இன்ப மொன்றையே இழந்தீரென்றுங் கொள்ளலாம. பிச்சியார் சைவவேடந்தரித்துப் பிச்சைக்குவரும் மகளிர்.

இது, பதினெட்டாங்கலிபோன்ற எண்சீராசிரியவிருத்தம். (கூo)

கூக மதுசூதனமுகுந்தா வாமனமாயா
வதிரூபா ராமா வழகா—யதுவீரா
வெண்ணந்துளவா விமலா கமலாட்சா
தண்ணந்துளவா சரண்

(இ - ள்.) மதுசூதனா—! முகுந்தா—! வாமனா—! மாயா—! அதிரூபா - மிகுந்த சௌந்தரியமுடையவனே! ராமா—! அழகா—! யது வீரா - யதுகுலத்தில் திருவவதரித்தவனே! வெள் நந்து உளவா - வெண்மையான சங்கமுள்ளவனே! விமலா - குற்றமற்றவனே! கமல அட்சா - செந்தாமரை மலர்போலுந் திருக்கண்களுடையவனே! தண் அம் துளவா - குளிர்ந்த அழகிய. துழாய்மாலையுடையவனே!—சரண் - (நீயே எனக்குப்) புகலிடம்.

உளவா - உள்ளவன் என்பதன் விளியாகிய உள்ளவா என்பதன் தொகுத்தல். வெள் நந்து உள்வா - வெள்ளிய சங்கை ஊதுபவனே யென்று

மாம்; உளவுதல் - பயிலுதல். அன்றிக்கே, நந்துள் அயா எனப் பிரித்து-சங்கத்தினிடத்தில் விருப்பமுள்ள வென்றுமாம்.

இது, மலரென்னும்வாய்பாட்டான் முடிந்த இருவிகற்பநேரிசைவெண்பா.

கூஉ. சரணகோகனகங்கற்பகநாறத் தண்டுழாய்முடிபரிமளிக்கச் சங்குநேமியும்வெண்ணிலாவெயிலெறிக்கத தமனியத்துகில்பளபளக்க, மரகதமேனியெழிற்பழுத்தொழுகமகரகுண்டலம்புயத்தலம்ப வனசலோசனங்களருண்மழைபொழியவந்தநின்கோலநான்மறவேன், றிரண்முலைக்கிராதநுணுகிடைககிராதசிறுமிகண்முகமதியெனவாய் திறந்தவாம்பலையும் பறந்தவண்டையுஞ் செந்தீயெழுபுகையெனப்பதறி, விரனெரித்தடங்கா விழிபுதைத்தோடி வெண்பளிக்கறைகுடிபுகுங்கா வெற்பலங்காராவுற்பலங்காராமெய்யனேதெய்வநாயகனே.

(இ - ள்.) திரள் முலைக்கு இராத-பருத்த தனங்களைப் பொறுத்திருக்கமாட்டாத, நுணுகு - (அதனால் வருவாச) சிறுத்துப்போகிற, இடை - இடுப்பையுடைய, கிராத சிறுமிகள் - வேடப்பெண்களது. முகம - குளிர்ந்தமுகத்தை. மதி என - பூர்ணசந்திரனென்று எண்ணி, வாய் திறந்த - மலர்ந்த, ஆம்பலையும - செவ்வாம்பலமலரையும, பறந்த - (அதன்மேற்) பறக்கின்ற, வண்டையும் - வண்டுகளையும் (நோக்கி). செம் தீ எழு புகை என சிவந்த நெருப்பும் (அதினின்று) எழுகின்ற புகையும் என்று எண்ணி. பதறி - அஞ்சி நடுங்கி, விரல் நெரித்து-('இதற்கு யாதுசெய்யோம?' என்று) கைவிரலகளை நொருக்கிக்கொண்டு வருந்தி. அடங்கா விழி புதைத்து-(கைகளுக்கு)அடங்காத [மிகப்பெரிய] (தமது) கண்களை(க் கைகளால்) மூடிக்கொண்டு, ஓடி - விரைந்துசென்று, வெள் பளிங்கு அறை - வெண்மையான ஸ்படிகக்கற்களாலாகிய சிறுவீடுகளிலே, குடிபுகும்-சேர்ந்து வசிக்கப்பெற்ற,கா வெற்பு-சோலைமலையில் எழுந்தருளிய. அலங்காரா - அழகனே!—உற்பலம் கார் ஆம் மெய்யனே - நீலோத்பலமலரும் காளமேகமும் போன்ற திருநிறமுடையவனே!—தெய்வநாயகனே - தேவர்களுக்குத் தலைவனே!—சரண கோகனகம் - தாமரைமலர்போலுந் திருவடிகளில், கற்பகம் நாற - (தேவர்கள் அருச்சித்த) கலபகவிருக்ஷங்களின் மலர்கள் மணக்கவும்,—முடி - திருமுடியில, தண் துழாய் - (அணிந்துள்ள) குளிர்ந்த திருத்துழாய் மாலை, பரிமளிக்க - வாசனைவீசவும்,—சங்கும் நேமியும - சங்கமுஞ்சக்கரமும்,(முறையே), வெள் நிலா வெயில எறிக்க - வெண்மையான நிலாவையும் வெயிலையும வீசவும்,—தமனியம் துகில் - பொன்மயமான பீதாம்பரம, பளபளக்க - பளபளவென்று விளங்கவும்,—மரகதம் மேனி - மரகதரத்தினம் போன்ற திருமேனியின், எழில் - அழகு, பழுத்து ஒழுக - முதிர்ந்து மேன்மேற் பெருகவும்,—மகர குண்டலம் - மகரமென்னுமமீனின்வடிவமாகச்செய்த குண்டலமென்னுங் காதணிகள், புயத்து அலம்ப - தோள்களின்மீது அசையவும்,—வனச லோசனங்கள் - தாமரைமலர்போன்ற திருக்கண்கள், அருள் மழை பொழிய - கருணைமழையைப் பெய்யவும்,—வந்த - எதிரில்வந்து தரிசனந் தந்த, நின் கோலம் - உனது காட்சியை, நான்—, மறவேன் - (எப்பொழுதும்) மறக்கமாட்டேன்; (எ - று.)

கோகனகம் - கோகநதம் என்பதன் விகாரம்; சக்கரவாகங்கள் கூடிக் குலாவுதற்கு இடமாயிருப்ப தென்றும், கோகமென்னும் நதியில் மிகுதியாகத் தோன்றுவதென்றும் பொருள். வநஜம் - நீரிற்பிறப்பது. மயக்கவணி.

இது, இருபத்தாறுங்கவிபோன்ற பதினான்குசீராசிரியவிருத்தம். (கூஉ)

[தூது.]

௯௫. தெய்வசிகாமணியை யெங்கள்சாரசோரசிகாமணியைக் கண்மணியிற்சிறந்தோன்றன்னை, யைவர்சகாயனைமுதலுநதம்பியென் றேயழைத்த தின்னநதம்பிகளேயழைததுவாருங், கைவருபந்தாடு மணிமுற்றமெல்லாங் கமழ்பனிநீரிறைத்திறைததுக்கழுநீர்போலும், மைவிழியார்குளமாக்கிவிட்டா ரென்னவன்பகையோபொருமுதலை வளர்க்கின்றாரே

(இ - ள்.) தெய்வசிகாமணியை - (தேவர்களுக்கெல்லாந) தலைமேலணி யும் இரத்தினம் போன்றவனும், எங்கள—, சார சோர சிகாமணியை - மகாவிடர்களுக்கும கள்வர்களுக்கும் முதல்வனானவனும், கண் மணியில் சிறந்தோன்தனனை - கண்ணின்கருமணியினும் சிறந்தவனும், ஐவர் சகா யனை-பாண்டவர்க்குத துணைவனுமாகிய அழகனை,—முதலும் - முன்காலத் திலும், தம்பி அன்றோ - தமபியென்னும பெயருடைய யானையல்லவோ, அழைததது - கூப்பிட்டது? இன்னம்-மறுபடியும், தும்பிகளே - தமபியென் னும் பெயருடைய வண்டுகளே! அழைததுவாரும்-(நீங்கள்)அழைத்துவாருங் கள்; கழுநீர்போலும் மை விழியார் - கருநகுவளைமலர்போன்ற மையணி ந்த கண்களையுடைய என்பாஙகிமார், கை வரு பந்து ஆடும் - கையில்வருகிற பந்தை ஆடுகிற,அணி முற்றம எல்லாம் - அழகிய முனறிலினிட முழுவதும், கமழ் பனிநீர் இறைததது இறைதது-(என்தாபததைப்போக்குதற்பொருட்டு) வாசனைவீசுகிற பனிநீரை மிகுதியாக இறைதது, குளம ஆககி விட்டார் - குளம்போலச செய்துவிட்டார்; என்ன வல் பகையோ - (என்மீது அவர் களுக்கு) என்ன கொடிய பகைமையோ? பொரு முதலை வளர்க்கின்றாரே - போர்செய்கின்ற முதலையை வளாக்கிறார்களே [பொருமுதலை வளர்க்கின் றாரே-(எனது)வருததத்தை மேன்மேலும வளரச்செய்கிறார்களே!];(எ - று.)

ஜாரசோரசிகாமணி என்றது கிருஷ்ணாவதாரத்தில் பலவாயிரம் ஆய் ச்சிமாரோடு கலந்தும், அவர்கள்மாளிகையில் வெணணெய் முதலியன திருடியும் விளையாடியதை யுட்கொண்டு 'முன்னே தம்பி கூப்பிட வந்து பொரு முதலையை அழிததுக் காத்தவனாதலால்,இப்பொழுதும் தம்பிகளே! நீஙகள் கூப்பிட்டால அவன் வந்து எனது பொருமுதலைப் போக்கியருள் வன்' எனத தலைவி கூறினாள்.

இது, பதினான்காங்கவிபோன்ற எண்சீராசிரியவிருத்தம். (௯௫)

[இரங்கல்.]

௯௬ வளங்குலவுதண்டலைநெடுங்கிரிமுகுந்தர்நல்வரந்தினம்வ ழங்கழகர்தா, மிளங்குதலைகொஞ்சியபசுங்கிளிகள்கெஞ்சியுமிரங்கி யினம்வந்திலரையோ,வுளங்கரையுமென்சொலமுனஞ்சமனடுங்கிட வுதைநதவர்வெகுண்டுசுடவே,களங்கமறவெநததுமதன்சடலமென் றனர்கரும்புகையொழிந்ததலவே

(இ - ள்) வளம் குலவு - வளங்கள் மிகுந்த,தண்டலை நெடுங்கிரி-பெரிய சோலைமலையி லெழுந்தருளிய, முகுந்தர் - முகுந்தரும், நல் வரம் - நல்ல வரங்களை தினம் - நாள்தோறும், வழங்கு - கொடுப்பவருமாகிய, அழ கர்—,—இளங குதலை கொஞ்சிய பசுஞ்கிளிகள் கெஞ்சியும் - இளமையான குதலைப்பேச்சுக்களைப் பேசுகிற பசிய (என்னால்தூதனுப்பப்பட்ட) கிளிகள் மிகவுங்கீழ்ப்படிந்து வேண்டிக்கொண்டும், இரங்கி - (என்மீது)இரக்கங்கொ ண்டு, இனம் - இன்னமும், வந்திலர் - வந்தாரில்லை; ஐயோ—! உளம் கரை யும் - மனம் வருந்துகின்றது; என் சொல - என்னவென்று சொல்வேனாக;

'முனம - முன்னே, சமன் நடுங்கிட உதைந்தவர்-யமன் அஞ்சி நடுங்கும்படி உதைத்தவராகியசிவனார், வெகுண்டுசுட்டவே-கோபித்து எரித்ததனாலே, மதன் சடலம்-மன்மதனது உடம்பு, களங்கம் அற-அடையாளமு மில்லாமல், வெந்தது-வெந்து சாம்பராய்ப்போய்விட்டது', என்றனர் - என்று சொன்னார்களே; கரும்பு கைஒழிந்தது அலவே - கையிலுள்ள கருப்புவில் ஒழிந்ததன்றே

தன்னை மன்மதபாணங்கள் வருத்துதலால், அப்பாணங்களை எய்கிற கருப்புவில் ஒழிந்ததன்று என்றாள்; கரும் புகை என்றும் ஒரு பொருள் தோன்றும்

இது - பெரும்பாலும் முதலைந்தும் காய்ச்சீர்களும, ஆறாவது தேமாச்சீரும், ஏழாவது புளிமாச்சீருமாகிய எழுசீராசிரியச்சந்தவிருத்தம். (கூச)

[இரங்கல் - மடக்கு.]

கூரு அலமேந்தழகாபதிசுனையேயாடுமேமெய்பபதிசுனையே யணிலவாற்கதிர்போமருந்தினையே யகன்றேமேயமருந்தினையே, குலவஞ்சுகமேகோகிலமே கொம்பிறபுனத்திககோகிலமே கூடவளர் மாதவிபபோதே கொடியார்க்கென்மாதவிபபோதே, கலைமுன்பிரியக் கணக்கன்றே கரும்பைபபிரியககணக்கன்றே கணியாராகாட்டுமருவலரே கணியாராகாட்டுமருவலரே, சலதிமுகக்குமுகமஞ்சே தனித்தே நிமிடமுகமஞ்சே தையலொதுங்குமவரவழையே தையுண்டாலைல் வரவழையே

(இ - ள்.) அலம்ஏந்து-(பலராமாவதாரத்தில்)கலப்பையையேந்திய, அழகர்-அழகரது, பதி-சோலைமலைத்திருப்பதியிலுள்ள, சுனையே-ஊற்றுநீர்ச்சுனையே! (என்துமகள்), மெய் பதிசசு - (விரகதாபத்தால்) உடம்புபதைத்து, உனை ஆடும் - உனனில மூழ்குகிறாள்; அணில் வால் கதிர் போம்-அணில்வால் போலக் கதிர்வாங்கிய, அருந் தினையே-அருமையான தினைப்பயிரே! மேய மருந்தினை-(இவள்நோய்க்குப்) பொருந்திய மருந்தை, அகன்றேம்-பெறாமலிருக்கிறோம்; குலவு அம சுகமே - விளங்குகிற அழகிய கிளியே! கோகிலமே-குயிலே! (கணவனைப்பிரிந்த என்மகளுக்கு), கொம்பின் புனம் திக்கோ-பூங்கொம்புகளையுடைய சோலையின் திசையெல்லாம, கிலமே - பாழாகத் தோன்றுகிறது; கூட வளர - (என்மகளோடு) கூடவே வளர்ந்த, மாதவி போதே - குருக்கத்திமலரே! கொடியார்க்கு - கொடிய தலைவர்க்கு. என் மாதவிப்பு - எனது இலக்குமிபோன்றமகள் படுகிற வருத்தத்தை, ஓது - சொல்லு; முன் - எதிரேயுள்ள, பிரியம - அன்புள்ள. கலை கன்று கணமே - மான்கன்றின் இனமே! கரும்பை பிரிய - கரும்புபோன்ற என்மகளைப் பிரிந்துநீங்க. கணக்கு அன்றே - (தலைவர்க்கு) நீதியன்றே; கணி ஆர் - வேங்கைமரங்கள் நிறைந்த, காடு - வனத்திலுள்ள, மரு - வாசனையையுடைய, அலரே - மலரே! மருவு - (என்மகளுக்கு) வருகிற, அலர் - (அயலார்தூற்றும்) பழிப்பேச்சை, கணியார் - அறிதுமெண்ணாத தலைவர்க்கு. காட்டு - விளங்க எடுத்துச சொல்லு; சலதி முகக்கும் - கடல்நீரை மொண்டு பருகுகிற, முகம் - முகத்தையுடைய. மஞ்சே - மேகமே! தனித்தே நிமிடம் - (கணவனைப்பிரிந்த என்மகளுக்குத)தனித்த நிமிஷமே, உகம் அஞ்சே - ஐந்துயுகம் போலக் காணப்படுகிறது; தையல் ஒதுங்கும் - (என்மகள் நிழலில்) ஒதுங்குகிற, வரம் வழையே - சிறந்த சுரபுன்னைமரமே! தயை உண்டானால்—, வர அழை - (தலைவரை இங்குவரும்படி) அழைத்துவருவாயாக; (எ - று.)

அலம்-ஹலம். பதிசசு-பதித்து. தையலொதுங்கும்-அழகுபொருந்திய என்றுமாம். நெய்தற்குஉரியஇரங்கல் குறிஞ்சிககண்மயங்கியது:வழுவமைதி.

இது, முப்பத்தொன்பதாங் கவிபோன்ற பன்னிருசீராசிரியவிருத்தம்.

௯௯ வரம்பெற் றிடுதலி னருந்தவக் கிழவருங்
கண்டகரை யடாததலின் மண்டலத் தரசருங்
கற்பக மண்டலிற் கனக நாடருங்
கான முழுககலி ஞனகந திருவரு
மெழுதரு மறைகள்கூ றிடலால் வியாதனும
போதக மோதலிற் புராணவே தியருஞ
சாநதமுற் றிடுதலிற் றனிஞா னிகளு
மான்மத மடுத்தலின் வைணவக குரவரு
நவமணி விரித்தலி னன்னு வலரு
மன்னம வழங்கலி னகலாழ்க கையருஞ
செம்பொ னீட்டலிற் றிருப்பாற கடலு
மச்சங் களைதலி னமுதசஞ சீவியும
பூமிதந திடுதலிற் புண்ட ரீகனும
பொங்க ருறைதலிற் பூவை வண்ணனு
மம்பிகை கலததலி னநதி வண்ணனும
பொருமலை யெறிதலிற் புலோமசை கொழுநனு
மகிலங் காட்டலி னலாகதிர் ஞாயிறு
முத்தமிழ் துதித்தலின் முழுமதிக கடவுளுஞ
சிவணுங கடவுட சிலம்பாற் றிறைவ
விருபது சிகரத தெண்ணிலாச சிகரப்
பொன்மலை வளைத்த செம்மலை யேந்தும
வெண்குன் றெடுத்த கருங்குன் றொருநாண்
முழைவாய் திறந்து மழைபோ லிடித்து
முடுகுசெங் களத்துக் கொடுமரம் வாங்கி
யடுசம ராட நடுநடு நடுங்கிக்
கொடுமுடி கவிழ்தலிற் குறுநகை பூத்து
நாளைவா வின்றுன நீளபதிக கேகென
விடைகொடுத த ருண்மால விடைமலை வாண
வுந்திக் கமலத் துச்சிவிட டிறங்கிக
கருத்திற் றெளிநத கரகநீ ராட்டிக்
கண்டகண் போறகுளிர் தண்டுழாய் சாத்தி
யிசைமக ளுடன்றுதித தெண்ணில கோடி
பிரமா போற்றிய பரம சாமீ
யளவறு பிறைகளுங் களனுறு கறைகளுங்
கணக்கிலா மழுக்களுங் குணக்கிலாக கழுக்களு
முடையார் புலித்தோ லுடையா ரிடையா
ரலகிலா வுமைகளு மிலகுபன் னதிகளும்
பதிகொ ளத்தனர் குதிகொண் மத்தனர்
விரூபத் திரன்முதற் கோரபுத் திரரொடு

௪0. மனந்த முருத்திரர் தினந்தினந் தொழுதிடுந்
திருவடி யுடைய பிரம மூர்த்தி
யொருவிண் ணப்பமுன் பெருமுனி பின்னர்
நம்பிநன் னிழலிற் றம்பிபின் றொடரச்
செஞ்சிலை யொடும்போய்க கருஞ்சிலை மிதித்து

௪௫. மின்னிள மேகமும் வில்லும் பிறையு
மரவிந் தமுமாங் கதிர்சில பூவுஞ்
சங்கமுந் திகிரியும் பங்கய முகுளமுங்
காந்தளுங் கொடியும் பாநதளுங் கதலியு
மாவிளந தளிரும வகுததனை மீண்டும

௫0. புன்மதி யுடைய வென்மனப பாறையை
நற்பதப் படுத்தி யற்புதம விளக்குங்
கண்ணநீ யுண்ணக் கவர்நத
வெண்ணெய் செய்து விடுவதுன் கடனே

(இ - ள்.) வரம் பெற்றிடுதலின் - வரங்களைப்பெறுதலால் [வரம்பு எற்றிடுதலின் - அணைகளைத தள்ளிவிடுதலால்], அருந் தவம் கிழவரும்-செய்தற்கரிய தவத்திற்குஉரிய முனிவர்களையும்,— கண்டகரை அடர்ததலின்-முள்போற்கொடிய துஷ்டர்களை அழித்தலால் [கண்ட கரை அடர்த்தலின்-பொருந்திய கரைகளை அழித்தலால்], மண்டலதது அரசரும்-நாட்டை ஆளுகிற அரசர்களையும்,— கற்பகம் அண்டலின் - கல்பகவிருக்ஷங்களைச சாருதலால் [கல்பக மண்டலின்-கறகளும் பிளக்கும்படி பாய்தலால்], கனகம் நாடரும்-பொன்னுட்டவராகிய தேவர்களையும,—கானம முழக்கலின்-கீதம்பாடுவதனல் [கானம் உழக்கலின-காட்டைக் கலக்குவதனல்], ஆன கந்திருவரும்-பொருந்திய கந்தருவர்களையும்.—எழுது அரு மறைகள் கூறிடலால்-எழுதுதற்குஅரிய வேதங்களைச சொல்லுதலால் [எழுதரும் அறைகள் கூறு இடலால்-பொருந்திய பாறைகளைப் பிளந்து துண்டாக்குதலால்], வியாதனும்-வேதவியாசமுனிவரையும்.—போதகம் ஓதலின் - ஞானங்களை உபதேசித்தலால் [போதகம் மோதலின் - யானைக்கன்றுகளைப் புரட்டிவருதலால்], புராண வேதியரும - புராணங்கள்சொலலுகிற அந்தணர்களையும்,—சாந்தம் முற்றிடுதலின் - பொறுமைக்குணம் மிக்கிருப்பதனல் [சாந்தம் உற்றிடுதலின் - சந்தனமரங்கள் பொருந்தியிருததலால்], தனி ஞானிகளும் - ஒப்பற்ற தத்துவஞானமுடையவர்களையும்,—மால் மதம் அடுததலின் - திருமாலைத தெய்வமாகக்கொண்ட மததததைப் பொருந்துதலால் [மான்மதம் மடுதலின் - கஸ்தூரிகள நிறைதலால்]. வைணவக் குரவரும் - வைஷ்ணவசமய ஆசிரியர்களையும்,—நவம அணி விரிததலின்-புதுமையாக அலஙகாரவிலக்கணங்களை விரிததுசசொல்லுதலால [நவ மணி விரித்தலின்-ஒன்பதுவகைப்பட்ட இரத்தினங்களைப் பரப்புதலால்], நல் நாவலரும்-நல்லவித்துவான்களையும்,—அன்னம் வழஙகலின்-அந்நதானஞ்செய்வதனல் [அன்னப்பறவைகள் பொருந்தப்பெறுதலால்]. அகம் வாழ்க்கையரும் - இல்லில்வாழ்தலையுடைய கிருகஸ்தர்களையும்,—செம்பொன் ஈட்டலின்-சிவந்த இலக்ஷுமியைத்தருதலால் [செம்பொன் ஈட்டலின் - சிவந்தபொன்னைத் தொகுத்துக்கொணர்தலால்], திரு பால்கடலும் - திருப்பாற்கடலையும்,—அச்சம்களைதலின்-பயத்தை ஒழிததலால் [அ சஙகு அளைதலின் - சிறந்த சங்குகள் பொருந்துதலால்], அமுத சஞ்சீவியும் - (மரணத்தைப் போக்குகின்ற) அமிருதசஞ்சீவி யென்னும் மருந்தையும்,—பூமி தந்திடுதலின் - உலகங்களைப் படைத்த

லினல் [பூ மிதநதிடுதலின் - மலர்கள் மிதக்கப் பெறுதலால்], புண்டரீகனும் - தாமரையில தோன்றிய பிரமனையும்,— பொஙகர் உறைதலின் - இலக்குமி வாழப்பெறுதலால் [சோலைகளிற் செல்லுதலால்], பூவை வண்ணனும் - காயாமலர்போன்ற திருநிறமுடைய திருமாலையும்,— அம்பிகை கலததலின் - உமாதேவியைக கூடுதலால் [அம்பி கைகலத்தலின் - ஓடஙகள் பொருந்தப்பெறுதலால]. அந்தி வண்ணனும் - மாலைப்பொழுதுபோன்ற செந்நிறமுடைய சிவனையும,— பொரு மலை எறிதலின் போர்செய்கிற மலைகளைச சிறகைவெட்டுதலால் [பொரும அலை எறிதலின் - மோதுகின்ற அலைகளை வீசுதலால], புலோமசை கொழுநனும் - சசிதேவியின் கணவனை இந்திரனையும்,— அகிலம காட்டலின் எல்லாப்பொருள்களையும் விளஙகக காண்பிததலால [அகில் அஙகு ஆட்டலின - அகிற்கட்டைகளை அஙகே அலைததுத்தள்ளுதலால], அலர் கதிர ஞாயிறும் - பாந்த கிரணஙகளையுடைய சூரியனையும, - முது அமிழ்து உதிததலின் பழமையான அமிருதத்தோடு தோன்றுதலால் [மூ தமிழ் துதிததலின் - மூவகைததமிழாலுந் துதிக்கப்படுதலால்], முழு மதி கடவுளும் - பூரணசந்திரனையும,— சிவணும் - ஒத்திருக்கின்ற, கடவுள - தெய்வததன்மையையுடைய. சிலம்பாறு - சிலம்பாற்றிற்கு; இறைவ - தலைவனே! எண் இலா சிகரம - கணக்கிலலாத சிகரஙகளையுடைய, பொன் மலை - மேருவை, வளைதத - வில்லாகவணக்கிய, செம் மலை - ருதத்திரமூாததியை, ஏநதும - தரிக்கின்ற, வெள் குன்று - கைலாசகிரியை, இருபது சிகரத்து-மலையுசசிபோன்ற (தன) இருபதுகைகளாலும, எடுத்த-பெயர்ததுத தூக்கிய, கருங குன்று-கரியமலைபோனற இராவணனை, ஒருநாள்-ஒருநாளில, முழை வாய் திறநது-மலைககுகைபோன்ற (தன துபதது)வாயகளையுந் திறந்து.மழைபோல இடிதது-மேகதமுதொனிபோல ஆரவாரஞ்செய்து, முடுகு - எதிாததுவருகின்ற, செம களதது - (உதிரததாற்) சிவந்துள்ள போாக்களததிலே, கொடுமரம வாஙகி - வளைந்த (கோதண்டமென்னும்) விலலை யெடுத்த,அடு சமர் ஆட - உககிரமான போரைச செய்ததனல், நடு நடு நடுஙகி - மிகவும அஞசி. கொடுமுடி கவிழதலின் - மலைசசிகரம்போன்ற தலைகள் குனிநது நாணுதலால் குறு நகை பூத்து-புன்சிரிப்புசசெய்து, 'நாளை வா - நாளைக்கு(த திருமபவும உனது சேனையோடு போருக்கு)வா, இன்று-இன்றைககு, உன நீள் பதிக்கு ஏகு-உன்னுடைய பெரிய இலஙகைநகாககுப் போ,' என - என்று, விடைகொடுததருள்-உததரவு கொடுததனுப்பிய, மால விடைமலை வாண - பெரியருஷபகிரியில வாழ்பவனே!- -எண்இலகோடி பிரமா-அநேகஙகோடி பிரமதேவர்கள், உநதிக்கமலத்து உசசி விட்டுஇறஙகி-(தமககுப் பிறப்பிடமான உனது)நாபீகமலமலரின் மேலிடத்தைவிட்டுக் கீழிறஙகி,கருததின் தெளிந்த கரகம் நீா ஆட்டி-தமது மனம்போலத தெளிந்துள்ள கைக்கமண்டலத்திலுள்ள தீர்தததால் திருமஞ்சனஞ்செய்து,கண்ட கண்போல் குளிர் தண் துழாய சாததி-(எம்பெருமானைத) தரிசிதத (தமது) கண்கள்போல மிகவுங குளிாநதுள்ள திருத்துழாய்களை அருசசிதது, இசைமகளுடன் துதிதது-(தமதுமனைவியான)ஸரஸ்வதியுடனே தோததிரஞ்செயது, போற்றிய - ஆராதித்த, பரமசாமீ-சிறந்த தலைவனே!—அளவுஅறு பிறைகளும்-கணககில்லாத பிறைசசந்திரர்களையும், களன்உறு கறைகளும்-கணடத்திறபொருந்திய விஷக்கறைகளையும், கணக்குஇலா மழுக்களும் - எணணில்லாத மழுவாயுதங்களையும், குணக்கு இலா கழுக்களும்-கோணலில்லாத சூலஙகளையும், உடையார்-உடையவரும், புலி தோல் உடை ஆர் - புலியின் தோலாகிய உடுப்புப் பொருந்திய, இடையார்-இடையையுடையவரும், அலகு இலா உமைகளும் - அளவில்லாத உமாதேவிகளும், இலகு பல் நதிகளும் - விளஙகுகின்ற அநேகஙகஙகாநதிகளும், பதி கொள் - பொருந்தப்பெற்ற, அத்தனர்-கடவுளரும், குதிகொள்-நடனஞ்

செய்கின்ற,மத்தரும் - பித்தரும, (ஆகிய), அனந்தம உருத்திரர் - அநேகம் ருத்திரர்கள், வீரபத்திரன் முதல் - வீரபத்திரன்முதலான். கோர புத்திரரொடும் - பயங்கரமான மக்களுடனே வந்து, தினம் தினம் தொழுதிடும் - நாள்தோறும் வணங்குகின்ற,திரு அடி உடைய-திருவடிகளை யுடைததான், பிரமமூர்த்தி-பரப்பிரமஸ்வரூபியே!—ஒரு விண்ணப்பம் - (அடியேன்செய்வதொரு)விஜ்ஞாபனம உளது.(அது என்னவென்றால்).—(நீ) முன் -முன்னே [ஸ்ரீராமாவதாரத்தில்]. பெரு முனி பின்னா - விசுவாமித்திரமகாமுனிவர் பின்னே,நம்பி நல் நிழலின் -மூத்தவனாகிய உனதுநல்லநிழலைபபோல,தம்பி-லக்ஷ்மணன், பின் தொடர - விடாமற பின்னேதொடர்ந்துவர, செம் சிலையொடும் - சிவந்த வில்லுடனே, போய்—. கருங் சிலை மிதித்து - கரியகல்லைக் காலால்மிதித்து,' (அக்கல்லில்) மின் இள மேகமும் - மின்னலோடு கூடின இளமையான மேகத்தையும், வில்லும வில்லையும், பிறையும் - குறைச்சந்திரனையும். அரவிந்தமும் - தாமரைமலரையும். ஆங்கு அதில் - அத்தாமரைமலரில். சில பூவும்-(குவளை குமிழ் முல்லை முதலிய)சிலபூக்களையும், சங்கமும் - சங்கத்தையும், திகிரியும - மூங்கிலையும், பங்கயம் முகுளமும் - தாமரையரும்பையும. காந்தளும் - காந்தள்மலரையும். கொடியும் - கொடியையும. பாந்தளும் - பாம்பையும். கதலியும் - வாழையையும, மா இளந் தளிரும் - மாமரத்தினது இளந்தளிரையும், மீண்டும வகுத்தனை - திரும்பவும் உண்டாக்கியருளினாய் ; அற்புதம விளைக்கும - அதிசயத்தைச் செய்யவல்ல, கண்ணா - கிருஷ்ணனே!—புல் மதி உடைய - அற்பபுத்தியையுடைய, என் - எனது. மனம் - மனநெஞ்சாகிய, பாறையை - கருங்கல்லை, நல் பதம்படுத்தி - நல்லபக்குவப்படுத்தி,நீ—.உண்ண கவர்ந்த வெண்ணெய் செய்துவிடுவது - உண்ணும்பொருட்டுக் களவாடின வெண்ணெய் போல இளகும்படி செய்துவிடுவது, உன் கடனே உனதுகடமையேயாம்; (எ-று.)

அறைகள கூறுஇடலால் - வேடர் முதலியோரது சிறுவீடுகளைச் சிதைத்து அழித்தலால் என்றுமாம். வியாதன் - வ்யாஸன்; (வேதங்களை) வகுததவரென்று பொருள். போது அகம் மோதலின் எனப்பிரிதது, மலர்களைத் தம்மிடதது அலைததலா லென்றுமாம். மான மத மடுததலின் என எடுதது, மான்கள் மிகநிரம்புதலா லென்றுங் கொள்ளலாம் இவை,மலைகளினின்று அடிசதுக்கொண்டு வரப்பட்டவை. பாற்கடல்கடைந்தகாலதது அதினின்றுந் திருமகள் தோன்றினளென அறிக. அமிழ்து உதிததலின் என்றது-சந்திரன் பாற்கடலிற் பிறந்தவனாதலாலும அமிருதமயமான கிரணமுடையவனாதலாலும். சிலேடைபற்றிவந்த உவமையணி. இருபதுசிகரதது முதலிய மூன்றடிகளும் செஞ்சிலை யென்ற அடியும - முரண்தொடை. கருங்குன்று என்றதற்கேற்ப,முழைவாய் என்றும,கொடுமுடியென்றுங் கூறினார். இசைமகள் - கல்விக்குததலைவி. உருததிரா அநநதமாகவே, அவர் சின்னங்களான பிறைமுதலியனவும் பலவாயின. விஜ்ஞாபநம் என்னும வடமொழி - பிராகிருதபாஷையில விண்ணணம் எனத் திரிந்துநின்று, தமிழில் விண்ணப்பமெனச் சிதைந்துவந்தது. மின் - விளங்குகிற அகலிகையினது மேனிக்கும், மேகம் - அதிலுள்ள கருங்குழலுக்கும், வில் - புருவததுக்கும், பிறை - நெற்றிக்கும், அரவிந்தம் - முகததுக்கும், அதிற் சில பூ - அம்முகததிற்பொருந்திய கண் பல் மூக்கு முதலிய அவயவங்களுக்கும், சங்கம் - கழுததுக்கும். மூங்கில் - தோள்களுக்கும், தாமரைமுகை - கொங்கைக்கும், காந்தள், - அங்கைக்கும், கொடி - இடைக்கும். பாந்தள் - அல்குலுக்கும, கொடி-இடைக்கும், மாந்தளிர் - பாதத்துக்கும உவமையாகக் கூறப்பட்டனவெனக் கண்டுகொள்க. செய்தற்கு அரிய காரியங்களையுஞ் செய்கின்ற திறமை[அகடிதகடனாசாமர்த்தியம்] உடையவனாதலாற், முன் கல்லைப்பெண்ணாக்கினதுபோல வே என்து மனததை வெண்ணெயாக்க வேண்டுமென வேண்டியபடி.

முதல்நாட்போரில் தன்சேனைமுழுவதும் படைக்கலமனைத்தும் அழியத் தனியனாய் அகப்பட்ட இராவணனது எளிமையை நோக்கி இராமபிரான் இரங்கி மேலும்போர்செய்யாது நிறுத்தி 'இன்றுபோய் நாளை நின் படையோடு வா' என்றுகூறி விட்டனன் என்பது வரலாறு; "ஆளையா வுனக்கமைந்தன மாருதமறைந்த, பூளையாயின கண்டனை யின்றுபோய்ப் போர்க்கு, நாளைவாவென நல்கினன் நாகிளங்கமுகின், வாளைதாவுறு கோசலநாடுடை வள்ளல்" என்ற கம்பராமாயணச்செய்யுள் இங்கே காணத்தக்கது. இங்ஙனம் பகைவனிடத்து அருள்கொண்டு அவனை விடுதல், தழிஞ்சி என்னும் புறப்பொருள் துறையாம்; அது, வலியிழந்தவர்மேற் போர்க்குச் செல்லாமல் அவர்க்கு உதவிசெய்து தழுவுவது. இதனால், இராமபிரானது காம்பீரியம், கருணை, அறத்தின்வழிநிற்றல் முதலிய திருக்கலியாணகுணங்கள் விளங்கும்.

**மலைபொறிந்த வரலாறு** —முன்காலத்தில் மலைகளெல்லாம் பறவைகள்போல இறகுடையனவாயிருந்து ஆகாயமார்க்கத்திற் பறந்துசென்று ஊர்களின்மேல் உட்கார்ந்து உயிர்களை நாசஞ்செய்துவர, தேவர்கள்வேண்டுகோளால் இந்திரன் அம்மலைகளின் சிறகுகளைத் தனது வச்சிராயுதத்தினால் அறுத்துத் தள்ளினனென்பதாம்.

**இராவணன் வெள்ளிக்குன்று எடுத்த வரலாறு** —இராவணன் அளகாபுரிக்குச் சென்று குபேரனோடு எதிர்த்துப் பொருது அவனைவென்று புஷ்பகவிமானத்தைப் பறித்து அதன்மேலேறிக்கொண்டு கைலாசமலைக்குமேலாக ஆகாயமார்க்கத்திலே விரைந்து மீண்டு வருகையில் அம்மலையின்மகிமையால் விமானம் தடைபட்டுநிற்க, அதற்குக்காரணம் இன்னதென்றுஅறியாது திகைக்கையில், நந்திதேவர் எதிரில்வந்து 'சிவபிரானுக்குத் தங்குமிடமான திருக்கைலாயத்தின் பெருமையிது' என்று சொல்லவும், கேளாமல், தசமுகன். 'எனது பிரயாணத்துக்குத் தடையாகிய இம்மலையை இப்பொழுதே வேரோடுபறித்து எடுத்து அப்பாலெறிந்துவிட்டுத் தடையின்றி மேற்செல்வேன்' என்றுகூறி விமானத்தினின்றும் இறங்கித் தனதுஇருபதுகைகளையும் அம்மலையின்கீழ்க் கொடுத்து அதனைப் பெயர்த்து அசைக்க, அதனையுணர்ந்த உருத்திரமூர்த்தி சினந்து தன்கால்விரலாற் சிறிது அழுத்தவே, அரக்கன் மலையின்கீழ் அகப்பட்டுக் கைந்நசுங்கி மிகவருந்தி வெகுகாலம்புலம்பிப் பின்னர்ச் சாமவேதகானத்தாற் சிவனருளைப்பெற்று விடுபட்டு, இராவணனென்ற பெயரையும், சிறந்ததொரு வாட்படையையும், நீண்ட ஆயுளையும் அப்பெருமான் அளித்தருள, பெற்று அப்பாற்சென்றனனென்பதாம்.

இது - ஈற்றயலடி முச்சீரடியும், மற்றையடிகள் நாற்சீரடியுமாக வந்ததனால், நேரிசையாசிரியப்பா. (கூசு)

[பாண்.]

கூஎ. வெண்ணெய்ச்சூறைகொண்டகொண்டன்மேனிமாயர்வன
கிரி விறலியென்றகோகிலத்துமென்பெடைக்கொர்சேவல் கேள்,
பண்ணுமிங்கிதங்குடைந்து பாணர்தம்மைவென்றபின் பாதகற்கு
மருமையோவொர்பாணநின்னைவெல்வது, வண்ணமார்பெழுந்தகொ
ங்கைகிண்ணமென்பரதுமெயா வந்துபாணிறைந்ததுண்மைமதலைபா
லனென்பது, மெண்ணெயீதுபசுநரம்பெனுங்கொடிக்குவிட்டந்
ரேற்குமோவவர்க்கும்யாழின்வீக்குகாயநிம்புமே.

(இ - ள்.) வெண்ணெய் சூறைகொண்ட - வெண்ணெயைக் கொள்ளைகொண்டு உண்ட, கொண்டல் மேனி - கார்மேகம்போலுந் திருமேனியை

* கரு

யுடைய, மாயர் - விசித்திரசக்தியையுடைய அழகரது, வனகிரி - சோலை மலையின்கண் வசிக்கும், விறலி என்ற - பாண்மகளாகிய, மெல் கோகிலத்து பெடைக்கு - மிருதுத்தன்மையுடையதாகிய குயிற்பேடைக்கு, ஓர் சேவல் - ஓர் குயிற்சேவல்போலும் பாணனே! கேள்-கேட்பாயாக; பண்ணும்- பண்ணமைக்கப்பட்ட, இங்கிதம் - இனிமையைத்தருவதாகிய யாழினை, குடைந்து - (விரனுனியால்) வருடி வாசித்து, பாணர்தம்மை - (இசையில் வல்ல) பாணர்களை, வென்ற பின்-(யாழ்வாசித்தலில்) வென்றபின்னர், ஓர் பாண - தனியனான பாணனே! நின்னை வெல்வது - நின்னைச சயிப்பது, பாதகரும் - பாதகராகியநாயகர்க்கும், அருமையோ - அருமையாகுமோ? [அருமையன்று]; (யாழ்வாசித்தலில் மிகவல்லவர் என்றபடி); (இது நிற்க) வண்ணம் மார்பு எழுந்த - (என்து)அழகிய மார்பிடத்து ஓங்கிவளர்ந்த,கொங்கை - ஸ்தனம், மெய் ஆ - உண்மையாக, கிண்ணம் என்பர் - (முன்பு தலைவர்) பொற்கிண்ணமென்று புகழ்வர்; அது - அக்கொங்கை, வந்து பால் நிறைந்தது - பால் சுரந்து நிரம்பப் பெற்று உள்ளது, (என்பதும்) - என்று சொல்வதும். மதலை பாலன் என்பதும் - புதல்வன் பாலகனென்பதும், உண்மை - மெய்; எண்ணெய் ஈது - (என்னுடலிற்றோய்ந்த) இவ்வெண்ணெய், பசு நரம்பு எனும் கொடிக்கு - பசிய நரம்பாகிய கொடியை வளர்த்தற்கு, விட்ட நீர் - பாய்ச்சிய நீர்; யாழின் - (கேட்டோர் செவிப்புலனை வசீகரிக்கும்)யாழினிசைபோல, வீக்கு - (என்கணவரதுகட்புலனை)வசீகரித்தற்குஉரிய, காயம் - (எனது) உடல்,நிம்பமே (இப்பொழுது வெறுத்தற்கு உரிய) வேம்பே; (ஆதலின்), அவர்க்கும் - (எனக்கேயன்றி) அவ்விறைவர்க்கும், ஏற்குமோ - ஏற்றுக்கொள்ளத்தக்கதாகுமோ? (எ - று.)

பரத்தையரைப்புணர்தற்பொருட்டுத் தலைமகளைப்பிரிந்துசென்ற தலைமகனால் தலைமகளதுகருத்தை யறிந்து அவளைச சமாதானப்படுத்தி அவளிடம் தான்வரும்படி பேசிவருமாறு அனுப்பப்பட்ட பாணனுக்குத் தலைவி வெகுண்டுகூறியது; இது, பாணனொடு வெகுளுதல் என்னுந் துறை.

உயிர்கடோறு மொளித்துநின்றுதவுங் கள்வனென்பதையும், படைப்பு முதலிய முததொழிற்கட் சிறந்ததாகிய காப்புததொழி லுடையா னென்பதையுங் குறிப்பித்தற்கு, 'வெண்ணெய்கூறைகொண்ட கொண்டல்மேனிமாயர்'என்றார்.வனகிரிஎன்பதற்கு இயைய,விறலியைக் குயிற்பேடையாகவும், பாணனைக் குயிற்சேவலாகவுங் கூறினர். இங்கிதம் என்பது-அதனைத்தருவதாகிய யாழிற்கு ஆதலால், ஆகுபெயர். பரத்தையால்வரும் இன்பம் அறத்தான் வரும் இன்பம் போல்வதன் றென்பதும், அவ்வின்பநுகரும் இழிபு நோக்கி ஒருமை அன்விகுதிபுணர்த்தியும் கூறினர். "அறத்தான் வருவதே யின்பமற் றல்ல,புறத்த புகழு மில"என்பவாகலின். புதல்வனைப்பெறுதற்கு முன்னர்த் தலைவனாற் பொற்கிண்ணமெனப்புனைந்துரைக்கப்பட்ட கொங்கை பெற்றபின்னர் அங்ஙிலை குலைந்த தென்பது தோன்ற 'வண்ணமார்பெழுந்த கொங்கை கிண்ணமென்ப ரதுமெயா, வந்து பால் நிறைந்தது' என்றும்,எங்கைமார் கலவியே அவர்க்கேற்குமென்பது தோன்ற 'யாழின்வீக்கு காயம் நிம்பமே அவர்க்கேற்குமோ' என்றும் கூறப்பட்டன பாலன் என்பதன் ஈற்றிலுள்ள'என்பதும்' என்பது, பால் நிறைந்தது என்பதனீற்றிலும் கூட்டப்பட்டது. மற்றை உம்மைகள் இரண்டனுள் முன்னது - இழிவுசிறப்பிலும், பின்னையது - இறந்ததுதழீஇய எச்சத்தோடு உயர்வுசிறப்பிலும் வந்தன, கொங்கை-பால்பகாவஃறிணைப்பெய ராகலின், 'அது'என்றும், 'பால் நிறைந்தது'என்றும் ஒருமையாக் கூறினர். ஓ ஏ இவ்விரண்டும் - எதிர்மறையிலும், பிரிநிலையிலும் வந்தன. பாலனைப்பழித்த லென்னும் பொருட்கிடமாய், உவமை உருவகம் முதலிய அணியுமுடைத்தாய் வந்தது.

இது, பதினான்குசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம். (கூஎ)

[இரங்கல்.]

௯௮. காயரன்பிரமன்முதலோர்தொழுஞ்சனகர்நிமிர்காளமஞ்சனவழகர்மா, மாயரமபுவியுநவநீதமுங்கமழ்பவளவாயர்கண்டிலர் கொலளிகாள், பாயுமவெம்புலிபொருதமாமனென்பவன்விடுமொர் பாறைநெஞ்சினள்சிகரநே, ராயகொஙகையிலொழுகுபால்பரந்தென விரியகோரசந்திரகிரணமே

(இ - ள்.) அளிகாள் - வண்டுகளே!—காய் அரன் - (எல்லாவுலகஙகளையுநு) காய்ந்து அழிக்கிற கடவுளாகிய சிவனும்.பிரமன் - பிரமனும்,முதலோர்-முதலிய தேவர்கள், தொழும் - வணஙகுகின்ற, சனகர் - (யாவர்க்குந்) தந்தையும், நிமிர் காள மஞ்சு அன அழகர் - விளஙகுகிற கார்காலத்துக் காளமேகம்போன்ற அழகரும. மா மாயர் - மிக்கமாயையுடையவரும், அம் புவியும் அழகிய லோகஙகளும், நவநீதமும் - வெண்ணெயும, கமழ் - வாசனை வீசுகின்ற, பவளம் வாயர் - பவழமபோறசிவந்த வாயையுடையவருமாகிய அலங்காரர்,—பாயும் வெம்புலி பொருத - மேலேசீறிப்பாய்கிற கொடியபுலி போன்ற, மாமன் என்பவன் - மாமனாகிய கம்சன், விடும் - ஏவியனுப்பின, ஓர் - ஒரு, பாறை நெஞ்சினள் - கருஙகல்போல வலிய மனததையுடைய பூதனையினது, சிகரம் நேர் ஆய - மலைசிகரத்துக்கு ஒப்பான, கொஙகையில் - (நஞ்சுதீர்ந்த) தனஙகளினின்றும், ஒழுகு - பெருகுகின்ற, பால்—, பரந்து என - பரவினாற்போல, விரி - பரவுகிற, அகோர சந்திர கிரணமும் - உக்கிரமான சந்திரனது நிலவின்தன்மையை. கண்டிலர்கொல் - கண்டாரில்லையோ? (எ - று.)—கண்டனராயின், பிரிநதுசென்ற தலைவர் இஙஙனம் வாரிரா ரென்றபடி இது, சந்திரோபாலம்பநம்.

புவிகமழ்வாயரென்றது - பிரளயகாலததது உலகஙகளையெல்லாம் உண்டவராதலின். பொருத - உவமவுருபு.

இது, பெரும்பாலும் முதல் மூன்று ஐநதுகூவிளச்சீர்களும், இரண்டு நான்கு கருவிளஙகாய்ச்சீர்களும, ஆறு ஏழு புளிமாச்சீர்களுமாய்வந்த எழுசீராசிரியவிருத்தம். (௯௮)

௯௯. சந்தனநிழற்குளிருவநததகைதீரச்சந்த்ரமுகியேகவியுமிந்த்ரதருமானு, மைந்தலையராவிலவருமழகர்பழமறைதேடரியமுனையார்முளரிதெரியமுனைபோல, வநதருணம்வைகையிதுபொய்கையிதுமுத்தின்வண்டலிதுகொண்டறவழ்மண்டபமிதல்லாற்,செந்திருநன்னகரமிதுசிகரமிதுசோலைச்சிலம்பிடைசிலம்பியசிலம்புநதியிதுவே.

(இ - ள்.) சந்த்ரமுகியே-சந்திரன்போனற முகமுடையவளே!—செம் திரு-செவ்விய இலக்குமிபோன்றவளே!—வந்த தகை தீர-வெயிலில்நடந்து வந்த இளைப்பு நீஙகும்படி, சந்தனம் நிழற்குள் - சந்தனமரததின்நிழலிலே, இரு - சற்றேதஙகியிருப்பாயாக; கவியும் - மேலேகவிந்துகொண்டிருக்கிற, இந்தரதரு - இந்திரனது பஞ்ச கல்பகவிருக்ஷஙகளை, மானும் - ஒத்த, ஐந் தலை - ஐந்துதலைகளையுடைய, அராவில் - ஆதிசேஷனில், வரும் - எழுந்தருளியிருக்கிற, அழகர்-அழகரும், பழ மறை தேடு அரிய - அநாதியான வேதஙகளினால் தேடுதற்கரிய,முனையார்-முன்னையவருமாகிய எம்பெருமான்,(கிருஷ்ணவதாரத்தில் துளைந்துவிளையாடிய), முளரி தெரி யமுனைபோல-தாமரைமலர்கள் விளஙகப்பெற்ற யமுனாநதிபோல, வந்தருள் - குளிர்ச்சியாக வந்தருள்கிற, நம் - நம்முடைய, வைகை - வைகாநதி, இது - இதுவாம்; பொய்கை-தடாகம்,இது—;முத்தின் வண்டல்-முத்துக்களையுடைய சேற்று வண்டல், இது—;கொண்டல் தவழ்-மேகங்கள்தவழப்பெற்ற[மிகவுயர்ந்த],

மண்டபம்—, இது—; அல்லால் - அல்லாமலும், நல் நகரம் - நல்லபட்டணம், இது—; சிகரம் - மலையுச்சி—, இது—; சோலைசிலம்பிடை - சோலைமலையினிடத்தே, சிலம்பிய-ஒலிக்கின்ற, சிலம்புநதி-சிலம்பாறு, இதுவே—.

இது, தலைமகளை உடன்கொண்டுபோகின்ற தலைமகன் அவள் இடைவழியிற் கடுஞ்சுரத்திற் செல்லும்போது வெயிலால் மிகவும்வருந்தி இளைப்பு உற்றது நோக்கி, அவளைத் தான் போகும்இடத்தின் அணிமைகூறி ஆற்றியது.

இது, பதினெட்டாங்கவிபோன்ற எண்சீராசிரியவிருத்தம். (கூகூ)

க00. நதிபெற்றபாதாமலையலங்காராநன்னாட்டணங்கே
கதிபெற்றனனந்தமீகாமன்காமன்கழைகழையே
பதிபெற்றவவ்வங்கமிவ்வங்கஞ்சங்கம்பலித்ததங்கே
துதிபெற்றமுத்தங்கிடைத்ததொப்பேதுன்சுகக்கடற்கே.

(இ - ள்.) நதி பெற்ற பாதா - கங்காநதியையும் சிலம்பாற்றையும் பெற்ற திருவடியை யுடையவராகிய, மலை அலங்காரா-சோலைமலையழகரது, நல் நாடு-நல்ல நாட்டிலுள்ள, அணங்கே-தெய்வமகள்போன்றவளே!—கதி பெற்றனன்-(உன்னையடைந்து) நற்கதியை [நல்லதுறையை]ப் பெற்றேன்; அந்த காமன் - அந்த மன்மதன், மீகாமன்-மரக்கலஞ்செலுத்துபவனாவன்; கழை - (அவனது) கருப்புவில். கழையே-கொடிமரமாம்; இ அங்கம் - இந்த (உனது)உடம்பு,பதி பெற்ற அவ்வங்கம - கரையைவந்துஅடைந்த அம்மரக்கலமாம்; அங்கே-அவ்விடத்தில், சங்கம்பலித்தது - சங்குகள் என்றது [புணர்ச்சி கிடைத்தது];துதி பெற்ற முத்தம் கிடைத்தது-(யாவராலும்)துதிக்கப்படுகிற முத்தக் கிடைத்தது [முத்தம்-முத்தல் கிடைத்தது], உன் சுகம் கடற்கு - உனது சுகமாகிய கடலுக்கு, ஒப்பு ஏது - சமானமேது? (எ - று.)

இது-தலைமகளைப் புணர்ந்த தலைமகன், அவளது இன்பத்தைப் புகழ்ந்து கூறியது. உருவகவணியும சிலேடையணியுமவிரவிவந்தசேர்வையணி.

இது, நிரையசை முதலதான கட்டளைக்கலித்துறை. (க00)

க0க. சுகமும்பிகமுமறையோதுஞ்சோலைமலையிலலங்கார
ரிகமும்பரமும்வகுத்தபிரானெல்லாபதமுந்தரவாழ்வீர
மகமுந்தவமுஞ்செய்ததொக்குமானந்தனைக்கும்பிடும்வானுஞ்
செகமும்பரவுஞ்சிலம்பாற்றுதிருநீர்படியுமொருநீரே.

(இ - ள்.) ஒரு நீர் - நீங்கள்,— மானந்தனை கும்பிடும் - விமானத்தை வணங்குங்கள்;வானும் செகமும் பரவும்-விண்ணுலகத்தவரும் மண்ணுலகத்தவருந் துதிக்கின்ற, சிலம்பாறு - நூபுரகங்கையினது, திரு நீர - பரிசுத்தமான தீர்த்தத்தில்,படியும்-நீராடுங்கள்;(இவ்வாறு செய்வீராயின்),—சுகமும் பிகமும் மறை ஓதும் - கிளிகளுங் குயில்களும் வேதங்களை ஓதுகின்ற, சோலைமலையில் - சோலைமலையிலுள்ள, அலங்காரர் - அழகரும், இகமும் பரமும் வகுத்த பிரான் - இம்மையின்பத்தையும் மறுமையின்பத்தையுங் கொடுத்தருளுகிறவருமான எம்பெருமான், எல்லா பதமும் தர - எல்லா நற்பதவிகளையுங் கொடுக்க, வாழ்வீர் - வாழ்வீர்கள்; மகமும் தவமும் செய்தது ஒக்கும் - (இங்ஙனம் விமானத்தைக் கும்பிடுதலும் சிலம்பாற்றில்நீராடுதலும்)பெரியயாகங்களையும் அரியதவத்தையுஞ் செய்ததுபோலும்; (எ-று.) என்று உலகத்தவரைநோக்கி உபதேசித்து முடித்தார்.

இது, முப்பத்தெட்டாங் கவிபோன்ற அறுசீராசிரியவிருத்தம். (க0க)

அழகர்கலம்பகம் முற்றிற்று.

# அநுபந்தம்.

திருமாலிருஞ்சோலைக்கு 'ருஷபகிரி'யென்று பெயர்வந்ததன் காரணம்:— தருமதேவதை பிரளயகாலத்திலும் தான் அழியாதிருக்கும் உபாயங் கருதித் திருமாலைக்குறித்துத் தவம்புரிந்து வரம்பெற்று மலைவடிவமாகி அந்தஅழகப் பிரானைத் தன்மீதுகொண்டு நிலைபெற்றது எனவும், தருமதேவதைக்கு விருஷபவடிவம் உள்ளதனாலும் தருமத்துக்கு விருஷமென்று ஒருபெயர் உள்ளதனாலும் அம்மலை விருஷபகிரியென்றும் விருஷகிரியென்றும் வழங்கப்பட்டதெனவும் நூல்கள் கூறும்; "தருமமோருருத்தாங்கி மால்பத்தியின்றலைப்பட், டொருமையோங்கிய மாலிருஞ்சோலை சூழ்நாட்டின், பெருமை யாவரேபேசுவார்" (நகரப்படலம்-க) என்ற கூடற்புராணமுங் காண்க. இதுநிற்க. அனந்தகுணபாண்டியனைக் கொல்லுதற்பொருட்டுச் சமணர்கள்செய்த அபிசாரயோமத்தினின்று தோன்றிய பசுவடிவமான அசுரன் அச்சமணர்களவிருப்பத்தின்படி பாண்டியராஜனைக் கொல்லுதற்காக மதுரையையணுகியபொழுது, அவ்வரசனும் அந்நகரத்தாரும் சோமசுந்தரக்கடவுளை வணங்கி முறையிட, அச்சிவபெருமான் தமது சந்நிதானத்திலுள்ள ருஷபவடிவமான நந்தியை நோக்கி 'சமணரேவிய பசுவை நீபோய் வென்றுவாக்கடவாய்' என்று கட்டளையிட்டளவில், அவ்விடபம் ஆரவாரித்துக்கொண்டு விரைந்துசென்று அப்பசுவைக் கிட்டித் தனது பேரழகைக் காட்ட, அந்த மாயப்பசு அவ்விடபத்தின் மீது இச்சைகொண்டு ஆசைநோய் மிக்கு வலிமையொடுங்கி, இறந்துவிழுந்து மலைவடிவாயிற்று; அதுவே பசுமலை; பின்பு அந்த இடபமும் உலகத்தார் அறியுஞ்சான்றாகத் தனது தூலசரீரத்தை இடபமலையாக அங்கே நிறுத்திவிட்டுச் சென்றது என்றதும் உண்டு; "உலகறி கரியாகத் தன்பேருருவினை யிடபக்குன்றாக்குலவுறநிறுவி" (மாயப்பசுவை வதைத்தபடலம் - உரு) என்ற பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற்புராணமும். "விளையுறவந்திறைகூஉ மெய்ம்மழவிடையை நோக்கி, மனமகிழ்ந் தணிகளோடுமெதிர்வழுவாபிணைநெடு, நீணிமையிற்கிடந்திராமாட்டபவெற்பென்னப் போந்த, தனுவொடுங்கிடந்த தோங்கத் தண்டலைமலையதாகி," "ஆங்கதுகண்டோரெல்லா மதிசயித்தருளைவாழ்த்தி, தாங்கருமுவகைகூர்ந்தார்" (மதுரையானதிருவிளையாடல் - உஎ உஅ) என்ற வேம்பத்தூரார் திருவிளையாடற்புராணமுங் காண்க.

# அழகர்கலம்பகச்
## செய்யுண்முதற்குறிப்பகராதி.


| செய்யுள். | பக்கம். |
|---|---|
| அரங்காப்பொழிய | ௭௫ |
| அஞ்சாரலும் | ௨௩ |
| அதிதியின்மத்தியி | ௩ |
| அப்போதகத்துறை | ௬௫ |
| அரசர்தூத | ௩௯ |
| அருணன்பரிபோற | ௫0 |
| அலகைமாமுலை | ௬௪ |
| அலங்காரனை | ௭௫ |
| அலமேந்தழகா | ௯௨ |
| அலைகடல் | ௮௩ |
| அவனிவ | ௧௯ |
| அழகர்பதினம | ௫ |
| ஆரமாமலைபிற | ௭௭ |
| ஆராமவெற்பி | ௫௮ |
| ஆனைக்குமுன்செல | ௨ |
| இடர்கவொன்ற | ௬௯ |
| இலையும்பசும்புல | ௩௮ |
| இனியஞ்சவென | ௬௪ |
| ஈரமதிச | ௭௩ |
| உனைக்கண் | ௧௯ |
| உளசிற்றினை | ௩௩ |
| ஏழுலோகமு | ௪௯ |
| எற்றபூங்கோதை | ௬௩ |
| ஒன்றுகிழுனறு | ௭௩ |
| கடத்தாரைகுன்றுக | ௩௪ |
| காமனூர்வெள்ளைக | ௭௬ |
| காயரன் | ௯௯ |
| காலமுகந்தானு | ௪௬ |
| காளமேகமும | ௫௯ |
| குணசலதியா | ௭௩ |
| குலமலைமாயா | ௮௨ |
| கோடுக்கின்றசெங | ௪௪ |
| கொண்டல்வண்ண | ௨0 |
| கொழுநனைவிட்டா | ௨௯ |
| கோடிதய | ௬௮ |
| சந்தனநிழற் | ௯௯ |
| சமையமென | ௪௪ |
| சரணகோகனகங | ௯0 |
| சாரலங்காரமால் | ௭௫ |
| சிறந்துன்பதந் | ௪௨ |
| சீதாராஞ் | ௩௯ |
| சுகமும்பிசமும | ௧00 |
| சுந்தரதோள | ௮௮ |
| சுழல்காற்றை | ௯0 |
| செங்கண்மாயனா | ௮0 |
| சோலைவாரணப் | ௭௭ |
| சொல்லிடபாசல | ௫௩ |
| தழைவிருந்தவனச | ௫௩ |
| தாரமருங்கா | ௪௮ |
| தாவுமன்புள்ளவா | ௭௯ |
| தீரவிருப்பணிதா | ௪௧ |
| திரியுங்கிரிக | ௮௪ |
| தினகரனுமபபால் | ௪௪ |
| துணையென்று | ௪௫ |
| துளயழகா | ௪௩ |
| தெய்வசிகாமணி | ௯௧ |
| தேடுதற்ழ் | ௮௬ |
| தேருந்தயனம | ௩0 |
| தேனைப்பழித்த | ௪௮ |
| தோற்றும்பொய | ௪௩ |
| நதிபெற்றமாதா | ௧00 |
| நந்தனந்தன | ௮௭ |
| நன்னவிலோசன | ௮௨ |
| நீலங்குலவுநாபர் | ௫௭ |
| நினையாதவாதமை | ௫௬ |
| நீயாகிலுஞ் | ௨௮ |
| நீர்பூக்க | ௯ |
| படியாவப் | ௩௧ |
| பதிகின்ற | ௨௩ |
| பாலிருந்தநீர் | ௭௧ |
| பிரானெனச | ௨௨ |
| புயங்கசயனு | ௨௮ |
| புயல்பார்க்குஞ் | ௮௫ |
| புள்ளின்வாய் | ௭௧ |
| பொறுபொறுதூத | ௪0 |
| மஞ்சுகரூ | ௭௯ |
| மணங்கமழ்பூவையு | ௫௫ |
| மணியுந்தியான | ௭௬ |
| மதுகயிடவன்சடல | ௨௪ |
| மதுசூதன | ௮௬ |
| மருகொடித்த | ௮௩ |
| மலைக்குமேன்மலை | ௨௧ |
| மலைதாங்குமாயர் | ௪௭ |
| மலையழகர் | ௩௫ |
| மழையுறங்கு | ௮௧ |
| மாயகின்றதேவர்க் | ௭0 |
| மாலைகும்வேளையி | ௩௬ |
| மாலுநான்முகனு | ௮0 |
| மாலைக்கரும்புபிறை | ௨0 |
| மாணமாலழகர் | ௩௭ |
| மின்னுமுகிலே | ௩௧ |
| முதலாழ்வார | ௪ |
| மேகங்கடல் | ௪௨ |
| மேதினிபோற் | ௮௬ |
| மொழியுமணியீா | ௭௪ |
| வரமபெறறிடுதலி | ௯௩ |
| வளங்குலவு | ௯௧ |
| வாளுந்திகிரிப் | ௩௨ |
| விடலரு | ௬௭ |
| வித்தகர்கருதது | ௬0 |
| வெண்ணெய்க்குறை | ௯௭ |
| வேண்டலர்நகைக் | ௫௧ |
| வேதாவென்ச | ௭௮ |
| வேயினுனிரை | ௩௩ |
| வைக்குரிடத்தன்பு | ௪௨ |